# ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!

(மலைப் பிரசங்கம்)

மூலநூல்:

**Thoughts From The Mount of Blessing!**

எழுதியவர்:

**எலன் ஜி. ஒயிட்**

தமிழாக்கம்:

**திருமதி கமலா ஜெகதீசன்**

Edited by: **Mr. Sam Daniel & Mrs. Geetha Devaraj**

Published by

**Youth Sabbath School**
**SDA Main Church, Pondicherry - 1**

Edition 2019
2000 Copies

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | மலையின் பக்கத்தில்! | 3 |
| 2 | பாக்கியவான்கள்! | 9 |
| 3 | பிரமாணத்தின் ஆவிக்குரியத் தன்மை! | 49 |
| 4 | சேவையின் உண்மையான நோக்கம்! | 83 |
| 5 | கர்த்தருடைய ஜெபம்! | 107 |
| 6 | நியாயத்தீர்ப்பல்ல, செயல்பாடே! | 129 |

# 1

# மலையின் பக்கத்தில்!

இயேசு பெத்லகேமில் பிறப்பதற்கு பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பாக, அழகிய சீகேம் பள்ளத்தாக்கிலே இஸ்ரவேல் புத்திரர் ஒருங்கே திரண்டனர்; மலைகளின் இருபக்கங்களிலுமிருந்து ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் கூறியறிவிக்கின்ற ஆசாரியர்களின் குரல்கள் கேட்டன. “இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியைவிட்டு விலகி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும்” – உபாகமம் 11:27,28. இவ்வாறு எந்த மலையிலிருந்து ஆசீர்வாதத்தின் வார்த்தைகள் கூறப்பட்டனவோ அந்த மலை “ஆசீர்வாதத்தின் மலை” என்று அழைக்கப்பட்டது. பாவத்திலும், துக்கத்திலும் உழல்கின்ற உலகிற்கு கூறப்பட்ட ஆசீர்வாதங்கள் கெரிசீம் மலையினின்று கூறப்படவில்லை. இஸ்ரவேலர் தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த உயர்ந்த இலட்சியத்தினின்று குறைவுபட்டவர்களாகவே காணப்பட்டனர். யோசுவாவைத்தவிர வேறொருவர் அவரது மக்களை விசுவாசத்தின் உண்மையான இளைப்பாறுதலுக்கு வழிநடத்திச்செல்லவேண்டும். இனியும் கெரிசீம் மலையானது அருட்பொழிவின் மலையென்று அழைக்கப்படவில்லை. கெனேசரத்து கடலருகிலுள்ள, எந்த பெயரும் கொடுக்கப்படாத எந்தவொரு மலையினின்று இயேசு தமது சீடர்களுக்கும் திரளான மக்களுக்கும் ஆசீர்வாதத்தின் வார்த்தைகளைக் கூறினாரோ, அந்த மலையே அருட்பொழிவின் மலையென அழைக்கப்படலாயிற்று. (1)

நமது கற்பனாசக்தியைப் பயன்படுத்தி, அந்தக் காட்சியைப் பார்க்க பின்நோக்கிச் செல்லுவோம். இவ்வாறு மலையின் பக்கத்திலே சீடர்களுடன் அமர்ந்தவர்களாக அவர்களது இருதயங்களை நிறைத்திருந்த சிந்தனைகளையும் உணர்வுகளையும் ஊடுருவி நுழைந்துபார்ப்போம். அவரது பிரசங்கத்தைக் கேட்டவர்களுக்கு இயேசுவின் வார்த்தைகள் என்ன அர்த்தத்தைக் கொடுத்தன என்பதைப் புரிந்துகொண்டால், அவற்றில் ஒரு

புதியத் தெளிவையும் அழகையும் உய்த்துணரவும், அவற்றின் ஆழமான பாடங்களை நமக்காகத் திரட்டிக்கொள்ளவும் முடியும். (2)

மீட்பர் தமது ஊழியத்தை ஆரம்பித்தபோது, மேசியாவைப்பற்றியும் அவரது ஊழியத்தைப்பற்றியும் மக்களிடம் பிரபலமாகப் பரவியிருந்த கருத்தானது, அவரை ஏற்றுக்கொள்ளுங்காரியத்தில் அந்த மக்களை தகுதியற்றவர்களாக்கிவிட்டது. உண்மையான கடவுட்பற்றின் ஆவியானது, பாரம்பரியத்தாலும், சடங்காச்சாரங்களாலும் காணப்படாமற்போயிற்று; தீர்க்க தரிசனங்கள் அனைத்தும், உலக நேசங்கொண்ட பெருமையான உள்ளங்களின் அதிகாரங்களின்படி விளக்கமளிக்கப்பட்டன. யூதர்கள், வரப்போகின்ற அவரை, பாவத்தினின்று மீட்கும் மேசியாவாக எண்ணிப்பார்க்கவில்லை; ஆனால், யூதா கோத்திரத்து சிங்கத்தின் ஆதிக்கத்தின்கீழ் அனைத்து ஜாதிகளையும் கொண்டுவருகின்ற ஒரு மாபெரும் பிரபுவாக எதிர்பார்த்தார்கள். யோவான் ஸ்நானகன் பண்டைய தீர்க்கதரிசிகளைப்போன்று இருதயத்தை உய்த்து ஆராயும் வல்லமையுடையவராக, மக்களை மனந்திரும்புதலுக்கு வரும்படியாக அழைத்தார்; ஆனால், அனைத்தும் பயனற்றுப்போயின. உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி என்று யோர்தானுக்கு அருகிலே யோவான் ஸ்நானகன் இயேசுவைச் சுட்டிக்காட்டியதானது வீணாய்ப்போயிற்று. பாடுபடும் இரட்சகரைப்பற்றிய ஏசாயாவின் தீர்க்கதரிசனத்திற்கு அவர்கள் மனதைத் திருப்பும்படி தேவன் முயன்றுகொண்டிருந்தார்; ஆனால், அவர்களோ அதற்கு செவிசாய்க்கவில்லை. (3)

இஸ்ரவேலின் போதகர்களும் தலைவர்களும் அவரது மனமாற்றும் கிருபைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்திருப்பார்களானால், இயேசு அவர்களைத் தமது தூதுவர்களாக மக்களுக்கு மத்தியில் அனுப்பியிருப்பார். யூதேயாவிலே முதலாவதாக இராஜ்யத்தின் வருகையைக்குறித்து கூறியறிவிக்கப்பட்டு, மனந்திரும்புதலுக்கான அழைப்பும் கொடுக்கப்பட்டது. எருசலேம் தேவாலயத்திலிருந்து அதைத் தூய்மைக்கேடுசெய்பவர்களை விரட்டியடித்த அந்தச் செயலின்போது, இயேசு தம்மை மேசியா என அறிவித்து விட்டார்; அதாவது, பாவ அசுத்தத்தினின்று ஆத்துமாவைச் சுத்தஞ்செய்து, ஆண்டவருக்காக ஒரு பரிசுத்த ஆலயமாக தமது மக்களை மாற்றுகிறவர் அவர்தான் என்பதாகும்; ஆனால், யூதத்தலைவர்களோ நாசரேத்திலிருந்து வந்த அந்தத் தாழ்மையான போதகரை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக தங்களைத் தாழ்த்த விரும்பவில்லை. எருசலேமிற்கு அவர் இரண்டாம் முறை வருகைதந்தபோது, ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்; ஆனால், மக்கள்பற்றி அவர்களுக்கேற்பட்டிருந்த பயம்மாத்திரமே அவரது உயிரை எடுக்கக்கூடாதபடி அந்த உயர்பதவியாளர்களைத் தடுத்துவிட்டது; அதனால்

## மலையின் பக்கத்தில்!

இயேசு, யூதேயாவைவிட்டு வெளியேறி, கலிலேயாவில் தமது ஊழியத்தை ஆரம்பித்தார். (4)

மலைப்பிரசங்கம் கொடுக்கப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன்புவரை அவரது ஊழியம் அங்கு தொடர்ந்தது. “பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது” (மத்தேயு 4:17) என்ற தூதினை நாடு முழுவதும் கூறியறிவித்தார். இந்தத் தூதானது, அனைத்து வகுப்பாருடைய கவனத்தையும் கவர்ந்திழுத்து, அவர்களது பேராவல் நிறைந்த நம்பிக்கைகளுக்கு அனலூட்டி, மேலும் அதிகமாகப் பரவச் செய்தது. இந்தப் புதிய போதகருடைய புகழானது, பாலஸ்தீன எல்லைகளுக்கும் அப்பால் பரவியது. மேல்மட்டத்தில் இருப்பவர்களுடைய மனப்பாங்கு எப்படியிருந்தபோதிலும், இதுவரை நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்த விடுதலைவீரர் இவராகத்தான் இருக்கவேண்டுமென்ற எண்ணம் எங்கணும் பரவியது. மாபெரும் திரள்கூட்டம் அவரது அடிச்சுவட்டைச் சூழ்ந்துநின்றது. பொது மக்கள் கொண்டிருந்த உற்சாகம் உச்சக்கட்டத்தை எட்டியது. (5)

கிறிஸ்துவோடு மிகவும் நெருக்கமாகத் தொடர்புகொண்டிருந்த சீடர்களுக்கு, அவரது ஊழியத்திலே அதிகமாக நேரடித்தொடர்பு கொண்டு இணைந்து வேலைசெய்வதற்கான வேளை வந்துவிட்டது. மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல இந்தத் திரள்கூட்டமான மக்கள் கவனிப்பாரற்று விட்டுவிடப்படக்கூடாதேயென்று அவ்வாறு செய்யப்பட்டது. இந்தச் சீடர்களில் சிலர் அவரது ஊழியத்தின் தொடக்கத்திலேயே அவருடன் தங்களை இணைத்துக்கொண்டனர். ஏறக்குறைய பன்னிருவருமே இயேசுவின் குடும்பத்தின் அங்கத்தினர்களாக, ஒன்றாக இணைந்து தொடர்பு கொண்டனர்; எனினும், அவர்கள்கூட போதகர்களின் போதனையால் தவறாக வழிநடத்தப்பட்டு, பூமிக்குரிய ஒரு இராஜ்யத்தை எதிர்பார்த்து பொதுமக்கள் சார்ந்த கருத்தையே கொண்டிருந்தனர். இயேசுவின் செயற்பாடுகளை அவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை; மேலும், போதகர்களுடைய, ஆசாரியர்களுடைய ஆதரவைப்பெற்று, அவரது ஊழியத்தைப் பலப்படுத்திக்கொள்ளுவதற்காக அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லையென்றும், இவ்வுலகில் இராஜாவாக தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக அவர் எதையுமே செய்யவில்லையென்றும், அவர்கள் ஏற்கெனவே குழப்பமும் கலக்கமும் அடைந்திருந்தார்கள். இயேசு பரத்திற்குச் சென்றபிறகு சீடர்கள் தங்களுக்கே உரியதான அந்தப் பரிசுத்தப்பொறுப்பிற்கு ஆயத்தமாக்கப்படுவதற்காக, அவர்களுக்கான ஒரு மாபெரும் வேலை இன்னமும் செய்யப்படவேண்டியதிருந்தது; எனினும், கிறிஸ்துவின் அன்பை அவர்கள் மனதார ஏற்றுக்கொண்டார்கள். விசுவாசிப்பதிலே மந்தஇருதய

முள்ளவர்களாக இருந்தபோதிலும் அவர்களுக்குப் பயிற்சிகொடுத்து, ஒழுங்குபடுத்தமுடியுமென்ற காரியத்தை இயேசு அவர்களில் கண்டார். இப்பொழுது ஓரளவு ஊழியத்தை நிலைப்படுத்துவதற்காக, போதிய கால அளவிற்கு அவரோடு நேரத்தைச் செலவிட்டிருந்தார்கள். அவரது இறைப்பணியின் தெய்வீகத்தன்மையிலே அவர்கள் விசுவாசம் வைத்திருந்தார்கள். அவர்கள் கேள்வி கேட்கக்கூடாத அளவிற்கு அவரது வல்லமையைக்குறித்த ஆதாரத்தை மக்களும் கண்டிருந்தார்கள். அவரது இராஜ்யத்தின் கொள்கைகளைப்பற்றி உறுதிமொழி எடுத்துக்கொள்ள வழி ஆயத்தமாக்கப்பட்டது. இந்தக் காரியம், அந்த இராஜ்யத்தின் உண்மையானத் தன்மையைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவிசெய்யும். (6)

கலிலேயா கடலுக்கு அருகிலுள்ள ஒரு மலையிலே, இயேசு தனிமையாக இருந்து, இரவு முழுவதையும் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட சீடர்களுக்காக ஜெபிப்பதற்கென்று செலவிட்டார். அதிகாலையிலேயே அவர்களைத் தம்மிடம் அழைத்து, ஜெபத்தின் உபதேசத்தின் வார்த்தைகளோடு ஆசீர்வதிக்கத்தக்கதாக, தமது கரங்களை அவர்களது தலைகளின்மீது வைத்து ஆசீர்வதித்து, சுவிசேஷ ஊழியத்திற்காக அவர்களைப் பிரித்தெடுத்தார்; பின்னர், அதிகாலையிலேயே, ஏற்கெனவே ஒரு மாபெரும் கூட்டம் திரண்டு கூடியிருந்த அந்தக் கடற்கரைக்கு அவர்களோடு அவர் சென்றார். (7)

கலிலேய நகரங்களிலிருந்து வரும் வழக்கமான கூட்டத்தோடு, யூதேயாவிலிருந்தும் எருசலேமிலிருந்துங்கூட அநேக மக்கள் திரண்டிருந்தார்கள். பெரோயாவிலிருந்தும் பாதி அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்த தெக்கப்போலியைச் சேர்ந்த மக்களிலிருந்தும், இதுமேயாவிலிருந்தும், தூரத்திலுள்ள யூதேயாவின் தெற்குப்பகுதியிலிருந்தும், தீருவிலிருந்தும், சீதோனிலிருந்தும், மத்தியதரைக் கடற்கரையிலுள்ள பெனிக்கேயா பட்டணங்களிலிருந்தும் மக்கள் வந்திருந்தார்கள். “...அவர் செய்த அற்புதங்களைக்குறித்துக் கேள்விப்பட்டு...”; “...அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கும், தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படும்படிக்கும்...” அவர்கள் வந்தார்கள். “...அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கி...” (மாற்கு 3:8; லூக்கா 6:17–19). பின்னர் அந்தக் குறுகிய கடற்கரையில் அவருடைய குரலைக் கேட்குமளவிற்கு நிற்பதற்குப் போதிய இடமில்லாததாலும், எல்லாரும் அவருடைய பிரசங்கத்தைக் கேட்கவிரும்பியதாலும், இயேசு அவர்களை அழைத்துக்கொண்டு மலையின் பக்கமாகச் சென்றார். அந்தத் திரண்ட கூட்டம் கூடுவதற்கு வசதியான, ஒரு சமமான இடத்தை அடைந்தபின்னர், அங்கு இயேசு தாமே புல்லின்மீது

அமர்ந்தார். அவரது சீடர்களும் திரள்கூட்டமும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றினார்கள். (8)

வழக்கத்திற்கு மாறான அதிகமான ஒன்றை எதிர்பார்த்தவர்களாக சீடர்கள் தங்கள் தலைவரைச்சுற்றி நெருக்கிக்கொண்டு நின்றனர். காலையிலிருந்து நடந்த சம்பவங்களிலிருந்து அந்த இராஜ்யத்தைக்குறித்து ஏதோ ஒரு பொது அறிவிப்பு கொடுக்கப்படப் போகிறதென்று அவர்கள் நிச்சயித்துக்கொண்டார்கள். அவர் வெகு சீக்கிரத்தில் இராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறாரென்று தங்களது விருப்பத்திற்கேற்றவாறு நம்பிக்கையோடிருந்தார்கள். இவ்வாறு எதிர்நோக்கியுள்ள நிலையில், அந்த எண்ணமானது திரள்கூட்டத்தினரிடங்கூடப் பரவியிருந்தது. ஆர்வமுள்ள முகங்கள் அவர்களது மிகுந்த ஆர்வத்திற்கு ஆதாரமாயிருந்தன. (9)

அந்தப் பசுமையான மலைப்பகுதியில் அவர்கள் அமர்ந்து தெய்வீகப் போதகரின் வார்த்தைகளுக்காகக் காத்திருந்தபோது, வருங்கால மகிமையைப்பற்றிய சிந்தனைகளால் அவர்களது உள்ளங்கள் நிறைந்திருந்தன. உலகமகா இராஜ்யத்தின் பகட்டு ஆரவாரத்தையும் அதிக ஐசுவரியங்களையும் தங்களது உடைமைகளாக்கிக்கொண்டு, தாங்கள் வெறுத்த ரோமர்கள்மீது ஆளுகைசெய்யப்போகும் அந்த நாளை எதிர்நோக்கிக் காத்திருந்த வேதபாரகரும் பரிசேயரும் அங்கிருந்தார்கள். ஏழைக் குடியானவர்களும், மீனவர்களும் தங்களது அற்பமான குடிசைகள், வயிற்றை நிரப்பாத உணவு, கடும் உழைப்புமிகு வாழ்க்கை, வறுமைகுறித்து தாங்கள் கொண்டிருக்கும் பயம் ஆகியவைகளுக்குப் பதிலாக, வளமிக்க, உல்லாச வாழ்க்கையோடுகூடிய மாளிகைகள் கிடைக்குமென்ற உறுதிவாக்கினை கேட்கப்போகிறோமென்று நம்பிக்கொண்டிருந்தார்கள். பகலில் உடையாகவும் இரவில் போர்வையாகவும் பயன்படுத்திக்கொண்டிருந்த, அந்த முரடான ஒரே உடைக்குப் பதிலாக, தங்களை வெற்றிகொண்டு ஆளுகைசெய்பவருடைய விலையுயர்ந்த அழகுடைய ஆடைகளை கிறிஸ்து தங்களுக்கு கொடுப்பாரென்று நம்பினார்கள். (10)

அனைத்து ஜாதிகளுக்கும் முன்பாகவும் இஸ்ரவேல் நாடானது ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்டதாகவும் மேலும், எருசலேமானது உலகளாவிய ஒரு அரசின் தலைமைப்பீடமாகவும் உயர்த்தப்பட்டு, வெகுசீக்கிரத்தில் மேன்மையடையவிருக்கின்றது என்ற பெருமையானதொரு நம்பிக்கையினால், அனைத்து இருதயங்களும் மகிழ்ச்சிப்பெருக்கில் திளைத்திருந்தன. (11) ★

# 2

# பாக்கியவான்கள்!

***"அப்பொழுது அவர் தமது வாயைத்திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்: ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" – மத்தேயு 5:2,3.*** (1)

வியப்பிலாழ்ந்திருக்கும் திரள்கூட்டமான மக்களின் காதுகளிலே ஏதோ புதிய, வழக்கத்திற்குமாறான, எதிர்பாராத இந்த வார்த்தைகள் விழுகின்றன. இதுவரை அவர்கள் குருமார்கள் அல்லது போதகர்கள் ஆகியோரிமிருந்து கேட்டிருந்த போதனைக்கு இது முற்றிலும் எதிர்மாறாக இருக்கிறது. இத்தகையப் போதனையில் தங்களுடைய பெருமையைக்குறித்துப் பொய்யாக பசப்புவதற்கும், பேராவல்மிகுந்த நம்பிக்கைகளுக்குத் தீனிபோடுவதற்கும் எதுவுமேயில்லை என்பதை அவர்கள் காண்கிறார்கள்; ஆனால், இந்தப் புதிய போதகரிடமிருந்த ஒரு வல்லமை, அனைவரையும் கட்டுண்டவர்கள்போல் பிடித்துவைத்திருக்கிறது. ஒரு மலரிலிருந்து வரும் மணத்தைப்போன்று, அவரது பிரசன்னத்தினின்று தெய்வீக அன்பின் இனிமை பாய்ந்தோடுகிறது. அவரது வார்த்தைகள், "புல்லறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப்போலவும், பூமியை நனைக்கும் தூறலைப்போலவும்..." (சங்கீதம் 72:6) விழுகின்றன. ஆத்துமாவின் இரகசியங்களையெல்லாம் வாசித்தறிகிற ஒருவர் இங்கே வந்திருக்கிறார்; எனினும், தங்களுக்கு அருகில் மென்மையான பரிவோடு வருகிறார் என்பதை அனைவரும் தங்களது உள்ளுணர்வின்மூலம் உணருகின்றனர். அவர்களது இருதயங்கள் அவரைநோக்கித் திறந்து, அவரது போதனைக்குச் செவிமடுத்தபோது, அனைத்து யுகங்களிலும் மானுடம் அதிக அவசியமாகக் கற்றுக்கொள்ளவேண்டிய பாடத்தைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குப் படிப்படியாக விளக்கிக்காட்டுகின்றார். (2)

கிறிஸ்துவின் நாட்களிலேயே வாழ்ந்த மக்களுக்குப் போதித்த மார்க்கசம்பந்தமான தலைவர்கள், தங்களை ஆவிக்குரிய செல்வத்திரட்சியில் ஐசுவரியவான்கள் என்று எண்ணினார்கள். "தேவனே! நான் ... மற்ற

மனுஷரைப்போல ... இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" (லூக்கா 18:11) என்ற ஒரு பரிசேயனின் ஜெபம், அவனைச் சேர்ந்த வகுப்பினரின் மற்றும் மிகப்பெரிய அளவில் நாட்டிலுள்ள அனைவருடைய உணர்வுகளையும் வெளிப்படையாகக் காட்டியது; ஆனால், இயேசுவைச் சூழ்ந்திருந்த அந்த மக்கள் கூட்டத்திலே தங்களது ஆவிக்குரிய தரித்திர நிலையை உணர்ந்திருந்த சிலரும் இருந்தார்கள். வியக்கத்தக்க முறையில் ஏராளமான மீன்கள் அகப்பட்டு, கிறிஸ்துவானவரின் தெய்வீக வல்லமை வெளிப்பட்டபோது, பேதுரு உடனே மீட்பரின் பாதங்களில் விழுந்து: "ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப்போகவேண்டும்" (லூக்கா 5:8) என்று வியந்து கூறினான். அதேபோன்று, மலைமீது கூடியிருந்த திரள்கூட்டத்திலே அவரது தூய்மையான பிரசன்னத்திலிருந்த ஆத்துமாக்கள் தாங்கள் நிர்ப்பாக்கியமுள்ளவர்களாயும், பரிதபிக்கப்படத்தக்கவர்களாயும், தரித்திரராயும், குருடராயும், நிர்வாணிகளாயும் இருக்கிறதை உணர்ந்து (வெளிப்படுத்தல் 3:17), "இரட்சிப்பை அளிக்கத்தக்கதான தேவ கிருபைக்காக" (தீத்து 2:11) ஏங்கினார்கள். இத்தகைய ஆத்துமாக்களிலே கிறிஸ்துவானவரின் அழைப்பின் வார்த்தைகள் நம்பிக்கையை விழிப்படையச்செய்தது. தேவ ஆசீர்வாதத்தின் அடிப்படையில் தங்களது ஜீவியங்கள் இருப்பதை அவர்கள் கண்டார்கள். (3)

தாங்கள் ஐசுவரியவான்கள் என்றும், திரவிய சம்பன்னர்கள் என்றும், தங்களுக்கு ஒரு குறைவுமே இல்லையென்றும் எண்ணிக்கொண்டிருந்தவர்களுக்கு, ஆசீர்வாதத்தின் பாத்திரத்தை இயேசு அன்பளிப்பாகக் கொடுத்தார்; ஆனால், அவர்கள் அத்தகைய கிருபையின் அன்பளிப்பை அவமதித்து உதறித்தள்ளிவிட்டார்கள். தான் பூரணமானவன் என்றும், நியாயப்படி தான் நன்றாகவே இருக்கிறதாகவும், தனது நிலையைக்குறித்து திருப்தியாகவும் உணர்கிற மனிதன், கிறிஸ்துவானவரின் கிருபையிலும் நீதியிலும் பங்குகொள்ள வேண்டுமென்று தேடுகிறதில்லை. பெருமை, தனது தேவையை உணருகிறதில்லை; எனவே, கிறிஸ்துவிற்கும் அவர் வந்து அருளவிருக்கின்ற எல்லையற்ற ஆசீர்வாதங்களுக்கும் எதிராக அது தனது இருதயத்தை அடைத்துக்கொள்கிறது. இத்தகைய நபருடைய இருதயத்தில் இயேசுவிற்கு இடமேயில்லை. தங்களது பார்வையில் தங்களை செல்வந்தர்களாகவும் மதிப்பிற்குரியவர்களாகவும் காண்கிறவர்கள், விசுவாசத்தோடு தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்கிறதில்லை. அவர்கள் தங்களை நிறைவுடையவர்களாக எண்ணுகிறார்கள்; எனவே, வெறுமையாகவே செல்லுகிறார்கள். தங்களைத் தாங்களே இரட்சிக்கமுடியாது என்று அறிந்தவர்கள், அல்லது எந்தவிதமான நீதியின் செயல்களையும்

தாங்களாகவே செய்யக்கூடாத நிலையிலிருப்பவர்கள் மட்டுமே, கிறிஸ்து தங்களுக்கு வழங்கக்கூடிய அந்த உதவியைப் பாராட்டமுடியும். ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று அவரால் வலியுறுத்திக் கூறப்பட்ட "ஆவியில் எளிமையுள்ளவர்கள்" இவர்கள்தான். (4)

மனிதனை, முதலாவது தனது பாவத்திற்காகக் கிறிஸ்து வருந்தச்செய்கிறார். அதன்பின்பே மன்னிப்பை அருளுகின்றார்; மேலும், பாவத்தை உணர்த்திக்காட்டுவதே பரிசுத்த ஆவியானவரின் வேலையாகும். குற்றத்தை உணரவைக்கின்ற தேவ ஆவியினால், அவர்களது இருதயங்கள் அசைக்கப்படும்போது, தங்களிலே நன்மையானதொன்றும் இல்லையென்பதை அவர்கள் காண்கிறார்கள். இதுவரைக்கும் தாங்கள் செய்த அனைத்துமே சுயத்தாலும் பாவத்தாலும் கலப்படமாயிருந்ததைக் காண்கிறார்கள். அந்த இரங்கத்தக்க நிலையிலிருக்கும் ஆயக்காரனைப்போல் அவர்கள் எட்டிநின்று, தங்களது கண்களையும் வானத்திற்கு ஏறெடுக்கத் துணியாமல்: "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று கதறுகிறார்கள் (லூக்கா 18:13); அவர்களே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். தங்களது பாவத்தை நினைத்து வருந்துகிறவர்களுக்கு மன்னிப்பு உண்டு; ஏனெனில், கிறிஸ்துவே, "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29); "உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்" என்பதே தேவனுடைய வாக்குத்தத்தம். "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே என் ஆவியை" வைக்கிறேன் என்கிறார் – ஏசாயா 1:18; எசேக்கியேல் 36:26,27. (5)

ஆவியில் எளிமையுள்ளவர்களைப்பற்றிக் கூறும்போது, "பரலோக ராஜ்யம் அவர்களுடையது" என்று இயேசு கூறுகிறார். கிறிஸ்துவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் எதிர்பார்த்ததுபோல் அந்த இராஜ்யம் உலகப்பிரகாரமான பூமிக்குரிய இராஜ்யமல்ல. தமது பிரசங்கத்தைச் செவிமடுத்தவர்களுக்கு தமது அன்பின், கிருபையின், நீதியின் ஆவிக்குரிய இராஜ்யத்தைப்பற்றிப் புரிந்துகொள்ளும்படி கிறிஸ்து விளக்கிக் கூறினார். மேசியாவின் ஆளுகையின் கொடி, மனுஷகுமாரனின் சாயலினால் தனிச்சிறப்புடன் வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கிறது. ஆவியில் எளிமையுள்ளவர்கள், சாந்தகுணமுள்ளவர்கள், நீதியினிமித்தம் துன்பப்படுத்தப்பட்டவர்கள் ஆகியோரே அவரது குடிமக்களாவர். பரலோக இராஜ்யம் அவர்களுடையது. இக்காரியம் இன்னும் முற்றிலும் நிறைவேற்றப்படாவிட்டாலும், "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடையச்..." (கொலோசெயர் 1:12) செய்வதற்கான வேலை அவர்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. (6)

## ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!

தங்களுடைய ஆத்துமாவின் ஆழ்ந்த தரித்திரநிலையைப்பற்றிய உணர்வைப் பெற்றுள்ள அனைவரும், தங்களிலே நன்மையான காரியம் எதுவுமே இல்லையென்று உணர்பவர்களும், இயேசுவை நோக்கிப்பார்த்து நீதியையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளலாம். "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்" (மத்தேயு 11:28) என்று அவர் அழைக்கிறார். உங்களது தரித்திரத்திற்குப்பதிலாக, அவரது கிருபையின் ஐசுவரியங்களைப் பெற்றுக்கொள்ளும்படி உங்களை வேண்டுகிறார். தேவனுடைய அன்பைப் பெறுவதற்கு நாம் தகுதியுள்ளவர்கள் அல்ல; ஆனால், நமது பிணையாளியாகிய கிறிஸ்து தகுதியுள்ளவராக இருக்கிறார். அவர் தம்மிடத்தில் வருகிற அனைவரையும் இரட்சிப்பதற்கு மிகுந்த ஆற்றல் படைத்தவராயிருக்கிறார். உங்களது கடந்தகால அனுபவங்கள் எப்படிப்பட்டவைகளாக இருப்பினும், உங்களது நிகழ்காலச் சூழ்நிலைகள் எவ்வளவு அதைரியமூட்டுபவைகளாக இருந்தாலும், நீங்கள் இருக்கின்ற நிலையிலேயே, பெலவீனமான, உதவியற்ற, நம்பிக்கையற்ற நிலையிலேயே இயேசுவிடத்திற்கு வருவீர்களானால், நமது பரிவுள்ள மீட்பர், வெகுதூரத்தில் நீங்கள் வருவதைக் காணும்போதே, உங்களைச் சந்திக்கவந்து, தமது அன்பின் புயத்தால் உங்களை அணைத்து, தமது நீதியின் வஸ்திரத்தை உங்களுக்கு அணிவிப்பார். தமது சொந்தப் பண்பு எனப்படும் அந்த வெண்வஸ்திரத்தினாலே நம்மை உடுத்துவித்து, பிதாவிற்கு முன்பாக நிறுத்துவார். பாவியின் இடத்தை தாம் எடுத்துக்கொண்டதாகவும், வழிவிலகிச் சென்றிருந்த இந்தப் பாவியைப் பார்க்கவேண்டாமென்றும், அதற்குப்பதிலாக தம்மைப் பார்க்கவேண்டுமென்றுங்கூறி, இயேசு நமது சார்பிலே தேவனுக்குமுன்பாக மன்றாடுகிறார். நமது ஆத்துமாக்களுக்கு விரோதமாக நமது பாவங்களைச் சுட்டிக்காட்டி, நம்மீது குறைகூறி, நம்மை தனது இரையென்று சாத்தான் உரிமை கோரி உரத்தகுரலில் வாதாடினால், கிறிஸ்துவானவரின் இரத்தம் அதிக வல்லமையோடு நமக்காக மன்றாடுகிறது. "கர்த்தரிடத்தில்மாத்திரம் நீதியும் வல்லமையுமுண்டென்று அவனவன் சொல்லி... இஸ்ரவேலின் சந்ததியாகிய யாவரும் கர்த்தருக்குள் நீதிமான்களாக்கப்பட்டு மேன்மைபாராட்டுவார்கள்" – ஏசாயா 45:24,25. (7)

***"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதலடைவார்கள்" – மத்தேயு 5:4.*** (8)

நமது சிந்தனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் துயரமானது பாவத்தினிமித்தம் இருதயம் அனுபவிக்கும் உண்மையான துக்கமாகும். "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" (யோவான் 12:32) என்று இயேசு கூறுகிறார்.

சிலுவையின்மீது உயர்த்தப்பட்டிருக்கும் இயேசுவை நோக்கிப்பார்க்கும்படியாக ஒரு நபர் இழுத்துக்கொள்ளப்படும்போது, அவர் மானுடத்தின் பாவ நிலையை தெளிவாக உணர்ந்துகொள்கிறார். மகிமையின் ஆண்டவரை வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறைந்தது பாவமே என்பதை அவர் காண்கிறார். விவரிக்கமுடியாத மென்மையோடு ஆண்டவரால் நேசிக்கப்பட்டாலுங்கூட, தனது வாழ்க்கையானது நன்றியின்மையும் கலகக்குணமும் நிறைந்த தொடர்காட்சியாக இருக்கிறதையும் அவர் காண்கிறார். அவர் தமது மிகச்சிறந்த நண்பரைவிட்டு, பரலோகத்தின் மிக மதிப்புமிக்க ஈவை அசட்டைசெய்துவிட்டார். தேவகுமாரனை புதிதாக மறுபடியும் தனக்காகச் சிலுவையிலறைந்து, நொறுங்குண்டு இரத்தம் வழிகின்ற அந்த இருதயத்தை மீண்டும் ஊடுருவக் குத்துகிறார். அகன்ற, இருண்ட, ஆழமான பாவமென்னும் படுகுழியில் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு இருதயம் உடைந்த நிலையில் அவர் துயரமடைகிறார். (9)

இத்தகைய துயரமுடையோர், "ஆறுதலடைவார்கள்." கிறிஸ்துவிடம் விரைந்தோடத்தக்கதாக நமது குற்றமுள்ள தன்மையை தேவன் நமக்குக் காண்பிக்கிறார்; மேலும், கிறிஸ்துவின்மூலமாக பாவமென்னும் அடிமைத் தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவகுமாரர்கள் என்ற சுதந்தரத்திலே நாம் களிகூரலாம். செய்த பாவங்களை எண்ணி, இருதயத்தில் உண்மையாகவே வேதனையடைந்து, சிலுவையின் பாதத்தண்டை வந்து, நமது பாரங்களை அங்கேயே விட்டுவிடலாம். (10)

குடும்பத்தில் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் துன்பங்களினால் வேதனைப்படுபவர்களுக்கு மீட்பரின் வார்த்தைகளிலே ஒரு ஆறுதலின் செய்தி இருக்கிறது. நமது துக்கங்கள் திடீரென்று முளைத்தெழும்பி வருகிறதில்லை. தேவன், "மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை" – புலம்பல் 3:33. அவர் சோதனைகளையும் துன்பங்களையும் அனுமதிக்கும்போது அது, "தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டே"யாகும் – எபி. 12:10. தாங்கமுடியாத அளவிற்கு மிகக் கசப்பாகவும் கடினமாகவும் காணப்படுகின்ற சோதனை விசுவாசத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமானால், அது ஒரு ஆசீர்வாதமென்று மெய்ப்பிக்கப்படும். இந்தப் பூமிக்கான சந்தோஷங்களை அழித்துப்போடுகின்ற அதன் கடுமையான பாதிப்பு, நமது கண்கள் பரத்திற்கு நேராக நோக்குவதற்கு வழியாக அமையும். துக்கம் இயேசுவில் ஆறுதலைத் தேடும்படியாக வழிநடத்திச்சென்றிருக்காவிட்டால், இயேசுவை ஒருபோதும் அறிந்திருக்க முடியாதவர்கள் ஏராளமாக உள்ளனர். (11)

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

வாழ்வின் கடுந்துன்பங்கள், நமது குணத்திலுள்ள திருந்தாத அசுத்தங்களையும் முரட்டுத்தன்மையையும் நீக்குகின்ற தேவனின் பணியாட்களாகும். அவர்களுடைய வெட்டுதலும், சமப்படுத்துதலும், சதுரப் படுத்துதலும், செதுக்குதலும், தேய்த்து மெருகூட்டுதலும், பளபளப்பாக்குவதும் ஒரு வேதனை நிறைந்த அனுபவமாகும்; தேய்த்து சரியாக்குகின்ற சக்கரத்தில் கடைசிவரையிலும் தேய்க்கப்படுவது என்பது ஒரு கடினமான அனுபவமாகும். ஆனால், பணிதீர்க்கப்பட்டு ஆயத்தமாக்கப்பட்ட கல், பரலோக ஆலயத்திலே அதின் இடத்தை நிரப்புவதற்கு ஆயத்தஞ்செய்யப்பட்டு கொண்டுவரப்படுகின்றது. எஜமானர் தனது கவனமான, நிறைவான, முழுமைவாய்ந்த ஒரு பணியை எந்தவொரு உபயோகமற்ற பொருளின்மீதும் செய்கிறதில்லை. அவரது மதிப்புவாய்ந்த கற்களைமட்டுமே, அரண்மனைக்கு ஏற்றவகையில், நேர்த்தியாகப் பளபளக்கச் செய்கிறார். தம்மிடத்தில் நம்பிக்கைவைக்கிற அனைவருக்காகவும் ஆண்டவர் செயலாற்றுவார். உத்தமமானவர்களால் மதிப்புமிக்க வெற்றிகள் பெற்றுக்கொள்ளப்படும். மேன்மையான பாடங்கள் கற்றுக்கொள்ளப்படும். மேன்மையான அனுபவங்கள் உணர்ந்துகொள்ளப்படும். (12)

நமது பரலோக பரமப்பிதா துக்கத்தால் தொடப்பட்ட எவரது காரியத்திலும் ஒருபோதும் கவனமற்றவராக இருக்கிறதில்லை. “தாவீது தன் முகத்தைமூடி, வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு,...” (2சாமுவேல் 15:30) ஒலிவமலையின்மீது ஏறிச் செல்லும்போது, ஆண்டவர் அவனைப் பரிவோடு பார்த்துக்கொண்டிருந்தார். தாவீது இரட்டுடுத்தி இருந்தான். அவனது மனச்சாட்சி அவனை வதைத்துக்கொண்டிருந்தது. அவன் தன்னைத் தாழ்த்தியதற்கான வெளிப்படையான அடையாளங்கள் அவனது பாவத்திற்காகக் கொண்ட மனவேதனையை உறுதியாக எடுத்துக்கூறின. கண்ணீர்மல்க, இருதயம் உடைந்தவனாக, தேவன் முன்னிலையில் தன்னுடைய காரியத்தை வாய்விட்டு எடுத்துக்கூறிய தமது ஊழியக்காரனை ஆண்டவர் கைவிடவில்லை. தனக்கெதிராக சத்துருக்கள் கலகஞ்செய்யும்படி தனது சொந்தமகனால் தூண்டிவிடப்பட்டபோது, மனச்சாட்சியினால் வதைக்கப்பட்டவனாக, தனது உயிரைக் காப்பாற்ற அவர்களிடமிருந்து தப்பி ஓடிக்கொண்டிருந்த அந்த நேரத்தைவிட, வேறு எப்போதுமே தாவீது அந்த எல்லையற்ற அன்பின் ஆண்டவருக்கு மிக அன்பாக, நெருக்கமாக இருந்ததில்லை. “நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு” (வெளி. 3:19) என்று ஆண்டவர் கூறுகிறார். செய்த பாவத்தைக்குறித்து மனவேதனை அடைபவரை கிறிஸ்து தூக்கியெடுத்து, துயரப்படுகிற அந்த நபரின் இருதயம் தமது இருப்பிடமாகும்வரை அவரைப் புடமிடுகிறார். (13)

ஆனால், இன்னல்கள் நம்மைத் தாக்கும்போது, நம்மில் எத்தனைபேர் யாக்கோபைப்போல் இருக்கிறோம்! நம்மீது வைக்கப்பட்டிருப்பது சத்துருவின் கரமே என்று நாம் எண்ணி, இருளிலே பலனற்றுப்போகும்வரை குருட்டுத்தனமாகப் போராடுகிறோம்; அதனால், எத்தகைய ஆறுதலையும் விடுதலையையும் நாம் காணமுடிவதில்லை. விடிந்துவருகையில் ஏற்பட்ட தெய்வீகத் தொடுதல், யாக்கோபிற்கு தான் போராடிக்கொண்டிருந்தது, உடன்படிக்கையின் தூதனானவரோடு என்று வெளிப்படுத்தியது. எந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று அவனது ஆத்துமா ஏங்கிக்கொண்டிருந்ததோ, அந்த ஆசீர்வாதத்திற்காகக் கதறி, உதவியற்றவனாக அந்த எல்லையற்ற அன்பின் மார்பிலே விழுந்தான். “சோதனைகள் யாவும் ஆதாயமே” என்றும், ஆண்டவருடைய சிட்சையை அற்பமாக எண்ணி அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகக்கூடாது என்றும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். (14)

“இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான்... அவர் காயப்படுத்திக் காயங்கட்டுகிறார்; அவர் அடிக்கிறார், அவருடைய கை ஆற்றுகிறது. ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார்; ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடாது” – யோபு 5:17–19. அடிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரிடத்திற்கும் இயேசு தமது குணமாக்கும் ஊழியத்தோடு வருகிறார். உயிரிழப்பினால், வேதனையினால், துன்பங்களினால் பாதிக்கப்பட்ட வாழ்க்கையானது, அவரது பிரசன்னத்தினால் வெளிப்படுத்தப்பட்ட விலையேறப் பெற்ற காரியங்கள்மூலமாக பிரகாசமடைய முடியும். (15)

துக்கத்தினால் ஏற்படும் மௌனத்திலும், புண்பட்டு உடைந்த இருதயங்களால் அழுத்தப்பட்ட நிலையிலுமே நாம் இருப்பதை தேவன் விரும்புகிறதில்லை. தலையை உயர்த்தி அவரது அன்பின் இனிய முகத்தை நாம் நோக்கிப்பார்க்கவேண்டுமென்று அவர் ஆசிக்கிறார். அநேகர் கண்ணீர் மல்கியவர்களாக, பார்வை தெளிவற்று, அவரைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாமலிருக்கும்போது, ஆசீர்வாதமான நமது மீட்பர் அவர்கள் அருகிலே நிற்கின்றார். நமது கரங்களைப் பற்றிக்கொள்ளவும், நமக்கு வழிகாட்ட அவரை அனுமதித்து எளிய விசுவாசத்தோடு அவரை நாம் நோக்கிப்பார்க்கவேண்டுமென்றும் அவர் ஏங்கி நிற்கிறார். நமது ஆழ்ந்த மனத் துன்பங்களிலும் துயரங்களிலும் சோதனைகளிலும் அவரது இருதயம் நமக்காகத் திறந்திருக்கிறது. நித்திய அன்பினாலே நம்மை நேசித்து, அன்பின் இரக்கத்தினாலே நம்மைச் சுற்றிவளைந்துகொள்கிறார். அவரது அன்பின் இரக்கத்தை நாள்முழுவதும் தியானித்து, இருதயப்பூர்வமாக அவர்மீது நமது எண்ணங்களை நிலைக்கச்செய்யலாம். அன்றாடத் துக்கங்களிலும்,

குழப்பங்களிலுமிருந்து நமது ஆத்துமாவை உயர்த்தி, சமாதான வரம்பிற்குள் நம்மை நிலைத்திருக்கச்செய்வார். (16)

துக்கத்திலும் துன்பத்திலும் உழல்கின்ற பிள்ளைகளே, இதை எண்ணி, நம்பிக்கையோடு களிகூருங்கள். "...நமது விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" – 1யோவான் 5:4. (17)

உலகத்தில் காணப்படும் துயரத்திற்காகவும், அதனால் ஏற்படும் பாவத்திற்காகவும் துக்கப்பட்டு, பரிவுகொண்டவர்களாக இயேசுவுடன் சேர்ந்து அழுகின்றவர்களும் பாக்கியவான்கள். இத்தகைய துயரத்திலே சுயத்தைப்பற்றிய நினைவு கலந்து காணப்படுகிறதில்லை. எந்த மொழியாலும் விவரிக்கமுடியாத அளவிற்கு இயேசு துக்கம் நிறைந்தவராக இருந்தார். அவரது இருதயம் கடுந்துயரம் அனுபவித்தது. மனிதரின் மீறுதல்களினால் அவர் நொந்து காயப்பட்டார். அவரது ஆவி முறிந்துபோயிற்று. தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் ஆர்வத்தோடு மானிடரின் இல்லாமையைப் போக்கவும், அவர்களது துன்பங்களைத் துடைக்கவும் கடுமையாக உழைத்தார். திரளான மக்கள், தாங்கள் ஜீவனைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவரிடத்தில் வரமறுத்ததைக் கண்டபோது, அவரது இருதயம் துக்கத்தால் கனத்தது. கிறிஸ்துவின் பின்னடியார்கள் அனைவருமே இப்படிப்பட்ட அனுபவத்தில் பங்கடைவார்கள். அவர்கள் அவரது அன்பில் பங்குகொள்ளும்போது, நம்பிக்கையற்று வீழ்ந்துபோன மக்களை இரட்சிப்பதற்காக, அவர் அடைகின்ற வேதனையினூடே கடந்து செல்லுவார்கள். கிறிஸ்துவின் பாடுகளிலே அவர்கள் பங்கடைவார்கள். வெளிப்படப்போகும் மகிமையிலும் அவர்கள் பங்கடைவார்கள். அவரது ஊழியத்திலே அவரோடு ஒன்றுபட்டிணைந்து, துக்கத்தின் பாத்திரத்திலே அவரோடு பானம் பண்ணும்போது, அவரது சந்தோஷத்திலும் பங்குகொள்ளுகிறார்கள். (18)

துன்பத்தின்மூலமாகவே இயேசு ஆறுதலின் ஊழியத்தைப் பெற்றுக்கொண்டார். மானிடருக்கு வரும் அனைத்துத் துன்பங்களிலும் அவர் துன்பமடைந்தார். "அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்" – ஏசாயா 63:9; "அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" – எபிரெயர் 2:18. இந்த ஊழியத்திலே, அவருடைய பாடுகளின் தோழமையின் உறவுகளிலே பிரவேசிக்கின்ற ஒவ்வொரு மனிதனும் பங்கடையும் உரிமையைப் பெறுகிறான். "கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது" – 2 கொரி. 1:5. கர்த்தர் துயரப்படுகிறவர்களுக்கான

விசேஷித்த கிருபையை உடையவராயிருக்கிறார்; இருதயங்களை உருக்கி, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும் வல்லமையுடையதாய் அது இருக்கிறது. அவரது அன்பு, காயப்பட்டு குன்றிப் போன ஆத்துமாவை அடையத்தக்கதான ஒரு வழியைத் திறந்து, துயரப்படுகிறவர்களுக்கு குணமாக்கும் மருந்தாகச் செயல்படுகிறது. "இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்... எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்" – 2 கொரிந்தியர் 1:3,4. (19)

## ***"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" – மத்தேயு 5:5.*** (20)

மலைப்பிரசங்கம் முழுவதிலும் கிறிஸ்தவ அனுபவத்தின் ஒரு வளர்ச்சிக்கோட்டினைக் காணலாம். தங்களுக்கு கிறிஸ்து தேவை என்பதை உணர்ந்தவர்கள், பாவத்திற்காகத் துயரம் அனுபவித்தவர்கள், துன்பமென்னும் பாடசாலையில் கிறிஸ்துவோடு அமர்ந்திருந்தவர்கள், அந்த தெய்வீக ஆசானிடமிருந்து சாந்தகுணத்தைக் கற்றுக்கொள்வார்கள். (21)

தவறுகள் நடக்கும்போது, அதைப் பொறுமையோடும் மென்மையோடும் சகித்துக்கொள்வது அஞ்ஞானிகளாலும் யூதர்களாலும் மதிக்கப்பட்ட குணநலன்கள் அல்ல. பூமியிலேயே மோசே மிகவும் சாந்தமுள்ள மனிதனென்று, பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு மோசே அறிவித்த செய்தியை, அவனது நாட்களிலே வாழ்ந்த மக்கள் ஒரு பாராட்டுரையாகவே மதித்திருக்கமாட்டார்கள். ஆனால் அது பரிதாபத்தையோ அல்லது அவமதிப்பையோதான் தூண்டிவிட்டிருக்கும்; ஆனால், இயேசு அவருடைய இராஜ்யத்திற்கான முதன்மைப் பண்புகளிலே ஒன்றாக சாந்தகுணத்தை வைக்கிறார். அவரது சொந்த வாழ்க்கையிலும் குணநலன்களிலும் இத்தகைய விலைமதிப்புவாய்ந்த கிருபையின் தெய்வீக அழகு வெளிப்பட்டது. (22)

பிதாவின் மகிமைப்பிரகாசமான இயேசு, "தேவனுக்குச் சமமா யிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து" – (பிலிப்பியர் 2:6,7) வாழ்க்கையின் மிகத் தாழ்மையான அனுபவங்களினூடாகக் கடந்துசெல்ல அவர் சம்மதித்தார். மானிடர் மத்தியில், இராஜாவாக அல்ல, மேலாண்மையை உரிமைகோருபவராக அல்ல, மற்றவர்களுக்கு சேவைசெய்வதே தனி ஒருவரான தமது இறைப்பணி என நினைத்து நடந்துசென்றார். அவரது இயல்பிலே, மதவெறியின் கறையோ, குளிர்ந்த கடுந்துறவற நிலையின்

இனிமையற்ற தன்மையோ இருக்கவில்லை. உலகத்தின் இரட்சகரான அவருக்கு தூதனின் தன்மையைவிட மேம்பட்ட ஒரு இயல்பு இருந்தது; எனினும், அவரது தெய்வீக கம்பீரத்தோடு சாந்தகுணமும் தாழ்மையும் இணைந்து, அனைவரையும் அவர்பால் ஈர்த்துக்கொண்டது. (23)

இயேசு தம்மை வெறுமையாக்கினார். அவருடைய செயல்களில் சுயம் காணப்படவே இல்லை. அனைத்துக் காரியங்களையும் பிதாவின் சித்தத்திற்கு அவர் கீழ்ப்படுத்தினார். பூமியிலே தமது இறைப்பணி முடிவடையுந்தருவாயில் அவர்: "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்" (யோவான் 17:4) என்றார். "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்"–மத்தேயு 11:29; "ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான்" (மத்தேயு 16:24) வெறுக்கட்டும்; சுயமானது அதின் அதிகாரத்தினின்று தள்ளிவிடப்பட்டு, இனி ஒருபோதும் ஆத்துமாவின்மீது ஆதிக்கஞ்செலுத்தாமலிருக்கட்டும். (24)

கிறிஸ்துவை அவரது சுயமறுப்பிலும், அவரது மனத்தாழ்மையான நிலையிலும் காணுகின்ற ஒருவர், தானியேல் மனுஷகுமாரனுக்கொப்பான ஒருவரைக் கண்டபோது, "என் உருவம் மாறி வாடிப்போயிற்று" (தானியேல் 10:8) என்று சொன்னதைப்போன்று கட்டாயமாகக் கூறவேண்டியதிருக்கும்! நாம் பெருமைபாராட்டுகின்ற சுயாதீனமும், சுயஆதிக்கமும் சாத்தானுக்கு அடிமையாயிருப்பதின் அடையாளங்களாக, உண்மையான இழிவுநிலையில் காணப்படுவதற்கு, எப்பொழுதுமே மானிடத் தன்மையானது முனைப்போடு தன்னை வெளிப்படுத்தப் போராடி போட்டியிட ஆயத்தமாக இருக்கிறது; கிறிஸ்துவில் கற்றுக்கொள்கிற ஒருவன் சுயம், பெருமை, ஆதிக்கஞ்செலுத்த வேண்டுமென்ற ஆசை ஆகிய அனைத்தையும்விட்டு தன்னை வெறுமை யாக்குகிறான்; அவனது ஆத்துமாவில் அமைதி நிலவுகிறது. சுயமானது பரிசுத்த ஆவியானவரின் பொறுப்பிலே சரணடைந்துவிடுகிறது. அதன்பின்பு, உயர்ந்த இடத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அவனிடமிருக்காது. மற்றவர்களும் காணுகின்றவகையில், முழங்கையால் நெருக்கித்தள்ளி முண்டியடித்துக் கொண்டு செல்லவேண்டுமென்ற வாஞ்சை நமக்கிராது; ஆனாலும், நாம் அடையவேண்டிய உன்னதமான இடம் நம் மீட்பரின் பாதபடியே என்பதை நாம் உணருவோம். அவரது கரம் நம்மை நடத்தும்படி காத்திருந்து, அவருடைய ஆலோசனையின் குரலிற்கு செவிசாய்த்து, இயேசுவை நோக்கிப்பார்க்கவேண்டும். இந்த அனுபவத்தைப் பெற்றிருந்த பவுல் அப்போஸ்தலன்: "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ,

என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா. 2:20) என்கிறார். (25)

கிறிஸ்துவை நம்முடனே தங்கியிருக்கும் விருந்தினராக நம் ஆத்துமா ஏற்றுக்கொள்ளும்போது, புத்திக்கெட்டாத தேவசமாதானம் கிறிஸ்துவின் மூலமாக நமது இருதயங்களையும் சிந்தைகளையும் காத்துக்கொள்ளும். இந்த பூமியில் மீட்பரின் ஜீவியம் போராட்டங்களின் மத்தியிலிருந்தபோதிலும், சமாதானம் நிறைந்த வாழ்க்கையாக அமைந்திருந்தது. மூர்க்கங்கொண்ட பகைவர்கள், விடாமல் பின்தொடர்ந்துகொண்டிருந்தபோதிலும் அவர்: "என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரிய மானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை" (யோவான் 8:29) என்று கூறினார். அவர் தேவனோடுகொண்ட பூரணமான ஆன்மீகக் கூட்டுறவின் அமைதியை எத்தகைய மானிட அல்லது சாத்தானிய உக்கிரத்தின் புயலாலுங்கூட சீர்குலைக்க முடியவில்லை. அவர் நம்மிடம்: "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" – யோவான் 14:27; "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப் பாறுதல் கிடைக்கும்" (மத்தேயு 11:29) எனக் கூறுகின்றார். மனித இனத்தை உயர்த்துவதற்காகவும், தேவமகிமைக்காகவும் சேவையின் நுகத்தை என்னுடன் சேர்ந்து சுமக்கவேண்டுகிறேன். அப்பொழுது, என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருப்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள் என்று நமக்குக் கூறுகிறார். (26)

சுயத்தின்மீது கொண்ட ஆசையே நமது சமாதானத்தை அழித்துப்போடுகிறது. சுயம் முற்றிலும் உயிருடன் இருக்கின்றபொழுது, இழிவிற்கும் அவமதிப்பிற்கும் உட்படாதபடி சுயத்தைத் தொடர்ந்து காப்பாற்ற நாம் ஆயத்தமாக நிற்கின்றோம். நாம் மரித்த நிலையில் இருப்போமானால், தேவனில் கிறிஸ்துவுடன் நமது ஜீவியம் மறைக்கப்பட்டிருக்கும். புறக்கணிப்பு மற்றும் ஏனைய அவமதிப்புகளை நாம் இருதயத்தில் ஏற்று கலங்கமாட்டோம். பழிக்கும் அவதூறுக்கும் காதுகேளாதவர்கள்போலும், கேலிவார்த்தை மற்றும் அவமதிப்புகளைக் கண்டும் காணாதவர்போலவும் இருப்போம். "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில்

சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது" – 1 கொரிந்தியர் 13:4–8. (27)

பலவகையான சூழ்நிலைகள் மாற்றியமைவதைப்போன்று, பூமிக்கடுத்த ஆதாரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் மகிழ்ச்சியும் மாறுபடக்கூடியது; ஆனால், கிறிஸ்து வழங்கும் சமாதானம் நிலைத்து நம்முடன் தங்கியிருக்கும் சமாதானமாகும். வாழ்க்கையில் காணப்படும் சூழ்நிலைகளையோ, உலக ஆஸ்தியின் அளவையோ, பூலோக நண்பர்களின் எண்ணிக்கையையோ அது சார்ந்திருக்கிறதில்லை. கிறிஸ்துவே ஜீவதண்ணீரின் ஊற்றாக வருகிறார். அவரிடமிருந்து பெறப்படும் மகிழ்ச்சி ஒருபோதும் வற்றிப்போவதில்லை. (28)

கிறிஸ்துவில் காணப்படும் சாந்தகுணமானது இல்லத்தில் தெளிவாக வெளிப்படுமானால், அங்குள்ள அனைவரையும் மகிழ்ச்சியுடையவர்களாக்கும்; அது சச்சரவைத் தூண்டுகிறதில்லை; கோபமாக விடையளிக்கிறதில்லை; மாறாக எரிச்சலடைந்த மனநிலையை மென்மையாக அமைதிப்படுத்துகிறது; அதின் இனிமையான வட்டத்திற்குள்ளான அனைவரும் உணரும்படியான அமைதியை எங்கும் பரப்புகிறது. இந்த பூமியில் வாழும் குடும்பங்களில் எங்கெல்லாம் சாந்தகுணம் நெஞ்சார நினைத்து நேசிக்கப்படுகிறதோ, அந்த இடங்கள் அனைத்தையும், மாபெரும் பரலோகக் குடும்பத்தின் ஒரு பகுதியாக மாற்றிவிடுகிறது. (29)

நமது விரோதிகளைப் பழிக்குப்பழி வாங்குகின்ற சித்திரவதையை நம்மீது சுமத்திக்கொள்வதைக்காட்டிலும், பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி, துன்பமடைவதே நமக்குச் சாலச்சிறந்தது. மற்றும் பழிக்குப்பழிவாங்கும், வெறுக்கும் ஆவியானது சாத்தானிடமிருந்து தோன்றியது. அதைப் பேணிவளர்ப்பவர்களுக்கு அது தீமையையே கொண்டுவரும். மனத்தாழ்மை என்னும் சாந்தகுணம், கிறிஸ்துவில் நிலைத்திருப்பதினால் பெறப்படும் கனியாகும். ஆசீர்வாதத்திற்கு அதுவே உண்மையான இரகசியமாகும். "சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்" – சங்கீதம் 149:4. (30)

"சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" – மத்தேயு 5:5. தன்னை உயர்த்தவேண்டும் என்ற ஆசையின் மூலமாகத்தான் இந்த உலகிற்குள் பாவம் நுழைந்தது; அதினால் நமது முதல் பெற்றோர்கள் இந்த அழகிய பூமியாகிய தங்களது இராஜ்யத்தின் ஆளுகையை இழந்தார்கள். இழந்துபோனதை சுயமறுப்பின்மூலமாகவே

கிறிஸ்து மீட்கிறார். அவரைப்போலவே நாமும் ஜெயங்கொள்ளவேண்டும் என்று கூறுகிறார் (வெளிப்படுத்தல் 3:21). “சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளும்”போது (சங்கீதம் 37:11) மனத்தாழ்மை, சுய ஒப்படைப்பு ஆகியவைகளின்மூலமாக, அவரோடுகூட சுதந்தரவாளிகளாகலாம். (31)

சாந்தகுணமுள்ளவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் பூமியானது, மரண நிழலினாலும், சாபத்தினாலும், இருளடைந்துபோயிருக்கும் இந்த பூமியைப்போல் இராது. “அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்” – 2பேதுரு 3:13; “இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்” – வெளிப்படுத்தல் 22:3. (32)

அங்கு ஏமாற்றமில்லை, துக்கமில்லை, மரணமில்லை; “நான் வியாதிப்பட்டிருக்கிறேன்” என்று ஒருவரும் சொல்வதில்லை. மரண ஊர்வலங்களில்லை, துக்கங்கொண்டாடுதலில்லை, மரணமில்லை, பிரிவுகளில்லை, உடைந்த உள்ளங்களில்லை; இயேசு அங்கிருக்கிறார். சமாதானம் அங்கிருக்கிறது. “அவர்கள் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை; உஷ்ணமாகிலும், வெயிலாகிலும் அவர்கள்மேல் படுவதுமில்லை; அவர்களுக்கு இரங்குகிறவர் அவர்களை நடத்தி, அவர்களை நீரூற்றுகளிடத்திற்கு கொண்டுபோய்விடுவார்” – ஏசாயா 49:10. (33)

***“நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்” – மத்தேயு 5:6.*** (34)

நீதியானது பரிசுத்தத்தன்மையாகும். அதாவது தேவனைப் போன்றிருப்பதாகும். “தேவன் அன்பாகவே இருக்கிறார்” (1யோவான் 4:16) என்பது தேவப்பிரமாணத்திற்கு ஒத்துப்போவதாகும்; ஏனெனில், “உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்” – சங்கீதம் 119:172; “அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது” – ரோமர் 13:10. நீதியின் பொருள் அன்பு. அன்பு தேவனுடைய வெளிச்சமும் ஜீவனுமாயிருக்கிறது. தேவனுடைய நீதி கிறிஸ்துவிற்குள் அடங்கியிருக்கிறது; எனவே, இயேசுவை ஏற்றுக்கொள்வதின்மூலமாக, நாம் நீதியைப் பெற்றுக்கொள்கிறோம். (35)

வேதனைமிகுந்த போராட்டங்களாலோ அல்லது களைப்புண்டாக்கும் கடும் முயற்சிகளாலோ நீதியைப் பெற்றுக்கொள்ளமுடியாது; ஆனால், நீதியைப் பெற்றுக்கொள்வதற்காக பசியோடும் தாகத்தோடும் இருக்கும்

ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் அது இலவசமாகக் கொடுக்கப்படும். “ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள் ...பணமுமின்றி விலையுமின்றிக்... கொள்ளுங்கள்.” “என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.” “அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே” – ஏசாயா 55:1; 54:17; எரேமியா 23:6. (36)

ஆத்துமாவின் பசியையும், தாகத்தையும் திருப்திசெய்யும் எதையும் எந்த மனிதப் பிரதிநிதியாலும் வழங்கமுடியாது; ஆனால் இயேசு, “இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன்;” “ஜீவஅப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்” (வெளிப்படுத்தல் 3:20; யோவான் 6:35) என்று கூறுகின்றார். (37)

நமது உடலின் பலத்தை பேணிக்காப்பதற்கு நமக்கு ஆகாரம் தேவை; அதைப்போலவே தேவனுடைய ஊழியங்களைச் செய்வதற்கான பலத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், ஆவிக்குரிய வாழ்க்கையை காத்துக்கொள்வதற்கும், வானத்திலிருந்து வந்த அப்பமாகிய கிறிஸ்து நமக்குத் தேவை. நமது ஆற்றலையும் ஜீவனையும் பராமரிப்பதற்காக நமது உடல் ஊட்டச்சத்தைத் தொடர்ந்து பெற்றுக்கொண்டிருப்பதைப்போல, நமது ஆத்துமா தொடர்ச்சியாக கிறிஸ்துவினிடம் தன்னை ஒப்புக்கொடுத்து முற்றிலும் அவரையே சார்ந்து அவரோடு தொடர்புகொண்டிருக்கவேண்டும். (38)

மிகவும் களைப்படைந்த ஒரு பிரயாணி பாலைவனத்தில் நீரூற்றைத் தேடியலைந்து அதைக் கண்டுபிடித்தவுடன் தனது கடுமையான தாகத்தைத் தணித்துக்கொள்கிறதுபோல, ஒரு கிறிஸ்தவன் தாகத்துடனிருந்து ஜீவஊற்றாகிய கிறிஸ்துவிடமிருந்து பரிசுத்த ஜீவத்தண்ணீரைப் பெற்றுக்கொள்கிறான். (39)

நமது மீட்பருடைய குணத்தின் பூரணத்தை நாம் தெளிவாக அறிந்துகொள்ளுகிறபோது, நமது தன்மைகள் முழுவதுமாக மாறி அவரது தூய்மையான சாயலில் புதுப்பிக்கப்படவேண்டும் என்று நாம் வாஞ்சிப்போம். நாம் எவ்வளவு அதிகமாக தேவனை அறிந்திருக்கிறோமோ, அவ்வளவாக, நாம் பெற்றிருக்கவேண்டிய குணத்தைப்பற்றின குறிக்கோள் உயர்ந்திருக்கும்;

மேலும், அவரது சாயலைப் பிரதிபலிக்கவேண்டுமென்ற நம்முடைய ஏக்கம் மிகவும் உண்மையானதாயிருக்கும். மனித ஆத்துமாவானது தேவனைத் தேடும்போது, ஒரு தெய்வீகக் காரியமானது மனிதத் தன்மையோடு கலக்கின்றது. அப்பொழுது வாஞ்சையுள்ள இருதயமானது, “என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும்.” (சங்கீதம் 62:5) என்று கூறமுடியும். (40)

உங்களது ஆத்துமாவின் தேவை என்ன என்ற உணர்வு இருக்குமானால், நீங்கள் நீதியின்மேல் பசியோடும் தாகத்தோடும் இருப்பீர்களானால், உங்களால் உங்களுக்கு செய்ய இயலாத காரியங்களை பரிசுத்த ஆவியின் பொழிவின்மூலமாக உங்களுக்கு செய்யத்தக்கதாக, அவரைத் தேடுவதற்கு கிறிஸ்து உங்கள் இருதயத்தில் கிரியைசெய்திருக்கிறார் என்பதற்கு இது ஒரு ஆதாரமாகும். நமது தாகத்தைத் தணிக்க, ஆழமற்ற சிற்றாறுகளைத் தேடி நாம் அலையவேண்டிய அவசியமில்லை; மாபெரும் ஊற்று ஒன்று நமக்கு மேலாக இருக்கிறது. விசுவாசப் பாதையிலே நாம் சற்று உயர்வோமானால், அந்த மாபெரும் ஊற்றின் ஏராளமானத் தண்ணீரை இலவசமாகக் குடிக்கலாம். (41)

தேவனுடைய வார்த்தைகள் ஜீவஊற்றுகளாக இருக்கின்றன. அத்தகைய ஜீவஊற்றுகளை நாடித்தேடும்போது, பரிசுத்த ஆவியானவரின்மூலமாக, கிறிஸ்துவோடு தொடர்புகொள்ளும்படி கொண்டுவரப்படுகிறோம். நன்கு தெரிந்த சத்தியங்கள் புதிய கண்ணோட்டத்தில் நமது மனதில் காட்சிதரும். திடீரென்று ஒரு ஒளி பளிச்சிடுவதுபோன்று, வேத வசனங்கள் ஒரு புதிய பொருளோடு சட்டென்று வெளிப்படும். இந்தச் சமயத்தில் மீட்பின் பணியோடு மற்ற சத்தியங்களும் தொடர்புகொண்டிருப்பதை நீங்கள் காணலாம். மேலும், தெய்வீகப் போதகரான கிறிஸ்துவே உங்களுக்கருகிலிருந்து உங்களை வழிநடத்துகிறார் என்பதையும் நீங்கள் அறியலாம். (42)

இயேசு, “நான் அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்” (யோவான் 4:14) என்று கூறினார். சத்தியத்தை பரிசுத்த ஆவியானவர் நமக்கு விளக்கிக்காட்டும்போது, மிகவும் விலையேறப்பெற்ற அனுபவங்களை நாம் பொக்கிஷமாகச் சேமித்துவைத்துக்கொள்வோம். உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள தளர்வகற்றும், இன்பநலமளிக்கும் காரியங்களைப்பற்றி மற்றவர்களோடு பேசவேண்டுமென்று ஏக்கத்தோடிருப்பீர்கள். அவர்களோடு தொடர்புகொள்ளும் வாய்ப்பினைப் பெறும்போது, கிறிஸ்துவின் பணியைப்பற்றியோ அல்லது அவரது பண்புநலன்பற்றி சில புதிய சிந்தனையையோ நாம் அவர்களுக்குத்

தெரிவிப்போம். அவரை நேசிப்பவர்களுக்கும் நேசிக்காதவர்களுக்கும் கொடுக்கத்தக்கதாக அவரது பரிவுநிறைந்த அன்பைப்பற்றிய சில புதிய வெளிப்படுத்தல்கள் உங்களிடத்திலிருக்கும். (43)

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்" – லூக்கா 6:38; ஏனெனில், தேவனின் வார்த்தையிலே, "தோட்டங்களுக்கு நீரூற்றும், ஜீவதண்ணீரின் துரவும், லீபனோனிலிருந்து ஓடிவரும் வாய்க்கால்களும் உண்டாயிருக்கிறது" – உன்னதப்பாட்டு 4:15. கிறிஸ்துவின் அன்பை ஒருமுறை ருசித்த இருதயம், மேலும் ஆழமான அன்பைப் பெற்றுக்கொள்வதற்காக வாஞ்சித்துக் கதறுகிறது. அதைப் பெற்றுக்கொள்ளும்போது அதிகமாக மிக ஏராளமான அளவில் பெற்றுக்கொள்வீர்கள். ஆத்துமாவிற்கு தேவன் அளிக்கும் ஒவ்வொரு வெளிப்பாடும் அவரை அறிந்து நேசிப்பதற்கான திறனை அதிகரிக்கிறது. "ஆண்டவரே, நீர் எங்களுக்கு இன்னும் அதிகமாக வேண்டும்" என்பதே இருதயம் தொடர்ந்து கொடுக்கும் அழைப்பின் குரலாகும்; மேலும், ஆவியானவர் எப்பொழுதும் கொடுக்கும் பதிலானது, "மேலும் அதிகமாக" என்பதாகும். "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" – ரோமர் 5:9,10; ஏனெனில், நமது தேவன், "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்" (எபேசியர் 3:20) கொடுப்பதில் அதிகமாக மகிழ்ச்சியடைகிறார். விழுந்துபோன மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காகத் தம்மைத்தாமே வெறுமையாக்கின இயேசுவிற்கு அளவில்லாமல் பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டுள்ளது. அதைப்போன்று கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும், அவர்கள் கிறிஸ்து தங்களில் வாசஞ்செய்யத்தக்கதாக முழு இருதயத்தையும் ஒப்படைக்கும்போது, பரிசுத்த ஆவி கொடுக்கப்படும். நமது ஆண்டவர்தாமே, "ஆவியினால் நிறைந்து" (எபேசியர் 5:18) இருக்கவேண்டுமென்று கட்டளை கொடுத்திருக்கிறார். அந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாகவும் இந்தக் கட்டளை இருக்கிறது. சகல பரிபூரணமும் அவருக்குள்ளே இருக்க வேண்டுமென்பதும், "அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்பதும்" (கொலோ. 1:19; 2:10) பிதாவின் நல்விருப்பமாகும். (44)

மழையின் பொழிவு பூமியை புதுமலர்ச்சி அடையச்செய்வதுபோன்று, தேவன் தமது அன்பைத் தாராளமாகப் பொழிந்திருக்கிறார். "ஆகாய

மண்டலங்கள் நீதியைப் பொழியக்கடவது, பூமி திறவுண்டு, இரட்சிப்பின் கனியைத்தந்து, நீதியுங்கூட விளைவதாக; ... சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன். உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும், பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளையும் திறந்து, வனாந்தரத்தைத் தண்ணீர்த் தடாகமும், வறண்ட பூமியை நீர்க்கேணிகளுமாக்கிய" – ஏசாயா 45:8; 41:17,18; "அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம்" – யோவான் 1:16. (45)

***"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" – மத்தேயு 5:7.*** (46)

மனித இருதயம் இயல்பிலேயே இறுகினதாயும் இருளானதாயும் அன்பற்றதாயுமிருக்கிறது. இரக்கத்தின் ஆவியை ஒருவர் வெளிப்படுத்துகிற போது, அவர் தானாக அந்தக் காரியத்தைச் செய்கிறதில்லை; மாறாக, அவரது இருதயத்திலே அசைவாடும் தேவஆவியின் செல்வாக்கின் மூலமாகச் செய்கிறார். "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" – 1யோவான் 4:19. (47)

தேவன் தாமே இரக்கங்களனைத்திற்கும் ஊற்றாயிருக்கிறார். "இரக்கமும் கிருபையும் உள்ளவர்" (யாத்திராகமம் 34:6) என்பதே அவரது நாமம். நமது தகுதிக்கு ஏற்றவாறு அவர் நம்மை நடத்துகிறதில்லை. அவரது அன்பைப் பெற்றுக்கொள்ள நாம் தகுதியுள்ளவர்கள்தானா என்று அவர் கேட்கிறதில்லை. நம்மை தகுதியுடையவர்களாக்குவதற்காக அவரது அன்பின் ஐசுவரியத்தை நம்மீது பொழிகின்றார். அவர் பழிக்குப்பழி வாங்குகிறவரல்ல. நம்மைத் தண்டிக்கிறதற்காக அவர் தேடுவதில்லை; மாறாக, நம்மை மீட்பதற்காகத் தேடுகிறார். அவர் தமது அருட்பொழிவின்மூலமாக, வெளிப்படுத்தும் கடுமையான நடவடிக்கைகூட, வழிவிலகிப்போனவர்களின் இரட்சிப்பிற்காக அவர் செய்யும் காரியமாகும். மானிடரின் இன்னல்களினின்று அவர்களுக்கு விடுதலைகொடுத்து, அவர்களது காயங்களுக்கு மருந்திட்டு, குணமாக்கவேண்டுமென்று தீராத வாஞ்சையோடு ஏங்குகின்றார். தேவன், "குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமாட்டார்" (யாத்திராகமம் 34:7) என்பது உண்மை; ஆனால், அவனது குற்றத்தை நீக்கிப்போடுவார். (48)

இரக்கமுள்ளவர்கள் தெய்வீகக் குணத்தில் பங்குகொண்டவர்களாக

இருக்கிறார்கள்; அவர்களில் தேவனுடைய பரிவுள்ள அன்பு வெளிப்படுகிறது. எல்லையற்ற, அன்பே உருவான அவருடைய இருதயத்தோடு யாருடைய இருதயங்களெல்லாம் ஒத்துப்போகிறதோ, அவர்கள் மற்றவர்களை கண்டனம் செய்வதற்கல்ல, திருத்திக் கொண்டுவரவே நாடுவார்கள்; கிறிஸ்து வாசம் செய்கிற ஆத்துமா ஒருபோதும் வற்றிப்போகாத நீருற்றைப்போன்றது. எங்கு அவர் தங்கியிருக்கிறாரோ அங்கு நன்மைகள் பொங்கி வழிந்தோடும். (49)

பாவத்தில் நிலைகொண்டிருக்கின்ற, சோதனைக்குட்பட்ட தரித்திரத்திலும், பாவத்திலும் நிர்ப்பந்தமான நிலைக்கு பலியாகியிருக்கின்றவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும்போது, அவர்கள் தகுதியுள்ளவர்கள்தானா? என்ற கேள்வியை கிறிஸ்தவன் கேட்பதில்லை; ஆனால், எந்தெந்த வழிகளில் நான் அவர்களுக்கு உதவி செய்யலாம் என்றே கேட்பான். மிகவும் இழிவான நிலையிலிருப்பவர்கள் மற்றும் ஒழுக்கக்கேடான நிலையிலிருப்பவர்களில் யாரை இரட்சிப்பதற்காக கிறிஸ்து மரித்தாரோ, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை யாருக்காகத் தேவன் தமது பிள்ளைகளிடம் கொடுத்திருக்கிறாரோ அந்த ஆத்துமாக்களை அவன் காண்பான். (50)

ஏழைகளிடத்திலும், துன்பப்படுகிறவர்களிடத்திலும் ஒருக்கப்படுகிறவர்களிடத்திலும் பரிவுகாட்டுகிறவர்களே இரக்கமுள்ளவர்கள். "முறையிடுகிற ஏழையையும், திக்கற்ற பிள்ளையையும், உதவியற்றவனையும் இரட்சித்தேன். கெட்டுப்போக இருந்தவனுடைய ஆசீர்வாதம் என்மேல் வந்தது; விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப்பண்ணினேன். நீதியைத் தரித்துக்கொண்டேன்; அது என் உடுப்பாயிருந்தது; என் நியாயம் எனக்குச் சால்வையும் பாகையுமாய் இருந்தது. நான் குருடனுக்குக் கண்ணும், சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன். நான் எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து, நான் அறியாத வழக்கை ஆராய்ந்துபார்த்தேன்" – யோபு 29:12–16. (51)

அநேகருக்கு வாழ்க்கை வேதனைநிறைந்த ஒரு போராட்டமாகும். தங்களது குறைபாடுகளை எண்ணி, துயர்மிகுந்தவர்களாயும் நம்பிக்கையற்றவர்களுமாயிருக்கிறார்கள். எதற்கும் நன்றிசொல்லக்கூடிய நிலையில் தாங்கள் இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். அன்பான வார்த்தைகள், பரிவுள்ள பார்வைகள், உற்சாகமூட்டும் பாராட்டுதல்கள் போன்றவைகள் தனித்து தத்தளித்துக்கொண்டிருக்கும் அநேகருக்கு, எப்படி ஒரு தாகமுள்ள ஆத்துமாவிற்கு ஒரு குவளை குளிர்ந்த நீர் இருக்குமோ அப்படியிருக்கிறது. பரிவுள்ள ஒரு வார்த்தை, பாசமுள்ள ஒரு செயல் ஆகியவை களைத்துப்போன தோள்களின்மீது கனமாக வைக்கப்பட்டிருக்கும் பாரங்களினின்று விடுதலை கொடுக்கக்கூடியதாயிருக்கும். தன்னலமற்ற

பாசமுள்ள ஒவ்வொரு வார்த்தையும் அல்லது செயலும் இரட்சிப்பை இழந்துபோன மனுக்குலத்திற்காக கிறிஸ்து கொண்ட அன்பின் ஒரு வெளிப்பாடாக இருக்கிறது. (52)

"இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுவார்கள்;" "உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்" – நீதிமொழிகள் 11:25. மற்றவர்களின் நன்மைக்காக தன்னையே மறந்து சேவைசெய்கின்ற வாழ்க்கையில், அத்தகைய பரிவுள்ள ஆவியுள்ளவர்களுக்கு, இனிமையான சமாதானமும் ஆசீர்வாதமான திருப்தியுமுண்டு. ஆத்துமாவில் வாசஞ்செய்கிற பரிசுத்த ஆவி, வாழ்க்கையில் வெளிப்படையாகக் காணப்படும். அவர் கடின இருதயங்களை மென்மையாக்கி, கனிவையும் பரிவையும் ஏற்படுத்துவார். "நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதையே அறுப்பீர்கள்;" "சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்; அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர். படுக்கையின்மேல் வியாதியாய் கிடக்கிற அவனை கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர்" – சங்கீதம் 41:1–3. (53)

தேவனுடைய பிள்ளைகளுக்கான ஊழியத்தில், அவருக்கு தங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தவர்கள் இந்தப் பிரபஞ்சத்தின் அனைத்து மூலாதாரங்களையும் தனது அதிகாரத்தின்கீழ் வைத்திருப்பவரோடு, இணைந்து இருக்கிறார்கள். இத்தகைய நபருடைய வாழ்க்கை, தேவனுடைய ஜீவனோடு மாற்றமுடியாத வாக்குத்தத்தங்களாகிய பொற்சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறது. ஆண்டவர் துன்பம் மிகுந்த, தேவையான வேளையில் அவனைக் கைவிடமாட்டார். "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்"–பிலிப்பியர் 4:19. இறுதி மணிநேர தேவையிலிருக்கும்போது, இரக்கமுள்ளவர்கள் பரிவுள்ள இரக்கமுள்ள இரட்சகரிடத்தில் அடைக்கலம் பெற்று, நித்தியவீடுகளில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். (54)

***"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்" – மத்தேயு 5:8.*** (55)

யூதர்கள் சடங்காச்சாரத்தூய்மைபற்றிய காரியத்தை இம்மியும் பிசகாமல் கடைப்பிடித்தனர்; எனவே, அவைகளைப்பற்றிய ஒழுங்குமுறைகள்

மிகவும் தாங்கமுடியாத பாரமாக இருந்தன. அவர்களது உள்ளங்களில் சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள், வெளிப்படையான ஆச்சார மேன்மைகள் கெட்டுவிடுமோ என்ற பயம் குடிகொண்டிருந்தது. தன்னலமும், பகையுணர்வும் ஆத்துமாவில் ஏற்படுத்தும் கறையை அவர்கள் காணவில்லை. (56)

சடங்காச்சாரத்தூய்மை, அவரது இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கான நிபந்தனைகளில் ஒன்று என்று இயேசு குறிப்பிடவில்லை; மாறாக, இருதயம் தூய்மையாக இருக்கவேண்டுமென்பதின் அவசியத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார். "பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயிருக்கிறது" – யாக்கோபு 3:17. அசுத்தமாக்கும் எதுவுமே தேவ பட்டணத்திற்குள் பிரவேசிப்பதில்லை. அங்கு சஞ்சரிக்கப்போகும் அனைவரும் இவ்வுலகிலேயே இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக மாறிவிடுவார்கள். இயேசுவைப்பற்றிக் கற்றுக்கொள்ளும் நபரிடத்தில், கவலையற்ற நடத்தைகள், அவலட்சணமான மொழிநடைகள், மற்றும் கரடுமுரடான சிந்தனைகள், ஆகியவற்றின்மீது வெளிப்படையாக ஒரு வெறுப்புணர்வு வளர ஆரம்பிக்கும். கிறிஸ்து இருதயத்தில் வாசஞ்செய்கிறபோது, அங்கு தூய்மையும், நடத்தைகளிலும் சிந்தனைகளிலும் மேம்பாடும் காணப்படும். (57)

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று இயேசு கூறிய வார்த்தைகளிலே, ஒரு ஆழமான பொருள் காணப்படுகிறது. புலன்சார்ந்த உணர்வுகள் மற்றும் இச்சைகளிலிருந்து விலகியிருத்தலை, உலகத்தார் தூய்மையென்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய மனப்பாங்கில்மாத்திரம் தூய்மையுள்ளவர்களாக இருந்தால்மட்டும் போதாது; ஆத்துமாவின் செயல் நோக்கங்களிலும் மறைந்திருக்கும் உட்கருத்துக்களிலும் உண்மையாயிருக்கவேண்டும். தனக்கானவைகளைத் தேடுவதினின்றும், பெருமையினின்றும் விடுதலை பெற்றிருக்கவேண்டும். தாழ்மையோடு, தன்னலமற்றவர்களாக ஒரு சிறுகுழந்தையைப் போலிருக்கவேண்டும். (58)

ஒத்த சிந்தனையுடையவர்களை அத்தகைய சிந்தனை உடையவர்கள்தான் பாராட்டமுடியும். தேவனுடைய பண்பென்னும் கொள்கையாகிய, தன்னையே தியாகஞ்செய்கின்ற அன்பின் கொள்கையை, உங்களது சொந்த வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளாவிட்டால், நீங்கள் தேவனை அறிந்துணரவேமுடியாது. சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட இருதயம், தேவனை ஒரு கொடுமையானவரென்றும், இரக்கமற்றவரென்றும் நோக்கிப்பார்க்கிறது. மனித இனத்தின் தன்னலமான அடிப்படைக் குணங்களும், ஏன் சாத்தானின் குணங்களுங்கூட, அன்புள்ள சிருஷ்டிகரின் குணங்களாகப் பார்க்கப்படுகின்றன. "உன்னைபோல் நானும் இருப்பேன் என்று நினைவுகொண்டாய்" (சங்கீதம்

50:21) என்று ஆண்டவர் கூறுகிறார். அவரது அருள் வெளிப்பாடுகளெல்லாம் கொடுங்கோன்மையான, பழிவாங்குகின்ற அவரது இயல்பின் வெளிப்பாடே என விளக்கிக்காட்டப்படுகிறது. அவரது கிருபையின் ஐசுவரியங்களின் கருவூலப் பெட்டகமாக பரிசுத்த வேதாகமம் இருக்கிறது. வானங்களைப்போன்று உயர்ந்ததும், நித்தியத்தையும் சுற்றிவளைக்கக்கூடியதுமாகிய வேதாகமச் சத்தியங்களின் மகிமை, தெளிவாக உய்த்துணரப்படவில்லை. மானிட இனத்தின் திரள்கூட்டத்திற்கு கிறிஸ்து தாமே “வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போல” இருக்கிறார். “அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது” – ஏசாயா 53:2; இவ்வாறு மக்கள் அவரைக் காண்கிறார்கள். மானிடர் மத்தியிலே மனித இனத்திலே தேவனின் வெளிப்பாடாக இயேசு அவதரித்தபோது, வேதபாரகரும் பரிசேயரும், “உன்னைச் சமாரியனென்றும், பிசாசுபிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே” என்றார்கள். தங்களது தன்னல இருதயத்தால் மிகவும் குருட்டாட்டமடைந்த சீடர்கள்கூட பிதாவின் அன்பை தங்களுக்கு வெளிப்படுத்தவந்த ஆண்டவரை புரிந்துகொள்ளுவதில் மிகவும் தாமதமாக இருந்தார்கள். இதனால்தான் இயேசு மனிதர் மத்தியிலே தனிமையில் அமைதியாக தனது நாட்களைச் செலவிட்டார். பரலோகத்தால் மாத்திரமே அவர் முற்றிலுமாகப் புரிந்துகொள்ளப்பட்டிருந்தார். (59)

கிறிஸ்து தமது மகிமையில் திரும்பவும் வரும்போது, துன்மார்க்கர் அவரைக் கண்டு, தாங்கிக்கொள்ளமுடியாத நிலையிலிருப்பார்கள். அவரது பிரசன்னத்தின் ஒளி, அவரை நேசிப்பவர்களுக்கு ஜீவனாகவும், தேவனற்றவர்களுக்கு மரணமாகவுமிருக்கும். அவருடைய வருகையின் எதிர்பார்ப்பு துன்மார்க்கருக்கு “நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினை” யாகவுமே இருக்கும் – எபிரெயர் 10:27. அவர் வானத்தில் தோன்றும்போது, தங்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, தங்களுக்காக மரித்த அவரது முகத்தினின்று மறைக்கப்படவேண்டுமென்று அவர்கள் வேண்டிக்கொள்வார்கள். (60)

பரிசுத்த ஆவியானவர் வாசஞ்செய்ததின்மூலமாக, தூய்மையடைந்த இருதயங்களுக்கோவெனில் அனைத்தும் மாறிவிட்டன! அவர்களால் தேவனை அறியமுடியும். கர்த்தரின் மகிமை மோசேக்கு வெளிப்படுத்தப்பட்டபோது, அவன் கன்மலையின் பிளவிலே மறைக்கப்பட்டிருந்தான். கிறிஸ்துவிலே மறைத்துவைக்கப்பட்டிருப்போமானால், நம்மாலும் தேவனுடைய அன்பைக் காணமுடியும். “சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் இனிமையானவைகள்; ராஜா அவனுக்குச் சிநேகிதனாவான்”

– நீதி. 22:11. இவ்வுலகத்தில் இப்பொழுது விசுவாசத்தினால் அவரை நோக்கிப் பார்க்கிறோம். நமது அன்றாட அனுபவத்தில், அவருடைய அருட்பொழிவின் வெளிப்படுத்தல்களில், அவரது நன்மையையும் பரிவையும் தெளிவாக விளங்கிக்கொள்கிறோம். அவரது குமாரனின் பண்பிலே பிதாவை நாம் கண்டுணர்கிறோம். பரிசுத்த ஆவியானவர் தேவனையும் அவர் அனுப்பிய குமாரனையும்பற்றிய சத்தியங்களை மனதிற்குப் புரிந்துகொள்ளும்விதமாக வெளிப்படுத்துகிறார். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனை தங்களது இரட்சகராக, ஒரு புதிய பிரியமான உறவிலே காண்கிறார்கள்; அவரது பண்பின் இனிமையையும் தூய்மையையும் தெளிவாகப் புரிந்துகொள்கிறபோது, அவரது சாயலைப் பிரதிபலிக்க அவர்கள் ஏங்குகிறார்கள். மனந்திரும்பி வருகின்ற மைந்தனை அணைத்துக்கொள்ள ஏக்கங்கொண்ட பிதாவைப்போன்று அவரைக் காண்கிறார்கள். அவர்களது இருதயங்கள் விவரிக்கமுடியாத மகிழ்ச்சியினாலும், மகிமையின் நிறைவினாலும் முழுமையடைகின்றன. (61)

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் அவரது வல்லமையான கரத்தின் கிரியைகளிலிருந்தும், இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படுகிற அழகிய பொருட்களினின்றும் படைத்தவரைப்பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்கிறார்கள். எழுதப்பட்ட வார்த்தையிலே அவரது இரக்கம், நன்மை, கிருபை ஆகியவைகளின் வெளிப்பாடுகளை தெளிவானவிதத்தில் வாசித்தறிகிறார்கள். ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் மறைக்கப்பட்ட சத்தியங்கள் பாலகருக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. உலக ஞானிகளால் தெளிவாக விளங்கிக்கொள்ளமுடியாத, அழகிய, அருமையான சத்தியங்கள், தேவனுடைய சித்தத்தை அறிந்து அதின்படி நடக்க நம்பிக்கைகொண்ட சிறுபிள்ளையைப்போன்ற வாஞ்சையுடையவர்களுக்கு இடைவிடாமல் வெளிப்படுத்தப்படுகிறது. தெய்வீக இயல்பில் பங்குகொள்கிறவர்களாக நாம் மாறும்பொழுது சத்தியத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்கிறோம். (62)

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் இந்த உலகத்திலே வாழ ஆண்டவர் தங்களுக்குக் கொடுத்திருக்கும் காலத்திலே, வெளிப்படையாகத் தெரியுமளவிற்கு தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பதுபோன்று வாழ்கிறார்கள். (63)

ஏதேனிலே ஆதாம் தேவனோடு நடந்தும் பேசிக்கொண்டும் இருந்ததைப்போன்று, எதிர்காலத்திலே அழியாமையைத் தரித்தவர்களாக தேவனை அவர்கள் முகமுகமாய்க் காண்பார்கள். “இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம்; அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்” – 1 கொரி. 13:12. (64)

***“சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்” – மத்தேயு 5:9.*** (65)

கிறிஸ்துவே “சமாதானப்பிரபுவாய்” இருக்கிறார் – ஏசாயா 9:6. பாவம் தகர்த்துப்போட்ட சமாதானத்தை, பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் மீண்டும் கொண்டுவருவதே அவரது பணியாகும். “இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்” – ரோமர் 5:1. பாவத்தை விடுவதற்குச் சம்மதித்து, கிறிஸ்துவின் அன்பிற்கு யார் தனது இருதயத்தைத் திறந்துகொடுக்கிறாரோ அவர் அந்தப் பரலோக சமாதானத்திற்கு ஒரு பங்காளியாக மாறுகிறார். (66)

இதைவிட சமாதானம் சூழ்ந்த நிலை வேறு எதுவும் கிடையாது. இருதயத்தால் பெற்றுக்கொள்ளப்படும் கிருபை, பகைமையை கீழ்ப்படுத்தி, பூசலைத் தணித்து, ஆத்துமாவை அன்பினால் நிறைக்கிறது. தேவனோடும் தனது சகமனிதர்களோடும் சமாதானமாக இருக்கின்ற ஒரு நபர் இழிந்த துயர்நிலையை அடையமாட்டார்; அவரது இருதயத்தில் பொறாமை இருக்காது. யூகத்தால் ஏற்படும் தீயசந்தேகங்கள் அங்கு இடம்பெறுவதில்லை. வெறுப்பு அங்கு நிலைநிற்கமுடியாது. தேவனுடன் இசைந்து பொருந்தியிருக்கும் இருதயம், பரலோக சமாதானத்தின் ஒரு பங்காளியாயிருக்கிறது. அது தனது ஆசீர்வாதமான செல்வாக்கை எங்கணும் பரவச்செய்கிறது. இந்த உலகத்தின் தொல்லைகளால் துன்புற்று, களைத்து, நொந்திருக்கும் இருதயங்கள்மீது சமாதானத்தின் ஆவி பனியைப்போன்று அமர்ந்திருக்கும். (67)

கிறிஸ்துவின் பின்னடியார்கள் சமாதானத்தூதுடன் உலகத்திற்குள் அனுப்பப்படுகிறார்கள். யாரெல்லாம் அமைதியான பரிசுத்த ஜீவியத்தின் செல்வாக்கைத் தங்களையுமறியாமல் பரப்புகின்றார்களோ, அவர்கள் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவார்கள். யார் தனது வார்த்தையாலும் செயலாலும், ஒருவரை பாவத்தை விட்டுவிடவும், அவரது இருதயத்தை தேவனிடத்தில் ஒப்படைக்கவும் வழிநடத்துகிறாரோ அவர் ஒரு சமாதானஞ்செய்யும் நபர் ஆவார். (68)

“சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.” அவர்கள் தேவனோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அந்த சமாதானத்தின் ஆவியே ஒரு சான்று.

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

கிறிஸ்துவின் இனிய நறுமணம் அவர்களைச் சூழ்ந்திருக்கிறது. வாழ்க்கையின் நறுமணமும் குணத்தின் இனிமையும் அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்பதை உலகிற்கு வெளிப்படுத்துகிறது. இயேசுவுடனிருந்தவர்கள் அவர்கள் என்று அவர்களைப்பற்றி மனிதர்கள் தெரிந்து கொள்கிறார்கள். (69)

"அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்." "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" – 1யோவான் 4:7; ரோமர் 8:9,14. (70)

"யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப் போலவும், மனுஷனுக்குக் காத்திராமலும், மனுபுத்திரருக்குத் தாமதியாமலும், பூண்டுகள்மேல் வருகிற மழைகளைப்போலவும், அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்" – மீகா 5:7. (71)

***"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது" – மத்தேயு 5:10.*** (72)

பூமிக்கான மகிமையையும் ஐசுவரியங்களையும் அடைவதற்கான நம்பிக்கையையும் சோதனைகளின்றி விடுதலை பெற்ற ஒரு வாழ்வையும் அவரது பின்னடியார்கள்முன்பாக இயேசு வைக்கிறதில்லை; மாறாக, தற்தியாகம், மற்றவர்களால் அவதூறு செய்யப்படல் ஆகியவைகள் நிறைந்த பாதைகளிலே தங்கள் எஜமானரோடு நடக்கின்ற அந்த சிலாக்கியத்தை அவர் அவர்களுக்குக் கொடுக்கிறார்; ஏனெனில் உலகம் அவர்களை அறியவில்லை. (73)

கெட்டுப்போன இந்த உலகத்தை மீட்கவந்த அவரை தேவனுக்கும் மனிதனுக்கும் எதிராளிகளான சக்திகள் இணைந்து எதிர்த்தன. சமாதான பிரபுவிற்கு எதிராகத் தீயமனிதர்களும் தீயதூதர்களும் பரிவற்ற ஒரு கூட்டமைப்பில் ஒருங்கிணைந்து அணிவகுத்து எதிர்த்துநின்றனர். அவரது ஒவ்வொரு வார்த்தையும் செயலும் தெய்வீகப் பரிவை வெளிப்படுத்தியபோதும், உலகத்தோடு ஒத்துப்போகாத அவரதுநிலை கசப்பான பகைமையை மூட்டி எழுப்பியது. நமது இயல்பிலுள்ள கேடுசெய்யும் வெறியுள்ள உணர்வுகளைச் செயல்படுத்த அவர் இணங்காததால், அவருக்கு கொடிய எதிர்ப்புகளும் பகையும் எழும்பின. கிறிஸ்து இயேசுவில் தேவபக்தியுடன் நடக்கின்றவர்களுக்கும் அதேபோன்று சம்பவிக்கும். நீதிக்கும் பாவத்திற்கும் அன்பிற்கும் வெறுப்பிற்கும் உண்மைக்கும் பொய்மைக்கும் இடையில்

கட்டுப்படுத்தமுடியாத ஒரு போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் அன்பையும் பரிசுத்தத்தின் அழகையும்பற்றி ஒரு நபர் எடுத்துக்கூறும்போது, அவர் சாத்தானுடைய இராஜ்யத்தின் குடிமக்களை வெளியே இழுக்கிறார். அதை எதிர்ப்பதற்காக தீமையின் பிரபுவாகிய சாத்தான் எழும்புகிறான். கிறிஸ்துவின் ஆவியினால் ஊக்குவிக்கப்படும் அனைவருக்கும் இழிநிலையும் உபத்திரவமுமே காத்திருக்கிறது. உபத்திரவத்தின் தன்மை காலங்களுக்கேற்றபடி மாறுகிறது; ஆனால், அந்தக் கொள்கை, அதின் அடிப்படையில் இருக்கும் ஆவி, ஆபேலின் நாட்களிலிருந்து ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கொன்ற அதே ஆவிதான்! தேவனோடு இணைந்துவர மனிதர்கள் நாடும்போது, சிலுவையைப்பற்றிய இடறல் இன்னும் அற்றுப்போகவில்லை என்பதைக் காண்கிறார்கள். துரைத்தனங்களும், அதிகாரங்களும் வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளும் பரலோகப் பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதற்குத் தங்களை ஒப்புக்கொடுப்பவர்களுக்கு எதிராக அணிவகுத்து நிற்கின்றன. உபத்திரவம் துக்கத்தை உண்டுபண்ணுவதற்குப்பதிலாக, கிறிஸ்துவின் சீடர்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவரவேண்டும்; ஏனெனில், அவர்கள் தங்களது எஜமானரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறார்கள் என்பதற்கு அதுவே ஒரு சான்று. (74)

ஆண்டவர் தமது மக்களுக்கு சோதனைகளினின்று விலக்கி, அதற்கான வாக்குத்தத்தத்தை கொடுக்காவிட்டாலும் அதைவிட மேலான காரியத்தை வாக்களித்திருக்கிறார். “உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும்” என்றும், “என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத் திலே என் பலம் பூரணமாய் விளங்கும்” என்றும் கூறினார் (உபா. 33:25; 2 கொரி. 12:9). அவருக்காக எரிகிறசூளையின்வழியாக கடந்துசெல்ல நீங்கள் அழைக்கப்படும்போது, அந்த உத்தமமான பாபிலோனிய மூவருக்கு அருகிலிருந்த அந்த இயேசுவானவர் உங்கள் அருகிலும் இருப்பார். தங்களது இரட்சகரை நேசிப்பவர்கள் அவரோடு சிறுமையையும், அவதூறையும் பங்காகப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் களிகூருவார்கள். அவர்களது ஆண்டவருக்காக அவர்கள் கொண்டிருக்கும் அன்பு அவருக்காக துன்பத்தை சகிப்பதை இனிமையுடையதாக்குகிறது. (75)

அனைத்து யுகங்களிலும் சாத்தான் தேவனுடைய மக்களை உபத்திரவப்படுத்தியிருக்கிறான்; அவர்களை வதைத்துக் கொன்றிருக்கிறான்; ஆனால், இத்தகைய சாவிலே அவர்கள் வெற்றிவீரர்களாக மாறினார்கள். அவர்களது திடமான விசுவாசத்தினாலே சாத்தானைவிட மகாவல்லமையுள்ள ஒருவரை வெளிப்படுத்தினார்கள். சாத்தான் சித்திரவதைசெய்து உடலைக்

கொன்றுவிடமுடியும். தேவனிலே கிறிஸ்துவோடு மறைத்துவைக்கப்பட்டிருக்கும் அந்த ஜீவனை அவனால் தொடமுடியாது. சிறைச்சுவர்களுக்குள்ளே அவனால் அடைத்துவைக்க முடியும்; ஆனால், உற்சாகத்தின் ஆவியை அவனால் கட்டிவைக்க முடியாது. இருளுக்கப்பாலுள்ள மகிமையைப் பார்த்து, "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று" எண்ணி, மேலும் "காணப்படுகிறவை களையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" என்று கூறமுடியும் (ரோமர் 8:18; 2 கொரி. 4:17). (76)

சோதனைகள், உபத்திரவங்கள்மூலமாக மகிமை, தேவனுடைய பண்பு அவரது தெரிந்துகொள்ளப்பட்ட மக்களில் வெளிப்படுகிறது. உலகத்தால் வெறுத்து, உபத்திரவிக்கப்படும் தேவனுடைய சபையார் கிறிஸ்துவின் பள்ளியிலே போதிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகிறார்கள். அவர்கள் பூமியிலே இடுக்கமான பாதைகளில் நடக்கிறார்கள்; உபத்திரவத்தின் குகையிலே தூய்மைப்படுத்தப்படுகிறார்கள்; துயர்மிகுந்த போராட்டங்கள்மூலமாக அவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறார்கள்; சுயமறுப்பைச் சகித்து, கசப்பான ஏமாற்றங்களை அனுபவிக்கிறார்கள்; ஆனால், அவர்களது வேதனைமிகுந்த அனுபவம் பாவத்தின் பயங்கரத்தையும் அதினால் ஏற்படும் குற்றஉணர்வின் தன்மையையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறது. அவர்கள் பாவத்தை மிகுந்த வெறுப்போடு நோக்கிப்பார்க்கிறார்கள். கிறிஸ்துவின் பாடுகளிலே பங்காளிகளாயிருப்பதினால், அவரது மகிமைக்கும் அவர்கள் பங்காளிகள் என்று தீர்மானஞ்செய்யப்பட்டுள்ளது. பரிசுத்தத் தரிசனத்திலே தேவனுடைய மக்கள் அடைந்த வெற்றியை தீர்க்கதரிசி கண்டார். "அன்றியும், அக்கினிகலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன். அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்." "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.

**பாக்கியவான்கள்!**

ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்" (வெளிப்படுத்தல் 15:2,3; 7:14,15) என்று கூறுகிறார். (77)

***"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்"–மத்தேயு 5:11.*** (78)

சாத்தான் தனது விழுகையின் காலத்திலிருந்தே வஞ்சகமாக செயல்பட்டுவருகிறான். தேவனைப்பற்றி தான் எவ்வாறு திரித்துக் கூறினானோ அதேபோன்று, தனது பிரதிநிதிகள்மூலமாக தேவனுடைய பிள்ளைகளைப்பற்றி தவறாக எடுத்துரைக்கிறான். "உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது" (சங்கீதம் 69:9) என்று மீட்பர் கூறினார். இதைப்போன்று தான் அவரது சீடர்கள்மேலும் நிந்தனைகள் விழுகின்றன. (79)

மனிதர் மத்தியிலே வாழ்ந்தவர்களுக்குள் மனுஷகுமாரனைவிட மிகக்கொடுமையாக பழித்துரைக்கப்பட்டவர்கள் ஒருவரும் இருந்ததில்லை. தேவனுடைய பரிசுத்தப் பிரமாணத்தின் கொள்கைகளுக்கு அவர் வழுவாது கீழ்ப்படிந்ததால், அவரை எள்ளி நகையாடி ஏளனஞ்செய்தார்கள். காரணமின்றி அவர்கள் அவரை வெறுத்தார்கள்; எனினும், அவரது பகைவர்களுக்கு முன்னால் அமைதியாக நின்று, அவதூறுகளை ஏற்றுக்கொள்வது கிறிஸ்தவனுடைய பண்பின் ஒரு பகுதியென வலியுறுத்தினார். பழிவாங்கும் உணர்வுகளாகிய அம்புகளை எப்படிச் சந்திப்பதென்று அவர் தமது பின்னடியார்களுக்கு ஆலோசனைகொடுத்து, உபத்திரவத்திலிருக்கும்பொழுது அதைரியமடையவேண்டாமென்றும் கூறினார். (80)

அவதூறானது நற்பெயரைக் கெடுக்கலாம்; ஆனால், அது குணலட்சணத்தைக் கறைப்படுத்தாது. அது தேவனுடைய பாதுகாப்பிலிருக்கிறது. பாவஞ்செய்யச் சம்மதிக்காமலிருக்கும்காலம்வரைக்கும் மனிதனுடையதானாலும்சரி அல்லது சாத்தானுடையதானாலும்சரி, எப்படிப்பட்ட வல்லமையாலும் ஆத்துமாவின்மீது கறையைக் கொண்டுவரமுடியாது. தேவனை சார்ந்திருக்கும் மனிதன், வெளிச்சமும் தேவதயவும் அவன்மீது அமர்ந்திருந்த வளமான நாட்களிலிருந்ததைப்போலவே, மிகக்கொடுமையான உபத்திரவங்களை அனுபவிக்கும்போதும், மிகவும் அதைரியமான சூழ்நிலை களால் சூழப்பட்டிருக்கும்போதும் இருப்பான். அவனது வார்த்தைகளும் நோக்கங்களும் செயல்களும் தவறாகக் குறிக்கப்பட்டாலும், பொய்யாக்கப்

பட்டாலும், மிகவும் முக்கியமான காரியங்கள் அவனுக்கு இருக்கிறபடியால், அவைகளை பொருட்படுத்தமாட்டான். மோசே, "விசுவாசத்தினாலே" "அதரிசனமானவரைத் தரிசித்தது"போல, இவனும் சகித்துக்கொள்ளுகிறான் –எபிரெயர் 11:27; "காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாத வைகளோ நித்தியமானவைகள்" என்று எண்ணி நோக்கிப்பார்க்கிறான் – 2 கொரி. 4:18. (81)

இயேசு மனிதரால் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு தவறாகக் காட்டப்பட்டார். இவ்வாறுள்ள அனைத்துக் காரியங்களிலும் அவர் பழக்கப்பட்டிருந்தார். அவருடைய பிள்ளைகளும் தங்களை மற்றவர்கள் எவ்வளவு தூரம் பழிசாட்டி இகழ்ச்சிசெய்யும்போதும் அமைதியான பொறுமையோடும் நம்பிக்கையோடும் இருக்கமுடியும்; ஏனெனில், வெளியரங்கமாகாத எந்த இரகசியமுமில்லை. தேவனைக் கனப்படுத்துகிறவர்கள் மனிதர்முன்பாகவும் தூதர்முன்பாகவும் தேவனால் கனப்படுத்தப்படுவார்கள். (82)

மனிதர், உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தினால் "சந்தோஷப்பட்டு களிகூருங்கள்" என்று இயேசு சொன்னார். "கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள்" என்று தமது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு தீர்க்கதரிசிகளைச் சுட்டிக்காட்டினார் –யாக்கோபு 5:10. ஆதாமின் பிள்ளைகளில் முதன்முதல் கிறிஸ்தவனாக இருந்த ஆபேல் ஒரு இரத்தசாட்சியாக மரித்தான். ஏனோக்கு தேவனோடு நடந்தான். உலகம் அவனை அறியவில்லை. நோவாவை ஒரு கொள்கைவெறியனென்றும் வீண்பீதியைப் பரப்புகிறவனென்றும் கூறி கேலிசெய்தனர். "வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்" – எபி. 11:36,35. (83)

ஒவ்வொரு காலத்திலும் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட தூதுவர்கள் நிந்திக்கப்பட்டுத் துன்பப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்; எனினும், அவர்களடைந்த துன்பத்தின்மூலமாக, தேவனைப்பற்றிய அறிவு விரிந்து பரவியிருக்கின்றது. சத்தியத்திற்கெதிரான விரோதிகள் சத்தியத்திற்கெதிராக அல்ல, சத்தியத்திற்காகவே வேலைசெய்யமுடியும் என்று அறிந்தவர்களாக, கிறிஸ்துவின் ஒவ்வொரு சீடனும் அதே நிலைக்கு வந்து, அதே வேலையைத் தொடர்ந்து செய்யவேண்டும். அவமதிக்கப்பட்டாலும் சத்தியம் முன்னணிக்குக் கொண்டுவரப்பட்டு, பரிசீலனைக்கும் விவாதத்திற்கும் ஒரு கருப்பொருளாக

வைக்கப்படுமென்று தேவன் தெளிவாக்குகிறார். மக்களின் உள்ளங்கள் கிளர்ச்சியினால் எழுச்சியடையும்படிச் செய்யப்படவேண்டும்; ஒவ்வொரு போராட்டமும், ஒவ்வொரு இகழ்ச்சியும் மனச்சாட்சியின் சுதந்தரத்தைக் கட்டுப்படுத்தும் ஒவ்வொரு முயற்சியும் உள்ளங்களை விழிப்படையச்செய்யும் தேவனின் வழிவகைகளாகும்; இல்லாவிடில், இத்தகைய ஆத்துமாக்கள் அயர்ந்த நித்திரையில்தான் இருப்பார்கள். (84)

தேவனுடைய தூதுவர்களின் வரலாற்றிலே எவ்வளவு அதிகமாக இத்தகைய விளைவுகளைப்பற்றி நாம் பார்த்திருக்கிறோம். மிகச் சிறந்த சொல்திறம்வாய்ந்த ஸ்தேவான் சனகரீம் சங்கத்தின் தூண்டுதலால் கல்லெறிந்து கொல்லப்பட்டபோது, சுவிசேஷ ஊழியத்திற்கு எத்தகைய நஷ்டமும் ஏற்படவில்லை. பரலோக ஒளி அவனது முகத்தைப் பிரகாசிப்பித்ததும், மரணத்தின்போது அவன் செய்த ஜெபத்தில் தெய்வீகப் பரிவு இழையோடியதும், குருட்டுப் பிடிவாதத்தோடு அருகே நின்ற ஆலோசனைச் சங்க அங்கத்தினருக்கு, அவர்தாமே குற்றவாளி என்று கண்பிக்கக்கூடிய ஒரு கூரிய அம்பைப்போன்றிருந்தது. துன்பப்படுத்தின பரிசேயனாகிய சவுல், புறஜாதிகளுக்கும் இராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் கிறிஸ்துவின் நாமத்தை எடுத்துச் செல்லும்படி தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு பாத்திரமாக மாறினார். பவுல் அதற்கு நீண்டநாட்களுக்குப் பின்பு, முதியவராக ரோமாபுரியிலே தனது சிறைவீட்டிலிருந்து, “சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள். சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள். இதனாலென்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன்” (பிலிப்பியர் 1:15–18) என்று எழுதினார். பவுலாரின் சிறைவாசத்தின்மூலமாக, சுவிசேஷம் வெளியிடங்களுக்கும் பரவலாயிற்று. இராஜாக்களின் அரண்மனையில்கூட கிறிஸ்துவிற்காக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டார்கள். “என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுக்கேதுவான” தேவனுடைய வசனமாகிய “அழிவில்லாத” வித்தை அழித்துப்போட சாத்தான் எடுத்துக்கொண்ட முயற்சிகளின்மூலமாக, மனிதரின் உள்ளங்களிலே அந்த விதை விதைக்கப்பட்டுள்ளது – 1பேதுரு 1:23. தேவனுடைய பிள்ளைகள் அடைந்த இகழச்சி, துன்பம் ஆகியவைகளின்மூலமாக, கிறிஸ்துவின் நாமம் பிரபலமாக்கப்பட்டு, ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். (85)

## ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!

உபத்திரவங்கள், அவமதிப்புகள் ஆகியவைகளின்மூலமாக கிறிஸ்துவிற்குச் சாட்சிகளாக இருப்பவர்களுக்கு பரலோகத்தில் மாபெரும் வெகுமதி காத்திருக்கிறது. மக்கள் பூமிக்கடுத்த பொருளை நோக்கிக் கொண்டிருக்கும்போது, இயேசு அவர்களுக்கு பரலோக வெகுமதியைச் சுட்டிக்காட்டுகிறார். ஆனால், அனைத்து வெகுமதிகளையும் வருங்கால வாழ்விற்கென்றுமட்டுமே அவர் வைக்கிறதில்லை; இங்கேயே அவை ஆரம்பமாகிவிடுகின்றன. பண்டைக்காலத்திலே ஆபிரகாமிற்கு காணப்பட்ட கர்த்தர், "நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" (ஆதியாகமம் 15:1) என்றார். கிறிஸ்துவைப் பின்பற்றும் அனைவருக்கும் இதுவே வெகுமதியாகும். யெகோவா, இம்மானுவேல் என்றழைக்கப்படுகின்ற அவரிலே, "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக ... வாசமாயிருக்கிறது;" மேலும், "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" – கொலோ. 2:3,9. அவருடன் பரிவுகொள்ளும்படியாகக் கொண்டுவரப்படவும், அவரை அறியவும் உடைமையாக்கிக்கொள்ளவும், அவரது குணங்களை இருதயம் மென்மேலும் திறந்து கொடுக்கக் கொடுக்க பெற்றுக்கொள்ளவும், அவரது அன்பையும் வல்லமையையும் அறிந்துகொள்ளவும், கிறிஸ்துவின் ஆராய்ந்துமுடியாத ஐசுவரியங்களை உடைமையாக்கிக்கொள்ளவும், இன்னும் அதிகமதிகமாக விளங்கிக்கொள்ளவும் "கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து... அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்" (எபே. 3:18,19) வேண்டும். "இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்" – ஏசாயா54:17. (86)

பிலிப்பிய சிறைக்கூடத்திலே அடைக்கப்பட்டிருந்த பவுலும் சீலாவும், இத்தகைய மகிழ்ச்சி அவர்களது உள்ளத்தை நிரப்பினதால், அந்த நள்ளிரவிலே தேவனை துதித்துப்பாடி ஜெபித்தார்கள். கிறிஸ்து அங்கே அவர்களுக்கு அருகில் இருந்தார். அவரது பிரசன்னத்தின் ஒளி, பரலோக மன்றங்களின் மகிமையோடு இணைந்து, அந்தச் சிறைக்கூடத்தின் இருளை அகற்றி அங்கு ஒளியைப் பரப்பியது. சுவிசேஷம் பரவுவதைக் கண்ட பவுலார் தனது கால்விலங்குகளைப்பற்றிய கவலையற்றவராய், "அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன்" (பிலிப்பியர் 1:18) என்று ரோமாபுரியிலிருந்து எழுதினார். பிலிப்பிய சபையின் உபத்திரவங்களுக்கு மத்தியில், கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தின் வார்த்தைகள், அச்சபைக்கு அனுப்பிய தூதில், "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" (பிலிப்பியர் 4:4)

**பாக்கியவான்கள்!**

என்று மீண்டும் எதிரொலித்தது. (87)

***“நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்” – மத்தேயு 5:13.*** (88)

உப்பு அதில் அடங்கியிருக்கும் “அழியாமல் காக்கும்” திறன்படைத்த பொருட்களால் உயர்வாக மதிக்கப்படுகிறது. தேவன் தமது மக்களை உப்பு என்ற பெயரால் அழைக்கும்போது, அவருடைய கிருபையின் குடிமக்களாக அவர்களை மாற்றவேண்டும் என்பதே அவரது நோக்கம்; ஏனென்றால், அவர்களுக்குப் போதித்து, அவர்கள் மற்றவர்களை இரட்சிக்கும் வேலையில் முகவர்களாக மாறவேண்டும் என்று விரும்புகிறார். இந்த உலகத்தின் அனைத்து மக்களுக்கும் முன்பாக ஒரு மக்கள் கூட்டத்தைத் தெரிந்தெடுத்து, அவர்களை தமது குமாரரும் குமாரத்திகளுமாக சுவீகாரஞ்செய்துகொள்ளவேண்டும் என்பதுமட்டுமே அவரது நோக்கமல்ல; அவர்கள்மூலமாக, உலகமானது இரட்சிப்பைக்கொண்டுவருகிற கிருபையைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே அவருடைய நோக்கமாகும். “எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி” (தீத்து 2:11) என்று வாசிக்கிறோம். தேவன் ஆபிரகாமைத் தெரிந்துகொண்டது தேவனுடைய சிறந்த நண்பனாக அவன் இருக்கவேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, சகல ஜாதிகளுக்கும் ஆண்டவர் வழங்கவேண்டுமென்று விரும்பிய சிறப்பான சிலாக்கியங்கள் அவன்மூலமாகச் செல்லவேண்டுமென்பதற்காகவே ஆகும். இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக, தமது சீடர்களுடன் சேர்ந்து ஏறெடுத்த கடைசி ஜெபத்திலே, “அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்” (யோவான் 17:19) என்று கூறினார்; அதைப்போன்று, சத்தியத்தினாலே தூய்மையாக்கப்பட்ட கிறிஸ்தவர்களும் இந்த உலகத்தை மிகவும் மோசமான ஒழுக்கக்கேடுகளினின்று பாதுகாக்கின்ற குணநலன்களை உடையவர்களாக இருப்பார்கள். (89)

உப்பு எந்தப் பண்டத்தோடு சேர்க்கப்படுகிறதோ அந்தப் பண்டத்தோடு ஒன்றுபட்டுக் கலந்திருக்கவேண்டும். அது அப்பண்டத்தைப் பாதுகாப்பதற்காக, ஊடுருவி உட்புகுந்து செல்லவேண்டும். இதைப்போன்று தனிநபர் தொடர்பு மற்றும் தோழமையின்மூலமாக, சுவிசேஷத்தின் இரட்சிக்கும் வல்லமையினால் மனிதருக்கு சத்தியம் செல்லமுடியும். அவர்கள் பெருந்திரளான கூட்டமாக அல்ல; தனித்தனி நபர்களாக இரட்சிக்கப்படுகிறார்கள். தனிப்பட்ட ஒரு நபரின் செல்வாக்கு, மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாகும். யாரைச் சென்றடைந்து யாருக்கு நன்மைசெய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ, அவர்களுக்கு மிகவும் அருகில் வரவேண்டும். (90)

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

உப்பின் பண்புக்கூறு, ஒரு கிறிஸ்தவனின் மிகச் சிறந்த உயிராற்றலை எடுத்துக்காட்டுகிறது. அந்த கிறிஸ்தவனது இருதயத்தில் இயேசுவின் அன்பும், கிறிஸ்துவின் நீதியும் நிறைந்து ஊடுருவி அவனது வாழ்வு முழுவதிலும் பரிமளிக்கிறது. கிறிஸ்துவின் அன்பு எங்கும் பரவிநிற்கும் தன்மையுடையது; மற்றவரை வலியச்சென்று அடையும் ஆற்றலுடையது. அத்தகைய அன்பு நம்மில் தங்கியிருக்குமானால், அது மற்றவர்களிடம் பாய்ந்தோடக் கூடியதாயிருக்கும். நமது தன்னலமற்ற ஆர்வத்தினாலும் அன்பினாலும் மற்றவர்களது இருதயங்கள் இதமடையத்தக்கதாக நாம் அவர்களை நெருங்கிச் சேர்வோம். உண்மையான விசுவாசிகள் யாருக்காக உழைக்கின்றார்களோ, அவர்களது ஆத்துமாக்களிலே புதிய ஒழுக்கத்தின் சக்திகள் கொடுக்கப்பட்டு, ஊடுருவிச் செல்லத்தக்கதான உயிராற்றலின் சக்தியைப் பரப்புவார்கள். உழைக்கின்ற அந்த மனிதனின் சக்தி அல்ல, அந்த நபரை மாற்றுகின்ற பணியை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை நடப்பிக்கிறது. (91)

எனவே, பக்திவிநயமான எச்சரிப்போடு, "உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது" (மத்தேயு 5:13) என்று இயேசு கூறினார். (92)

கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்தபோது, வெண்மையான உப்பு, தனது பண்பாகிய பாதுகாக்கும் தன்மையை இழந்துபோனதினால், நடைபாதைகளில் கொட்டப்பட்டு மினுமினுத்துக்கொண்டிருப்பதை அந்த மக்களால் காணமுடிந்தது. இது, பரிசேயர்களின் நிலைமையையும் அவர்களுடைய மார்க்கத்தால் சமுதாயத்தில் ஏற்பட்ட விளைவுகளையும் நன்றாகச் சுட்டிக்காட்டியது. தேவனுடைய கிருபையின் வல்லமை விலகிச்சென்றுவிடும்போது, அந்த ஒவ்வொரு ஆத்துமாவும் அனலற்ற, கிறிஸ்துவற்ற வாழ்க்கை நடத்துகிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறது. அவர் எப்படிப்பட்ட பதவியிலிருந்தாலும், அப்படிப்பட்டவர் மனிதர்களாலும் தூதர்களாலும் கவர்ச்சியற்ற, மந்தமான, அருவருப்பான நபரென்று கருதப்படுகிறார்; அப்படிப்பட்டவரை நோக்கி: "நீ குளிருமல்ல அனலுமல்ல ... நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்" (வெளிப்படுத்தல் 3:15,16) என்று கிறிஸ்து கூறுகிறார். (93)

கிறிஸ்து எனது சொந்த இரட்சகர் என்ற அந்த ஜீவனுள்ள விசுவாசம் இல்லாவிட்டால், சந்தேகவாதிகள் நிறைந்த இந்த உலகத்திலே, நமது

செல்வாக்கை உணரச்செய்வது கூடாத காரியமாகும். நாமே உடைமையாக வைத்திராத ஒன்றை, மற்றவர்களுக்கு நம்மால் கொடுக்கமுடியாது. எத்தகைய விகிதத்தில் கிறிஸ்துவிடம் நமது சொந்த பக்தியும் ஒப்படைப்பும் காணப்படுகிறதோ, அத்தகைய விகிதத்தில்தான் மனிதஇனத்தை ஆசீர்வதித்து உயர்த்துவதற்கான செல்வாக்கை நாம் நடைமுறைக்குக் கொண்டுவர முடியும். உண்மையான சேவை இல்லாவிட்டால், மெய்யான அன்பு காணப்படாவிட்டால், உள்ளார்ந்த அனுபவமில்லாவிட்டால், உதவி செய்வதற்கான வல்லமை அங்கு இருக்காது; பரலோகத்தோடு தொடர்பும் இருக்காது; கிறிஸ்துவின் பண்பும் வாழ்க்கையில் காணப்படாது. கிறிஸ்து இயேசுவில் இருப்பதான அதே சத்தியத்தை இந்த உலகிற்குக் கொடுப்பதற்காக, பரிசுத்த ஆவியானவர் நம்மை அவரது பிரதிநிதிகளாகப் பயன்படுத்தாவிட்டால், நாம் பாதுகாக்கும் தன்மையை இழந்த உப்பைப்போன்று, முற்றிலும் தகுதியற்றவர்களாக இருப்போம். கிறிஸ்துவின் கிருபை நம்மில் இல்லாதிருக்கும்போது, விசுவாசிக்கின்றோம் என்று நாம் உரிமைபாராட்டுகின்ற இந்தச் சத்தியத்திற்கு வல்லமையில்லையென்று இந்த உலகத்திற்கு நாம் வலியுறுத்திக் கூறுகிறவர்களாக இருப்போம். ஆக, இவ்வாறு நமது செல்வாக்கின்மூலமாக, தேவனுடைய வார்த்தையை நாம் பயனற்றதாக்கிவிடுகிறோம். "நான் மனுஷர்பாஷைகளையும் தூதர்பாஷை களையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசனவரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகலவிசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" – 1 கொரிந்தியர் 13:1–3. (94)

அன்பு இருதயத்தை நிறைக்கும்போது, அது மற்றவர்களிடத்தில் பாய்ந்து ஓடும். மற்றவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளினால் அவ்வாறு செய்யாமல், அன்பே வாழ்க்கையில் செயல்படுவதற்கான கொள்கையாக மாறிவிடுகிறது. அன்பு செயல்படுவதற்கான கொள்கையாக மாறிவிடுகிறது. அன்பு குணத்தை மாற்றுகிறது. மன உணர்வுகளை ஆட்சிசெய்கிறது; விரோதத்தை அடக்கியாள்கிறது; உள்ளார்ந்த அன்பை மேன்மையடையச்செய்கிறது. இந்த அன்பு, இப்பிரபஞ்சத்தைப்போன்று பரந்துவிரிந்த ஒன்றாகும்; மேலும், பணிவிடைசெய்யும் தூதர்களோடு இணைந்துசெல்வதாகும். நெஞ்சார அன்பைத் தேக்கிவைக்கும்போது,

முழுவாழ்க்கையையுமே இனிமையாக்கி, சுற்றிலும் அதின் ஆசீர்வாதத்தைச் சொரிகின்றது. இது, இது மாத்திரமே, இந்த பூமிக்கு நம்மை உப்பாக மாற்றமுடியும். (95)

இயேசு மக்களுக்குப் போதித்தபோது, அவருடைய பாடங்களை ஆர்வத்தோடு அவர்கள் கவனிக்கும்வண்ணமாகப் போதித்தார். அவர்களைச் சுற்றிலுமிருக்கும் இயற்கைக் காட்சிகளிலிருந்து அடிக்கடி எடுத்துக்காட்டுகளைக்கூறி விளக்கி, அவர்களுடைய கவனத்தையெல்லாம் தனது பிடிப்பில் வைத்திருந்தார். காலையிலேயே மக்கள் அங்கு கூடிவந்திருந்தார்கள். ஒளிவிட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்த சூரியன், நீல வானிலே உயர்ந்து உயர்ந்து மேலே எழும்பி, பள்ளத்தாக்கின் மறைவுகளிலும் மலைகளின் நீண்ட ஒடுக்கமான வழிகளிலும் ஒளிந்துகொண்டிருந்த இருட்படிவுகளை விரட்டியடித்துக்கொண்டிருந்தது. கிழக்கிலுள்ள வானங்களின் மகிமை இன்னும் மங்கிப்போகவில்லை. சூரியஒளி அந்த நிலப்பரப்பெங்கும் பேரழகுடன் குவிந்து வழிந்தது. அந்த ஏரியின் அமைதியான மேற்பரப்பு அந்த பொன்நிற ஒளியைப் பிரதிபலித்தது. காலை நேரத்துச் செந்நிற மேகங்களை அது கண்ணாடிபோல் நிழலிட்டுக்காட்டியது. ஒவ்வொரு மொட்டும் மலரும் பூந்தளிர்கொப்பின் இலைகளும் பனித்துளிகளால் மின்னிக்கொண்டிருந்தன. ஒரு புதிய நாளின் ஆசீர்வாதத்தோடு இயற்கை ஒளிர்ந்தது. (96)

மரங்களுக்கிடையே அமர்ந்திருந்த பறவைகள் இனிமையாகப் பாடின. மீட்பர் தமக்கு முன்பாக அமர்ந்திருந்த கூட்டத்தினரையும், பின்னர் உதித்துவருகின்ற சூரியனையும் பார்த்து, தமது சீடர்களை நோக்கி: “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்” என்றார். சூரியன் தனது அன்பின் பணியில் தொடர்ந்துசெல்லும்போது, இரவின் இருளை அகற்றி ஜீவனுக்காக இந்த உலகத்தை விழித்தெழச்செய்கிறது; அதைப்போன்று, கிறிஸ்துவின் பின்னடியார்களும் தங்களது இறைப்பணிக்காகச் செல்லும்போது, பாவம், பிழை ஆகிய இருளிலே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள்மீது பரலோக வெளிச்சத்தைப் பரவச்செய்யவேண்டும். (97)

காலையில் காணப்பட்ட அந்தப் பிரகாசமான வெளிச்சத்தில் சுற்றிலுமுள்ள குன்றுகளின்மீதிருந்த நகரங்களும் கிராமங்களும் தெளிவாகக் காணப்பட்டன. அது ஒரு கவர்ச்சியான காட்சியாக அமைந்திருந்தது. இயேசு அக்காட்சியைச் சுட்டிக்காட்டி, “மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத்தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்” (மத்தேயு 5:14,15) என்று

கூறினார். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் அநேகர் விவசாயிகளாகவும் மீன்பிடிக்கிறவர்களாகவுமிருந்தார்கள். அவர்களது எளிமையான குடியிருப்புகளில் ஒரே ஒரு அறையே இருந்தது. அந்த அறையிலுள்ள விளக்குத்தண்டின்மேல் இருந்த ஒரு விளக்கு அந்த அறை முழுவதற்குமே வெளிச்சத்தைக் கொடுத்தது. அதைப்போன்று, இயேசு அவர்களை நோக்கி: "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்தேயு 5:16) என்று கூறினார். (98)

கிறிஸ்துவினின்று வெளிப்படும் ஒளியைத்தவிர வேறெந்த ஒளியும் விழுந்துபோன மனிதனின்மீது என்றுமே பிரகாசித்தது இல்லை; அல்லது இனி என்றுமே பிரகாசிக்கப்போவதுமில்லை. பாவத்தில் விழுந்துகிடக்கும் இந்த உலகத்தின் இருளை அகற்றி வெளிச்சத்தை நிறையச்செய்ய ஒரே ஒளியாகிய மீட்பர் இயேசுவால் மட்டுந்தான் முடியும். கிறிஸ்துவைப்பற்றி: "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது" (யோவான் 1:4) என்று எழுதப்பட்டுள்ளது. அவரது ஜீவனைப் பெற்றுக்கொண்டதினால்தான், அவருடைய சீடர்கள் விளக்கை எடுத்துச்செல்பவர்களாக மாறிடமுடிந்தது. ஆத்துமாவிலே வெளிப்பட்ட கிறிஸ்துவின் ஜீவன், குணத்திலே வெளிப்பட்ட அவரது அன்பு ஆகிய இவைகளே உலகின் ஒளியாக அவர்களை மாற்றமுடியும். (99)

மனிதஇனத்திற்கு தன்னில்தானே எந்த ஒளியும் கிடையாது. கிறிஸ்து இல்லாத நிலையில், பற்றவைக்கப்படாத மெழுகுவர்த்தியைப் போலிருக்கிறோம். சூரியனிலிருந்து தூரமாய் முகத்தைத் திருப்பிக்கொண்ட சந்திரனைப்போலிருக்கிறோம். இருண்ட இந்த உலகத்தில் பிரகாசிக்கத் தக்கதாக ஒளியின் ஒரு கதிர்கூட நம்மிடத்தில் கிடையாது; ஆனால், நீதியின் சூரியனை நாம் நோக்கிப்பார்க்கும்போது, கிறிஸ்துவோடு தொடர்பு கொள்ளும்போது, முழு ஆத்துமாவும் தெய்வீகப் பிரசன்னத்தின் பிரகாசத்தால் ஒளிர்கின்றது. (100)

கிறிஸ்துவின் பின்னடியார்கள் மனிதர் மத்தியிலே ஒரு விளக்கைவிட மேலானவர்களாகக் காணப்படவேண்டும். அவர்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறார்கள். இயேசு தமது பெயரை வைத்துக்கொண்ட அனைவரையும் பார்த்து, நீங்கள் உங்களை என்னிடத்தில் ஒப்படைத்துவிட்டீர்கள். நான் உங்களை எனது பிரதிநிதிகளாக உலகத்துக்கு கொடுக்கிறேன். பிதா அவரை உலகத்திற்கு அனுப்பினதுபோல, "நானும்

அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்" (யோவான் 17:18,19) என்று இயேசு அறிவித்தார். கிறிஸ்து பிதாவை வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்க்காலாக அமைந்ததைப்போன்று, நாமும் கிறிஸ்துவை வெளிப்படுத்தும் வாய்க்காலாக அமையவேண்டும். வெளிச்சத்தின் மாபெரும் ஆதாரமாக நமது மீட்பர் இருப்பதினால், ஓ கிறிஸ்தவனே! அவர் மானுடத்தின்மூலமாகத்தான் வெளிப்பட்டார் என்பதை மறந்துவிடாதே. மானுடத்தை ஒரு துணைக் கருவியாகவைத்து, அதின்மூலமாக தேவனுடைய ஆசீர்வாதங்கள் வழங்கப்படுகின்றன. கிறிஸ்துதாமே இந்த உலகத்திற்கு மனித குமாரனாக வந்தார். தெய்வீகத் தன்மையோடு இணைந்த மானுடம்தான் மானுடத்தைத் தொடவேண்டும். கிறிஸ்துவின்சபையில் எஜமானனின் ஒவ்வொரு தனிப்பட்ட சீடனும் மனிதனுக்குத் தேவனை வெளிப்படுத்துவதற்காக பரலோகத்தால் நியமிக்கப்பட்ட வழியாக இருக்கிறான். அழிவிற்கு ஆயத்தமாகிக்கொண்டிருக்கிற ஆத்துமாக்களுக்கு, உங்கள்மூலமாக பரலோக வெளிச்சத்தையும் வல்லமையையும் எடுத்துச்செல்ல மகிமையின் தூதர்கள் காத்திருக்கிறார்கள். அவரால் நியமிக்கப்பட்ட வேலையை நிறைவேற்றுவதில் மானிடப் பிரதிநிதியாகிய நாம் தோல்வியடையலாமா? ஆ! எத்தகைய அளவிற்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் செல்வாக்கை இந்த உலகம் இழந்துவிடுகிறது! (101)

உங்கள் வெளிச்சத்தை பிரகாசிக்கச்செய்ய முயற்சிசெய்யுங்கள் என்று இயேசு தமது சீடர்களுக்குக் கட்டளையிடவில்லை; "உங்களது வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது" என்றே கூறினார். கிறிஸ்து இருதயத்தில் வாசஞ்செய்துகொண்டிருந்தால், அவரது பிரசன்னத்தின் வெளிச்சத்தை மறைக்கமுடியாது. கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று பெயரளவில் சொல்லிக்கொள்பவர்கள் இந்த உலகத்திற்கு வெளிச்சமாயில்லை; ஏனெனில் அந்த உயிராற்றல் சக்தி அவர்களைவிட்டு விலகிவிட்டது. கொடுப்பதற்கு அவர்களிடம் வெளிச்சமில்லையெனில், ஒளியின் ஆதாரமாகிய அவரோடு அவர்களுக்குத் தொடர்பில்லை என்பதே அதன் காரணமாகும். (102)

காலங்கள் நெடுகிலும் "அவர்களில் இருந்த கிறிஸ்துவின் ஆவியானவர்," தேவனின் உண்மையான பிள்ளைகளை அவர்களுடைய தலைமுறைகளுக்கான மக்களுடைய வெளிச்சமாக வைத்திருந்தார் – 1 பேதுரு 1:11. யோசேப்பு எகிப்திலே வெளிச்சத்தைக் கொடுப்பவராக இருந்தார். அவரது தூய்மையிலும் அன்புச்செயல்களிலும் மகன் தகப்பனுக்குக் காட்டவேண்டிய பாசத்திலும், விக்கிரக வணக்கக்காரர்கள் நிறைந்திருந்த அந்த நாட்டினரின் மத்தியிலே கிறிஸ்துவைக் குறித்துக்காட்டுபவராக விளங்கினார். எகிப்திலிருந்து வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நாட்டிற்குச்

## பாக்கியவான்கள்!

செல்லும் பாதையிலே இஸ்ரவேல் புத்திரர் சென்றுகொண்டிருந்தபோது, அவர்களிலே உண்மையான இருதயமுள்ளவர்கள் சுற்றிலுமுள்ள ஜாதிகளுக்கு ஒரு வெளிச்சமாக இருந்தார்கள். அவர்கள்மூலமாக, தேவன் உலகத்திற்கு வெளிப்படுத்தப்பட்டார். பாபிலோன் நாட்டிலே தானியேல்மூலமாகவும், அவனுடைய தோழர்கள்மூலமாகவும், பாரசீகத்திலே மொர்தெகாயின்மூலமாகவும், அரச மன்றங்களின் இருளிற்கு மத்தியிலே இத்தகைய ஒளிக்கதிர்கள் பிரகாசித்தன. இதைப்போன்றே கிறிஸ்துவின் சீடர்களும் பரலோகத்திற்குச் செல்லும் பாதையில், விளக்கை ஏந்திச்செல்லும்படி நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். தேவனைப்பற்றி தவறாகப் புரிந்துகொண்டு, அத்தகைய இருளிலே, முழுவதுமாக மறைக்கப்பட்டிருக்கும் ஒரு உலகத்திற்கு, இவர்கள்மூலமாக பிதாவின் இரக்கமும் நன்மையும் வெளிப்படுத்தப்படுகின்றது. இவர்களது நற்கிரியைகளைக் கண்டதினால், பரலோகத்தில் இருக்கிற பிதாவை மகிமைப்படுத்தும்படி மற்றவர்கள் வழிநடத்தப்படுகிறார்கள்; ஏனெனில், இந்தப் பிரபஞ்சத்திற்கான சிங்காசனத்திலே ஒரு தேவன் வீற்றிருக்கிறார் என்றும், அவரது பண்பு, பார்த்துப் பின்பற்றுவதற்கும் துதித்தலுக்கும் தகுதியானதென்றும் வெளிப்படுத்தப்படுகிறது. இருதயத்தில் ஒளிச்சுடராய் மின்னும் தெய்வீக அன்பு, வாழ்க்கையிலே வெளிப்படுத்தப்படும் கிறிஸ்துவைப்போன்ற ஒருங்கிசைவு ஆகியவைகள், இவ்வுலக மனிதர் அதின் மேம்பாட்டைப் பாராட்டத்தக்கதாக, பரலோகத்தால் அளிக்கப்பட்ட மங்கலான மினுக்கொளிகளாகத் திகழ்கின்றன. (103)

இவ்வாறாக, "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை" மனிதர் விசுவாசிக்கத்தக்கதாக வழிநடத்தப்படுகிறார்கள் – 1 யோவான் 4:16. முன்பு இழிந்த பாவநிலையிலிருந்த இருதயங்கள் இவ்விதம் அவரது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே மாசற்றவர்களாய் நிறுத்தப்படும்படியாக மாற்றப்படுகின்றன (யூதா 24). (104)

"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்ற வார்த்தைகளினால், அவர் உலகளாவிய ஒரு இறைப்பணியின் பொறுப்பைத் தமது பின்னடியார்களிடம் ஒப்படைத்திருக்கிறார் என்ற உண்மையைச் சுட்டிக்காட்டுகிறார். பூமியில் கிறிஸ்து மனிதனாக இருந்த நாட்களிலே, பரிசுத்த தெய்வீக வாய்மொழியைக் காப்பதற்காக, பாதுகாவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கும், உலகத்தில் வாழ்ந்த மற்ற ஜாதிகள் அனைத்திற்கும் இடையே ஒரு பலத்த உயர்ந்த பிரிவினைச் சுவரை தன்னலம், பெருமை, தப்பெண்ணம் ஆகியவைகள் கட்டியிருந்தன; எனவே, அதை முழுவதுமாக மாற்றுவதற்கு மீட்பர் வந்தார். அவரது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு, அவரது வாயினின்று வந்த வார்த்தைகள் தாங்கள் எப்பொழுதும்

கேட்டுக்கொண்டிருந்த ஆசாரியர், போதகர் ஆகியோரது வார்த்தைகளின்று வேறுபட்டதாக இருந்தது. கிறிஸ்து பிரிவினைச்சுவரையும் சுயநேசத்தையும் பிரித்துக்காட்டுகின்ற நாடு, இனம் சார்புள்ள தப்பெண்ணங்களையும் உடைத்தெறிந்து மானிடக் குடும்பம் அனைத்திற்குமானதொரு அன்பைப் போதிக்கிறார். தங்களது தன்னலத்தால் அதற்கேற்ற வழிவகைகளில் குறுகிய வட்டத்திற்குள்ளிருக்கும் மனிதரைத் தூக்கியெடுத்து உயர்த்துகிறார்; சமுதாயத்தில் காணப்படும் நிலப்பரப்பிற்குப்பட்ட வரம்புகளையும் செயற்கையாக, போலியாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் தனித்தனியாகக் காணப்படும் வேறுபாடுகளையும் ஒழித்துக்கட்டுகிறார். அண்டை அயலகத்தாருக்கும் முன்பின்தெரியாத அந்நியர்களுக்குமிடையில், அவர் எந்த வித்தியாசத்தையும் காட்டுகிறதில்லை. தேவையிலிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும் நமது அண்டை அயலகத்தார் என்றும், இந்த உலகம் முழுவதையுமே நமது பணித்தளமாகவும் நோக்கிப்பார்க்கவேண்டுமென்றும் போதிக்கிறார். (105)

சூரியனின் ஒளிக்கதிர்கள் எப்படி பூமியின் கடையாந்திரங்களிலுள்ள சந்துபொந்துகளுக்குள் ஊடுருவிப் பாய்கிறதோ, அதைப்போல, சுவிசேஷ வெளிச்சம் இந்த பூமியில் வாழுகின்ற ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் கொடுக்கப்படவேண்டுமென்று தேவன் திட்டமிடுகிறார். நமது ஆண்டவரின் இந்த நோக்கத்தை, கிறிஸ்துவின் இந்த சபை நிறைவேற்றுமானால், இருளிலும் மரண இருளின் பகுதிகளிலும் அமர்ந்திருக்கும் அனைவருக்கும் வெளிச்சம் கொடுக்கப்படும். சபைகூடிவருவதற்கு பதிலாகவும், பொறுப்பையும் சிலுவை சுமப்பதையும் தட்டிக்கழிப்பதற்குப் பதிலாகவும், சபையின் அங்கத்தினர் பல பகுதிகளுக்கும் சிதறிச்சென்று, கிறிஸ்துவின் வெளிச்சத்தைத் தங்கள்மூலமாக பிரகாசிக்கச்செய்யவேண்டும். “இராஜ்யத்தின் சுவிசேஷம்” உலகம் முழுவதற்கும் துரிதமாக எடுத்துச்செல்லப்படுவதற்காக, ஆத்துமாக்களின் மீட்பிற்காக, ஆண்டவரைப்போன்று பணிசெய்யவேண்டும். (106)

இவ்வண்ணம் மெசொபொத்தேமியா சமவெளியிலிருந்த ஆபிரகாமிலிருந்து, இந்த யுகத்திலுள்ள நம்வரைக்குமுள்ள தம்முடைய பிள்ளைகளை அவர் அழைத்ததின் நோக்கம் “அது நிறைவேறவேண்டுமென்பதே.” “நான் ... உன்னை ஆசீர்வதித்து... நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்” (ஆதியாகமம் 12:2) என்று அவர் கூறுகிறார். தீர்க்கதரிசியின்மூலமாக, கிறிஸ்துவின் வார்த்தைகள் இந்த உலகத்தின் கடைசிச் சந்ததியாக வாழும் நமக்காக மீண்டும் மலைப் பிரசங்கத்திலே எதிரொலித்தது. “எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது” – ஏசாயா 60:1. ஆண்டவருடைய மகிமை, உங்களுடைய ஆவியிலே எழும்பியிருக்குமானால்,

பதினாயிரம் பேர்களில் சிறந்தவரான, முற்றிலும் அழகானவரான அவரின் அழகை நீங்கள் கண்டதுண்டானால், அவரது மகிமையின் பிரசன்னத்திலே உங்கள் ஆத்துமா பிரகாசமடைந்திருக்குமானால், எஜமானிடத்திலிருந்து அனுப்பப்பட்ட வார்த்தை உங்களுக்கே உரியது. மறுரூபமலையிலே கிறிஸ்துவோடு நீங்கள் நின்றதுண்டா? கீழே சமவெளியிலே, சாத்தானால் அடிமையாக்கப்பட்ட ஆத்துமாக்கள் இருக்கிறார்கள். தங்களை விடுதலை செய்யக்கூடிய விசுவாச வார்த்தைக்காகவும், ஜெபத்திற்காகவும் அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். (107)

கிறிஸ்துவின் மகிமையைக்குறித்து தியானித்தால் மட்டுமே போதாது; அவரது மேன்மைகளைக்குறித்து பேசவும்வேண்டும். ஏசாயா தீர்க்கன் அவரது மகிமையைக் கண்டதோடு நின்றுவிடாமல், அவரைக்குறித்து பேசினார். தாவீது ஆழ்ந்த சிந்தனையிலிருக்கும்போது, அவரது இருதயம் அனல்பற்றி எரிந்தது; அப்பொழுது அவர் தம் நாவினால் பேசினார். தேவனுடைய அதிசய அன்பைப்பற்றி ஆராய்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, தான் கண்ட, உணர்ந்த காரியங்களைப்பற்றி அவரால் பேசாமலிருக்க முடியவில்லை. அதிசயமான மீட்பின் திட்டத்தையும் தேவனுடைய ஒரே பேறான குமாரனின் மகிமையையும் விசுவாசத்தினால் காண்கிற யாரால் பேசாமலிருக்கக்கூடும்? நாம் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படியாக கல்வாரிச் சிலுவையிலே வெளியாக்கப்பட்ட ஆராய்ந்துமுடியாத அந்த அன்பை யாரால் தியானிக்கமுடியும்? யார் அதைக் கண்டு, மீட்பரின் மகிமையைப் புகழ்ந்துகூற வார்த்தையின்றியிருக்கக்கூடும்? (108)

“அவருடைய ஆலயத்திலுள்ள யாவரும் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபிக்கிறார்கள்” – சங்கீதம் 29:9. இஸ்ரவேலின் இனிய பாடகன்: “உம்முடைய சிறந்த மகிமைப் பிரதாபத்தையும், உம்முடைய அதிசயமான கிரியைகளையுங்குறித்துப் பேசுவேன்.ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள்; உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன்” (சங்கீதம் 145:5,6) என்று சுரமண்டலத்தைமீட்டி, துதித்துப் பாடுகின்றார். (109)

கல்வாரியின் சிலுவை மக்களுக்குமேலாக உயர்த்தப்படவேண்டும். அவர்களது உள்ளங்கள் ஈர்க்கப்பட்டு, அவர்களது சிந்தனைகள் ஒருமுகப் படுத்தப்படவேண்டும்; அப்பொழுது தேவனிடமிருந்து நேரடியாக அனைத்து ஆவிக்குரிய சக்திகளும் தெய்வீக வல்லமையால் நிரப்பப்படும். எஜமானருக்கு உண்மையான பணியைச் செய்வதற்கு சக்திகள் அனைத்தும் ஒருமுகப் படுத்தப்படும். ஜீவனுள்ள பிரதிநிதிகள் பூமிக்கு வெளிச்சத்தைக் கொடுப்பது

போன்று, ஊழியர்களும் உலகத்திற்கு ஒளிக்கதிர்களை அனுப்புவார்கள். (110)

தன்னிடம் சரணடைந்த ஒவ்வொரு மானிடப் பிரதிநிதியையும் கிறிஸ்து ஏற்றுக்கொள்கிறார்; ஆம்! மிகவும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறார்! தாம் மனிதஉருவேற்றுவந்த அன்பின் இரகசியங்களை இந்த உலகத்தாருக்குத் தெரிவிப்பதற்காக, அவர் மானுடத்தைத் தெய்வீகத்தோடு ஐக்கியப் படுத்துகிறார். அதைக்குறித்துப் பேசுங்கள்; அதைக்குறித்து ஜெபியுங்கள்; அதைக்குறித்துப் பாடுங்கள்; அப்பாலுள்ள பகுதிகளுக்கும் விடாப்பிடியாக தொடர்ந்துசென்று, அவரது மகிமையைப்பற்றிய செய்தியை எங்கும் கூறியறிவியுங்கள். பொறுமையாக சகித்துக்கொள்ளப்பட்ட உபத்திரவங்கள், நன்றியோடு பெற்றுக்கொள்ளப்பட்ட ஆசீர்வாதங்கள், மன உரத்தோடு மேற்கொள்ளப்பட்ட சோதனைகள், சாந்தம், பாசம், இரக்கம், பழக்கமாய் வெளிப்படுத்தப்படும் அன்பு ஆகியவை ஜீவனுக்கேதுவான ஒளி ஒருபோதும் பிரவேசிக்காத சுயநலமான இருதயத்தின் இருளுக்கு எதிராக குணலட்சணத்தில் பிரகாசிக்கின்ற விளக்குகளாக இருக்கின்றன. (111) ★

# 3

# பிரமாணத்தின் ஆவிக்குரியத் தன்மை!

***“அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்” – மத்தேயு 5:17.*** (1)

இடிமுழக்கத்திற்கும் அக்கினி ஜுவாலைக்கும் மத்தியிலே, சீனாய் மலையின்மீது பிரமாணத்தைக் கூறியறிவித்தவர் கிறிஸ்துவே! தேவனுடைய மகிமை பட்சிக்கிற அக்கினியைப்போன்று மலையுச்சியில் தங்கியிருந்தது; ஆண்டவரின் பிரசன்னத்தினால் மலை அதிர்ந்தது. முகங்குப்புற விழுந்துகிடந்த இஸ்ரவேல் மக்கள் தேவப்பிரமாணத்திலுள்ள பரிசுத்தக் கட்டளைகளுக்குப் பயபக்தியோடு செவிமடுத்தார்கள். மலைப்பிரசங்கம் அளிக்கப்பட்ட மலையின் காட்சியினின்று இது எத்தனை வித்தியாசமானது! கோடைகால வானத்தின் கீழே, பறவைகளின் பாடல்கள்தவிர அந்த இடத்தின் அமைதியைக் குலைக்க வேறு எந்தச் சத்தமுமில்லாத நிலையில், இயேசு தமது இராஜ்யத்தின் கொள்கைகளை விவரித்தார். அன்பின் மொழியிலே அந்த மலையிலிருந்து மக்களிடம் பேசிய அவர், சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட பிரமாணத்தின் கொள்கைகளை அவர்களுக்கு விவரித்துக்கொண்டிருந்தார். (2)

எகிப்தின் அடிமைத்தனத்தில் நீண்டகாலமாக இருந்ததினால் இழிவு நிலையிலிருந்த இஸ்ரவேல் புத்திரரின் மனதில் தேவனுடைய கம்பீரத்தையும் வல்லமையையும் பதியவைப்பது அவசியமாக இருந்தது. எனினும் பிரமாணம் கொடுக்கப்பட்டபோது, அவர் தம்மை அன்பின் தேவனாகவே வெளிப்படுத்தினார். (3)

“கர்த்தர் சீனாயிலிருந்து எழுந்தருளி, சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார்; பாரான் மலையிலிருந்து பிரகாசித்து, பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார்; அவர்களுக்காக அக்கினிமயமான

பிரமாணம் அவருடைய வலதுகரத்திலிருந்து புறப்பட்டது. மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார்; அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் உம்முடைய கையில் இருக்கிறார்கள்; அவர்கள் உம்முடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள்" – உபாகமம் 33:2,3. (4)

யுகங்களின் பரம்பரை சொத்தாக வைக்கப்பட்டிருந்த "கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர்" (யாத்.34:6,7)என்ற இந்த வார்த்தைகளினால் மோசேக்கு தேவன் தமது மகிமையை வெளிப்படுத்தினார். (5)

சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட பிரமாணமானது, பரலோகத்தின் பிரமாணத்தை பூலோகத்திலுள்ளவர்களுக்கு வெளிப்படுத்துகின்ற அன்பின் கொள்கையை விளக்கிக் கூறும் வழிமுறையாகும். அந்தப் பிரமாணம், மத்தியஸ்தருடைய கரங்களால் கட்டளையிடப்பட்டு, யாருடைய வல்லமையால் மானிட இருதயங்கள் அதன் கொள்கைகளுக்கு இசைவாகக் கொண்டுவரப்படமுடியுமோ, அவர்மூலமாகப் பேசப்பட்டது. "நீங்கள் எனக்குப் பரிசுத்த மனுஷராயிருக்கக்கடவீர்கள்" (யாத்திராகமம் 22:31) என்று இஸ்ரவேலருக்கு கூறியறிவித்தபோது, தேவன் தமது பிரமாணத்தின் நோக்கத்தை வெளிப்படுத்தினார். (6)

ஆனால் பிரமாணத்தின் ஆவிக்குரிய தன்மையை இஸ்ரவேலர் உணரவில்லை. அநேக சமயங்களில் அவர்களுடைய கீழ்ப்படிதல் தேவனுடைய அன்பின் ஆளுகைக்கு அவர்களுடைய இருதயத்தை ஒப்படைப்பதாயிராமல், முறைமைகளையும் சடங்குகளையும் அனுசரிப்பதாகவே இருந்தது. இயேசு தமது குணலட்சணத்திலும் ஊழியத்திலும் தேவனுடைய பரிசுத்தமான, இரக்கம் நிறைந்த நற்செயல்களைச் செய்து, தேவனுக்கு உரித்தான தந்தைக்குரிய குணங்களை மனிதர்களுக்கு வெளிப்படுத்தி, சடங்காச்சாரமான கீழ்ப்படிதலின் பயனற்றத் தன்மையை காண்பித்தபோது, யூதத்தலைவர்கள் அவரது வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளவோ புரிந்துகொள்ளவோ இல்லை. பிரமாணத்தின் அவசியத்தை அவர் மிகவும் இலகுவாக எடுத்துக் கையாள்கிறார் என்று அவர்கள் நினைத்தார்கள். தெய்வீகம் நியமித்த ஆராதனையின் ஆதாரமான சத்தியங்களை அவர் அவர்கள்முன்

வைத்தபோது, வெளிப்புறத்தைமட்டும் பார்த்து, அதை ஒழித்துவிட அவர் வகைதேடுகிறார் என்று அவரைக் குற்றப்படுத்தினார்கள். (7)

கிறிஸ்துவின் வார்த்தைகள் அமைதியோடு பேசப்பட்டிருந்தபோதும், அவை மக்களின் இருதயங்களைத் தூண்டிய வல்லமையோடும் ஊக்கத்தோடும் கூறப்பட்டன. போதகர்களால் திரும்பத்திரும்பக் கூறப்பட்ட ரபிமார்களின் உயிரற்ற பாரம்பரியங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் அவர்கள் வீணாகவே செவிசாய்த்தார்கள். “இயேசு ... வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்” – மத்தேயு7:28,29. தங்களுடைய போதனைமுறைக்கும் கிறிஸ்துவின் போதனை முறைக்குமிடையில் மிகப் பெரிய வித்தியாசமிருப்பதை பரிசேயர் கவனித்தனர். சத்தியத்தின் மேன்மையும் தூய்மையும் அழகும், ஆழமான மென்மையான செல்வாக்கோடு, அநேக உள்ளங்களில் திடமாக இடம் பிடித்துக்கொண்டிருந்ததை அவர்கள் கண்டார்கள். மீட்பரின் தெய்வீக அன்பும் மென்மையும் மனித உள்ளங்களை அவர்பால் இழுத்தது. அவரது போதனையால், தங்களுடைய போதனை முற்றிலும் ஒன்றுமில்லாமல் போனதை அப்போதகர்கள் கண்டார்கள். தங்களுடைய பெருமையையும், மற்றவர்களோடு பழகாமல் ஒதுங்கிவாழும் தன்மையையும் புகழ்ந்து கொண்டிருந்த பிரிவினைச்சுவரை அவர் தகர்த்துகொண்டிருந்தார். அனுமதிக்கப்பட்டால், அவர் மக்களை அவர்களிடமிருந்து முற்றிலுமாக இழுத்துக்கொண்டுபோய்விடுவார் என்று அவர்கள் பயந்தார்கள். எனவே ஜனத்திரளின் ஆதரவை அவர் இழக்கும் தருணம் கிடைக்கும், அவரது அழிவையும் மரணத்தையும் சனகரீம் சங்கம் நிச்சயித்துக்கொள்ளலாம் என்று எதிர்பார்த்து தங்களது உறுதியானப் பகையோடு அவரைப் பின்தொடர்ந்தார்கள். (8)

மலையின்மீதிருந்த மக்களிடம் அவர் பேசிக்கொண்டிருந்தபொழுது, இயேசு வேவுகாரர்களால் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டார். நீதியின் கொள்கைகளை அவர் விவரித்துக்காட்டியபோது, சீனாய் மலையிலிருந்து தேவன் கொடுத்த கொள்கைகளுக்கு அவரது போதனை எதிராக இருப்பதாக, மக்களிடம் காதோடு காதாக சொல்ல பரிசேயர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். மோசேயின்மூலமாக ஏற்கெனவே கொடுக்கப்பட்ட மார்க்கம் மற்றும் கட்டளைகளின்மேலிருந்த அவர்களுடைய விசுவாசத்தை நிலைகுலையச் செய்யும் எதையும் மீட்பர் கூறவில்லை. இஸ்ரவேலின் மாபெரும் தலைவர் அவரது மக்களுக்குக் கொடுத்த தெய்வீக வெளிச்சத்தின் ஒவ்வொரு ஒளிக்கதிரும் கிறிஸ்துவிடமிருந்து பெறப்பட்டிருந்தது. கற்பனைகளை

ஒழித்துப்போடவே அவர் வந்தார் என்று அநேகர் தங்கள் இருதயங்களிலே சொல்லிக்கொண்டிருக்கும் வேளையிலே, “நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்” என்று கூறி, தவறாகப் புரிந்துகொள்ளமுடியாத தெளிவான மொழியில் தேவனுடைய பிரமாணங்களைப்பற்றிய காரியத்தில் தனது மனப்பாங்கை இயேசு வெளிப்படுத்தினார். (9)

மனிதரைப் படைத்தவரும் பிரமாணத்தைக் கொடுத்தவருமாகிய அவரே, பிரமாணங்களை தனியே ஒதுக்கிவைப்பது தமது நோக்கமல்ல என்று கூறியறிவிக்கிறார். இயற்கையில் ஒவ்வொன்றுமே, அதாவது சூரிய ஒளிக்கதிரில் காணப்படும் சிறு தூசிமுதல், மேலே காணப்படும் உலகங்களனைத்தும் பிரமாணத்திற்குட்பட்டிருக்கின்றன. இந்த இயற்கையான உலகத்திலே அதின் ஒழுங்கும் இசைவும் இந்தப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதையே சார்ந்திருக்கிறது; எனவே, அனைத்து அறிவுள்ள ஜீவிகளின் வாழ்க்கையையும் கட்டுப்படுத்த மாபெரும் நீதியின் மூலக்கோட்பாடுகள் இருக்கின்றன. இந்தப் பிரபஞ்சத்தின் மேன்மை நிலை, இத்தகைய மூலக்கோட்பாடுகளோடு ஒத்துப்போவதையே சார்ந்திருக்கிறது. இந்த பூமி படைக்கப்படுவதற்கும் முன்னரே, தேவனுடைய பிரமாணம் இருந்தது. இதன் கொள்கைகளால் தூதர்களும் ஆளப்பட்டிருக்கின்றனர். பரலோகத்தோடு பூலோகமும் இணைந்துசெல்வதற்காக மனிதனும் தேவப்பிரமாணங்களுக்குக் கட்டாயம் கீழ்ப்படியவேண்டும். “விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்த”போது, (யோபு 38:7) பிரமாணத்திலுள்ள கற்பனைகளை கிறிஸ்து ஏதேனில் மனிதனுக்குத் தெரியப்படுத்தியிருந்தார். பிரமாணத்தை ஒழிப்பது அல்ல; அவரது கிருபையினால் அதன் கட்டளைக்கு மீண்டும் மனிதனை கீழ்ப்படுத்துவதே பூமியில் கிறிஸ்துவின் பணியாக இருந்தது. (10)

மலையினின்று இயேசு கூறிய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த அன்பான சீடன் (யோவான்) இதற்கு வெகுகாலத்திற்குப்பின்னர், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதும்போது, பிரமாணமானது மனிதனுக்கான நிலையான கடமை என்று கூறுகிறார். எந்தப் பிரமாணத்தைப்பற்றி அவர் குறிப்பிடுகின்றாரோ, அதைப்பற்றி: “பாவஞ்செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்” “ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழைய கற்பனையையே எழுதுகிறேன்” (1 யோவான் 3:4; 1 யோவான் 2:7) என்று தெளிவாக்குகிறார். படைப்பின்போது, நிலைத்திருந்து, சீனாய்மலையின்மீதிருந்து திரும்பத்திரும்பக் கூறப்பட்ட அந்தப் பிரமாணத்தைக்குறித்து அவர் பேசிக்கொண்டிருந்தார். (11)

## பிரமாணத்தின் ஆவிக்குரிய தன்மை!

பிரமாணத்தைப்பற்றி இயேசு பேசும்போது: "அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" (மத்தேயு 5:17) என்றார். யோவான் ஸ்நானகனிடத்தில்: "எல்லா நீதியையும் நிறைவேற்றுவது" (மத்தேயு 3:15) தமது நோக்கம் என்று இயேசு கூறியபோது எந்தவகையில் "நிறைவேற்ற" என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தினாரோ அவ்வாறுதான் இங்கும் பயன்படுத்தினார். அதாவது பிரமாணத்தின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்வது, தேவனுடைய சித்தத்தோடு பூரணமாய் இசைந்து செல்வது என்றாலென்ன என்பதற்காக அளிக்கப்பட்ட ஒரு உதாரணமாகும். (12)

அவரது பணி, "அவர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமை யுள்ளதாக்கு"வதாகும்–ஏசாயா 42:21. பிரமாணத்தின் ஆவிக்குரிய தன்மையை எடுத்துக்காட்டி, அதின் தொலைநோக்குக் கொள்கைகளை காண்பித்து, அதைக் கடைப்பிடிப்பது ஒரு நித்திய கடமை என்பதைத் தெளிவாக்குவது அவரது பணியாகும். (13)

இவ்வுலகிலுள்ள மக்களின் மத்தியில் காணப்படும் மிக மேன்மை யான, மிகவும் மதிப்புவாய்ந்தவைகளெல்லாம் கிறிஸ்துவின் தெய்வீகப் பண்பின் அழகோடு ஒப்பிடப்படும்போது, வெறும் மங்கலான ஒரு பிரதிபலிப்பே யாகும். ஆவியினால் ஏவப்பட்ட சாலொமோன் அவரைக்குறித்து: "பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்.... அவர் முற்றிலும் அழகுள்ளவர்" (உன். 5:10–16) என்று எழுதினான். தாவீது தீர்க்கதரிசனத்தில் அவரைக்கண்டு: "எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகாசவுந்தரியமுள்ளவர்" (சங். 45:2) என்று கூறினான். இயேசு பிதாவின் அப்பட்டமான சாயலாக இருந்தார். அவரது மகிமையின் ஜோதியாக இருந்தார். சுயமறுப்புடைய மீட்பர், பூமியில் அவர் செய்த அன்பின் யாத்திரையின்போது, தேவனுடைய பிரமாணத்தின், பண்பின் ஒரு ஜீவனுள்ள பிரதிநிதியாக இருந்தார். பரத்தினின்று பிறக்கும் அன்பும், கிறிஸ்துவைப் போன்ற கொள்கைகளும்தான் நித்தியமான நேர்மையின் பிரமாணங்களுக்கு அடிப்படையாக இருக்கின்றன என்பது அவரது வாழ்க்கையின்மூலமாக வெளிக்காட்டப்பட்டது. (14)

"வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ள தெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது" (மத்தேயு 5:18) என்றார் இயேசு. அவர் தமது சொந்தக் கீழ்ப்படிதலின்மூலமாகவே பிரமாணத்தின் மாற்றப்படக்கூடாத தன்மையை வலியுறுத்திக் கூறினார்; மேலும் அவரது கிருபையின்மூலமாக, ஆதாமின் ஒவ்வொரு குமாரனும் குமாரத்தியும் பூரணமாகக் கீழ்ப்படிய முடியும் என்பதை நிரூபித்துக் காட்டினார். மானிட இனம் சம்பந்தப்பட்ட மற்றும் மீட்பின்

திட்டம் தொடர்பான அனைத்துக் காரியங்களும் நிறைவேற்றப்படும்வரை பிரமாணத்திலிருந்து ஒரு இம்மியளவும் நீக்கப்படக்கூடாதென்று தீர்க்கமாகக் கூறினார். பிரமாணம் என்றைக்குமாக ஒழித்துக்கட்டப்படவேண்டுமென்று அவர் போதிக்கிறதில்லை; ஆனால் அவர் மனிதனின் இயலும் தன்மையின் உச்சவரம்பின் எல்லைக்கோடுவரை கண்களைப் பதித்து, பிரமாணத்தின் கட்டளைகளை ஒழிப்பதே அவரது பணியென்று யாருமே யூகிக்காதவண்ணம், குறிக்கப்பட்ட இடத்தை அடையும்வரை, பிரமாணம் தன்னுடைய அதிகாரத்தை தன்வசமாக வைத்திருக்குமென்று நமக்கு உறுதி கூறுகிறார். வானமும் பூமியும் தொடர்ந்து எவ்வளவு காலம் இருக்குமோ, அவ்வளவு காலம் வரை, தேவ பிரமாணத்தின் பரிசுத்தக் கட்டளைகள் தொடர்ந்து நிலைபெற்றிருக்கும். அவரது நீதி "மகத்தான பர்வதங்கள் போலவும்" (சங்கீதம் 36:6) ஆசீர்வாதத்தின் ஒரு ஊற்றாகத் தொடர்ந்து, பூமிக்குப் புத்துணர்வு கொடுக்க சிற்றாறுகளை அனுப்பும். (15)

கர்த்தருடைய பிரமாணம் பூரணமாயிருக்கிறது. அது மாற்றப்படக் கூடாததாகவும் இருப்பதினால், பாவமுள்ள மனிதர்களுக்கு தங்களில் தாங்களாகவே அது விடுக்கும் கோரிக்கையின் தரத்தை நிறைவேற்றுவது கூடாத காரியமாகும். இதற்காகத்தான் இயேசு நமது இரட்சகராக வந்தார். எனவே, பரலோகப் பிரமாணங்களின் கொள்கைகளுக்கிசைவாக மனிதனைக் கொண்டுவருவதும், அவர்களை தெய்வீகத்தன்மைக்குப் பங்காளிகளாக மாற்றுவதுமே அவரது பணியாகும். நமது பாவங்களை நாம் விட்டு, கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, பிரமாணம் உயர்த்தப்படுகிறது. எனவே, அப்போஸ்தலனாகிய பவுல்: "விசுவாசத் தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல; நியாயப் பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே" (ரோமர் 3:31) என்கிறான். (16)

புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தமானது: "நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன்" (எபி. 10:16) என்பதாகும். உலகத்தின் பாவத்தை நீக்கிப்போடுகிற தேவ ஆட்டுக்குட்டியாக கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டிய மாதிரிப்படிவ அமைப்பு (சடங்காச்சாரப்பிரமாணங்கள்) அவரது மரணத்திலே ஒழிந்துபோகவேண்டியதாக இருந்தது. ஆனால் பத்துப்பிரமாணங் களிலே உள்ளடங்கிய நீதியின் கொள்கைகள் நித்திய சிங்காசனத்தைப் போன்று மாற்றப்படக்கூடாத நிலையானதொன்றாகும். ஒரு கட்டளையும் ஒழிக்கப்படவில்லை. ஒரு எழுத்தாகிலும் அல்லது எழுத்தின் உறுப்பாகிலும் மாற்றப்படவில்லை. வாழ்க்கைக்குரிய மாபெரும் பிரமாணமாக பரதீசிலே (ஏதேனில் மனிதனின் விழுகைக்குமுன்) மனிதனுக்குத் தெரிவிக்கப்பட்ட

அந்தக் கற்பனைகள், மீண்டும் அந்த பரதீசின் பழைய நிலைக்குக் கொண்டுவரப்படும்வரை மாறாமல் நிலைத்திருக்கும். ஏதேன் தோட்டம் மீண்டும் பூமியிலே அழகுடன் திகழும்போது, சூரியனுக்குக் கீழேயுள்ள அனைவரும் தேவனுடைய அன்பின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவார்கள். (17)

"உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது." "நீர் உம்முடைய சாட்சிகளை என்றென்றைக்கும் நிற்க ஸ்தாபித்தீர்" "அவருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமானவைகள்; அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள். அவைகள் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களுக்கும் உறுதியானவைகள்" – சங்கீதம் 119:89,152; 111:7,8. (18)

***"ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றை யாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்;" – மத். 5:19.*** (19)

அதாவது, அத்தகைய நபருக்கு அங்கு இடமில்லை; ஏனெனில் துணிகரமாக ஒரு கட்டளையை மீறுகிறவர் எந்தக் கட்டளையையுமே ஆவியோடும் உண்மையோடும் கைக்கொள்ளுகிறதில்லை. "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" – யாக். 2:10. (20)

கீழ்ப்படியாமை என்னும் செயலின் உச்சகட்டமான நிலைமட்டும்தான் பாவம் என்பதல்ல; மிகச்சிறிய காரியத்திலும்கூட வெளிப்படையான தேவனுடைய சித்தத்திற்கு முரண்பாடாக இருக்கிறதே பாவமாகும். ஏனெனில் இக்காரியம், ஆத்துமாவிற்கும் பாவத்திற்கும் இடையிலே இன்னும் தொடர்பிருக்கிறதையும், இருதயம் தனது சேவையில் பிளவுபட்டு இருப்பதையும் காண்பிக்கிறது. அங்கே உண்மையாகவே தேவன் மறுக்கப்படுகிறார்; அவரது ஆளுகையின் சட்டங்களுக்கு எதிரான கலகம் இருக்கிறது. (21)

ஆண்டவரைவிட்டு விலகிச்செல்லவும், தங்களுக்கான கடமையின் தரத்தை ஏற்படுத்திக்கொள்ளவும் மனிதர் சுயாதீனமானவர்களாக இருப்பார் களானால், வேறுபட்ட உள்ளங்களுக்கு ஏற்றவாறு பலதரப்பட்ட தரங்கள் காணப்பட்டு, ஆளுகையானது ஆண்டவரின் கரங்களினின்று எடுபட்டுப்போகும். மனிதனின் சித்தம் பிரதானமாக வைக்கப்பட்டு, தேவனுடைய உயர்ந்த பரிசுத்த சித்தம், தமது படைப்புகளின்மேலுள்ள அவருடைய அன்பின் நோக்கம் அவமதிக்கப்பட்டு இகழப்படும். (22)

## ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!

எப்போதெல்லாம் மனிதர் தங்களுடைய சொந்தவழியைத் தெரிந்து கொள்ளுகிறார்களோ, அப்போதெல்லாம் தேவனோடு போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். பரலோகத்தின் கொள்கைகளுக்கு எதிராக அவர்கள் யுத்தஞ்செய்வதால், பரலோக இராஜ்யத்தில் அவர்களுக்கு இடமில்லை. தேவனுடைய சித்தத்தைப் புறக்கணிப்பதின்மூலமாக, அவர்கள் தேவனுக்கும் மனிதனுக்கும் விரோதியான சாத்தானுக்கு அருகில் தங்களை வைத்துக்கொள்கிறார்கள். ஒரு வார்த்தையினால் அல்ல, அநேக வார்த்தைகளினாலும் அல்ல; தேவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையினாலும் மனிதன் பிழைப்பான். ஒரு வார்த்தை அது எவ்வளவு அற்பமாக நமக்குத் தோன்றினாலும் அதைப் புறக்கணித்துவிட்டு நாம் பாதுகாப்பாக இருக்கமுடியாது. இம்மையிலும் வரப்போகும் வாழ்விலும் மனிதனுக்கு நன்மையையும் மகிழ்ச்சியையும் கொடுக்கவே பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதின் மூலமாக, ஒரு வேலி சுற்றிலும் நின்று காப்பதுபோன்று மனிதன் தீமையினின்று காக்கப்பட்டிருக்கிறான். தேவனால் அமைக்கப்பட்ட இந்த வேலியை ஒரு குறிப்பிட்ட இடத்திலே அகற்றுகின்ற மனிதன் அவனைப் பாதுகாக்கக்கூடிய வல்லமையை அழித்துப்போடுகிறான். ஏனெனில் சத்துரு உள்ளே நுழைந்து, வீணடிக்கவும் இழிவுண்டாக்கவும் ஒருவழியை திறந்துவிட்டிருக்கிறான். (23)

ஒரு குறிப்பிட்ட காரியத்தில் தேவனுடைய சித்தத்தைப் புறக்கணிக்க துணிகரமான முயற்சிசெய்ததினால், வெள்ளம்போன்ற ஆபத்து உலகின்மீது புரண்டுவர நமது முதல் பெற்றோர்கள் மதகுகளைத் திறந்துவிட்டார்கள். அவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றும் ஒவ்வொரு தனிமனிதனும் அதேபோன்ற விளைவையே அறுவடைசெய்ய நேரிடும். தேவப்பிரமாணத்தின் ஒவ்வொரு கட்டளையிலும் தேவஅன்பு அடிப்படையாக வைக்கப்பட்டுள்ளது. கற்பனையினின்று விலகிச்செல்லும் மனிதன், தனக்கே உரித்தான துயரத்தையும் அழிவையும் சம்பாதித்துக்கொண்டிருக்கிறான். (24)

***"வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" – மத். 5:20.*** (25)

கிறிஸ்துவை மட்டுமல்ல, ரபிமார்களின் சடங்காச்சாரங்களையும் விதிமுறைகளையும் புறக்கணித்ததால் அவரது சீடர்களையும் வேதபாரகரும் பரிசேயரும் பாவிகள் என்று குற்றஞ்சாட்டினார்கள். வழக்கமாக மார்க்கப் போதகர்கள் என்று தாங்கள் மதித்துவந்தவர்களின் கண்டனத்தினாலும் குற்றச்சாட்டுகளினாலும் சீடர்கள் அநேகமுறை குழப்பமும் கலக்கமு

மடைந்தார்கள். திரையை விலக்கி, இயேசு அவர்களுடைய வஞ்சகத்தை வெளிப்படுத்தினார். நீதியின்மீது பரிசேயர்கள் வைத்திருந்த அந்த மாபெரும் மதிப்பு பயனற்றதென்பதை அவர் உறுதியாகத் தெரியப்படுத்தினார். இந்த யூதஜனம், தேவனுடைய சிறப்பான ஆதரவைப்பெற்ற உத்தமமான விசேஷமான ஜனம் என்று உரிமைகோரிக்கொண்டிருந்தது. ஆனால் கிறிஸ்து அவர்களுடைய மார்க்கம் இரட்சிப்பிற்கேற்ற விசுவாசம் இல்லாத மார்க்கமென்று எடுத்துக்காட்டினார். அவர்களுடைய போலிப் பகட்டான கடவுட்பற்றும், அவர்களுடைய கண்டுபிடிப்புகளும் ஆராதனைகளும், பிரமாணத்தின் வெளிப்பிரகாரமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகிறோம் என்ற பெருமையும், அவர்களைப் பரிசுத்தமாக்க உதவவில்லை. அவர்கள் இருதயத்திலே தூய்மையானவர்களாக இல்லை அல்லது குணத்திலே கிறிஸ்துவைப்போன்று மேன்மையானவர்களாக இல்லை. (26)

சட்டத்திற்கு உட்பட்ட ஒரு மார்க்கம், ஆத்துமாவை இறைவனோடு இசைவாகக் கொண்டுவரப் போதுமானது அல்ல. மனம் வருந்துதலும், இரக்கமும், அன்பும் இல்லாத பரிசேயர்களின் வளையாத, விட்டுக்கொடுக்காத பாரம்பரியம், பாவிகளுக்கு ஒரு முட்டுக்கட்டையாகவே இருந்தது. அவர்கள் சாரமற்றுப்போன உப்பைப் போன்றிருந்தனர். ஏனெனில் இந்த உலகத்தை ஒழுக்கக்கேட்டினின்று பாதுகாக்கக்கூடிய வல்லமையற்றதாக அவர்களுடைய செல்வாக்கு இருந்தது, “அன்பினால் கிரியைசெய்கிற” (கலாத்தியர் 5:6) உண்மையான விசுவாசம்மட்டுமே ஆத்துமாவைத் தூய்மையாக்க முடியும். அது புளிப்புப் பொருளைப்போன்று குணத்தை மாற்றுகிறது. (27)

இவையனைத்தையும் யூதர்கள் தீர்க்கதரிசிகளின் போதனையினின்று கற்றுக்கொண்டிருக்கவேண்டும். தேவனோடு நேர்மையான உறவில் இருக்கவேண்டுமென்ற ஆத்துமாவின் கதறல், நூற்றாண்டுகளுக்கு முன் மீகா தீர்க்கதரிசியின் வார்த்தையிலே ஒலித்து, விடையையும் கண்டது. “என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்துகொள்வேன்? தகனபலிகளைக் கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக்கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின்பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின்பேரிலும், கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? ... மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்” – மீகா 6:6–8. (28)

## ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!

ஓசியா தீர்க்கதரிசி, பரிசேயத்துவத்தின் உட்பொருளை உருவாக்கி யமைத்திருப்பது எதுவென்று "இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத்தானே கனிகொடுக்கிறது" (ஓசியா 10:1) என்னும் வார்த்தைகளில் கூறுகின்றார். தேவனுக்காக செய்கிறதாகச் சொல்லப்பட்ட சேவைமூலம் யூதர்கள் உண்மையில் தங்களது சுயத்திற்காகவே உழைத்துக் கொண்டிருந்தார்கள். தங்களது சொந்தக் கருத்துக்களின்படியும் சொந்த ஆதாயங்களுக்காகவும் பிரமாணத்தைக் கைக்கொள்ள அவர்கள் செய்த முயற்சிகளின் பலனே அவர்களது நீதியாகும். எனவே, அந்த நீதி அவர்களைவிட எவ்விதத்திலும் மேம்பட்டதல்ல. தங்களைப் பரிசுத்தமாக்கிக்கொள்ள அவர்கள் எடுத்த பெருமுயற்சியிலே அசுத்தமான பொருளிலிருந்து ஒரு சுத்தமான பொருளை உண்டாக்க முயற்சித்துக்கொண்டிருந்தார்கள். தேவனுடைய பிரமாணம், அவர் பரிசுத்தமாயிருப்பதுபோல, அதுவும் பரிசுத்தமானது. அவர் பூரணமாயிருப்பதைப்போல அதுவும் பூரணமானது. அவரது பிரமாணம் மனிதருக்கு தேவநீதியை எடுத்துக்காட்டுகிறது. மனிதன் தானாகவே இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்வது கூடாத காரியமாகும். ஏனென்றால் மனிதனின் தன்மை சீரழிந்து, ஒழுக்கங்கெட்டு, முற்றிலும் தேவனுடைய குணத்தைப்போன்று இல்லை. தன்னலமுடைய இருதயத்தின் கிரியைகளைப்பற்றி "நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது" (ஏசாயா 64:6) என்று ஏசாயா கூறுகிறார். (29)

பிரமாணம் பரிசுத்தமாயிருப்பதினால் தங்கள் சொந்த முயற்சியினால் பிரமாணத்தைக் கைக்கொண்டு, நீதியைப் பெற்றுக்கொள்ள யூதர்களால் முடியாமற்போயிற்று. கிறிஸ்துவின் சீடர்கள் பரலோகத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமானால் பரிசேயர் பெற்றிருக்கும் நீதியைவிட வித்தியாசமான தன்மையுள்ள நீதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தேவன் தமது குமாரனிலே, பிரமாணத்தின் பூரணமான நீதியை அவர்களுக்கு ஈந்தார். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தங்களுடைய இருதயங்களை முற்றிலுமாகத் திறப்பார்களானால், அப்பொழுது தேவனுடைய ஜீவன் மற்றும் அவரது அன்பு அவர்களிலே சஞ்சரித்து, அவரது சொந்தச்சாயலுக்கு அவர்களை மாற்றிவிடும். இவ்வாறாக, தேவானல் கொடுக்கப்பட்ட இலவச ஈவின்மூலமாக, பிரமாணத்திற்குத் தேவையான நீதியை அவர்கள் உடைமையாக்கிக் கொள்வார்கள். ஆனால் பரிசேயர்களோ இயேசுவை ஒதுக்கித் தள்ளி விட்டார்கள். "அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்" (ரோமர் 10:3). தேவநீதிக்கு தங்களை ஒப்புக்கொடுக்கவில்லை. (30)

## பிரமாணத்தின் ஆவிக்குரிய தன்மை!

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதின் பொருள், கிறிஸ்துவின் குணத்தை தங்களிலே மீண்டும் உருவாக்குவதே என்று அவருடைய பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு இயேசு தொடர்ந்து வெளிப்படுத்தினார். ஏனெனில் அவரிலே தேவன் ஒவ்வொரு நாளும் அவர்களுக்குமுன்பாக தம்மை வெளிப்படுத்திக் காட்டினார். (31)

***"தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" – மத்தேயு 5:22.*** (32)

மோசேயின்மூலமாகக் கர்த்தர்: "உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; ... பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமைகொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூறுவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக" (லேவியராகமம் 19:17,18) என்று கூறினார். தீர்க்கதரிசிகளால் போதிக்கப்பட்டிருந்தச் சத்தியங்களை, அவர்களது இருதயக்கடினத்தினாலும் பாவத்தின்மீது அவர்கள் கொண்டிருந்த பாசத்தினாலும் மங்கலாய்ப்போன சத்தியங்களைத்தான் கிறிஸ்து அவர்கள்முன் வைத்தார். (33)

மற்றவர்களை மீறுதலுக்குள்ளானவர்கள் என்று கண்டனஞ்செய்து கொண்டிருந்தபோது, கண்டனஞ்செய்த அவர்களும் அதற்குச் சமமான வகையில் குற்றவாளிகளே என்ற உண்மையை தமது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு மீட்பர் தெளிவுபடுத்தினார். ஏனெனில் அவர்கள் பழிவாங்கும் குணத்தையும் வெறுப்பையும் நெஞ்சார நேசித்துக் கொண்டிருந்தார்கள். (34)

மக்கள் குழுமியிருந்த இடத்திலிருந்து, கடலிற்கு அப்பால் பாசான் தேசமிருந்தது. ஒழுங்கற்ற இடுக்கமான வழிகளும் மரங்கள் நிறைந்த குன்றுகளும் நெடுங்காலமாக பலதரப்பட்ட குற்றவாளிகள் தங்குவதற்கேற்ற ஒளிப்பிடமாகவும் ஆள்அரவமற்றப் பகுதியாகவும் அது இருந்தது. அங்கு நடைபெற்ற கொலை, கொள்ளைகளைப்பற்றிய செய்திகள் மக்கள் மனதிலே பசுமையாக இருந்தன. அநேகர் இவ்விதத் தீச்செயல்புரிபவர்களை வெளிப்படையாகக் கண்டிப்பதில் அதிக ஆர்வம் காட்டினர். அதேநேரம் எளிதில் சினங்கொண்டு சண்டைசெய்பவர்களாயுமிருந்தனர். தங்களை ஒடுக்கிய ரோமர்கள்மீதும் மிகவும் கசப்பான வெறுப்பை மனதில் தேக்கி வைத்திருந்தனர். எல்லா மக்களையும், ஏன், தங்களது சொந்தக் கருத்துக்களுக்கு முழுமையாக ஒத்துவராத, தங்கள் நாட்டு மக்களையுங்கூட வெறுக்க சுதந்திரவாளிகளாக நினைத்திருந்தனர். இவையெல்லாவற்றிலும்: "கொலை செய்யாதிருப்பாயாக" என்ற பிரமாணத்தை மீறிக்கொண்டிருந்தார்கள். (35)

வெறுக்கும், பழிவாங்கும் ஆவி சாத்தானிடத்திலிருந்து ஆரம்ப மானது. தேவகுமாரனை மரணத்திற்குட்படுத்த இந்தக் காரியம் அவனை வழிநடத்தியது. தங்களது இருதயத்திலே பழிவாங்கும் குணம் அல்லது இரக்கமற்ற தன்மையைப் பேணிக்காப்பவர்கள் அதே ஆவியை உடையவர் களாக இருக்கிறார்கள். அது மரணத்திற்குக் கொண்டுசெல்லும். எப்படி விதைக்குள் செடி இருக்கிறதோ, அதேபோன்று பழிவாங்கும் சிந்தையிலே, தீய செயலும் உள்ளடங்கியிருக்கிறது. "தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷகொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது" – 1 யோவான் 3:15. (36)

"தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனை சங்கத்தீர்ப்பிற்கு ஏதுவாயிருப்பான்." நமது மீட்பிற்காக தமது குமாரனை ஈந்த காரியத்திலே, தேவன் ஒவ்வொரு மானிட ஆத்துமாவிலும் எத்தகைய உயர்ந்த மதிப்பை வைத்திருக்கிறார் என்பதைக் காட்டினார். எவரையும் ஏளனமாகப் பேசுவதற்கு எந்த மனிதனுக்கும் அவர் உரிமைகொடுக்கிறதில்லை. நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களது குறைகளையும் பெலவீனங்களையும் நாம் காண்கிறோம். ஆனால் தேவன் ஒவ்வொரு ஆத்துமாவையும் அவரது உடைமையாக எண்ணி உரிமைகோருகிறார். படைப்பினால் நாம் அவருக்குச் சொந்தமானவர்கள்; இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்ததினாலே நாம் கொள்ளப்பட்டதினால் நம்மீது அவருக்கு இரண்டு பங்கு உரிமையிருக்கிறது. எல்லாருமே அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப் பட்டவர்கள்; மிகவும் கீழ்த்தரமான நபர்கள்கூட மரியாதையோடும் இரக்கத்தோடும் நடத்தப்படவேண்டும். ஒரு ஆத்துமாவிற்கெதிராக பேசப்பட்ட ஒரு ஏளன வார்த்தைக்கும் தேவன் நம்மிடம் கணக்கு கேட்பார். ஏனெனில் அவனுக்காகவும் கிறிஸ்து தன் ஜீவனைக் கொடுத்தார். (37)

"அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய்?" – 1 கொரி. 4:7; "மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி" – ரோமர் 14:4. (38)

"மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" – மத்தேயு 5:22. பழைய ஏற்பாட்டிலே முட்டாள் என்ற வார்த்தை, சமயப் பகைவனை அல்லது துன்மார்க்கத்திற்கு தன்னை முற்றிலுமாக ஒப்புக் கொடுத்தவனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. தனது சகோதரனை

சமயப்பகைவன் என்றோ அல்லது தேவனை இகழ்ச்சி செய்கிறவன் என்றோ ஒரு மனிதன் கண்டனஞ்செய்தால், அதே கண்டனத்திற்கு அவன் தன்னையும் ஆளாக்கிக்கொள்ளுகிறான் என்று இயேசு கூறினார். (39)

மோசேயின் சடலத்தைக்குறித்து சாத்தானுடன் கிறிஸ்துதாமே வாதிடும்போது: "அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்" (யூதா 9) என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதை அவர் செய்திருப்பாரானால், சாத்தான் நிற்கும்தளத்திலே அவர் தம்மையும் வைத்திருந்திருப்பார். ஏனெனில் குற்றஞ்சாட்டுதல் தீயவனின் ஆயுதமாகும். வேதவாக்கியங்களிலே அவன் "சகோதரர்மேல் குற்றஞ்சாட்டுகிறவன்" (வெளிப்படுத்தல் 12:10) என்று அழைக்கப்படுகிறான். சாத்தானின் ஆயுதங்கள் ஒன்றையும் இயேசு பயன்படுத்துவதில்லை. "கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக" என்ற வார்த்தைகளால் அவர் அவனைச் சந்தித்தார் – யூதா 9. (40)

இந்த முன்மாதிரி நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் சத்துருக்களோடு நாம் போராட்டத்தில் கொண்டுவரப்படும்போது, பழி வாங்கும் ஆவியோடு எதையும் கூறக்கூடாது. வசைமொழிகூறித் திட்டுவது போன்ற தோற்றமும்கூட இருக்கக்கூடாது. தேவனுக்காக பேசும் ஒருவர், சாத்தானோடு வாதிடும்போது பரலோகத்தின் மாட்சிமை பொருந்திய மன்னர் உபயோகிக்காத வார்த்தைகளை உபயோகிக்கக்கூடாது. நியாயந்தீர்ப்பதையும் கண்டனஞ்செய்வதையும் நாம் தேவனிடம் விட்டுவிடுவோம். (41)

## ***"உன் சகோதரனோடே ஒப்புரவாகி" – மத்தேயு 5:24.*** (42)

தேவனுடைய அன்பு, "ஒன்றுமில்லை" என்பதைவிடவும் அதிகமான தொன்றாகும். இது ஒரு நேர்மறையான, செயல்படும் கொள்கையாகும்; மற்றவர்களை ஆசீர்வதிக்கத்தக்கதாக, என்றும் பாய்ந்துகொண்டிருக்கும் ஜீவஊற்றாகும். கிறிஸ்துவின் அன்பு நம்மிலே தங்கியிருக்குமானால், நமது சகமனிதர்களுக்கெதிரான வெறுப்பை பேணாமலிருப்பது மட்டுமல்ல, எந்த வழியிலாவது அவரிடத்தில் அன்பைக் காட்ட நாடுவோம். (43)

"நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" (மத்தேயு 5:23,24) என்று இயேசு கூறினார். பலிமுறைக்கான காணிக்கையைச் செலுத்துபவர், அவற்றினால்

கிறிஸ்துவின்மூலமாக தேவனுடைய அன்பிற்கும் இரக்கத்திற்கும் பங்காளியாகிவிட்டார் என்ற விசுவாசத்தை வெளிப்படுத்தியது. ஆனால் தேவனுடைய மன்னிக்கும் அன்பிலே தனக்கிருக்கும் விசுவாசத்தை வெளிப்படுத்தும் ஒருவர் அன்பற்ற குணத்தில் திளைப்பது வெறும் கேலிக்கூத்தாகவே இருக்கும். (44)

தேவனுக்குச் சேவைசெய்வதாகச் சொல்லும் ஒருவர், ஒரு சகோதரனுக்கு தவறுசெய்யும்போது அல்லது தீங்கு விளைவிக்கும்போது, அந்தச் சகோதரனிடத்தில் தேவனுடைய குணத்தை தவறானமுறையில் காட்டுகிறார். அந்த நபர் தேவனோடு இசைந்திருக்கவேண்டுமானால், அவரது குற்றத்தைக் கண்டிப்பாக அறிக்கைசெய்ய வேண்டும். அது பாவமென்ற உண்மையை ஒத்துக்கொள்ளவேண்டும். நாம் நமது சகோதரனுக்குச் செய்த தீங்கைவிட நமது சகோதரன் நமக்கு மிகப்பெரிய தீங்கைச் செய்திருக்கலாம். எனினும் இக்காரியமானது நமது பொறுப்பை எந்தவகையிலும் குறைத்துவிடாது. நாம் தேவனுக்குமுன்பாக வரும்போது, ஒருவருக்கு நம்மீது மனவருத்தம் இருக்குமானால், ஜெபம், நன்றிகூறல், உதாரத்துவமான காணிக்கை ஆகியவைகளைச் செலுத்தாமல் வைத்துவிட்டு, எந்தச் சகோதரனிடத்தில் நமக்கு பிணக்கிருக்கிறதோ, அந்தச் சகோதரனிடத்திற்குச் சென்று தாழ்மையோடு நமது சொந்தப் பாவத்தை அறிக்கைசெய்து, அவரிடத்தில் மன்னிப்பு கேட்கவேண்டும். (45)

எந்தவகையிலாவது நமது சகோதரனை ஏமாற்றியிருப்போமானால் அல்லது காயப்படுத்தியிருப்போமானால், அதற்குச் சரியாக திரும்பச் செலுத்திவிடவேண்டும். நாம் நமது சகோதரனுக்கு விரோதமாகக் கவனக்குறைவாக பொய்சாட்சி கூறியிருப்போமானால், அவரது வார்த்தைகளை திரிபுபடுத்திக் கூறியிருப்போமானால், எந்த வழியிலாவது அவரது செல்வாக்கிற்கு கேடுவிளைவித்திருப்போமானால், நாம் யாரிடத்திலெல்லாம் அவரைக்குறித்துப் பேசியிருக்கிறோமோ, அவர்களிடமெல்லாம் சென்று மதிப்புக்கேடாக நம்மால் கூறப்பட்ட தவறான வார்த்தைகளையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். (46)

சகோதரருக்கிடையிலுள்ள பிரச்சனைக்கான காரியங்கள் மற்றவர் களுக்குமுன்பு வெளியரங்கமாக வைக்கப்படாமல், கிறிஸ்தவ அன்பின் குணத்திலே தங்களுக்குள் நேர்மையான முறையில் பேசப்பட்டிருக்குமானால், எவ்வளவு தீமைகளைத் தவிர்த்திருக்கலாம்! அநேகரைக் கறைப்படுத்தி வைத்திருக்கும் எத்தனை கசப்பின் வேர்கள் அழிக்கப்பட்டிருக்கலாம்! கிறிஸ்துவின் பின்னடியார்கள் அவரது அன்பிலே எவ்வளவு நெருக்கமாகவும்

மென்மையான கனிவோடும் இணைக்கப்பட்டிருக்கலாம்! (47)

***"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" – மத்தேயு 5:28.*** (48)

யூதர்கள் தங்களுடைய ஒழுக்கநிலைகுறித்து பெருமை கொண்டிருந்தார்கள். அஞ்ஞானிகளின் இழிவான இன்பவாழ்க்கையில் தோய்ந்த பழக்கவழக்கங்களைப் பயத்தோடு நோக்கிப்பார்த்தார்கள். ஏகாதிபத்திய ஆளுகைமூலமாக, அநேக ரோமஅதிகாரிகள் பாலஸ்தீனாவிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தார்கள். அவர்கள் அங்கிருப்பது யூத மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதாக இருந்தது. ஏனெனில் இந்த வெளிநாட்டவரோடு சேர்ந்து ஏராளமான அஞ்ஞான பழக்கங்களும் அடங்காத சிற்றின்ப வேட்கையும் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கைமுறையும் வந்துவிட்டன. கப்பர்நகூமிலே அணிவகுக்கும் களங்களிலேயும் உலாவுகின்ற மேடைகளிலேயும் ரோம அதிகாரிகள் தங்கள் ஆண் காதலர்களோடு (gay) சுற்றி வந்தார்கள். அங்குள்ள அமைதியான ஏரியிலே அவர்களது உல்லாசப்படகுகள் மிதந்து செல்லும்போது, அவர்களது களியாட்டங்களினால் ஏற்பட்ட கேளிக்கை ஒலிகள் அடிக்கடி அந்த ஏரியின் அமைதியைக் குலைத்துப்போட்டது. அங்கு குழுமியிருந்த மக்கள் மேற்கூறப்பட்ட வகுப்பாரைக்குறித்து வெளிப்படையாக கடுமையான கண்டனம் ஒன்றை இயேசு கொடுப்பதைக் கேட்கவேண்டுமென்று எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆனால் அவர்களுடைய சொந்த இருதயத்தின் தீமையை அவர் அப்படியே வெளிப்படுத்திக்காட்டினதால் அவர்கள் எத்தனை ஆச்சரியமடைந்தார்கள்! (49)

தீயசிந்தை நேசிக்கப்பட்டு, நெஞ்சாரப் பேணப்படும்போது, அது எவ்வளவு இரகசியமாயிருந்தாலும், பாவம் தொடர்ந்து இருதயத்தில் ஆளுகைசெய்கிறதை அது காட்டுகிறதென்று இயேசு கூறினார். ஆத்துமா இன்னமும் கடுமையான கசப்பிலும் அநீதியின் பிணைப்பிலும் இருக்கிறது. தூய்மையற்ற காட்சிகளில் மனதைச் செலுத்துவதிலும், தீயநினைவுகளில் திளைத்திருப்பதிலும், இச்சையோடு பார்ப்பதிலும் இன்பங்காண்கின்ற ஒருவன், தன் மனதில் மறைத்துவைத்திருந்த தீமையின் இயல்பையே, அதன் அவமானத்தோடும், மனதை உடைக்கும் வருத்தத்தோடும்கூட, வெளிப்பட்ட பாவத்தில் காணலாம். பயங்கரமான பாவத்தில் ஒருவர் விழும்போது ஏற்படும் தீமையை, அந்தச் சோதனைக்காலம் உண்டாக்குவதில்லை; மாறாக, வெளிப்படாமல் ஏற்கனவே இருதயத்தில் மறைந்திருந்த தீமையை

அது வளரச்செய்திருக்கிறது அல்லது வெளிப்படுத்திக்காட்டியிருக்கிறது. “அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்” “அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்” – நீதிமொழிகள் 23:7; 4:23. (50)

***“உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு” – மத்தேயு 5:30.*** (51)

வியாதி உடலெங்கும்பரவி ஜீவனை அழித்துப்போடுவதைத் தடுக்கவேண்டுமானால் தனது வலதுகரத்தையுங்கூட இழந்துவிட ஒருவன் சம்மதித்துவிடுவான். ஆத்துமாவின் ஜீவனையே ஆபத்திற்கு ஆளாக்குகின்ற காரியங்களை விட்டுவிட எவ்வளவு ஆவலோடு இருக்கவேண்டும்! (52)

தேவகுமாரர்களுக்குக் கிடைக்கக்கூடிய அந்த மகிமையான சுதந்தரத்தின் பங்கைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக சாத்தானால் இழிநிலை யடைந்து, அடிமைத்தனத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிற ஆத்துமாக்கள் சுவிசேஷத்தின்மூலமாக இரட்சிக்கப்படவேண்டும். பாவத்தின் தவிர்க்க முடியாத விளைவாகிய துன்பத்தினின்று மட்டுமல்ல, பாவத்தினின்றே இரட்சிக்கப்படவேண்டுமென்பதுதான் அவரது நோக்கம். இழிநிலையடைந்து முடமாகிப்போன ஆத்துமா தூய்மையாக்கப்பட்டு, மாறுதலையடையத் தக்கதாக, “தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு...” “ஆண்டவருடைய பிரியம்” நம்மேல் இருக்கவேண்டும். “... தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவு மில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை” – சங். 90:17; ரோமர் 8:29; 1 கொரி. 2:9. தேவ சாயலுக்குத் திரும்பவும் கொண்டுவரப்படும் மனிதன் அடையப்போகின்ற அந்த மகிமையான இறுதி நிலையை நித்தியம் மாத்திரமே வெளிப்படுத்தக்கூடும். (53)

இத்தகைய உயர்ந்த இலட்சியத்தை நாம் அடையவேண்டுமென்றால் எந்தக் காரியம் நமது ஆத்துமாவைத் தடுமாறச் செய்கின்றதோ, அந்தக் காரியம் தியாகம் செய்யப்படவேண்டும். நமது சித்தத்தின் மூலமாகவே, பாவம் நம்மீதுள்ள பிடியை தன்வசமாக வைத்துள்ளது. சித்தத்தைச் சரணடையச்செய்வதென்பது, கண்ணைப் பிடுங்கி எறிந்துபோடுவது மற்றும் கரத்தை வெட்டிப்போடுவதென்பது என்பவைமூலம் சுட்டிக்காட்டப்படுகிறது. தேவனுக்கு நமது சித்தத்தை ஒப்புக்கொடுப்பது வாழ்க்கையினூடே ஊனமடைந்தவர்களாகவும், முடமானவர்களாகவும் செல்வதற்கு ஒப்புக்கொண்டதைப்போன்று அநேகந்தடவைகளில் நமக்குத் தோன்றுகிறது. ஆனால் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கிறதற்கேதுவாக

சுயம் முடமாக்கப்படுவதும், ஊனமடைவதும் காயப்படுவதும் நல்லதே என்று கிறிஸ்து கூறுகிறார். பேரிடர் அல்லது விபத்து என்பதாக எண்ணி, நீ நோக்கிப்பார்க்கும் காரியம், மிகஉயரிய நன்மையை அடையத்தக்கதான ஒரு வாசலாக அமைந்திருக்கிறது. (54)

தேவன் ஜீவஊற்றாக இருக்கிறார். நாம் அவரோடு தொடர்பு கொண்டிருக்கும்போதுமட்டுந்தான் ஜீவனைப் பெறமுடியும். தேவனைவிட்டுப் பிரிந்திருக்கும்போது கொஞ்சக்காலம் பிழைத்திருக்கலாம். ஆனால் ஜீவனுள்ளவர்களாக இருக்கமாட்டோம். “சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்” – 1 தீமோ. 5:6. நமது சித்தத்தை தேவனிடம் ஒப்படைப்பதினால்மட்டுமே, அவர் நமக்கு ஜீவனை அளிப்பது சாத்திய மாகின்றது. சுயத்தை ஒப்புக்கொடுப்பதின்மூலமாக, அவரது ஜீவனைப் பெற்றுக்கொள்வதினால்மட்டுமே, இயேசு குறிப்பிட்டுக்காட்டிய மறைந் திருக்கின்ற இத்தகையப் பாவங்களை மேற்கொள்ளமுடியுமென்று கூறினார். இத்தகையப் பாவங்களை உங்களது இருதயங்களில் புதைத்து வைத்து, மானிடக் கண்களினின்று மறைத்துவைப்பது சாத்தியமாகலாம். ஆனால் தேவனுடைய பிரசன்னத்தில் உங்களால் எப்படி நிற்கமுடியும்? (55)

நீங்கள் சுயத்தைப் பற்றிக்கொண்டு, தேவனுக்கு உங்கள் சித்தத்தை ஒப்புக்கொடுக்க மறுப்பீர்களானால், மரணத்தை தெரிந்துகொள்வீர்கள். பாவம் எங்கெங்கு காணப்பட்டாலும், அதற்கு தேவன் பட்சிக்கிற அக்கினியாக இருக்கிறார். நீங்கள் பாவத்தை தெரிந்துகொண்டு, அதைவிட்டுப் பிரிய மறுப்பீர்களானால், பாவத்தைப் பட்சிக்கிற அவரது பிரசன்னம் உங்களையும் கண்டிப்பாகப் பட்சித்துப்போடும். (56)

உங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதற்கு ஒரு தியாகம் அவசியமாக இருக்கிறது. ஆனால் உயர்ந்த காரியத்தைப் பெற்றுக்கொள்ள இழிவானதையும், ஆவிக்குரிய காரியத்தைப் பெற்றுக்கொள்ள பூமிக்கடுத்த காரியங்களையும், நித்தியத்தைப் பெற்றுக்கொள்ள அழிந்துபோகின்ற காரியத்தையும் தியாகஞ்செய்வதே உண்மையான தியாகமாகும். நமது சித்தம் அழிக்கப்படவேண்டுமென்று தேவன் திட்டமிடுகிறதில்லை. ஏனெனில் நமது சித்தத்தை நடைமுறைப்படுத்துவதின்மூலமாகமட்டுமே நான் என்ன செய்யவேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ, அதை நிறைவேற்ற முடியும். நமது சித்தமானது தூய்மையாக்கப்பட்டு, மேன்மைப்படுத்தப்பட்டு, மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி அவரிடத்தில் ஒப்படைக்கப்படவேண்டும். இவ்வாறு தெய்வீகத்தோடு பரிவுடன் இணைக்கப்படுவதால், நம்மூலமாக அவரது அன்பையும் வல்லமையையும் ஏராளமாகப் பொழியமுடியும். இந்தச் சரணாகதி

தன்னிச்சையான தாறுமாறான இருதயத்திற்கு எவ்வளவு கசப்பாகவும் வேதனையாகவும் தோன்றினாலும், உங்களுக்கு நன்மையானதாகவே இருக்கும். (57)

யாக்கோபு நொண்டியாகி, உதவியற்று, உடன்படிக்கையின் தூதனானவரின் மார்பிலே விழும்வரை, மேற்கொள்ளும் விசுவாச வெற்றி என்றால் என்ன என்பதையும், தேவனோடு பிரபு என்ற பட்டத்தைப் பெற்றுக்கொள்வது என்றால் என்ன என்பதையுங்குறித்து அறியவில்லை. அவன் தொடைச்சுளுக்கினாலே நொண்டி நொண்டி நடக்கும்போதுதான் (ஆதியாகமம் 32:31) ஆயுதந்தரித்த ஏசாவின் கூட்டம் யாக்கோபிற்கு முன்பாக அடங்கிநின்றது. அரச பரம்பரையின் மேட்டிமையான வாரிசான பார்வோன் யாக்கோபின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஆர்வத்துடன் அவனுக்குமுன் குனிந்து நின்றான். இதைப்போன்று நமது இரட்சிப்பின் தளபதி, "உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட்டார்" – எபிரெயர் 2:10. "விசுவாசத்தின் பிள்ளைகள் பலவீனத்தில் பலன்கொண்டார்கள்" – எபி.11:34; "அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்." அதேபோன்று, "... சப்பாணிகளும் கொள்ளையாடுவார்கள்" – ஏசாயா 33:23; "அவர்களில் தள்ளாடினவன் ... தாவீதைப்போல இருப்பான்; தாவீது குடும்பத்தார் ... கர்த்தருடைய தூதனைப்போலும் இருப்பார்கள்" – சகரியா 12:8. (58)

***"புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா?" – மத்தேயு 19:3.*** (59)

யூதர்கள் மத்தியிலே ஒரு மனிதன் தன் மனைவி மிகமிக அற்பமான குற்றத்தைச் செய்திருந்தாலும், அவளைத் தள்ளிவிடலாமென்று அனுமதிக்கப் பட்டிருந்தான். அந்தப் பெண்ணும் மீண்டும் திருமணம் செய்துகொள்ளும் உரிமையைப் பெற்றிருந்தாள். இப்பொழுது இந்தப் பழக்கமானது மிகப்பெரிய நிர்ப்பாக்கியமான நிலைக்கும் பாவத்திற்கும் வழிநடத்தியது. திருமண உடன்படிக்கைக்கு உண்மையில்லாது இருந்தால்மாத்திரமே, அந்தத் திருமணபந்தம் முறிக்கப்படலாமென்று மலைப்பிரசங்கத்திலே இயேசு மிகவும் தெளிவாகத் தெரிவித்தார். "...எவனாகிலும் தன்மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்" (மத்தேயு 19:9) என்று இயேசு கூறினார். (60)

பின்னர் சட்டப்படியான விவாகரத்தைக்குறித்து பரிசேயர்கள் இயேசுவை

வினவியபோது, அவர் தமது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களை நோக்கி, படைப்பிலே திருமணம் என்ற நியமனமானது எவ்வாறு புனிதமாக நியமிக்கப்பட்டதென்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். “உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை” (மத்தேயு 19:8) என்று கூறினார். தேவன் அனைத்துக் காரியங்களையும் “மிகவும் நல்லதென்று” கூறிய ஏதேனின் ஆசீர்வாதமான நாட்களுடன் ஒப்பிட்டு எடுத்துக் கூறினார். மனிதகுலத்தின் நன்மைக்காகவும், தேவனுடைய மகிமைக்காகவும் “திருமணம், ஓய்வுநாள்” என்ற இரண்டு நியமனங்களும் ஆரம்பிக்கப்பட்டன. சிருஷ்டிகர் அந்தப் பரிசுத்தத் தம்பதிகளின் கரங்களை திருமணப்பந்தத்தில் இணைத்தபோது “புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்” (ஆதியாகமம் 2:24) என்று கூறினார். ஆதாமின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் உலகத்தின்முடிவுவரை இந்தத் திருமணச் சட்டத்தை தெளிவுபடுத்திக் கூறினார். நித்தியபிதாதாமே நல்லதென்று கூறிய இந்தச் சட்டமானது, உயர்ந்த ஆசீர்வாதத்திற்கும் மனிதனின் முன்னேற்றத்திற்குமான சட்டமாக இருந்தது. (61)

மனுக்குலம் கடைப்பிடிக்கத்தக்கதாக ஒப்படைக்கப்பட்ட தேவனால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நல்ல ஈவும் எவ்வாறு நெறியினின்று விலகுகின்றதோ, அதேபோன்று பாவத்தினால் திருமணமும் தாறுமாறாக்கப்பட்டது. ஆனால் திருமணத்தின் அழகும் தூய்மையும் மீண்டும் அதற்குரிய இடத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதே நற்செய்தியின் நோக்கமாக இருக்கிறது. கல்வாரிச் சிலுவையிலே கிரயங்கொடுத்து வாங்கப்பட்ட இரட்சிக்கப்பட்ட மக்களுக்கும் கிறிஸ்துவிற்குமிடையே நிலைத்திருக்கும் பரிசுத்தமான மென்மையான ஐக்கியத்தை எடுத்துக்கூறவே பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் திருமண உறவு என்ற பொருள் எடுத்தாளப்பட்டிருக்கின்றது. “பயப்படாதே, ... உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம், இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர்” – ஏசா. 54:4,5; “சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் நாயகர்” – எரே. 3:14; “என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்” என்று மணவாட்டி கூறுவதை நாம் கேட்கிறோம். அவளுக்கு பதிலாக “பதினாயிரம் பேர்களில் சிறந்தவராயிருக்கிற” அவர் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவளிடம், “என் பிரியமே! நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதொன்றுமில்லை” என்கிறார் – உன்னத. 2:16; 5:10; 4:7. (62)

அப்போஸ்தலனாகிய பவுல், பின்னான காலங்களில் எபேசிய

கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, இயேசு சபையின் தலையாகவும், ஆவிக்குரிய சபையாகிய சரீரத்தின் இரட்சகராகவும் இருப்பதைப்போன்று, கர்த்தர் புருஷனை மனைவிக்கு தலையாகவும், அவளுடைய பாதுகாவல னாகவும், குடும்பத்தின் இணைப்பாகவும், குடும்ப அங்கத்தினர்களை இணைத்துக்கட்டுபவனாகவும் ஏற்படுத்தியிருப்பதாக அறிவித்திருக்கிறார். "... ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்" – எபே. 5:24–28. (63)

கிறிஸ்துவின் கிருபை மாத்திரமே, இந்த நியமனத்தை தேவன் திட்டமிட்டபடி அமைக்கமுடியும். அதாவது, மானிட இனத்தை ஆசீர்வதிக்கவும் மேம்படுத்தவுங்கூடிய ஒரு பிரதிநிதியாக கிறிஸ்துவின் கிருபை செயல்படுகிறது. இவ்விதம், பூமியின் குடும்பங்களனைத்தும் தங்கள் ஐக்கியத்திலும் சமாதானத் திலும் அன்பிலும் பரலோகக் குடும்பத்தை எடுத்துக்காட்டலாம். (64)

கிறிஸ்துவின் நாட்களிலிருந்ததைப்போலவே, இன்றைய சமுதாயத்தின் நிலையானது, திருமணத்தின் பரிசுத்த உறவின் அந்த மேலான பரலோக இலட்சியத்தைப்பற்றி, ஒரு வருந்தத்தக்க விளக்கத்தையே தருகிறது. எங்கு தோழமையும் மகிழ்ச்சியும் கிடைக்குமென்று நம்பினார்களோ அங்கு கசப்பையும் ஏமாற்றத்தையும் கண்ட மக்களுக்குங்கூட, கிறிஸ்துவின் நற்செய்தியானது ஒரு தேறுதலை அளிக்கிறது. அவரது ஆவியானவரால் அளிக்கப்படும் பொறுமையும் கனிவும் அந்தக் கசப்பான பங்கை இனிமையானதாக்கமுடியும். கிறிஸ்து வாசஞ்செய்யும் இருதயமானது, அவரது அன்பினால் நிறைந்து திருப்தியாக இருக்கும். மேலும் அந்த இருதயம் தனக்காக மற்றவர்களின் பரிவையும் கவனத்தையும் தன்பக்கம் கவர்ந்திழுக்கவேண்டுமென்ற ஏக்கத்தால் தன்னைச் சுட்டெரித்துக்கொண்டிருக்காது. ஆத்துமாவை தேவனுக்கு ஒப்படைப்பதின்மூலமாக மானிட ஞானமானது செய்யத்தவறிவிட்ட காரியத்தை, அவரது ஞானமானது நிறைவேற்றிவைக்கும். அவரது கிருபையின் வெளிப்பாட்டின்மூலமாக, ஒருகாலத்தில் அக்கறையற்ற வேறுபாடுகொண்ட

நிலையிலிருந்த இருதயங்களானது, உலகத்தை சார்ந்தவைகளைக்காட்டிலும் திடமானதும் அதிகமாக நிலைபெற்றிருக்கக்கூடியதுமான பிணைப்புகளால், அதாவது உபத்திரவத்தின் சோதனையைச் சகிக்கக்கூடிய அன்பென்னும் ஒரு பொன் இணைப்பினால் ஐக்கியப்பட்டிருக்கும். (65)

***"சத்தியம்பண்ணவேண்டாம்" – மத்தேயு 5:34.*** (66)

இந்தக் கட்டளைக்கான காரணம் கொடுக்கப்பட்டுள்ளது. "வானத்தின் பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். பூமியின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம். உன் சிரசின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே" – மத்தேயு 5:34–36. (67)

அனைத்தும் தேவனாலே நமக்குக் கிடைக்கிறது. நாம் பெற்றுக்கொள்ளாத பொருள் எதுவும் இல்லை; கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக நமக்காக கிரயங்கொள்ளப்படாத பொருள் ஒன்றுமில்லை. நமக்கு உடமையாக இருக்கும் அனைத்துப் பொருட்களும் சிலுவை அடையாளத்தினால் முத்திரையிடப்பட்டு, எல்லா மதிப்பீட்டிற்கும்மேலாக விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கிரயங்கொள்ளப்பட்டு நம்மை வந்தடைகிறது. ஏனெனில் அது தேவனுடைய ஜீவனாக இருக்கிறது. எனவே நமது வார்த்தையின் நிறைவேறுதலுக்காக ஏதோ நமக்குச் சொந்தமானது என்று நினைத்து, சத்தியம்பண்ண நமக்கு உரிமை கிடையாது. (68)

தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குவதை மூன்றாம் கற்பனை தடைசெய்கிறதாக யூதர்கள் விளங்கிக்கொண்டிருந்தார்கள். ஆயினும் பிறவகைகளில் சத்தியங்களைப் பண்ணுவதற்கு தங்களுக்குத் தடையேதும் இல்லையென அவர்கள் எண்ணினர். ஆணையிடும் பழக்கம் அவர்களுக்குள் சர்வசாதாரணமாகக் காணப்பட்டது. பொய்யாணை இடக்கூடாதென்று மோசேயின்மூலம் அவர்கள் தடுக்கப்பட்டிருந்தாலும், இடப்பட்ட ஒரு ஆணையானது தம்மீது சுமத்திய கடமையினின்று தங்களை விடுவித்துக் கொள்வதற்கு அவர்கள் அநேக வழிமுறைகளை வைத்திருந்தனர். சட்டங்களை நுணுக்கமாக மீறுகிற காரியத்தால் மறைக்கப்பட்டிருக்கும்வரையிலும், உண்மையிலேயே வீணிலே வழங்குவதில் ஈடுபடவோ, பொய்யாணை யிடுவதிலிருந்து அவர்கள் தங்களை விலக்கிக்கொள்ளவோ இல்லை. (69)

## ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!

இயேசு அவர்களது நடைமுறைப் பழக்கங்களைக் கண்டித்து, ஆணையிடும் பழக்கமானது தேவனுடைய கட்டளையின் மீறுதலாக இருக்கிறது என்று அறிவித்தார். ஆயினும் "சொல்லப்படுகின்ற அனைத்தும் உண்மையே; உண்மையைத்தவிர வேறொன்றும் இல்லை" என்று நீதிமன்றத்தில் சொல்லப்படுகின்ற ஆணையை நமது இரட்சகர் தடை செய்யவில்லை. இயேசுவும்கூட, சனகரீப் சங்கத்திற்கு முன்பாக விசாரிக்கப்பட்டபோது சாட்சி பகர மறுக்கவில்லை. பிரதான ஆசாரியன் அவரிடத்தில்: "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்கு சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்று சொன்னான் (மத்தேயு 26:63,64). கிறிஸ்து தமது மலைப்பிரசங்கத்திலே நீதிமன்றத்தில் ஆணையிடுவதை கண்டித்திருப்பாரென்றால், அவர் தமக்கு நடத்தப்பட்ட நீதிமன்ற விசாரணையின்போது, பிரதான ஆசாரியனைக் கண்டித்து, தமது பின்னடியார்களின் பிரயோஜனத்திற்காக, தமது உபதேசத்தை நடைமுறைப்படுத்தியிருப்பார். (70)

தங்களுடைய உடன் மனிதரை ஏமாற்றுவதற்கு பயமற்றவர்களாக அநேகர் இருந்தாலும், தங்களை படைத்தவரிடத்தில் பொய்சொல்வதென்பது ஒரு பயங்கரமான காரியமென்று போதிக்கப்பட்டும் தேவனுடைய ஆவியானவரால் உணர்த்தப்பட்டுமிருக்கின்றனர். அவர்கள் ஆணையிடும்போது வெறும் மனிதர்களுக்கு முன்பாக மட்டுமல்லாமல், தேவனுக்கு முன்பாகவும் சாட்சிபகருகின்றதாக உணர்த்தப்படுகின்றனர். ஒருவேளை அவர்கள் பொய்ச்சாட்சி பகருவார்களென்றால், தங்கள் இருதயத்தை ஆராய்ந்து சரியான உண்மையை அறிந்துகொள்பவருக்கு முன்பாகவே பொய்ச்சாட்சி பகருகின்றனர். இந்தப் பாவத்தைத் தொடர்ந்துவருகின்ற பயங்கரமான நியாயத்தீர்ப்புக்கடுத்ததான அறிவானது, அவர்கள்மீது ஒரு தடைசெய்யும் செல்வாக்கினைப் பெற்றதாயிருக்கிறது. (71)

ஆயினும் ஆணையிடுகின்ற சூழ்நிலையில்கூட நிலையாக சாட்சிபகரக்கூடிய ஒருவன் உண்டென்றால் அது கிறிஸ்தவனே ஆகும். எவரது நாமத்தில் நாம் ஆணையிடவேண்டுமோ அவரது கண்களுக்கு நமது ஒவ்வொரு எண்ணமும் வெளியரங்கமாயிருக்கிறது என்பதை அறிந்தவனாக, தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பதைப்போன்று அவன் நீடித்து வாழ்கின்றான். நியாயமான முறையிலே ஆணையிடுதலானது தேவைப்படும்போது, "நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத்தவிர வேறொன்றும் இல்லை" என்று ஒரு சாட்சியைப்போல மேல்முறையீடு செய்வதென்பது அவனுக்கு சரியானதொன்றாகும். (72)

## பிரமாணத்தின் ஆவிக்குரிய தன்மை!

சத்தியம்செய்தல் தேவையற்றது என்பதை எடுத்துக்காட்டத்தக்கதாக, ஒரு கொள்கையை வகுத்துச் செயல்படுத்த இயேசு முற்பட்டார். உண்மையே நமது பேச்சின் சட்டமாயிருக்கவேண்டுமென்று போதித்தார். "உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" (மத்தேயு 5:37) என்றார். (73)

இந்த வார்த்தைகள் எல்லாவகையான அர்த்தமற்ற சொற்றொடர் களையும், நிபச்சொற்களையும் குறிக்கிறது. வஞ்சப் புகழ்ச்சிகளையும் உண்மையற்ற நிலையையும், முகஸ்துதியான சொற்றொடர்களையும், மிகைப்படுத்தலையும், இன்றைக்கு சமுதாயத்திலும் வியாபாரத்திலும் இருக்கும் திரிபுகளையும் கண்டிக்கிறது. தன்னிடம் இல்லாததை இருப்பதைப்போலக் காண்பிப்பவரும், இருதயத்தின் உண்மையான உணர்வை தன் வார்த்தையில் வெளிப்படுத்தாதவரும் உண்மையுள்ளவரென்று அழைக்கப்படமுடியாதென்று இவ்வார்த்தைகள் போதிக்கின்றன. (74)

கிறிஸ்துவால் கூறப்பட்ட இந்த வார்த்தைகள் கவனத்தில் கொள்ளப்படுமானால், தவறாக யூகிப்பதையும், இரக்கமற்ற விமர்சனத்தையும் கவனத்தில் வைக்கும். மற்றவர்களுடைய செயல்களையும் நோக்கங் களையுங்குறித்து கருத்து வெளியிடும்போது, சரியான உண்மையைத்தான் பேசுகிறோமென்று யாரால் நிச்சயமாகக் கூறமுடியும்? எத்தனை முறை நமது பெருமையும், உணர்ச்சிகளும், தனிப்பட்டவிதத்தில் மனதிலிருக்கும் கடுங்கோபங்களும் நாம் மற்றவர்களைப்பற்றிக் கொடுக்கும் கருத்துக்களில் பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றன. ஒருகணநேரப் பார்வை, ஒரு வார்த்தை, குரலில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள், கூறப்படும் பொய்யுரைகளில் முக்கிய பங்காற்றலாம். உண்மைகள்கூட அவை சொல்லப்படுகின்ற விதத்திலே பொய்யான கருத்துகளைக் கொடுக்குமாறு செய்யப்படலாம். மேலும் உண்மைக்கு மிஞ்சியதாகக் கூறப்படும் அனைத்தும் "தீமையினால் உண்டாயிருக்கும்" – மத்தேயு 5:37. (75)

கிறிஸ்தவர்கள் செய்கின்ற அனைத்துக் காரியங்களும் சூரிய ஒளியைப்போன்று தெள்ளத்தெளிவாக இருக்கவேண்டும். உண்மை தேவனிடத்திலிருந்து வருகிறது. வஞ்சகம், அதன் எண்ணற்ற ஒவ்வொரு வடிவத்திலும் சாத்தானிடமிருந்து வருகிறது. யாரானாலும், எந்தவழியி லானாலும் சத்தியமென்னும் நேர்கோட்டிலிருந்து விலகுகிறவன், தீமையின் வல்லமைக்குத் தன்னையே காட்டிக்கொடுக்கிறான். எனினும், உண்மையை உள்ளவாறே பேசுவது ஒரு எளிதான அல்லது சுலபமான காரியமல்ல. உண்மையை அறிந்திருந்தாலொழிய நாம் உண்மையைப் பேசமுடியாது.

முன்தீர்மானிக்கப்பட்டக் கருத்துகள், பாரபட்சமான மனநிலை, பூரணமற்ற அறிவு, தவறான நியாயத்தீர்ப்புகள் ஆகியவை நாம் செய்யவேண்டிய காரியங்களைச் சரியாகப் புரிந்துகொள்ளாதபடி தடைசெய்துவிடுகின்றன. சத்தியமாக இருக்கின்ற அவரால், தொடர்ந்து நமது உள்ளங்கள் வழிநடத்தப்பட்டாலொழிய நம்மால் சத்தியத்தைப் பேசமுடியாது. (76)

அப்போஸ்தலனாகிய பவுலின் மூலமாக: "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும்" இருப்பதாக என்று இயேசு நமக்குக் கூறுகிறார். "கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" – கொலோசெயர் 4:6; எபேசியர் 4:29. மேலேகூறப்பட்ட வேத வசனங்களின் வெளிச்சத்திலே மலைப்பிரசங்கத்திலே கிறிஸ்து பயன்படுத்தின வார்த்தைகள் பரிகாசம் மற்றும் குறும்பான பேச்சுகள், தூய்மையற்ற உரையாடல்கள் ஆகியவைகளைக் கண்டனஞ்செய்வது தெரிகிறது. அந்த வசனங்களின்படி நமது வார்த்தைகள் உண்மையாகமட்டுமிருந்தால் போதாது, தூய்மையாகவும் இருக்கவேண்டுமென்பது அவசியமாகிறது. (77)

கிறிஸ்துவிடமிருந்து கற்றுக்கொண்டவர்கள், "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்பட" (எபேசியர் 5:11) மாட்டார்கள். வாழ்க்கையிலிருப்பது போன்றே அவர்களது பேச்சிலும் ஒளிவுமறைவின்றி நேர்மையாகவும் எளிமையாகவும் உண்மையாகவும் இருப்பார்கள். ஏனெனில் "இவர்கள் வாயிலே கபடம் காணப்படவில்லை" (வெளிப்படுத்தல் 14:5) என்று எந்த மக்களைப்பற்றிக் கூறப்படுகிறதோ, அந்த பரிசுத்த மக்களோடு ஐக்கியப்படத்தக்கதாக அவர்கள் ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறார்கள். (78)

***"தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு" – மத்தேயு 5:39.*** (79)

ரோமப்படைவீரர்களோடு தொடர்பின்மூலமாக எரிச்சலையூட்டும் சந்தர்ப்பங்கள் யூதர்களுக்கு தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருந்தன. யூதேயா மற்றும் கலிலேயா முழுவதிலும் பற்பல இடங்களிலும் படைவீரர் குழாம்கள் ஆங்காங்கு நிலைகொண்டிருந்தன. அவர்கள் அங்கு தங்கியிருந்தது, ஒரு ஜாதியாக அவர்கள் எவ்வளவு கீழ்த்தரமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை அந்த மக்களுக்கு நினைப்பூட்டியது. ஆத்துமாவில் கசப்பு நிறைந்தவர்களாக, அந்த எக்காளத்தின் உரத்த முழக்கத்தைக் கேட்டார்கள்.

## பிரமாணத்தின் ஆவிக்குரிய தன்மை!

ரோம நாட்டின் கொடியின்கீழே அதைச் சுற்றிலும் படைகள் அணிவகுத்து, அந்த வல்லமையின் அடையாளமாகிய கொடிக்குமுன் தலைகுனிந்து வணக்கஞ்செலுத்தியதைக் கண்டார்கள். அடிக்கடி மக்களுக்கும் போர்வீரர்களுக்குமிடையில் கடும் மோதல்கள் ஏற்பட்டன. இந்தக் காரியங்கள் மக்களின் வெறுப்பைக் கிளறிவிட்டன. (80)

சில ரோம அதிகாரிகள் தங்களுக்கு காவலராக இருந்த போர்வீரர் களோடு அடிக்கடி ஒரு குழுவின் பகுதியிலிருந்து அடுத்த குழுவின் பகுதிக்குச் செல்லும்போது, வயல்களிலே வேலைசெய்துகொண்டிருக்கும் யூத விவசாயிகளைப் பிடித்துவந்து, மலைப்பகுதிக்கு தங்களது சுமைகளைச் சுமக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்துவார்கள். அல்லது தேவையான வேறு எந்த சேவையையாவது செய்யச் சொல்லுவார்கள். இந்தக்காரியம், ரோமச் சட்டத்திற்கும் பழக்கத்திற்கும் ஒத்திருந்தது. இத்தகைய வற்புறுத்துதலுக்கு எதிர்ப்புக்காட்டப்படுமானால் அவர்கள் குற்றஞ்சாட்டப்படுதலுக்கும் கொடுமைக்கும் உள்ளாக்கப்பட்டார்கள். ஒவ்வொரு நாளும் அந்த மக்களின் மனதிலே ரோம அடிமைத்தனத்தை உதறித்தள்ளவேண்டுமென்ற ஏக்கம் ஆழமான பதிவை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. குறிப்பாக, துணிவுள்ள முரட்டுத்தனமான கலிலேயர்கள் மத்தியில் புரட்சிசெய்யவேண்டுமென்ற எண்ணம் மிகுந்து காணப்பட்டது. கப்பர்நகூம் எல்லையில் அமைந்திருந்த நகரமாக இருந்ததால், ரோமர்களுடைய கோட்டையின் காவல்படைக்கு அது ஒரு மையமாக அமைந்திருந்தது. இயேசு மக்களுக்குப் போதித்துக் கொண்டிருக்கும்போது, அதைக் கேட்டுக்கொண்டிருந்த மக்களின் பார்வையிலே, படைவீரர்களின் ஒரு குழாமின் காட்சி கண்ணில்பட்டபோது, இஸ்ரவேலரின் சிறுமைப்பட்ட நிலையைக்குறித்த கசப்பான எண்ணம் அவர்களுக்கு மீண்டும் நினைவிற்கு வந்தது. கிறிஸ்துவே ரோம அரசின் பெருமையைத் தாழ்த்தப்போகிறவர் என்ற நம்பிக்கையோடு, மக்கள் அவரை ஆர்வத்தோடு நோக்கிப்பார்த்தார்கள். (81)

தமக்குமுன்பாக மேல்நோக்கிப்பார்த்த முகங்களை இயேசு வேதனையோடு பார்க்கிறார். பழிவாங்கும் ஆவியானது அவர்கள்மீது முத்திரைகுத்தி, அவர்கள் மனதிலே தீய எண்ணங்களை ஆழ்ந்து படியச்செய்திருப்பதை அவர் கவனிக்கிறார். தங்களை ஒடுக்குபவர்களை நசுக்கத்தக்கதான வல்லமைக்காக எவ்வளவு கசப்போடு அந்த மக்கள் ஏங்கிக்கொண்டிருந்தார்கள் என்பது அவருக்குத் தெரிகிறது. வேதனை நிறைந்தவராக அவர்களை நோக்கி: “தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு” (மத்தேயு 5:39) என்று கூறுகிறார். (82)

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

பழைய ஏற்பாட்டின் போதனையே இந்த வார்த்தைகளில் திரும்பவும் கூறப்பட்டுள்ளது. "கண்ணுக்குக்கண், பல்லுக்குப் பல்" (லேவியராகமம் 24:20) என்ற விதியானது, மோசேயின்மூலமாக கொடுக்கப்பட்ட சட்டங்களின் ஒரு ஷரத்தாக இருந்தது உண்மைதான். ஆயினும் அது ஒரு சமுதாயச் சட்டமாகும். தங்களுக்காக பழிக்குப்பழி வாங்குபவர் எவரும் தம்மை நியாயப்படுத்திக்கூற முடியாது. ஏனெனில் ஆண்டவரால் கூறப்பட்ட: "தீமைக்குச்சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே" நீதிமொழிகள் 20:22.; "அவன் எனக்குச் செய்தபிரகாரம் நானும் அவனுக்குச் செய்வேன் என்று நீ சொல்லாதே" நீதிமொழிகள் 24:29; "உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே" – நீதிமொழிகள் 24:17; " உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு" (நீதிமொழிகள் 25:21) என்னும் வார்த்தைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. (83)

மேற்கூறப்பட்ட இந்தக் கொள்கையின் வெளிப்படுத்தலாகவே இயேசுவின் பூவுலக வாழ்வு முழுவதும் அமைந்திருந்தது. தமது சத்துருக் களுக்கு ஜீவஅப்பத்தைக் கொடுப்பதற்காகவே நமது மீட்பர் பரலோகத் திலுள்ள அவரது வீட்டைவிட்டு வந்தார். தொட்டிலிலிருந்து கல்லறைக்குச் செல்லும் காலம்வரையிலும் பொய்க்குற்றச்சாட்டுகள் அவர்மீது குவிக்கப் பட்டபோதிலும், அவர்களினால் அவர் மிகுந்த இன்னல்களை அனுபவித்த போதிலும், மன்னிக்கும் அன்பின் வெளிப்பாடுமாத்திரமே அவர் வாயி னின்று வந்தன. ஏசாயா தீர்க்கன் மூலமாக: "அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடை களையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை" (ஏசாயா 50:6) என்றும் கூறுகிறார். "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" – ஏசாயா 53:7. கல்வாரிச் சிலுவையிலிருந்து, அவரைக் கொன்ற கொலையாளிகளுக்காக அவர் ஏறெடுத்த ஜெபமும். மரித்துக் கொண்டிருந்த கள்ளனுக்கு அவர் கொடுத்த நம்பிக்கையின் தூதும், காலங்கள் நெடுகிலும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. (84)

பிதாவின் பிரசன்னம் கிறிஸ்துவைச்சுற்றிலும் வளையமிட்டிருந்தது. அந்த எல்லையற்ற அன்பு இந்த உலகத்தின் ஆசீர்வாதத்திற்காக அனுமதித்திருந்ததைத்தவிர வேறுஎதுவும் அவருக்கு நேரிடவில்லை! இங்குதான் அவரது ஆறுதலின் ஊற்று இருந்தது, அதுவே நமக்கானதாகவும் இருக்கிறது. கிறிஸ்துவின் ஆவியினால் நிறையப்பெற்றிருக்கிறவன்,

கிறிஸ்துவிலே நிலைத்திருக்கிறான். அவன்மீது குறிவைக்கப்படும் அடி, மீட்பரின்மீது விழுகிறது. மீட்பர் அவனைச் சுற்றிலும் தமது பிரசன்னத்தினால் நிறைக்கிறார். அவனுக்கு என்னென்ன வந்தாலும் அது கிறிஸ்துவிடமிருந்தே வருகிறது. அவன் தீமையை எதிர்க்க அவசியமில்லை. ஏனெனில் கிறிஸ்துவே அவனது பாதுகாப்பாக இருக்கிறார். நமது ஆண்டவரின் அனுமதி இருந்தாலொழிய எதுவும் அவனைத் தொடமுடியாது. அனுமதிக்கப்பட்ட "சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" – ரோமர் 8:28. (85)

"உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டு மென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ" – மத்தேயு 5:40,41. (86)

அதிகாரத்திலுள்ளவர்களின் கோரிக்கைகளை எதிர்ப்பதற்குப் பதிலாக, அவர்கள் கேட்பதற்கும் அதிகமாகச் செய்யவேண்டுமென்று இயேசு தமது சீடர்களுக்குக் கூறினார். ஒவ்வொரு கடமையையும், அது நாட்டின் சட்டம் கோருவதற்கும் அதிகமாக இருந்தாலும் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவு செய்யவேண்டும். மோசேயின்மூலமாகக் கொடுக்கப்பட்ட சட்டமானது, ஏழைகளிடத்தில் இரக்கத்தோடுகூடிய ஒரு அக்கறை காட்டப்படவேண்டுமென்று வற்புறுத்தியது. ஒரு ஏழைமனிதன் அவனுடைய ஆடையை அடகாகவோ அல்லது கடனுக்கான உத்தரவாதமாகவோ கொடுத்திருந்தால், கடன் கொடுத்தவன் அதை வாங்கும்படி ஏழையின் வீட்டிற்குள் நுழைவதற்கு அனுமதிகொடுக்கப்படவில்லை. அது அவனிடத்தில் கொண்டுவரப்படும்படி அவன் வீதியிலே காத்திருக்கவேண்டும். மேலும் என்ன சூழ்நிலை இருந்தாலும், இரவு வருவதற்குமுன் அது அவனிடம் திரும்பக் கொடுக்கப்படவேண்டும். (உபாகமம் 24:10–13). கிறிஸ்து இந்த உலகத்தில் மனிதனாக வாழ்ந்த காலத்தில் இத்தகைய இரக்கமுள்ள முன்னேற்பாடுகள் சிறிதளவுகூட மதிக்கப்படவில்லை. மோசேயினால் கொடுக்கப்பட்ட சட்டத்தின் அதிகாரத்திற்கும் அதிகமாக நீதிமன்றங்களினால் வற்புறுத்தப்பட்டாலுங்கூட, இத்தகைய நீதிமன்றங்களின் தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தமது சீடர்களுக்கு இயேசு போதித்தார். வற்புறுத்தப்படும் காரியமானது, அவர்களது உடையின் ஒரு பகுதியாக இருந்தாலுங்கூட அவர்கள் அதற்கும் இணங்கவேண்டும். இதற்கும் மேலாக கடன்கொடுத்தவனுக்கு, அவனுக்குச் சேரவேண்டியதைக் கொடுக்கவேண்டும். அவசியப்பட்டால், கையகப்படுத்த நீதிமன்றம் கொடுத்த அதிகாரத்திற்கும் மேலான அளவிற்கு ஒப்படைக்கவேண்டும். "உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும்

விட்டுவிடு" – மத்தேயு 5:40. மேலும் பயணத்துணை ஊழியர்கள் தங்களோடு ஒரு மைல்தூரம் செல்லவேண்டுமென்றால், அவர்களோடு இரண்டு மைல் தூரம்போ என்றும் அவர் கூறினார். (87)

மேலும் "உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே" (மத்தேயு 5:42) என்றார். இதே பாடமானது மோசேயினால்: "எளியவனாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும், உன் கையை மூடாமலும், அவனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறந்து, அவனுடைய அவசரத்தினிமித்தம் அவனுக்குத் தேவையானதைக் கடன்கொடுப்பாயாக" (உபாகமம் 15:7,8) என்று கூறப்பட்டது. இந்த வாக்கியமானது மீட்பரின் வார்த்தைகளின் பொருளைத் தெளிவாகக் காட்டுகிறது. தர்மம் கேட்கின்ற அனைவருக்கும் வரைமுறையின்றி கொடு என்று கிறிஸ்து நமக்குப் போதிக்கிறதில்லை. அவனுக்குத் தேவையானதைக் கடன்கொடுப்பாயாக. இவ்வாறு கொடுப்பதானது, கடனாக இல்லாமல் ஒரு ஈவாக இருக்கவேண்டும். ஏனெனில் நாம் கைம்மாறு கருதாமல் கடன் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். (லூக்கா 6:35). (88)

"தனது தருமத்தோடு சேர்த்து தன்னையும் கொடுப்பவன் மூன்று பேருக்குமாக, அதாவது அவனுக்கும், பசியாயிருக்கும் அவனது அண்டை வீட்டுக்காரனுக்கும், எனக்கும் (இயேசுவிற்கும்) உணவளிக்கிறான்." (89)

***"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்;" – மத்தேயு 5:44.***

"தீமைக்கு எதிர்த்து நிற்கவேண்டாமென்று" மீட்பர் கொடுத்த பாடம், பழிவாங்கும் எண்ணமுடைய யூதர்களுக்கு ஒரு கடினமான சொல்லாக இருந்தது. அவர்கள் அதற்கு எதிராக முறுமுறுத்தார்கள். ஆனால் இப்பொழுதோ பலத்த அறிவிப்பு ஒன்றை இயேசு வெளியிட்டார். (90)

"உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதி

னால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப் பீர்கள்;" – மத்தேயு 5:43–45. (91)

இரக்கமற்றதாகவும், கடினமான கட்டாயமானதொன்றாகவும் ரபிமார்களால் தவறாகச் சித்தரிக்கப்பட்ட பிரமாணத்தின் பொருள், இப்படிப்பட்டதாயிருந்தது. மற்ற மனிதரைவிட தாங்கள் மேலானவர்களென்றும், இஸ்ரவேலனாகப் பிறந்ததின் புண்ணியத்தினால் தேவனின் சிறப்பான சலுகைகளுக்கு தகுதியுடையவர்கள் என்றும் தங்களைத் தாங்களே மதிப்பட்டுக்கொண்டார்கள். இஸ்ரவேலர்கள் தங்களால் இகழப்பட்ட ஆயக்காரர்களையும் பாவிகளையும்விட மேலான ஏதாவது உயர்ந்த நோக்கங்களால் உந்தப்பட்டவர்கள் என்பதற்கு ஆதாரமாக, மன்னிக்கும் அன்பின் குணத்தைத்தான் இயேசு அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். (92)

இயேசு, அண்டசராசரத்தின் அரசரை, "எங்கள் பிதாவே" என்ற ஒரு புதிய பெயருக்கடியில் தமது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருப்பவர் களுக்குச் சுட்டிக்காட்டினார். எவ்வளவு கனிவோடு தேவனின் இருதயம் அவர்களையெண்ணி ஏங்குகிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினார். ஒவ்வொரு மனந்திரும்பாத ஆத்துமாவைக் குறித்தும் தேவன் அக்கறையுடையவராக இருக்கிறார் என்பதை "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்" (சங். 103:13) என்னும் வார்த்தைகளில் போதிக்கிறார். வேதாகம மார்க்கத்தைத்தவிர வேறு எந்த மார்க்கமும் தேவனைப்பற்றிய இத்தகைய கருத்தை ஒருபோதும் இந்த உலகத்திற்கு கொடுத்ததில்லை. உயர்வான தெய்வத்தை அன்பிற்குரியவரென்று பார்க்காமல் ஏதோ பயத்திற்குரியவராகவும், தமது பிள்ளைகள்மீது தம் அன்பினை ஈவாகப் பொழிகின்ற ஒரு தகப்பனாகப் பார்ப்பதற்குப்பதிலாக பலிகளால் திருப்திப்படுத்தப்படவேண்டிய ஒரு மோசமானத் தெய்வமாகவும் பார்ப்பதற்கு அஞ்ஞானமதம் கற்றுக்கொடுக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள்கூட "இப்படிப்பட்ட தந்தையின் அன்பின் வெளிப்பாடானது தொடக்ககால பொருட்பாடத்தின்படியே பூலோகத்தின் புதிய ஈவாக இருக்கிறது" என்ற, தேவனைக் குறித்ததான, தீர்க்கதரிசிகளின் மேன்மையான உபதேசத்தைக் காணக்கூடாதபடிக்கு குருடாகி இருந்தனர். (93)

தேவன் தம்மைச் சேவிக்கிறவர்களையே நேசிக்கிறார் என்று யூதர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். அதாவது, அவர்களுடைய கருத்தின்படி போதகர்களுக்குரிய கோரிக்கைகளை யார் நிறைவேற்றுகிறார்களோ அவர்களைத்தான் தேவன் நேசிக்கிறார் என்றும், மற்றபடி மீந்திருக்கும்

அனைவரும் அவருடைய கோபத்திற்கும் சாபத்திற்கும் உட்பட்டவர்களென்றும் எண்ணினர். இயேசு அவர்களை நோக்கி, அப்படியல்ல, இந்த உலகம் முழுவதிலுமுள்ள நல்லவர்களும் தீயவர்களும் அவருடைய இதமான அன்பிற்கடியிலிருக்கிறார்கள் என்றார். இந்த உண்மையை இயற்கையினின்று நீங்கள் கற்றுக்கொண்டிருக்கவேண்டும் என்று “அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்” (மத்தேயு 5:45) என்ற வார்த்தைகளினால் எடுத்துக்கூறினார். (94)

பூமி தனக்கே இயல்பான உள்ளார்ந்த சக்தியினால் தனது வளங்களை வாரிக்கொடுத்து, ஒவ்வொரு ஆண்டும் சூரியனைச் சுற்றிவந்து கொண்டிருக்கவில்லை. இந்தக் கோள்களை அவைகளுக்குரிய இடங்களில் வைத்து, வானங்களிலே ஒழுங்காக அணிவகுத்துச் செல்ல தேவனின் கரம் நடத்துகிறது. அவருடைய வல்லமையின்மூலமாக கோடையும் குளிர் காலமும், விதைப்புக்காலமும் அறுப்புக்காலமும், பகலும் இரவும் ஒழுங்காக ஒன்றன்பின் ஒன்றாகப் பின்தொடருகின்றன. அவருடைய வாத்தையினாலே தாவரங்கள் செழித்து வளருகின்றன. பூக்கள் மலருகின்றன. நாம் பெற்றிருக்கும் ஒவ்வொரு நல்ல காரியமும், சூரியனின் ஒவ்வொரு ஒளிக்கதிரும், பெய்கின்ற மழையும், கவளச் சோறும், வாழ்வின் ஒவ்வொரு கணமும் அவரது அன்பின் ஒரு நன்கொடையாகவே இருக்கிறது. (95)

நாம் அன்பற்றவர்களாகவும் இனிமையற்ற குணமுடையவர்களாகவும் “வெறுப்பு நிறைந்தவர்களாகவும் மற்றவர்களை வெறுப்பவர்களாகவும்” இருக்கும்போதே, நமது பரலோகப் பரம பிதா நம்மீது இரக்கங்கொண்டிருந்தார். “நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, ... நம்மை இரட்சித்தார்” – தீத்து 3:3–5. பெற்றுக்கொள்ளப்பட்ட அவரது அன்பு நம்மையும், அவ்வாறே நம்மை பிரியப்படுத்துகிறவர்களையும் மாத்திரமல்ல, மிக மோசமான குற்றமிழைத்தவர், தவறிழைத்தவர், மற்றும் பாவியினிடங்கூட இரக்கத்தோடும் மென்மையோடும் நடந்துகொள்ளத்தக்கதாக நம்மை மாற்றும். (96)

அவருடைய தன்மைக்கு பங்காளிகளாக இருப்பவர்களே தேவனுடைய பிள்ளைகளாவார்கள். இந்த பூமிக்கான அந்தஸ்து, பிறப்பு, நம்முடைய நாடு, மார்க்க சம்பந்தமாக நாம் அனுபவிக்கும் சலுகைகள் போன்றவை நாம் தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நிரூபிக்காது. அன்பு மாத்திரமே அதை நிரூபிக்கமுடியும். அதாவது மானுடர் அனைத்தையும்

## பிரமாணத்தின் ஆவிக்குரிய தன்மை!

அணைத்துக்கொள்ளும் அன்பே, நம்மை தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாக மாற்றுகிறது. தேவனுடைய ஆவியானவருக்குத் தங்களுடைய இருதயங்களை முற்றிலும் அடைத்துக்கொள்ளாத பாவிகளுங்கூட அன்பிற்கு இணங்கிவருவார்கள். வெறுப்பிற்கு அவர்கள் வெறுப்பையும், அன்பிற்கு அவர்கள் அன்பையும் காட்டுவார்கள். ஆனால் தேவனுடைய ஆவியானவர் மாத்திரமே வெறுப்பிற்குப்பதிலாக அன்பைக் கொடுப்பார். நன்றியற்றவர்களிடத்திலும் தீயவர்களிடத்திலும் அன்பாக இருப்பதும், எதையும் எதிர்பார்க்காமல் நன்மை செய்வதும், பரலோக இராஜரிக குடும்பத்தின் சிறப்புரிமைச் சின்னமாகும். இந்தக் காரியங்கள் உன்னதமானவரின் பிள்ளைகளென்று தங்களுடைய உயர்ந்த நிலையை வெளிப்படுத்துகின்றவர்களின் உண்மையான அடையாளமாகும். (97)

***“ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்” – மத்தேயு 5:48.*** (98)

“ஆகையால்” – இந்த வார்த்தையானது, இதுவரை என்ன கூறப்பட்டது என்பதைப்பற்றிய ஒரு அனுமானத்தை, ஒரு முடிவை குறிப்பாகக் காட்டுகிறது. இயேசு தமது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு, தேவனுடைய குன்றிப்போகாத அன்பையும் இரக்கத்தையுங்குறித்து விவரித்துக்கொண்டிருந்தார். ஆகையால், அவர்கள் பூரணர்களாக இருக்க வேண்டுமென்று கேட்கிறார். ஏனெனில் உங்களது பரலோக பரம பிதா, “நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே” (லூக். 6:35) என்றார். ஆகையால் அவர்களை நோக்கி: உங்களை உயர்த்துவதற் காக அவர் தம்மைத் தாழ்த்தினதாலே, அவரைப்போன்ற குணத்தையுடைய வர்களாக நீங்கள் மாறிடவும், மனிதர்களுக்கும் தூதர்களுக்கும்முன்பாகப் பிழையற்றவர்களாக காணப்படவும் வேண்டுமென்று கூறினார். (99)

கிருபையின்கீழ் நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகள் ஏதேனில் எவையாக இருந்தனவோ, அவ்வாறே உள்ளன. அவை, பூரண நீதி, தேவனோடு இசைந்திருத்தல், அவரது பிரமாணத்தின் கட்டளைகளுக்குப் பூரணமாக ஒத்துப்போதல் என்பவையே ஆகும். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருந்த தரமானது புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டத் தரமே ஆகும். இந்தத் தரமானது நாம் அடையக்கூடாத ஒன்றல்ல. தேவன் கொடுக்கிற ஒவ்வொரு கற்பனையிலும் அல்லது தடை ஆணையிலும் நேர்மறையான ஒரு வாக்குத்தத்தம் அதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. நாம் அவரைப்போலவே ஆகவேண்டுமென்று பூர்வ

ஏற்பாடு ஒன்றைச் செய்திருக்கிறார். தவறான சித்தங்கொண்டு, குறுக்கிட்டு, அவரது கிருபைக்கெதிராகச் செயலாற்றாதிருக்கும் அனைவருக்கும் இதை (அவருடைய சாயலைப் பெற்றுக்கொள்வதை) நிறைவேற்றி வைப்பார். (100)

சொல்லிமுடியாத அன்பினால் நமது தேவன் நம்மை நேசித்திருக்கிறார். அறிவிற்கெட்டாத இந்த அன்பின் நீளத்தையும் அகலத்தையும் ஆழத்தையும் உயரத்தையும்பற்றி ஓரளவு புரிந்துகொள்ளும்போது, அவரை நோக்கி நமது அன்பு வெளிப்படுகிறது. கிறிஸ்துவின் இனிமையான பண்பின் கவர்ச்சிகுறித்த வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டதினாலும், பாவிகளாக இருக்கும்போதே நம்மீது அவர் எவ்வளவு அன்புகூர்ந்தார் என்பதைப்பற்றிய அறிவு கிடைத்ததினாலும், பிடிவாதமான இருதயமானது உருக்கப்பட்டு கீழ்ப்படுத்தப்படுகிறது. பாவியின் குணம்மாறி, அவன் பரலோகத்தின் பிள்ளையாக மாறுகிறான். தேவன் வலுக்கட்டாயமான நடவடிக்கைகளைக் கையாளுகிறதில்லை. இருதயத்தின் பாவத்தை வெளியேற்றுகிறதற்காக, அன்பு என்னும் பிரதிநிதியையே பயன்படுத்துகிறார். அன்பின்மூலமாக, பெருமையான குணத்தைத் தாழ்மையானதாகவும், பகையை அன்பாகவும், அவிசுவாசத்தை விசுவாசமாகவும் மாற்றுகிறார். (101)

யூதர்கள், தங்களது சொந்த முயற்சியினால், பரிபூரண நிலையை அடையத்தக்கதாக களைப்புடன் கடுமையாக உழைத்தும் அதிலே தோற்றுப்போனார்கள். அவர்களுடைய நீதியினால் பரலோக இராஜ்யத்திற்குள் ஒருபோதும் பிரவேசிக்கமுடியாதென்று கிறிஸ்து ஏற்கெனவே அவர்களுக்குக் கூறியிருந்தார். பரலோகத்திற்குள் பிரவேசிக்க எண்ணுபவர்களுக்கு இருக்கவேண்டிய நீதியின் குணநலன்களைப்பற்றி இப்பொழுது அவர் சுட்டிக்காட்டுகிறார். மலைப்பிரசங்கத்தின் நெடுகிலும், நீதியின் கனிகளைப்பற்றி விவரிக்கிறார். இப்பொழுது ஒரே வாக்கியத்தில் அதன் ஆதாரத்தையும் இயல்பையும் கூட்டிக்காட்டுகின்றார். தேவன் பூரண சற்குணராக இருக்கிறதுபோல, (நீங்களும்) பூரண சற்குணராக இருங்கள். பிரமாணமானது தேவனுடைய குணத்தை, அதின் எழுத்தின்படியே , அப்படியே, இருக்கிறவண்ணமாகவே எடுத்துக் காட்டுகிறது. உங்களது பரலோகப்பிதாவின் ஆளுகையின் அஸ்திவாரத்திலே அவரது கொள்கையின் ஒரு பூரண வெளிப்பாட்டை நோக்கிப்பாருங்கள். தேவன் அன்பாக இருக்கிறார்; சூரியனிடமிருந்து ஒளிக்கதிர்கள் வருவதுபோன்று அன்பும் வெளிச்சமும் மகிழ்ச்சியும் அவரிடமிருந்து அவரது அனைத்து சிருஷ்டிகளிடத்திற்கும் பாய்ந்தோடுகின்றன. கொடுப்பதே அவரது இயல்பாக இருக்கிறது; அவரது ஜீவியத்தில் தன்னலமற்ற அன்பு வழிந்தோடுகிறது. (102)

## பிரமாணத்தின் ஆவிக்குரிய தன்மை!

"அவரது பிள்ளைகளின் நன்மையே, அவரது மகிமை;
அவரது மகிழ்ச்சி; தந்தை எனும் ஸ்தானம்" (103)

அவரைப்போலவே நாமும் அதேமாதிரியான தன்மையில் பூரணராயிருக்கவேண்டுமென்று அவர் கூறுகின்றார். பிரபஞ்சத்திற்கு எப்படி அவர் ஒளியின் ஆசீர்வாதத்தின் மையமாக இருக்கின்றாரோ, அதேபோன்று, வாழும் சிறிய வட்டத்திற்குள் நாமும் ஒளியின் ஆசீர்வாதத்தின் மையங்களாக இருக்கவேண்டும். நம்மில்நாமே ஒன்றுமில்லாதவர்களாயிருக்கின்றோம். ஆனால் அவரது அன்பின் ஒளியானது நம்மீது பிரகாசிக்கின்றது. நாம் அதின் பிரகாசத்தைப் பிரதிபலிக்கின்றவர்களாயிருக்கவேண்டும். "அவர் அவருடைய நிலையில் பூரண சற்குணராக இருப்பதுபோல, நாமும் நாம் வாழும் உலகத்தில் பூரண சற்குணராக இருக்கலாம். (104)

"உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்று இயேசு கூறினார். நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பீர்களானால், அவருடைய தன்மைக்குப் பங்காளிகளாக இருக்கிறீர்கள். எனவே, அவரைப்போல நீங்களும் இருந்தாகவேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தன் தகப்பனிடமிருந்து பெற்ற ஜீவனால் உயிர்வாழ்கின்றது. நீங்கள் அவரது ஆவியினால் ஈன்றெடுக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளாயிருப்பீர்களானால், தேவனுடைய ஜீவனால் நீங்கள் வாழ்கின்றீர்கள். கிறிஸ்துவிலே, "தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" – கொலோசெயர் 2:9; இயேசுவின் ஜீவியம் "சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே" (2 கொரிந்தியர் 4:11) தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. உங்களிலிருக்கும் அந்த ஜீவனானது அதே குணலட்சணத்தை உருவாக்கி, அவரிலே என்ன கிரியைகளைச் செய்ததோ அதே கிரியைகளை உங்களிலேயும் வெளிப்படுத்தும். இவ்வாறு, அவரது பிரமாணத்தின் ஒவ்வொரு கட்டளையோடும் நீங்கள் இசைந்திருப்பீர்கள். ஏனெனில் "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது" – சங்கீதம் 19:7. அன்பினாலே, "நியாயப்பிரமாணத்தின் நீதியானது" நம்மில் நிறைவேறும். நாம், "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிறவர்களாயிருப்போம்" – ரோமர் 8:4. (105) ★

# 4

# சேவையின் உண்மையான நோக்கம்!

***"மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை" – மத்தேயு 6:1.*** (1)

மலையில் கூறப்பட்ட கிறிஸ்துவின் வார்த்தைகள், பேசப்படாத, மக்கள் புரிந்துகொள்ளத்தவறின அவரது வாழ்க்கைப் போதனைகளின் வெளிப்பாடேயாகும். இத்தகைய மாபெரும் வல்லமையை வைத்துக் கொண்டிருக்கும் இவர், தாங்கள் மிக முக்கிய நன்மையென்று கருதுகிறதை அடைவதற்கு அதைப் பயன்படுத்த மறுத்ததை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களது குணமும் நோக்கங்களும் வழிமுறைகளும் அவருடைய காரியங்களுக்கு எதிராகவே இருந்தன. பிரமாணத்தின் மேன்மைக்காக அதிக வைராக்கியமுடையவர்கள்போல சொல்லிக்கொண்ட போதும் அவர்கள் தேடிக்கொண்டிருந்த உண்மையான இலக்கு சுயத்தை மகிமைப்படுத்துவதாகவே இருந்தது. எனவே, சுயத்தை நேசிப்பவர் பிரமாணத்தை மீறுகிறவராயிருக்கிறார் என்பதை கிறிஸ்து அவர்களுக்கு வெளிப்படுத்துவார். (2)

பரிசேயரால் மனதார நேசிக்கப்பட்ட கொள்கைகள்தான், காலங்கள் நெடுகிலும் மனித இனத்தின் குணங்களாக இருந்தன. பரிசேயத்துவத்தின் ஆவிதான் மனித இயல்பின் ஆவியாகும். நம் மீட்பர் தமது ஆவிக்கும் வழிமுறைகளுக்கும், ரபிமார்களுடைய ஆவிக்கும் வழிமுறைகளுக்குமுள்ள முரண்பாட்டை எடுத்துக்காட்டியது, எக்காலத்து மக்களுக்கும் பொருந்துகிற போதனையாகும். (3)

உண்மையின் பலன் என்று தாங்கள் வெகுவாக மதித்த இவ்வுலக மேன்மையையும், வாழ்வின் வளங்களையும் பெற்றுக்கொள்வதற்கேதுவாக

பரலோகத்தின் பிரியத்தை சம்பாதிக்க கிறிஸ்துவின் நாட்களிலே வாழ்ந்த பரிசேயர்கள் தொடர்ந்து முயன்றுகொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் மக்களின் கவனத்தை ஈர்க்கவும், தங்களது பரிசுத்தம்பற்றின நற்பெயரைப் பெற்றுக்கொள்ளவும் மக்கள் முன்னிலையில் தங்களது தர்மச் செயல்களைப் பகட்டாக விளம்பரப்படுத்தினார்கள். (4)

தேவன் இத்தகைய சேவையை அங்கீகரிக்கிறதில்லையென்றும், அவர்கள் மிகவும் ஆர்வத்துடன் நாடுகின்ற மக்களின் பாராட்டுகளும் முகஸ்துதிகளுமே அவர்கள் பெற்றுக்கொள்ளும் ஒரே வெகுமதி என்றும் உறுதியாகக் கூறி, பிறரின் கவனத்தைக் கவர்வதற்காக அவர்கள் செய்திட்ட முயற்சிகளை இயேசு கடிந்துரைத்தார். (5)

“நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாதாமே உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்” (மத். 6:3,4) என்று அவர் கூறினார். (6)

இந்த வார்த்தைகளினாலே அன்பின் நற்செயல்கள் எப்பொழுதும் இரகசியமாகவே வைக்கப்படவேண்டுமென்று இயேசு போதிக்கவில்லை. பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதிய அப்போஸ்தலனாகிய பவுல், மக்கதோனிய கிறிஸ்தவர்களின் தாராளமான தற்தியாகத்தை மூடிமறைக்காமல், கிறிஸ்து அவர்களிலே உருவாக்கிய கிருபையைக்குறித்துக் கூறினார். இவ்வாறாக, மற்றவர்களும் அதே ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். மேலும், கொரிந்திய சபைக்கு எழுதியபோது: “உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பிவிட்டதுமுண்டு” (2 கொரிந்தியர் 9:2) என்று எழுதினார். (7)

தர்மச் செயல்களைச் செய்வதின் நோக்கம் மனிதர்களிடமிருந்து மதிப்பையும் புகழ்ச்சியையும் பெறுவதாக இருக்கக்கூடாது என்று கிறிஸ்து தமது வார்த்தைகளாலேயே அதன் பொருளைத் தெளிவாக்குகின்றார். உண்மையான தெய்வீகக்குணம் முயற்சியை வெளியரங்கமாக்க ஒருபோதும் தூண்டாது. புகழ்ச்சியையும் முகஸ்துதியையும் வாஞ்சித்து, அவைகளை ஒரு இனிப்பான ஒரு கவளம்போன்று உண்பவர்கள், பெயரில்மாத்திரமே கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். (8)

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தங்களது நற்கிரியைகளினால் தங்களுக்கு அல்ல, யாருடைய கிருபையினாலும் வல்லமையினாலும் அந்த நற்செயல்களைச் செய்தார்களோ, அவருக்கே மகிமையைக் கொண்டுவர

வேண்டும். பரிசுத்த ஆவியானவரின்மூலமாகவே ஒவ்வொரு நற்செயலும் நிறைவேற்றப்படுகிறது. பெற்றுக்கொள்பவரை அல்ல, கொடுப்பவரை மகிமைப்படுத்துவதற்காகவே ஆவியானவர் கொடுக்கப்படுகிறார். கிறிஸ்துவின் ஒளி ஆத்துமாவில் பிரகாசித்துக்கொண்டிருக்கும்போது, உதடுகள் தேவனுக்குச் செலுத்தும் துதியாலும் நன்றிப்பெருக்கினாலும் நிறைந்திருக்கும். உங்களது விண்ணப்பங்களும், நீங்கள் நிறைவேற்றிய கடமைகளும், உங்களது இரக்கமனப்பான்மையும், உங்களது சுயமறுப்பும் உங்களது சிந்தைக்கான அல்லது உரையாடலுக்கான பொருளாக இருக்காது. இயேசு மகிமைப்படுத்தப்பட்டு, சுயம் மறைக்கப்படும்; கிறிஸ்து எல்லாவற்றிலும் எல்லாமுமாகக் காணப்படுவார். (9)

நாம் உத்தமமாக உதவிசெய்யவேண்டும். நமது நற்செயல்களை விளம்பரப்படுத்துவதற்காக அல்ல; மாறாக துன்பப்படுகிறவர்கள்மேல் இருக்கும் அன்பினாலும் பரிவினாலும் செய்யவேண்டும். நோக்கத்தில் நேர்மையும், இருதயத்தில் உண்டாகும் மெய்யான இரக்கமுமே பரலோகத்தால் மதிக்கப்படும் சிறந்த உள்ளெண்ணமாகும். தனது அன்பிலே உண்மையாயிருந்து, முழு இருதயத்தோடும் அர்ப்பணிக்கிற ஆத்துமாவை ஓப்பீரின் தங்கப்பாளத்தைவிடவும் மிகவும் அருமையானதாக தேவன் மதிப்பிடுகின்றார். (10)

வெகுமதியைப்பற்றியல்ல, சேவையைப்பற்றியே நாம் நினைக்க வேண்டும். எனினும் இத்தகைய தன்மையோடு காட்டப்பட்ட இரக்கம் அதற்கான பலனைப் பெற்றுக்கொள்ளத் தவறுவதில்லை. “அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாதாமே உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்” —மத்தேயு 6:4. மற்ற அனைத்துப் பலன்களையும் உள்ளடக்குகிற தேவன்தாமே மாபெரும் வெகுமதியாக இருக்கிறார் என்பது உண்மையாயிருந்தாலும், ஆத்துமா பண்பிலே அவரோடு ஒன்றுபடும்போதுதான் அவரைப் பெற்று மகிழ்கிறது. ஒரு காரியத்தை, அதையொத்த காரியமே உணர்ந்து பாராட்ட முடியும். மனிதஇனத்தின் சேவைக்காக நாம் நம்மை தேவனுக்கு தத்தஞ்செய்யும்போது, அவர் தம்மை நமக்களிக்கிறார். (11)

ஒரு சிறந்த வெகுமதியை தன்னிலே பெற்றுக்கொள்ளாமல் ஒருவனும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் ஊற்று மற்றவர்களுக்குப் பாய்ந்தோடும்படியாக தன் இருதயத்தில் இடங்கொடுக்கமுடியாது. மலையின் சிற்றருவிகள் கடலைச் சென்றடைவதற்காக வாய்க்கால் அமைத்துக்கொடுக்கின்ற சமவெளிகளும் மலைப்பகுதிகளும் அதினால் எந்த நஷ்டத்தையும் அடைவதில்லை. அவைகள் கொடுப்பதை நூறு மடங்காகப் பெற்றுக்கொள்கின்றன.

எப்படியெனில் சலசலப்புடன் தன் வழியே ஓடிக்கொண்டிருக்கும் சிற்றாறு பசுமையையும் செழிப்பையும் நன்கொடையாக விட்டுச்செல்கின்றது. சிற்றாறுகளின் கரைகளில் காணப்படும் புல் புதுமலர்ச்சியுடன் பச்சைப்பசேல் என்றும், மரங்கள் சிறந்த பசுமையுடனும், மலர்கள் மிக ஏராளமாகவும் காணப்படுகின்றன. கோடையின் வாட்டிஉலர்த்தும் வெயிலுக்கடியில் காக்கி நிறத்தில் வெறுமையாகக் காட்சியளிக்கும் பூமியில், அந்த ஆறு ஓடும் பாதையெல்லாம் பசுமையினைக் காணலாம். மலையின் பொக்கிஷம் கடலைச் சென்றடையும்படி தன் மடியைத் திறந்த சமவெளி புத்துணர்ச்சி நிறைந்த அழகினால் மூடப்பட்டிருப்பது, தேவனுடைய கிருபை உலகத்திற்குப் பாய்ந்தோடுவதற்கேதுவாகத் தங்களை ஒரு வாய்க்காலாக ஒப்புக்கொடுக்கிற அனைவருக்கும் கொடுக்கப்படும் பலனுக்கு ஒரு சாட்சியாயிருக்கிறது. (12)

இதுவே ஏழைகளுக்கு இரக்கங்காட்டுபவர்கள் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதமாகும். ஏசாயா தீர்க்கன்: "பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, ... கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்" (ஏசாயா 58:7–11) என்று கூறுகிறார். (13)

அன்பினால் செய்யப்படும் நற்செயல் இருமுறை ஆசீர்வதிக்கப் படுகிறது. தேவையில் இருக்கிறவர்களுக்கு கொடுக்கும் போது மற்றவர்களை ஆசீர்வதிக்கிற அவர்தாமே இன்னும் அதிகமாக ஆசீர்வதிக்கப்படுகிறார். ஆத்துமாவில் இருக்கும் கிறிஸ்துவின் கிருபை தன்னலத்திற்கு எதிரான, நயப்படுத்தி, மேம்படுத்தி, வாழ்வை வளமுறச் செய்கின்ற குணங்களை வளரச்செய்கின்றது. அந்தரங்கத்தில் செய்யப்படும் இரக்கத்தின் செயல்கள் இருதயங்களை இணைத்துக்கட்டி, தாராளமான ஒவ்வொரு உணர்வுக்கும் ஊற்றானவருடைய இருதயத்திற்கு மிகநெருக்கமாக அவர்களை இழுத்து அணைத்துக்கொள்ளும். ஒரு மலரின் மணத்தைப் போன்று வாழ்க்கையிலிருந்து அமைதியாக வெளிப்படும் அக்கறையோடுகூடிய சின்னஞ்சிறு கவனிப்புகளும், அன்பின் சிறிய நற்செயல்களும், தற்தியாகமும், வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கும் ஆசீர்வாதங்களுக்கும் ஆற்றும் பங்கு கொஞ்சமல்ல. மற்றவர்களின் மகிழ்ச்சிக்காகவும் நன்மைக்காகவும் செய்யப்பட்ட சுயமறுப்பு, எவ்வளவு

தாழ்மையானதும் இவ்வுலகத்தில் பாராட்டப்படாததுமாயிருந்தாலும், ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நமதுநிமித்தம் தரித்திரரான மகிமையின் இராஜாவோடு நாம் கொண்ட ஐக்கியத்தின் அடையாளமாக பரலோகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்பது இறுதியிலே கண்டறியப்படும். (14)

இரக்கத்தின் செயல்கள் இரகசியமாக செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் அவைகளைச் செய்தவர்களுடைய குணத்தில் ஏற்படும் நற்பயன்களை மறைத்துவைக்க முடியாது. கிறிஸ்துவின் பின்னடியார்களாக முழுமனதோடு கூடிய ஆர்வத்துடன் நாம் ஊழியஞ்செய்தால், இருதயம் தேவனுடன் மிகவும் நெருக்கமான ஒருமைப்பாட்டுடனிருக்கும். நமது குணத்திலே தேவ ஆவியானவர் அசைவாடி, அந்தத் தெய்வீகத் தொடுதலின் பலனாக ஆத்துமாவின் பரிசுத்தமான இணங்குதல்களை வெளிப்படச்செய்வார். தங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்ட ஈவுகளை ஞானமாக விருத்திசெய்பவர்களுக்கு பெருக்கமான தாலந்துகளைக் கொடுக்கிற அவர், நேசரிடத்தில் விசுவாசம் வைக்கின்ற அவரது மக்களின் சேவையை ஏற்றுக்கொள்ள விருப்பத்துடனிருக்கிறார். இத்தகைய நேசரின் கிருபையினாலும் சக்தியினாலுமே அவர்களால் அனைத்தையும் செய்யமுடிந்தது. நற்கிரியைகளைச் செய்வதற்காக தங்களது சக்திகளைப் பயன்படுத்தி, கிறிஸ்தவ குணத்தின் விருத்திக்காகவும் முழு நிறைவிற்காகவும் நாடி முயற்சிசெய்கிறவர்கள், வரப்போகின்ற உலகத்திலே ஏற்கெனவே விதைத்ததை பலனாகப் பெற்றுக்கொள்வார்கள். அந்த உயர்ந்த, பரிசுத்தமான வாழ்க்கையிலே நித்தியகாலமாக நீடித்திருக்கத்தக்கதாக, இந்தப் பூமியில் துவங்கப்பட்ட வேலையானது அதின் முழு நிறைவைப்பெறும். (15)

***“அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம்” – மத்தேயு 6:5.*** (16)

பரிசேயர்கள், குறிப்பிட்ட மணிநேரங்களை ஜெபத்திற்காக வகுத்து வைத்திருந்தார்கள். அந்த நேரத்தில் எப்பொழுதும் நடந்ததைப்போல அவர்கள் வெளியில், ஒருவேளை தெருவிலோ அல்லது சந்தைவெளியிலே அல்லது விரைந்துசெல்லும் மக்கள் கூட்டத்தின் மத்தியிலோ, எங்கே இருந்தாலும், அங்கே நின்று, உரத்த சத்தத்தோடு தங்களது வழக்கமான ஜெபங்களைத் திரும்பத்திரும்பச் சொல்லி பயிற்சி செய்வார்கள். அத்தகையத் தொழுகை, சுயமகிமைக்காகமட்டுமே செய்யப்பட்டது. எனவே, அத்தகைய தொழுகையை இயேசு அதிகமாகக் கண்டனஞ்செய்தார். ஆயினும், அவர் இத்தகைய பொதுவான இடத்திலே நடைபெறும் ஜெபங்களைப் புறக்கணிக்கவில்லை. திரளான கூட்டத்தினருக்குமுன்பாக அவர்தாமே தமது சீடர்களுடன் ஜெபித்தார். ஆனால் அந்தரங்க ஜெபம் பொதுவான இடங்களில்

செய்யப்படக்கூடாதென்று அவர் கற்றுக்கொடுக்கிறார். பக்திக்குரிய அந்தரங்க வேளையில், அந்தரங்க வழிபாடு நடத்தப்படும் நேரத்தில், நமது ஜெபங்கள், ஜெபத்தைக் கேட்கின்ற தேவனின் காதுகளைச் சென்றடையவேண்டும். இத்தகைய விண்ணப்பங்களின் பாரத்தை அறியவேண்டுமென்ற ஆர்வமுள்ள மக்களுடைய காதுகளைச் சென்றடையக்கூடாது. (17)

“நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து” (மத்தேயு 6:6). அந்தரங்க ஜெபத்திற்காக ஒரு தனி இடத்தை வைத்திருங்கள். இயேசு தேவனோடு ஐக்கியங்கொள்வதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட சில இடங்களை வைத்திருந்தார். அதைப்போலவே நாமும் செய்யவேண்டும். நாம் தேவனோடு தனிமையிலிருக்கத்தக்கதாக ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அது எவ்வளவு எளிமையானதாகக் காணப்பட்டாலும், அடிக்கடி சென்று நாம் ஜெபிக்கவேண்டியது அவசியமாகும். (18)

“அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு” இயேசுவின் நாமத்தினாலே தேவனுடைய பிரசன்னத்தில் வருவதற்கு ஒரு சிறுகுழந்தை எப்படி நம்பிக்கை கொண்டிருக்குமோ அதைப்போன்ற நம்பிக்கையுடையவர்களாக வரலாம். எவரும் ஒரு மத்தியஸ்தரைப்போன்று செயல்படத் தேவையில்லை. இயேசுவின்மூலமாக, நம்மை அறிந்து நேசிக்கின்ற ஒருவரிடத்தில் நமது இருதயங்களைத் திறப்பதைப்போல தேவனிடத்தில் திறக்கலாம். (19)

ஒரு கண்ணும் காணாத, தேவனுடைய கண்கள்மட்டுமே காணக் கூடிய, ஒரு காதும் கேட்காத, அவரது காதுகள் மட்டுமே கேட்கக்கூடிய அந்த அந்தரங்க ஜெபிக்கும் இடத்திலே, நமது உள்ளத்தின் ஆழத்தில் மறைந்திருக்கும் விருப்பங்களையும் ஏக்கங்களையும் எல்லையற்ற பரிவு கொண்ட அந்த பரமப்பிதாவிடம் நாம் ஊற்றலாம். மேலும் சந்தடியின்றி அமைதி தவழும் ஆத்துமாவிலே, நமது இருதயங்களிலே, மானிடத் தேவையின் குரலுக்கு ஒருபோதும் விடையளிக்கத் தவறாத அந்தக்குரல் பேசும். (20)

“கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே” – யாக். 5:11. வழிதவறிப்போன நபரின் பாவ அறிக்கையைக் கேட்கவும், தங்கள் பாவத்திற்காக வருந்தும்போது அவர்களை ஏற்றுக்கொள்ளவும் அவர் சோர்ந்துபோகாமல் அன்புடன் காத்துக்கொண்டிருக்கிறார். எப்படி ஒரு அன்னை தான்மிகவும் அதிகமாக நேசிக்கும் குழந்தையிடமிருந்து அங்கீகாரத்தின் புன்னகைக்காகக் காத்திருக்கின்றாளோ, அதைப்போன்று

## சேவையின் உண்மையான நோக்கம்!

ஏதோ கொஞ்சம் நன்றியறிதலாவது நம்மிடம் இருந்து கிடைக்குமென்று அவர் விழிப்போடு காத்துக்கொண்டிருக்கிறார். எவ்வளவு அக்கறையோடும் இரக்கத்தோடும் நம்மீது அவரது இருதயம் ஏக்கமாயிருக்கிறதென்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். நமது உபத்திரவங்களை அவரது பரிவிற்கும், நமது துக்கங்களை அவரது அன்பிற்கும், நமது காயங்களை அவருடைய குணமாக்குதலுக்கும், நமது பெலவீனத்தை அவருடைய பெலத்திற்கும் நமது வெறுமையான நிலைமையை அவரது நிறைவிற்கும் எடுத்துச்செல்லவேண்டுமென்று அவர் நம்மை அழைக்கிறார். அவரிடத்தில் வந்த எவரும் ஒருபோதும் ஏமாற்றமடைந்ததில்லை. “அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை” – சங்கீதம் 34:5. (21)

அந்தரங்கத்தில் தேவனைத் தேடி, தங்களது தேவைகளைச் சொல்லி, உதவிக்காகக் கெஞ்சுபவர்கள் வீணாகக் கெஞ்சுவதில்லை. “அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாதாமே உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்” – மத். 6:4. அன்றாடம் கிறிஸ்துவை நமது தோழனாக வைத்திருக்கும்போது, காணக்கூடாத உலகின் வல்லமைகள் அனைத்தும் நம்மைச் சுற்றிலுமிருப்பதை நாம் உணரலாம். அவரை நோக்கிப் பார்ப்பதினால் அவரது சாயலுக்கு ஒத்திசைவாக நாம் மாறிடுவோம். அவரை நோக்கிப் பார்ப்பதினால் நாம் மாறுதலடைகின்றோம். குணம் பரலோக இராஜ்யத்திற்காக மென்மையாக்கப்பட்டு, நயப்படுத்தப்பட்டு மேன்மையுடைய தாக்கப்படுகிறது. ஆண்டவருக்கும் நமக்குமிடையே உள்ள தொடர்பு, தோழமை ஆகியவைகளினால் ஏற்படும் உண்மையான பலன் நமது பக்தியையும் தூய்மையையும் ஊக்கத்தையும் பெருகச்செய்வதேயாகும். ஜெபிக்கும்போது, அறிவுத்திறனில் வளர்ச்சியிருப்பதைக் காணலாம். ஒரு தெய்வீகக் கல்வியைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். இது உழைப்பும் ஆர்வமுமிகுந்த வாழ்க்கையில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. (22)

தினமும் ஊக்கமாக ஜெபித்து, உதவிக்காவும் ஆதரவிற்காகவும் வல்லமைக்காகவும் தேவனிடத்தில் திரும்பும் ஆத்துமா, பேரார்வமிக்க நாட்டமுடையதாகவும், சத்தியத்தையும் கடமையையும்பற்றினத் தெளிவான உய்த்துணர்ந்த கருத்துடையதாகவும், செயலிலே மிக உன்னத நோக்கங்களுடையதாகவும், நீதிக்காக நீதியைப் பெற்றுக்கொள்வதற்காக பசியோடும் தாகத்தோடும் தொடர்ந்து நாடுவதாகவுமிருக்கும். தேவனோடுள்ள ஐக்கியத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்துவதின்மூலமாக, மற்றவர்களோடு கொள்ளும் தொடர்புகளினால் நமது இருதயங்களை ஆளுகை செய்கின்ற வெளிச்சத்தையும் சமாதானத்தையும் அமைதியையும் மற்றவர்களுக்குப்

பரப்பமுடியும். தேவனிடம் ஜெபிப்பதினால் பெற்றுக்கொள்ளும் பலம், சிந்தனையிலும் பராமரிப்பிலும் மனதைப் பயிற்றுவிக்க எடுக்கும் விடாப்பிடியான முயற்சியோடு இணைந்து, ஒருவனை அவனுடைய அனுதின கடமைகளுக்கு ஆயத்தப்படுத்தி, எல்லா சூழ்நிலைகளிலும் அவனுடைய ஆத்துமாவை சமாதானமாக வைக்கிறது. (23)

நாம் தேவனண்டை நெருங்கிச் சேர்வோமானால், அவருக்காக பேசுவதற்கும் அவருடைய நாமத்தைப் புகழ்வதற்குங்கூட அவர் நமது வாயிலே வார்த்தையைப் போடுவார். தூதர்களின் பாடலிலிருந்து ஒரு இராகத்தையும், நமது பரலோகப் பிதாவிற்கு நன்றிசொல்வதையுங்கூட அவர் நமக்குக் கற்றுக்கொடுப்பார். வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் நமக்குள் வாசஞ்செய்கிற மீட்பரின் வெளிச்சமும் அன்பும் வெளிப்படுத்தப்படும். வெளியரங்கமாகக் காணப்படும் துன்பங்கள், தேவகுமாரனில் விசுவாசம் வைத்து நடத்தப்படும் வாழ்க்கையை நெருங்கமுடியாது. (24)

***“அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்” – மத்தேயு 6:7.*** (25)

தங்களது ஜெபங்களிலே பாவத்திற்கான பரிகாரஞ்செய்யும் ஒரு தகுதி இருக்கிறது என்று அஞ்ஞானிகள் கருதினார்கள். எனவே தங்களுடைய வேண்டுதல்கள் எவ்வளவு நீண்டதாக இருக்குமோ, அந்த அளவிற்கேற்ப தங்களுடைய தகுதியும் அதிகரிக்கிறதென்று எண்ணினார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த முயற்சிகளினால் பரிசுத்தமாகக் கூடுமானால் களிகூருவதற்கேற்ற ஏதோ ஒன்று அவர்களுக்கு இருக்கும். மேலும் தற்புகழ்ச்சி செய்வதற்கான அடித்தளமும் அதிலுண்டு. விண்ணப்பத்தைக்குறித்த இந்தக் கருத்து, சுயப்பரிகாரம் என்ற கொள்கையின் வெளிப்படையான செயலாக இருக்கிறது. இந்தக் கொள்கை, அனைத்துப் பொய்யான மார்க்கங்களின் அமைப்புகளுக்கும் அடிப்படையாக இருக்கிறது. ஜெபத்தைப்பற்றின இந்த அஞ்ஞானிகளின் கருத்தை பரிசேயர்கள் தங்களுடையதாக்கிக் கொண்டார்கள். நமது நாட்களிலுங்கூட கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்களிலுங்கூட, இந்தப் பழக்கம் ஒழிந்துபோக வில்லை. ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கும் அன்றாட பழக்கத்திலுள்ள சொற்றொடர்களைத் திரும்பத்திரும்பக் கூறும்போது, தேவனைப்பற்றிய அவசியத்தை இருதயம் உணருகிறதில்லை. அஞ்ஞானிகளின் வீண் “அலப்புதல்களுங்கூட” இதே இயல்பையே கொண்டிருக்கிறது. (26)

ஜெபம், பாவத்திற்கான பரிகாரமல்ல. ஜெபத்திற்கு தன்னில்தானே

எந்தவித சிறப்போ அல்லது புண்ணியமோ கிடையாது. நமது கட்டுப்பாட்டில் இருக்கும் சொல்நயம்வாய்ந்த வார்த்தைகளனைத்தும் ஒரு பரிசுத்தமான வாஞ்சைக்கு ஈடாக முடியாது. சொல்திறமிக்க ஆற்றல் நிறைந்த விண்ணப்பங்கள் இருதயத்தின் உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்தாவிட்டால், அவைகள் வீண் வார்த்தைகளே! இவ்வுலக நண்பனிடம் ஒரு சலுகையை வேண்டுவது போன்று, கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் ஆத்துமாவின் எளிய தேவைகளை வெளிப்படுத்துகிற உண்மையான இருதயத்திலிருந்து வரும் ஜெபமே விசுவாசத்தினால் செய்யப்படும் ஜெபமாகும். நமது சடங்காச்சார முறைமையின்படியான செயல்களை தேவன் விரும்புகிறதில்லை. மாறாக, பாவம் மற்றும் முழுப்பெலவீனத்தினால் அமுக்கப்பட்டு நொறுங்கின ஒரு இருதயத்தின் பேசப்படாத குரலானது எல்லா இரக்கங்களின் பிதாவினைச் சென்றடையும் வழியைக் கண்டடைகிறது. (27)

***“நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல ... இராதேயுங்கள்” – மத்தேயு 6:16.*** (28)

தேவனுடைய வார்த்தை கட்டளையிடுகின்ற உபவாசம், ஒரு ஒழுங்கு முறைக்கு உட்பட்ட உபவாசத்தைவிடவும் மேலானது. வெறுமனே உணவை மறுப்பதிலும், இரட்டு உடுத்திக்கொள்வதிலும், தலையின்மீது சாம்பலைத் தூவிக்கொள்வதிலும் அடங்கினதல்ல. பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு, உண்மையான துக்கத்தோடு உபவாசிக்கிறவன் அதை ஒருபோதும் வெளியரங்கமாகக் காட்டமாட்டான். (29)

ஆத்துமாவின் பாவத்திற்காக உடலைத் துன்பப்படுத்துவது அல்ல. மாறாக, பாவத்தின் கொடூரமான குணத்தை உணர்ந்து, இருதயத்தை தேவனுக்குமுன்பாகத் தாழ்த்தி, அவருடைய மன்னிக்கும் கிருபையை பெற்றுக்கொள்ள உதவும் உபவாசமே நாம் அனுசரிக்கவேண்டுமென்று ஆண்டவர் அழைப்புக்கொடுக்கும் அந்த உபவாசத்தின் நோக்கமாகும். “நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்” (யோவேல் 2:13) என்பதே இஸ்ரவேலுக்கு அவர் கொடுத்த கட்டளை. (30)

தவம் செய்வதினாலோ அல்லது எங்களுடைய சொந்தக் கிரியைகளினாலே பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தை சம்பாதித்துவிடுவோம் என்று பெருமையாகப் பேசுவதினாலோ நமக்கு எந்தவிதமான பயனும் கிடைக்காது. “தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்யவேண்டும்” என்ற கேள்வி கிறிஸ்துவிடம் கேட்கப்பட்டபோது,

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

"அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையா யிருக்கிறது" (யோவான் 6:28,29) என்று அவர் பதிலளித்தார். சுயத்தைவிட்டு கிறிஸ்துவிடத்திற்குத் திரும்புவதே மனந்திரும்புவதாகும். விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்து தம் வாழ்க்கையை நம்மிலே வாழும்படி, நாம் அவரை ஏற்றுக்கொள்ளும்போது, நற்கிரியைகள் நம்மிலே வெளிப்படும். (31)

உபவாசத்தைப்பற்றி இயேசு: "நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு" (மத்தேயு 6:17,18) என்று கூறினார். தேவனுடைய மகிமைக்காக என்னவெல்லாம் செய்யப்படுகிறதோ, அவையனைத்தும் மனமகிழ்வோடு செய்யப்படவேண்டும். துக்கத்தோடும் முகவாடலோடுமல்ல. இயேசுவின் மார்க்கத்திலே முகவாட்டத்திற்குரியது என்று எதுவுமே இல்லை. கிறிஸ்தவர்கள் தங்களது ஆண்டவரிலே ஏமாந்துவிட்டதைப்போன்ற துயர் மிகுந்த தோற்றத்தைக் காட்டுவார்களானால், அவருடைய குணத்தைத் தவறாக எடுத்துக்காட்டி, அவரது சத்துருக்களின் வாயிலே அதை ஒரு விவாதத்திற்குரிய பொருளாக்குகிறார்கள். தேவனைத் தங்களுடைய பிதா என்று வார்த்தைகளால் உரிமைகோரிக்கொண்டாலும், இருண்ட மனநிலை யாலும் துக்கத்தாலும் தங்களை அனாதைகள்போன்று உலகத்திற்கு காண்பிக்கிறார்கள். (32)

நாம் கிறிஸ்துவின் சேவையை கவர்ச்சியுடையதாக ஆக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். அது உண்மையிலேயே அப்படித்தான் இருக்கிறது. நம்முடைய சுயமறுப்புகளும், அந்தரங்கத்தில் இருதயம் அனுபவிக்கும் வேதனைகளும் பரிவுமிகுந்த மீட்பரிடம் வெளிப்படுத்தப்படட்டும். சுமைகள் அனைத்தும் சிலுவையின் அடியில் வைக்கப்படட்டும். உன்னை முதலாவதாக நேசித்த அவரது அன்பிலே மகிழ்ந்து, தொடர்ந்து உன் வழியிலே செல். ஆத்துமாவிற்கும் தேவனுக்குமிடையே இரகசியமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயலினை மனிதர் ஒருபோதும் அறியமாட்டார்கள். ஆனால் இருதயத்திலே ஆவியானவர் செய்யும் வேலையின் விளைவு அனைவருக்கும் வெளிப்படும். "அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாதாமே உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்" – மத்தேயு 6:4. (33)

***"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்" – மத்தேயு 6:19.*** (34)

பூமியிலே சேர்த்துவைக்கப்படும் பொக்கிஷம் நிலைத்து நிற்காது.

திருடர்கள் கன்னமிட்டுத் திருடுவார்கள். பூச்சியும் துருவும் கெடுத்துப்போடும். நெருப்பும் புயலும் உங்களது உடைமைகளை அடித்துச்செல்லும். “உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்” – மத்தேயு 6:21. பூமியிலே சேர்த்துவைக்கப்பட்ட பொக்கிஷம் மனதை ஆக்கிரமித்து, பரலோகக் காரியங்களை வெளியேற்றிவிடும். (35)

யூதர்களுடைய காலத்தில் பணஆசை ஆதிக்கஞ்செலுத்துகிற ஒரு வெறியாக இருந்தது. ஆத்துமாவிலே தேவனுடைய இடத்தையும் மார்க்கத்தின் இடத்தையும் உலகப்பற்று பறித்துக்கொண்டது. அன்று போலவே இன்றுமிருக்கிறது. செல்வத்தை நாடிநிற்கும் பெரும்பேராசையானது, வாழ்க்கை யின்மீது இத்தகைய ஒரு கவர்ச்சியான மயக்குகின்ற செல்வாக்கை செலுத்தி, அதன் விளைவாக அவர்கள் அழிவிலே மூழ்கிப்போகும்வரை, அவர்களது உயர்வான பண்பைக் கெடுத்து மாற்றி, மனிதர்களின் மனிதத் தன்மையை கறைபடுத்துகிறது. சாத்தானுக்குச் செய்யும் சேவை முற்றிலும் கவலை நிறைந்ததாயும், குழப்பமுடையதாயும், சோர்வடையச்செய்யும் கடினமான வேலையோடும் அமைந்திருக்கிறது. மனிதர்கள் அரும்பாடுபட்டு இந்த உலகத்திலே மேலும் மேலும் சேர்க்கும் பொக்கிஷம் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கு மாத்திரமே. (36)

“பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்” (மத்தேயு 6:20,21) என்று இயேசு கூறினார். (37)

“பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்” என்பதே போதனையாகும். இது, பரலோகத்தில் பொக்கிஷங்களை அடைந்துகொள்ளும் உங்களுடைய நன்மைக்காகவே. உங்களது அனைத்து உடைமைகளிலும் இவைமாத்திரமே உண்மையிலேயே உங்களுடையது. பரலோகத்தில் சேர்த்துவைக்கும் பொக்கிஷம் அழிவில்லாதது. நெருப்போ அல்லது வெள்ளமோ அதை அழிக்கமுடியாது. எந்தத் திருடனாலும் அதைக் கொள்ளையடிக்க முடியாது. பூச்சியோ அல்லது துருவோ அதைக் கெடுக்க முடியாது. ஏனெனில், அது தேவனுடைய பராமரிப்பிலிருக்கிறது. (38)

அனைத்திற்கும் மேலான மதிப்புள்ளதாக கிறிஸ்துவால் கருதப்படுகிற பொக்கிஷம், “பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம்”தான் (எபே. 1:18). கிறிஸ்துவின்

சீடர்களே மதிப்புவாய்ந்த தனிச்சிறப்பான இயல்புடைய பொக்கிஷங்களாகவும் மாணிக்கங்களாகவும் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் கிரீடத்தில் பதிக்கப்பட்டிருக்கும் மாணிக்கக்கற்கள் போலிருப்பார்கள் என்று அவர் கூறுகிறார். "அவர்கள் அவருடைய தேசத்தில் ஏற்றப்பட்ட கொடிகளின் கிரீடத்தில் பதிந்திருப்பார்கள்" – சக. 9:16; "புருஷனைப் பசும்பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூர்வமாக்குவேன்" – ஏசாயா 13:12. தூய்மையடைந்து, பூரணமடைந்த அவருடைய மக்களை தமது பாடுகளின், தாமடைந்த சிறுமையின், தமது அன்பின் வெகுமதியாக கிறிஸ்து பார்க்கிறார். சகல மகிமையும் ஒளிரும் மாபெரும் மையமாகிய கிறிஸ்து, அவர்களை தமது மகிமையின் நிறைவாகக் காண்கிறார். (39)

மீட்பின் மாபெரும் வேலையில் அவரோடு ஐக்கியப்படவும், அவரது பாடும் மரணமும் பெற்றுத்தந்த வெற்றியின் ஐசுவரியத்தில் அவருடன் பங்காளிகளாக இருக்கவும் நாம் அனுமதிக்கப்படுகிறோம்.அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேய கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது: "எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்; நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்" (1 தெசலோனிக்கேயர் 2:19,20) என்றார். உழைக்கவேண்டும் என்று கிறிஸ்து கட்டளையிடுகிற ஐசுவரியம் இதுவே. வாழ்க்கையின் மாபெரும் அறுவடை குணமே ஆகும். கிறிஸ்துவின் கிருபையினாலே பரத்தை எட்டுகிற தூண்டுதலை ஆத்துமாவிலே உருவாக்கும் ஒவ்வொரு வார்த்தையும் செயலும், கிறிஸ்துவைப்போன்ற குணநலத்தை உருவாக்கச் செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியும் பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்க்கிறது. (40)

உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். மற்றவர்களுக்கு நன்மைசெய்வதற்காக எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும், நாம் நமக்கே நன்மையைப் பெற்றுக்கொள்கிறோம். சுவிசேஷத்தைப் பரப்புவதற்காக பணத்தையாவது நேரத்தையாவது கொடுக்கின்ற நபர் அதின்மூலமாக ஆத்துமாக்களை அடையத்தக்கதான தனது சொந்த ஆர்வத்தையும் ஊழியத்திற்கான ஜெபத்தையும் இணைக்கிறார். மற்றவர்களுக்கு மாபெரும் நன்மைகளைச் செய்யத் தகுதியுள்ளவனாகும்படி அவனது பற்றார்வமானது மற்றவர்களை நோக்கிச்சென்று, தேவனிடத்தில் அவனுடைய பயபக்தியை அதிகரிக்கிறது. (41)

உலகின் இறுதிநாளிலே, இந்த உலகத்தின் செல்வம்

அழிந்துபோகும்போது, பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்த்து வைத்திருக்கும் நபர், தனது வாழ்க்கையின்மூலமாக தான் பெற்ற ஆதாயத்தைக் காண்கிறார். கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்திருப்போமானால், அந்த வெள்ளைச் சிங்காசனத்திற்குமுன்பாக நாம் கூடிநிற்கும்போது, நமது ஊழியத்தின்மூலமாக ஆதாயம்பண்ணப்பட்ட ஆத்துமாக்களை நாம் காண்போம். மேலும் ஒருநபர் மற்ற நபர்களை இரட்சிப்பிற்கு வழிநடத்தியதையும், இரட்சிக்கப்பட்ட அந்த நபர்களெல்லாம் சேர்ந்து மேலும் அநேகரை இரட்சிப்பிற்கு வழிநடத்தியதையும், இவ்வாறு நம்முடைய ஊழியங்களின்மூலமாக, திரளான கூட்டம் அந்த இளைப்பாறுதலின் புகலிடத்தைப் பெற்றுக்கொண்டதையும் நாம் அறிவோம். அங்கே அவர்கள் தங்களது கிரீடங்களை இயேசுவின் பாதத்திலே வைத்து, முடிவில்லாத நித்தியகாலம் முழுவதும் அவரைத் துதிப்பார்கள். மீட்பரின் மகிமையில் பங்குபெற்றுக்கொண்ட இத்தகைய மீட்கப்பட்டோரின் கூட்டத்தை கிறிஸ்துவிற்காக ஊழியஞ்செய்தவர் ஒருவர் எத்தகைய ஆனந்தத்தோடு நோக்கிப்பார்ப்பார். ஆத்தும ஆதாய ஊழியத்தில் உண்மையும் உத்தமமுமாகப் பணிபுரிந்தவர்களுக்கு, பரலோகமானது எப்படிப்பட்ட அருமையான ஒரு இடமாக இருக்கும்! (42)

"நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவை களைத் தேடுங்கள்" – கொலோசெயர் 3:1. (43)

***"கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவா யிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்" – மத். 6:22.*** (44)

ஒரே சிந்தையாயிருப்பதும், முழு இருதயத்தோடு தேவனிடத்தில் பயபக்தியாயிருப்பதுமே மீட்பரின் வார்த்தைகளால் சுட்டிக்காட்டப்படும் நிபந்தனையாக இருக்கிறது. சத்தியத்தை தெளிவாகப் புரிந்துகொள்வதும், எத்தகைய கிரயங்கொடுத்தாவது அதற்குக் கீழ்ப்படியவும்வேண்டுமென்பதே நேர்மையான நோக்கமாயிருக்கட்டும். அப்போது தெய்வீக வெளிச்சத்தை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். பாவத்தோடு கொண்டிருக்கும் அனைத்து உடன்பாடுகளும் முற்றுப்பெறும்போது, உண்மையான பயபக்தி ஆரம்பமாகிறது. பின்னர் இருதயத்தின் மொழி பவுல் கூறியதைப்போல: "ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளைநாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரமஅழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்

கொண்டிருக்கிறேன்" "அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலிப்பியர் 3:13,14,8,11) என்று இருக்கும். (45)

ஆனால் சுயத்தின்மீதுகொண்ட பாசத்தினால் கண் குருடாகும்போது, அங்கு இருப்பது இருள்மாத்திரமே. "உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளா யிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!" – மத்தேயு 6:23. இந்தப் பயங்கரமான இருளே யூதர்களை அவர்களுடைய பிடிவாதமான அவிசுவாசத்தில் முழுவதுமாகப் போர்த்தியிருந்து, அவர்களை அவர் களுடைய பாவத்திலிருந்து மீட்கவந்த அவருடைய குணத்தையும் பணியையும் பாராட்டமுடியாமல் செய்தது. (46)

மனதைத் தடுமாற அனுமதிப்பதிலும், தேவனிலே உறுதியான நம்பிக்கை வைக்காதிருப்பதிலும் சோதனைக்கு ஒப்புக்கொடுத்தல் ஆரம்பமாகிறது. நாம் நம்மை முற்றிலுமாக தேவனுக்கென்று தத்தம் செய்வதைத் தெரிந்துகொள்ளாதபோது, இருளில் இருக்கிறோம். சில காரியங்களைச் சரிப்படுத்தாமல் ஒதுக்கிவைக்கும்போது, சாத்தான் நுழைந்து தனது சோதனைகளினால் நம்மை வழிதவறச்செய்யும்படியாக ஒரு வாசலைத் திறந்துவைக்கிறோம். விசுவாசக்கண் தேவனை காணக்கூடாதபடி நமது பார்வையை மங்கச்செய்தால், பாவத்திற்கெதிராக எந்தத் தடையும் இருக்காது என்று சாத்தான் அறிந்திருக்கிறான். (47)

நிலைபெற்றிருக்கும் ஒரு பாவஆசை, ஆத்துமாவின் ஏமாந்த நிலையைக் குறிக்கிறது. ஒவ்வொரு முறையும் அத்தகைய ஆசையிலே ஊறித் திளைக்கும்போது, அந்தக்காரியம் தேவனிடத்திலே ஆத்துமா கொண்ட வெறுப்பை மேலும் பலப்படுத்துகிறது. சாத்தான் தெரிந்தெடுத்துக் கொடுக்கும் பாதையில் பின்தொடர்ந்து செல்வதிலே, தீயசக்திகளால் நாம் சுற்றிவளைக்கப்படுகிறோம். மேலும் ஒவ்வொரு அடியும் அதிக ஆழமான இருளுக்குக் கொண்டுசென்று இருதயத்தின் குருட்டாட்டத்தை தொடர்ந்து அதிகரிக்கச்செய்கிறது. (48)

இயற்கையான உலகத்தைப்போன்றே, ஆவிக்குரிய வாழ்க்கை சம்பந்தப்பட்ட உலகத்திலும் இதேசட்டம் நடைமுறையிலிருக்கிறது. இருளிலே நிலைத்திருப்பவன் இறுதியிலே பார்க்கும் சக்தியை இழந்து போகிறான். நள்ளிரவின் இருளைவிட ஆழ்ந்த இருளினால் அவன் உள்ளே அடைக்கப்படுகிறான். மேலும், மிகப் பிரகாசமான நடுப்பகலுங்கூட அவனுக்கு

வெளிச்சத்தைக் கொண்டுவராது. “தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்” – 1 யோவான் 2:11. விடாப்பிடியாக தீங்கையே நேசிப்பதினாலும் தெய்வீக அன்பின் மன்றாட்டை வேண்டுமென்றே புறக்கணிப்பதினாலும் நற்காரியங்களை நேசிக்கும் குணத்தையும், தேவன்மீது இருக்கும் விருப்பத்தையும், பரலோக ஒளியைப் பெற்றுக்கொள்ளும் திறனையும் பாவி இழந்துவிடுகிறான். இரக்கத்தின் அழைப்பு முழுவதும் அன்பினால் நிறைந்திருக்கிறது. பாவியின் ஆத்துமாவில் முதன்முதலில் ஒளி பிரகாசித்தபோது, எவ்வளவு அதிகமாகப் பிரகாசித்ததோ அதைப்போன்றே இப்பொழுதும் ஒளிர்கின்றது. ஆனால் சத்தம் செவிடான செவிகளிலும், ஒளியானது குருடான கண்களிலும் விழுகின்றது. (49)

இரட்சிக்கப்படுவதற்கான நம்பிக்கையானது சிறிதளவாவது இருக்கின்றவரையிலும் எந்தவொரு ஆத்துமாவும் அதன் சொந்தவழியினில் செல்லும்படியாக தேவனால் இறுதியாக ஒருபோதும் கைவிடப்படுவதில்லை. மேலும்மேலும் கொடுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களும் சலுகைகளும் முற்றிலுமாக வீணாக்கப்படும்வரைக்கும் நமது பரலோகப் பரமப்பிதா வேண்டுகோளோடும் எச்சரிப்புகளோடும், பரிவுகாட்டப்படும் என்ற நிச்சயத்தோடும் நம்மைப் பின்தொடர்கிறார். பொறுப்பு பாவியினிடத்தில்தான் இருக்கிறது. இன்று தேவனுடைய ஆவியானவரை எதிர்த்துக்கொண்டிருப்பதினால் மாபெரும் வல்லமையோடு வெளிச்சம் வரும்போது, அதை இரண்டாவது முறையாக எதிர்ப்பதற்குரிய வழியை ஆயத்தஞ்செய்துகொண்டிருக்கிறான். வெளிச்சம் அவனிலே எண்ணப்பதிவை ஏற்படுத்துகின்ற வலிமையை இழக்கும்வரைக்கும் எதிர்க்கும் ஒரு நிலையிலிருந்து எதிர்க்கும் அடுத்த நிலைக்குச் செல்கிறான். இவ்வாறு தேவனுடைய ஆவியானவருக்கு எந்த அளவிலும் செவிசாய்ப்பதை நிறுத்திவிடுகிறான். பிறகு “உன்னிலே இருக்கும் வெளிச்சம்”கூட இருளாக மாறிவிடும். ஆத்துமாவின் குருட்டாட்டத்தை அதிகரிக்கும்வண்ணம், நாம் அறிந்திருக்கிற சத்தியங்கூட முரண்பாடாக மாறிவிடுகிறது. (50)

***“இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது” – மத்தேயு 6:24.*** (51)

மனிதன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யமாட்டான் என்று இயேசு கூறவில்லை. ஆனால் அவ்வாறு செய்வது கூடாதகாரியம் என்று கூறுகிறார். தேவனைச் சார்ந்த காரியத்திற்கும் இவ்வுலகப் பொருளைச்சார்ந்த காரியத்திற்கும் ஒத்திசைவோ இணக்கமோ கிடையாது. கிறிஸ்தவனின்

மனச்சாட்சி எங்கே பொறுத்துக்கொள்ளவும், சுயத்தை மறுக்கவும், நிறுத்தவும் வேண்டுமென்று எச்சரிக்கிறதோ, அங்கேதானே அவனுடைய சுயாசர்ப்புகளில் அவனை மூழ்கடிக்க உலகம் தலையிடுகிறது. கோட்டின் ஒரு பக்கத்திலே தன்னை மறுத்த கிறிஸ்துவின் பின்னடியாரும், கோட்டின் மறுபக்கத்திலே உலகை நேசித்து, நவநாகரிகத்தில் உழன்று, அற்பமான காரியங்களில் ஈடுபட்டு, தடைசெய்யப்பட்ட சுகபோகங்களை மிதமிஞ்சி அனுபவித்து, சுயத்தில் திளைத்துக்கொண்டிருக்கிற நபரும் இருக்கிறார். கோட்டின் அந்தப்பக்கத்திற்கு ஒரு கிறிஸ்தவனால் போகமுடியாது. (52)

யாருமே நடுநிலை வகிக்கமுடியாது. கடவுளை நேசிக்காமலும் நீதியின் விரோதியை சேவிக்காமலுமிருக்கின்ற இடைப்பட்ட வகுப்பு என்று ஒன்றுமேயில்லை. கிறிஸ்து அவர்களுடைய திறமைகள்மூலமாகப் பணியாற்றி, அவர்களுடைய செயல்திறன்கள்மூலமாகச் செயல்பட்டு, தனது மானிடப்பிரதிநிதிகளில் வாழவேண்டும். அவர்களுடைய சித்தம் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படவேண்டும். அவருடைய ஆவியினாலே அவர்கள் செயல்படவேண்டும். அப்போது அவர்களல்ல கிறிஸ்துவே அவர்களில் வாழ்கிறார். தன்னை முற்றிலுமாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்காத நபர், முற்றிலும் மாறான ஆலோசனைகள்கொண்ட வேறொரு சக்தியின் கட்டுப்பாட்டிலிருக்கிறார்; வேறொரு குரலுக்குச் செவிசாய்க்கிறார். அரைகுறையாகச் செய்யப்படுகின்ற சேவை, இருளின் சேனைகளோடு வெற்றியுள்ள கூட்டணியுள்ள நபராக அந்தப் பிரதிநிதியை சத்துருவின் பக்கத்தில் வைக்கிறது. தங்களைக் கிறிஸ்துவின் சேனைவீரர் என்று உரிமைகொண்டாடும் நபர்கள் சாத்தானின் கூட்டமைப்பில் சேர்ந்துகொண்டு, அந்தப் பக்கத்திற்கான உதவியைச் செய்யும்போது, கிறிஸ்துவின் விரோதிகள் என்று தங்களை நிரூபித்துக்காட்டுகிறார்கள். அவர்கள் பரிசுத்தப் பொறுப்புகளை மறுதலிக்கிறார்கள். சாத்தானுக்கும் உண்மையான போர்வீரர்களுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறார்கள். இந்தப் பிரதிநிதிகள்மூலமாக சத்துரு கிறிஸ்துவின் சேனைவீரர்களுடைய இருதயங்களைத் திருடிக்கொள்ளத் தொடர்ந்து வேலைசெய்கிறான். (53)

இந்த நமது உலகத்திலே, இழிந்த ஒழுக்கநிலைக்கு உறுதியான அரண்போன்றிருப்பது, கைவிடப்பட்ட பாவியின் அநீதியான வாழ்க்கையோ, அல்லது கீழ்நிலையிலுள்ள தள்ளுண்ட நபரோ அல்ல. மாறாக, ஒழுக்கநிலையோடு மேன்மையாகவும் மதிப்பு வாய்ந்ததாகவும் காணப்பட்டும், ஒரு பாவம் சீராட்டி வளர்க்கப்படுகிற, ஒரு இழிந்தசெய்கையில் திளைக்கிற வாழ்க்கையே ஆகும். மாபெரும் சோதனையோடு இரகசியமாகப் போராடிக் கொண்டிருக்கின்ற, செங்குத்தான பாறையின் விளிம்பில் தத்தளித்துக்

கொண்டிருக்கின்ற ஒரு ஆத்துமாவிற்கு, இத்தகைய வாழ்க்கை, பாவத்தை நோக்கி வசியப்படுத்துகிற மிகவல்லமையுள்ள உதாரணமாக அமைகிறது. வாழ்க்கை, சத்தியம், மேன்மை, ஆகியவைபற்றிய உயர்ந்த கருத்துக்களை உரிமையாகப் பெற்றிருப்பினும், தேவனுடைய பரிசுத்தப் பிரமாணத்தில் ஒரு கட்டளையை வேண்டுமென்றே மீறுகிறநபர், தனது மேன்மையான ஈவுகளை பாவஞ்செய்வதற்கு வழிநடத்தும் ஒரு வஞ்சகமாக மாற்றிக்கொள்கிறார். பாவத்திற்கு கொண்டுசெல்லும் கூர்மதி, தாலந்து, பரிவு, ஏன் தாராளமான மனப்பான்மையும் இரக்கமுமுள்ள செயல்களுங்கூட, இந்த வாழ்க்கை மற்றும் வரப்போகும் வாழ்க்கையினுடைய அழிவின் விளிம்புக்கு ஆத்துமாக்களை வசியப்படுத்தி கொண்டுசெல்லும் சாத்தானின் கண்ணியாக மாறலாம். (54)

“உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்”–1 யோவான் 2:15,16. (55)

***“கவலைப்படாதிருங்கள்” – மத்தேயு 6:25.*** (56)

உனக்கு ஜீவனைக் கொடுத்த அவருக்கு அந்த ஜீவனைக் காப்பதற்கான உணவின் அவசியமும் தெரியும். உடலைப் படைத்த அவர், உடையின் அவசியத்தைக்குறித்து அக்கறையற்றிருக்கவில்லை. மேலான ஈவுகளை அளித்த அவர், அதை முற்றிலும் நிறைவு செய்யத்தக்கதாக மேலும் தேவையானவைகளைக் கொடுக்கமாட்டாரா? (57)

பறவைகள் “விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை” (மத்தேயு 6:26). எனினும் மாமேன்மையான பரமப்பிதா பறவைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார். கவலையின்றி துதியின் கீதங்களை மென்குரலில் பாடிக்கொண்டிருந்த அவைகளை இயேசு தமது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். “அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?” (மத்தேயு 6:26) என்று கேட்கிறார். (58)

“அவரது பராமரிப்பின்றி ஒரு அடைக்கலான் குருவியும்
தரையிலே விழுகிறதில்லை.
தாழ்ந்து பணிகின்ற ஆத்துமாவை இயேசுவிற்குத் தெரியும்.
ஏனெனில் அவர் நம்முடன் எல்லா இடங்களிலும் இருக்கிறார்.

வடிகின்ற கசப்பான ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரையும்
அவர் குறித்துவைக்கிறார்.
எப்பொழுதுமே அவரை நம்பியிருக்கும் ஆத்துமாவை
ஒருபோதும், ஒருபோதும், ஒருபோதும்
புறம்பே தள்ளுகிறதில்லை." (59)

மலையின் பக்கங்களிலும் வயல்களிலும் கவர்ச்சியாகக் காணப்பட்ட காலைப் பனியில் நனைந்திருந்த புத்தம்புதிய வண்ணமலர்களைச் சுட்டிக்காட்டிய இயேசு: "காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்" (மத்தேயு 6:28) என்றார். தாவரங்கள் மற்றும் மலர்களின் நேர்த்தியான தோற்றங்களும், அருமையான வண்ணங்களும் மனிதத்திறமைகளால் நகல் எடுக்கப்படலாம். ஒரு பூவிற்கோ அல்லது ஒரு புல்லின் இதழுக்கோ எந்தத் தொடுதல் ஜீவனைக் கொடுக்கமுடியும்? வழியருகே காணப்படுகின்ற ஒவ்வொரு மலரும் நட்சத்திரமண்டலத்தை உயரே நிலைபெறச்செய்த அதே வல்லமைக்கே கடமைப்பட்டிருக்கின்றன. படைக்கப்பட்ட அனைத்துப் பொருட்களின்மூலமாகவும் தேவனின் அந்த மாபெரும் இருதயத்தினின்று வரும் ஒரு நாடித்துடிப்பு சிலிர்க்கின்றது. இந்த உலகின் அரசர்கள் அணிந்திருந்த உடைகளைவிட மிக ஆடம்பரமான உடையினால் வயலில் காணப்படும் மலர்கள் அவருடைய கரத்தால் உடுத்துவிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் "இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?" (மத்தேயு 6:30) என்று கூறினார். (60)

மலர்களைப் படைத்தவரும், குருவியின் வாயில் கீதத்தைக் கொடுத்தவருமாகிய அவர், "காட்டுப் புஷ்பங்களை ... கவனித்துப்பாருங்கள்" என்றும் "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்" என்றும் கூறுகிறார். இயற்கையில் காணப்படும் பொருட்களின் இனிமையிலே, பள்ளியை நடத்துகிறவர்கள் அறிந்திருக்கிறதைவிட தேவனின் ஞானத்தைப்பற்றி நீங்கள் அதிகமாகக் கற்றுக்கொள்ளலாம். லீலி மலர்களின் இதழ்களிலே தேவன் நமக்கு ஒரு தூதினை எழுதிவைத்திருக்கிறார். துயரம், சுயநலம், மனதை அரிக்கின்ற கவலை ஆகியவற்றை மறந்தபின்னரே இருதயத்தால் எழுதப்பட்டிருக்கும் அந்த மொழியினை விளங்கிக்கொள்ளமுடியும். கீதமிசைக்கின்ற பறவைகளையும் மென்மையான மலர்களையும் பிதா உங்களுக்காக ஏன் கொடுத்திருக்கிறார்? பிதாவின் அன்பு பெருகி வழிந்தோடுவதினால் உங்கள் வாழ்வின் பகுதியைப் பிரகாசமடையச்செய்து மகிழ்ச்சியால் நிறைக்கிறதற்காகவே. இந்த உலகில் உயிர்வாழ்வதற்கு அவசியமான

அனைத்தும் இந்தப் பறவைகளும் மலர்களும் இன்றியே உங்களுடையதாக இருந்திருக்கும். ஆனால் வெறுமனே இந்த உலகில் வாழ்வதற்குத் தேவையானதைமட்டும் கொடுப்பதிலே தேவன் திருப்தியடையவில்லை. அவர் நம்மீது கொண்டிருக்கும் அன்பின் நினைவுகளைக் கூறுவதற்காக பூமியையும் காற்று மண்டலத்தையும் வானத்தையும் அழகிய சின்னச்சின்ன காட்சிகளால் நிறைத்திருக்கிறார். படைக்கப்பட்ட அனைத்துப்பொருட்களின் அழகும் அவரது மகிமைப் பிரகாசத்தின் ஒரு ஒளிக்கதிரே. உங்களது சந்தோஷத்திற்காகவும், மகிழ்ச்சிக்காகவும் இயற்கையின் பொருட்கள்மீது எல்லையற்ற திறமையை தாராளமாக அள்ளித்தெளித்திருப்பாரானால், உங்களுக்கு அவசியமான ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் அவர் கொடுப்பார் என்ற காரியத்தில் அவரைச் சந்தேகிக்கலாமா? காட்டுப்புஷ்பங்களை கவனித்துப்பாருங்கள். நட்சத்திரத்தை வழிநடத்துகின்ற அதே மாபெரும் பிரமாணத்திற்கே சூரிய ஒளிக்கு இதழை விரிக்கின்ற ஒவ்வொரு மலரும் கீழ்ப்படிகின்றது. மேலும் அதனுடைய ஜீவனானது எவ்வளவு எளிமையாகவும் அழகாகவும் இனிமையாகவும் இருக்கின்றது! மலர்களின்மூலமாக கிறிஸ்துவைப்போன்ற குணத்தின் இனிமையை நோக்கிப்பார்க்கும்படியாக தேவன் நம்மை அழைக்கிறார். மலர்களுக்கு இத்தகைய அழகைக் கொடுத்த அவர், கிறிஸ்துவின் குணத்தின் அழகிலே ஆத்துமா போர்த்தப்படவேண்டுமென்று மிகவும் அதிகமாக வாஞ்சிக்கிறார். (61)

எப்படி லீலி மலர்கள் வளருகிறது என்று கவனித்துப் பாருங்கள் என்று இயேசு கூறுகிறார். குளிர்ந்து இருண்ட இந்த பூமியிலிருந்து அல்லது ஆற்றுப்படுகையின் மணலினின்று அது எப்படிக் கிளர்ந்தெழும்பி மேலே வளருகின்றது? செடிகள் இனிமையோடும் வாசனையோடும் இலைகளை எப்படி விரிக்கின்றன? மண்ணின் நிறத்திலுள்ள கரடுமுரடான அந்த லீலிச்செடியின் விதை கிழங்கிலிருந்து எத்தகைய அழகின் சாத்தியக் கூறுகளுடன் வெளியேவருகின்றன என்று யார் கனவுகாணமுடியும்? லீலி கிழங்கிலே மறைந்திருக்கும் தேவன் கொடுத்த ஜீவன், அவரது அழைப்பினாலே சூரிய வெளிச்சத்திலும் மழையிலும் திறந்து வெளிவரும்போது அதின் அழகையும் இனிமையையும் பார்த்து மனிதர் வியந்து நிற்கின்றார்கள்.அதைப்போன்றே தேவன் கொடுக்கும் ஜீவன் ஒவ்வொரு மானிட ஆத்துமாவையும் உயிர்ப்பித்து, அவரது கிருபையின் ஊழியத்திற்கு ஒப்படைக்கச்செய்கிறது. இந்தக் காரியமானது மழையைப்போன்றும் சூரிய வெளிச்சத்தைப்போன்றும் இலவசமாகவும், அனைவருக்கும் ஆசீர்வாதமாகவும் வெளிப்படுகின்றது. தேவனுடைய வார்த்தையினால் மலர்கள் படைக்கப்படுகின்றன. அதே வார்த்தை உங்களில் அவரது ஆவியானவரின் கிருபைகளை உருவாக்குகின்றது. (62)

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

தேவனுடைய பிரமாணம் அன்பின் பிரமாணம். இந்த பூமியிலே நீங்கள் வைக்கப்பட்டிருப்பது, உங்கள் சுயத்திற்கான காரியங்களைத் தேடி ஆராய்ச்சி செய்வதற்கும், தோண்டுவதற்கும், கட்டுவதற்கும், கடும் பாடுபடுகிறதற்கும், நூற்பதற்கும் மட்டுமல்ல, மலர்கள் எப்படி மற்றவர்களுடைய வாழ்க்கையை அன்பின் ஊழியத்தினால் மகிழ்ச்சியுள்ளதாக்குகிறதோ, அதைப்போல கிறிஸ்துவின் அன்பினாலே வாழ்க்கையைப் பிரகாசமுள்ளதாகவும் மகிழ்ச்சி யுள்ளதாகவும், அழகுள்ளதாகவும் ஆக்குவதற்கு உங்களுக்கு கற்றுக் கொடுக்கும்படி உங்களைச் சுற்றி அவர் அழகினை வைத்திருக்கிறார். (63)

தந்தையர்களே, அன்னையர்களே, பூக்களிலிருந்து உங்கள் பிள்ளைகள் கற்றுக்கொள்ளட்டும். அவர்களைத் தோட்டத்திற்கும் வயலிற்கும், இலைசெறிந்த மரங்களுக்கு அடியிலும் உங்களுடன் அழைத்துச்சென்று இயற்கையின்மூலம் தேவனுடைய அன்பின் தூதைப் புரிந்துகொள்ளும் படியாகக் கற்றுக்கொடுங்கள். அவரைப்பற்றிய சிந்தனைகள் பறவையோடும், மலரோடும், மரத்தோடும் இணைக்கப்பட்டிருப்பதாக. மகிழ்ச்சியான அழகான ஒவ்வொரு பொருளிலும் அவர்களுக்காக தேவன்கொண்ட அன்பின் வெளிப்பாட்டைக் காணத்தக்கதாக சிறுவர் சிறுமியரை வழிநடத்துங்கள். உங்களுடைய மார்க்கத்தை அதின் இரம்மியமான தன்மையோடு அவர்களுக்குப் பரிந்துரையுங்கள். இரக்கத்தின் பிரமாணம் உங்களுடைய உதடுகளில் இருப்பதாக. (64)

தேவனுடைய மாபெரும் அன்பினால் அவர்களுடைய இயல்புகள் தேவனுடைய இயல்பைப்போல மாற்றப்படலாமென்பதை சிறுவர் சிறுமியருக்கு கற்றுக்கொடுங்கள். பூக்களின் கவர்ச்சியான அமைப்பைப்போன்று அவர்களுடைய வாழ்க்கையை அழகாக அவர் அமைத்துத்தருவார் என்று அவர்களுக்குப் போதியுங்கள். அவருடைய இனிய மலர்களைப் பறித்து ஒன்றாகச் சேர்க்கும்போது, இந்த மலர்களைப் படைத்தவர் இந்த மலர்களைவிட அழகுள்ளவர் என்பதைக் கற்றுக்கொடுங்கள். அவர்களது இருதயங்களின் தளிர்சுருள்கள் அவரைப்பற்றியே பின்னிப்பிணைந்திருக்கும். "முற்றிலும் அழகான" அவர் அவர்களுக்கு அன்றாடத் தோழனாகவும், மிகவும் பழக்கமான நண்பனாகவும் ஆகிவிடுவார். மேலும் அவர்களது வாழ்க்கை, அவருடைய தூய்மையான சாயலுக்கு ஒத்ததாக மாறும். (65)

***"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்" – மத்தேயு 6:33.*** (66)

கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்துக்கொண்டிருந்த

மக்கள் இந்தப் பூமியில் அவர் ஏற்படுத்தப்போகும் இராஜ்யத்தைக்குறித்த ஏதோ ஒரு அறிவிப்பு கொடுக்கப்படலாம் என்று ஆவலோடும் விழிப்போடும் கவனித்துக்கொண்டிருந்தார்கள். பரலோகஇராஜ்யத்தின் பொக்கிஷங்களைக் குறித்து இயேசு அவர்களுக்கு விவரித்துச் சொல்லிக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அந்தச் செய்தியினைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள் தாங்கள் அவரோடு கொள்ளும்தொடர்பு, இந்த உலகத்தில் தாங்கள் எதிர்பார்த்திருக்கும் வருங்கால வாய்ப்பை எப்படி வளமாக்கும் என்று எண்ணினார்கள். அந்த வினா, அநேகருடைய உள்ளங்களிலே மேலோங்கியிருந்தது. இந்த உலகத்திற்குரிய காரியங்களை உச்ச உயர்நிலைக்குரிய அக்கறைமிகுந்த காரியமாக மாற்றுவதின்மூலம், தமது சிருஷ்டிகளின்மீது மென்மையான பராமரிப்பு கொடுக்கத்தக்க தேவன் இல்லை என்பதுபோலத் தங்களைச்சுற்றிலும் வாழ்ந்துவந்த அஞ்ஞான ஜனங்களைப்போலவே அவர்கள் செயல்பட்டார்கள் என்பதை இயேசு விளக்கிக்காட்டுகிறார். (67)

"இவைகளையெல்லாம் உலகத்தார் நாடித்தேடுகிறார்கள்; இவைகள் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார். தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (லூக்கா 12:30; மத்தேயு 6:32,33) என்று இயேசு கூறினார். அன்பின், நீதியின், சமாதானத்தின் இராஜ்யத்தைக்குறித்து உங்களுக்குத் தெரியப்படுத்தவே நான் வந்திருக்கிறேன். இந்த இராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள உங்கள் இருதயங்களைத் திறவுங்கள். இந்த இராஜ்யத்திற்கான சேவையே உங்களுடைய உயர்ந்த நோக்கமாக இருக்கட்டும். இது ஒரு ஆவிக்குரிய இராஜ்யமாக இருந்தபோதிலும், இந்த வாழ்க்கைக்குரிய உங்களுடைய தேவைகள் சந்திக்கப்படாமற்போய்விடுமென்று நீங்கள் பயப்படவேண்டாம். நீங்கள் உங்களை ஆண்டவருடைய சேவைக்கு ஒப்புக்கொடுப்பீர்களானால், வானத்திலும் பூமியிலும் சகல வல்லமைகளையுமுடைய தேவன் உங்களுடைய தேவைகளை நிறைவுசெய்வார். (68)

முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என்ற தேவையிலிருந்து நம்மை விடுவிக்காமல், எல்லாவற்றிலும் அவரையே முதலும் இறுதியும் மிகச் சிறப்பும் வாய்ந்தவராக நாம் வைத்திருக்கவேண்டுமென்று அவர் நமக்குப் போதிக்கிறார். நமது குணத்திலும் வாழ்க்கையிலும் வெளிப்படையாக வேலைசெய்யக்கூடாதபடி அவரது நீதியைத் தடுக்கின்ற எந்த தொழில்களிலும் ஈடுபடக்கூடாது; தொடரக்கூடாது; இன்பங்களை நாடக்கூடாது. நாம் எதைச் செய்தாலும் ஆண்டவருக்கென்று மனநிறைவோடு செய்யவேண்டும். (69)

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

தேவனுடைய மகிமையை மக்களுக்குமுன் வைத்து, தமது பிதாவின் சித்தத்திற்கு அனைத்தையும் கீழ்ப்படுத்தினதின்மூலம் இயேசு மனிதனாக உலகில் வாழ்ந்த காலத்தில், வாழ்க்கையை அதின் ஒவ்வொரு சிறு பிரிவிலும் மதிப்புடையதாக்கினார். அவரது முன்மாதிரியை நாம் பின்பற்றுவோமானால், அந்த வாழ்க்கைக்கு அவசியமான அனைத்துக் காரியங்களும் "கூடக் கொடுக்கப்படும்" என்பதே அவர் நமக்குக் கொடுக்கும் வாக்குறுதியாகும். ஏழ்மை அல்லது ஐசுவரியம், பிணி அல்லது ஆரோக்கியம், அறிவீனம் அல்லது ஞானம் இவையனைத்துமே அவரது கிருபையின் வாக்குத்தத்தத்திலே நமக்கு அளிக்கப்படுகின்றன. (70)

தளர்ந்துபோயிருக்கும் ஒரு ஆத்துமா தேவனின் உதவியை நாடி வரும்போது, அந்த ஆத்துமாவை அவருடைய நித்திய புயம் சுற்றியணைத்துக்கொள்கிறது. பர்வதங்களில் காணப்படும் விலையேறப்பெற்ற பொருட்கள் அழிந்துபோகலாம். ஆனால் தேவனுக்காக வாழும் ஆத்துமா அவரோடு தங்கியிருக்கும். "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத் திருப்பான்" – 1 யோவான் 2:17. துன்பங்களுக்கும் இழப்புகளுக்கும் மத்தியில் ஆலோசனைக்காகவும் ஞானத்திற்காகவும் ஆறுதலுக்காகவும் நம்பிக்கைக் காகவும் பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கும்பொழுது தேவனைச் சார்ந்து வாழக் கற்றுக்கொண்டிருக்கும் மனிதனை வரவேற்க தேவப்பட்டணம் தன் பொற்கதவுகளைத் திறக்கும். அங்கு அவனை தூதர்களின் கீதங்கள் வரவேற்கும். அவனுக்காக ஜீவவிருட்சம் தன் கனியைக் கொடுக்கும். "மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்" – ஏசாயா 54:10. (71)

***"ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; ... அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்" – மத்தேயு 6:34.*** (72)

அவருடைய வேலையைச் செய்வதற்கு தேவனுக்கு உங்களை ஒப்புக்கொடுத்திருப்பீர்களானால், நாளையைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. யாருக்கு நீங்கள் ஊழியக்காரராக இருக்கிறீர்களோ அவருக்கு, முடிவு என்ன என்பது ஆரம்பத்திலேயே தெரியும். உங்களது காட்சிக்கு மறைவாயிருக்கிற நாளையச் சம்பவங்கள் எல்லாம் வல்ல தேவனுடைய கண்களுக்குத் தெளிவாகத் தெரியும். (73)

## சேவையின் உண்மையான நோக்கம்!

நம்மால் செய்யப்படவேண்டிய காரியத்தின் கண்காணிப்பை நமது கரங்களிலே எடுத்துக்கொண்டு, அதின் வெற்றிக்காக நமது சொந்த ஞானத்தையே சார்ந்திருப்போமானால், தேவன் தராத ஒரு சுமையை நாம் எடுத்துக்கொண்டு, அவரது உதவியின்றி அதைச் சுமக்க முயற்சிக்கின்றோம். தேவனுக்குரியதான பொறுப்பை நம்மீது எடுத்துக்கொண்டிருக்கிறோம். இவ்வாறாக, அவருடைய இடத்தில் உண்மையாகவே நாம் நம்மை வைத்துக் கொள்கிறோம். நாம் கவலையுடையவர்களாக, ஆபத்தையும் இழப்பையும் எதிர்நோக்குகிறோம். ஏனெனில் அது நமக்கு நேரிடுவது நிச்சயமாகும். தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதையும், நமக்கு நன்மைசெய்யவே எண்ணங்கொண்டிருக்கிறார் என்பதையும் நாம் உண்மையிலே விசுவாசிப் போமானால் எதிர்காலத்தைப்பற்றிக் கவலைப்படுவதை நிறுத்திவிடுவோம். ஒரு சிறுகுழந்தை எப்படி தனது பெற்றோரை நம்புகிறதோ, அதேபோன்று நாம் நம்முடைய தேவன்மீது நம்பிக்கை வைப்போம். அப்பொழுது நமது துன்பங்களும் வேதனைகளும் மறைந்துபோகும். ஏனெனில் நமது சித்தமானது தேவசித்தத்தினாலே விழுங்கப்படுகிறது. (74)

நாளையத்தினத்திற்கான சுமைகளை இன்றைக்கு சுமப்பதற்கு இயேசு உதவிசெய்வதாக ஒரு வாக்குத்தத்தத்தையும் நமக்குக் கொடுக்கவில்லை. "என் கிருபை உனக்குப்போதும்" (2 கொரிந்தியர் 12:9) என்கிறார். வனாந்தரத்தில் கொடுக்கப்பட்ட மன்னாவைப்போல அந்தந்த நாளுக்குரிய தேவைக்குத்தக்கதாக அவருடைய கிருபை வழங்கப்படுகின்றது. இஸ்ரவேலர் மக்களின் வனாந்தர யாத்திரை வாழ்க்கையில் நடந்ததுபோல, ஒவ்வொரு காலையும் அந்த நாளுக்குத் தேவையான பரலோக அப்பத்தை நாம் பெற்றுக்கொள்ளலாம். (75)

ஒருநாள் மாத்திரமே நம்முடையதாகும். அந்த நாளிலே நாம் தேவனுக்காக வாழவேண்டும். அந்த ஒரு நாளிலே கிறிஸ்துவின் கரங்களிலே பக்தியுள்ள சேவையில் நம்முடைய அனைத்து நோக்கங்களையும் திட்டங்களையும் அர்ப்பணித்து, நமது கவலைகளையெல்லாம் அவர்மீது வைத்துவிடவேண்டும். ஏனெனில் அவர் நம்மேல் அக்கறையுடையவராக இருக்கிறார். "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக் கேதுவான நினைவுகளே" – எரே. 29:11; "நீங்கள் மனந்திரும்பி அமர்ந் திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்" – ஏசாயா 30:15. (76)

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

நீங்கள் ஒவ்வொரு நாளும் ஆண்டவரைத் தேடி மனந்திரும்புவீர்களானால் உங்களுடைய சொந்த ஆவிக்குரிய தெரிந்தெடுத்தலின் மூலமாக, தேவனிலே மனமகிழ்ச்சியோடும் விடுதலையோடும் இருப்பீர்களானால், "கிறிஸ்துவின் நுகத்தை அதாவது கீழ்ப்படிதலின் சேவையின் நுகத்தை" அணிந்தவர்களாக மகிழ்ச்சிமிக்க இருதயஒப்புதலோடு, அவருடைய கிருபையின் அழைப்பை ஏற்று வருவீர்களானால், உங்களுடைய எல்லா முறுமுறுப்புகளும் அமைதியாக்கப்படும். உங்களுடைய அனைத்து துன்பங்களும் அகற்றப்படும். இப்பொழுது உங்களைத் திகைக்கச்செய்கின்ற அனைத்துப் பிரச்சனைகளும் தீர்க்கப்படும். (77) ★

# 5

# கர்த்தருடைய ஜெபம்!

***“நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது...” – மத். 6:9.*** (1)

கர்த்தருடைய ஜெபம் நமது மீட்பராலே இரண்டு முறை கொடுக்கப்பட்டது. முதலாவது, மலைப்பிரசங்கத்திலே திரளான மக்களுக்கு கொடுக்கப்பட்டது. சில மாதங்களுக்குப்பிறகு, மறுபடியும் அவரது சீடர்களுக்கு கொடுக்கப்பட்டது. சீடர்கள் சிறிது நேரம் வெளியே சென்றுவிட்டு, மீண்டும் திரும்பிவந்தபொழுது, ஆழ்ந்த ஜெபத்திலே அவர் தேவனோடு இணைந்திருப்பதைக் கண்டார்கள். அவர்கள் வந்திருப்பதை அறியாத நிலையில் அவர் இருப்பதுபோலத் தோன்றியது. அந்த நிலையிலே அவர் வாய்விட்டு சத்தமாக ஜெபித்துக்கொண்டிருந்தார். மீட்பரின் முகம் பரலோகப் பிரகாசத்தினால் ஒளிநிறைந்து காணப்பட்டது.காணக்கூடாதவரின் பிரசன்னத்திலேயே அவர் இருப்பதுபோல் தோன்றியது. தேவனோடு பேசியவருடைய வார்த்தைகள் எப்படி இருக்குமோ, அவ்வாறு அவரது வார்த்தைகளில் உயிர்துடிப்பான வல்லமை காணப்பட்டது. (2)

ஜெபத்தை செவிமடுத்த சீடர்களின் இருதயங்கள் வெகுவாக அசைக்கப்பட்டன. அடிக்கடி நீண்ட மணிநேரங்களை தனிமையிலே தமது பிதாவோடுகொள்ளும் ஐக்கியத்திலே அவர் செலவிட்டார் என்கிற காரியத்தை அவர்கள் மனதில் பதித்துக்கொண்டார்கள். அவரைச் சுற்றிலும் நெருக்கிக்கொண்டிருந்த திரளான மக்களுக்காக செய்த ஊழியத்திற்காகவும், போதகர்களுடைய வஞ்சகமான குதர்க்கங்களை திரைநீக்கி வெளிப்படுத்திக் காட்டுவதற்காகவும் அவர் நாட்களைச் செலவிட்டார். இத்தகைய தொடர்ச் சியான உழைப்பு, அடிக்கடி அவரை மிகவும் அதிகமாகக் களைப்படையச் செய்ததினால் அவரது தாயாரும் சகோதரர்களும் ஏன் அவரது சீடர்களும் கூட இத்தகைய கடும் உழைப்பிற்கு அவர் பலியாகிவிடுவாரோ என்று பயந்தனர். ஆனால் கடுமையான உழைப்பின் அந்த நாளை முடித்து, அந்த ஜெபவேளையின் மணிநேரங்களைச் செலவிட்டு வெளியே

வரும்போது, அவரது முகத்திலே சமாதானத்தின் தோற்றம் இருப்பதை அவர்கள் அறிந்துகொண்டார்கள். அவரது பிரசன்னத்திலே ஒரு புது மலர்ச்சியின் உணர்வு பரவியிருப்பதைக் கண்டார்கள். தேவனோடு பல மணிநேரங்கள் செலவிட்டு, பின்னர் பரலோக வெளிச்சத்தை மனிதர் களுக்குக் கொண்டுசெல்வதற்காக ஒவ்வொரு நாள் காலையிலும் அவர் புறப்பட்டுச் சென்றார். அவரது வார்த்தைகளிலும் ஊழியங்களிலும் காணப்பட்ட வல்லமைக்கு காரணம் அவரது நீண்ட மணிநேர ஜெபமே என்று சீடர்கள் தொடர்புபடுத்தி முடிவு செய்தனர். இப்பொழுது அவரது விண்ணப்பங்களைக் கேட்டபொழுது, அவர்களுடைய இருதயங்கள் பயபக்தியோடுகூடிய அச்சத்தினால் நிறைந்து தாழ்மையடைந்தன. அவர் ஜெபித்துக்கொண்டிருந்ததை நிறுத்தியபோது, அவர்களது சொந்த ஆழமான தேவையின் அவசியத்தைக்குறித்து அவர்களுடைய உள்ளத்திலே ஏற்பட்ட குற்றவுணர்வோடு, "ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும்" (லூக்கா 11:1) என்று குரலெழுப்பினார்கள். (3)

அவர்களுக்குப் புதிய அமைப்பிலே ஜெபம் எதையும் இயேசு கொடுக்கவில்லை. முன்னர் கற்றுக்கொடுத்த அந்த ஜெபத்தையே அவர் திரும்பவும் கூறினார். அந்தக் காரியம் ஏற்கெனவே கொடுத்ததை அவர்கள் விளங்கிக்கொள்ளவேண்டியது அவசியம் என்று அவர் சொல்வதைப் போன்றிருந்தது. அந்த ஜெபத்திற்கு ஒரு ஆழமான பொருள் உண்டு. அதை இன்னமும் அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை. (4)

ஜெபத்தின் அதே வார்த்தைகளை அப்படியே பயன்படுத்தவேண்டும் என்று மீட்பர் நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. மானுடத்தைத் தரித்த ஒருவராக தமது மாதிரி விண்ணப்பத்தை அவர் தெரியப்படுத்துகிறார். வார்த்தைகள் மிகவும் எளிமையாக இருப்பதால் சிறுபிள்ளைகூட தனக்குரியதாக அதைத் தெரிந்துக்கொள்ள முடியும். எனினும் அந்த ஜெபத்தின் வார்த்தைகள் அகன்று பரந்து காணப்படுவதால், அவைகளின் முக்கியத்துவம் மாபெரும் மேதைகளாலுங்கூட முற்றிலுமாக ஒருபோதும் புரிந்துகொள்ளப்படமுடியாததாகும். நமது நன்றிகூறல் எனப்படும் அன்பளிப்போடு நமது தேவைகளை தெரியப்படுத்தி, நமது பாவங்களை அறிக்கையிட்டு, அவருடைய வாக்குத்தத்தங்களுக்கு ஏற்றதாக அவரது இரக்கத்தை உரிமைகொண்டாட தேவனிடத்திற்கு வர அவை நமக்குக் கற்றுக்கொடுக்கின்றன. (5)

***"நீங்கள் ஜெபம்பண்ணும்போது: ...எங்கள் பிதாவே"—லூக். 11:2.*** (6)

## கர்த்தருடைய ஜெபம்!

இயேசு அவரது பிதாவை “எங்கள் பிதாவே” என்று நாம் அழைக்க வேண்டுமென்று நமக்குப் போதிக்கிறார். நம்மைச் சகோதரரென்று அழைக்க அவர் வெட்கப்படவில்லை (எபிரெயர் 2:11). தேவ குடும்பத்தின் நபர்களாக நம்மை வரவேற்ற மீட்பரின் இருதயம் அவ்வளவு அதிகமான ஆயத்தத்தோடும் மிகுந்த விருப்பத்தோடும் இருக்கிறது. தேவனிடத்தில் ஜெபிக்கும்போது, நாம் பயன்படுத்தவேண்டிய அந்த முதல் வார்த்தைகளிலேயே அதாவது “எங்கள் பிதாவே” என்று கூறும்போதே, நமக்கு அவரோடு இருக்கின்ற தெய்வீக உறவின் நிச்சயத்தை நமக்குக் கொடுக்கிறார். (7)

தேவன் தம்முடைய குமாரனை நேசிப்பதுபோல நம்மையும் நேசிக்கிறார் என்று ஊக்கமூட்டும் ஆறுதல் நிறைந்த அந்த அதிசயமான உண்மையைப்பற்றிய அறிவிப்பு இங்கு இருக்கிறது. “நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும்” (யோவான் 17:23) என்ற இந்த வார்த்தைகளை இயேசு தமது சீடர்களுக்காக ஏறெடுத்த கடைசி ஜெபத்தில் கூறினார். (8)

சாத்தான் உரிமைகொண்டாடி மிகக் கொடுமையாக ஆளுகை செய்த இந்த உலகத்தை, தேவகுமாரன் தமது ஒரு மாபெரும் சாதனையின்மூலம் தமது அன்பினால் சுற்றி அரவணைத்து, மீண்டும் யெகோவாவின் சிங்காசனத் தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தார். இந்த வெற்றி நிச்சயமாக்கப் பட்டபோது, கேருபீன்களும் சேராபீன்களும் விழுந்துபோகாத மற்ற உலகங் களிலுள்ள எண்ணிமுடியாத பெருந்திரளான கூட்டமும் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் துதியின் பாடல்களைப் பாடினார்கள். விழுந்து போன மனிதஇனத்திற்கு மீட்பின் வழி திறக்கப்பட்டுவிட்டது என்றும், இவ்விதம் பூமி பாவத்தின் சாபத்தினின்று மீட்கப்பட்டுவிடும் என்றும் அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். அத்தகைய வியத்தகு அன்பிற்குப் பாத்திரமானவர்கள் எவ்வளவு அதிகமாகக் களிகூரவேண்டும்! (9)

நாங்கள் அநாதைகள் என்று எண்ணி எப்படி நாம் எப்பொழுதுமே உறுதியற்ற நிலையிலும் சந்தேகத்திலும் இருக்கமுடியும்? பிரமாணத்தை மீறினவர்களுக்காகவே மானிடத்தன்மையை இயேசு தம்மீது எடுத்துக் கொண்டார். நித்திய காலத்திற்கான சமாதானத்தையும் நிச்சயத்தையும் நாம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக நம்மில் ஒருவரைப்போல ஆனார். நமக்கு பரலோகத்திலே ஒரு வழக்கறிஞர் இருக்கிறார். யாராயினும் அவரை தமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வாரானால், அந்த நபர் தனது சொந்தப் பாவங்களைத் தானே சுமந்து அலையத்தக்கதாக அநாதையைப்போன்று விடப்படுவதில்லை. (10)

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

"இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்" – 1 யோவான் 3:2. "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" – ரோமர் 8:17; "இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" – 1 யோவான் 3:2. (11)

நமக்காக அவர் கொண்ட அன்பை அறிந்து விசுவாசிப்பதே நாம் ஆண்டவரை நெருங்கிச் சேரும்போது எடுத்துவைக்கவேண்டிய முக்கியமான முதல் அடியாகும். ஏனெனில், அவரது அன்பு நம்மை இழுத்துக்கொள்வதின் மூலமாகத்தான் நாம் அவரிடத்தில் வழிநடத்தப்படுகிறோம். (1 யோவான் 4:16). (12)

தேவனுடைய அன்பை உள்ளத்தில் உணர்வது, தன்னலத்தை முற்றிலுமாக துறந்துவிடுவதற்கேற்ற கிரியையைச் செய்கிறது. தேவனை நமது பிதா என்று அழைப்பதினால் அவருடைய பிள்ளைகள் அனைவரையும் நமது சகோதரர்களென்று அங்கீகரிக்கிறோம். மாபெரும் மானிட இனத்தின் ஒரு பகுதியாக, ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களாக நாம் இருக்கிறோம். நமது விண்ணப்பங்களிலே நமது அண்டை அயலகத்தாரையும் நம்மையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். தனக்காக மட்டுமே ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கிற எவருமே சரியான வகையில் ஜெபிக்கவில்லை. (13)

எல்லையற்ற தேவன், பிதா என்ற பெயரிலே அவரை நெருங்கிச் சேர்வதை உங்களது தனிச்சலுகையாக ஆக்கியிருக்கிறார் என்று இயேசு கூறினார். இதில் அடங்கியிருக்கும் அனைத்துக் காரியங்களையும் புரிந்துகொள்ளுங்கள். மீறுதலுக்குட்பட்டவரோடு உங்களைப் படைத்தவர் மன்றாடுகிறதுபோல, தவறுசெய்துகொண்டிருக்கும் பிள்ளையோடு அதிக அக்கறையோடு எந்த பூலோகப் பெற்றோரும் என்றுமே மன்றாடியதில்லை. எந்த மானிட அன்பின் அக்கறையும் தவறுகளுக்கு வருந்தாத நபரை மென்மையான முறையில் விரும்பி அழைத்து பின்தொடர்ந்ததில்லை. ஒவ்வொரு வீட்டிலும் தேவன் வாசஞ்செய்கிறார். பேசப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையையும் அவர் கேட்கிறார். ஏறெடுக்கப்படும் ஒவ்வொரு ஜெபத்தையும் உன்னிப்பாகக் கவனித்துக் கேட்கிறார். தகப்பன், தாய், சகோதரி, நண்பன், அண்டை வீட்டார் ஆகியோர் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதுபற்றிய ஒவ்வொரு ஆத்துமாவின் துக்கங்களிலும் ஏமாற்றங்களிலும் ஈடுபாடு

கொள்கிறார். நமது அன்றாடத் தேவைகளைக்குறித்து அவர் அக்கறை கொண்டிருக்கிறார். நமது தேவையை நிறைவுசெய்யத்தக்கதாக அவரது அன்பும் இரக்கமும் கிருபையும் தொடர்ந்து பாய்ந்துகொண்டிருக்கிறது. (14)

தேவனை உங்கள் பிதா என்று நீங்கள் அழைப்பீர்களானால் அவரது அன்பு என்றுமே மாறாததென்பதை அறிந்தவர்களாக அவரது ஞானத்தால் வழிநடத்தப்படவும், எல்லாக் காரியங்களிலும் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கவும், நீங்கள் உங்களை அவருடைய பிள்ளைகளென்று ஒப்புக்கொள்வீர்கள். நீங்கள் உங்களுடைய வாழ்க்கைக்கு அவரது திட்டத்தை ஏற்றுக்கொள்வீர்கள். தேவனுடைய பிள்ளைகளாக அவரது மதிப்பு, அவரது குணம், அவரது குடும்பம், அவரது பணி ஆகியவற்றை மிகவும் உயர்ந்த கவனஞ்செலுத்தப்படவேண்டிய இலக்குகளாக உங்கள் வசம் வைத்துக்கொள்வீர்கள். உங்கள் பிதாவுடனும் அவரது குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினருடனும் நீங்கள் கொண்டிருக்கும் உறவை அங்கீகரித்து மேன்மைப்படுத்துவதே உங்களது மகிழ்ச்சியாக இருக்கும். அவரது மகிமைக்காக அல்லது உங்களது மிக நெருக்கமான உறவினர்களது நற்பராமரிப்பிற்காக கொண்டுசெல்லும் எத்தகைய வேலையாயினும் அந்த வேலை எவ்வளவு தாழ்ச்சியுடையதாயினும் அதைச் செய்வதிலே நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். “பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே.” “நமது பிதா”வாக யாரை நோக்கிப்பார்க்கவேண்டுமென்று கிறிஸ்து கட்டளை யிடுகிறாரோ, அவர் பரலோகத்தில் இருக்கிறார். “நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்” – சங்கீதம் 115:3. அவருடைய பராமரிப்பிலே, “நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்” (சங்கீதம் 56:3) என்று கூறிக்கொண்டு நாம் பாதுகாப்போடு இளைப்பாறலாம். (15)

## ***“உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக” – மத்தேயு 6:9.*** (16)

ஒப்புயர்வற்ற ஜீவியாகிய தேவனைக்குறித்து நாம் பேசுவதற்கு பயன்படுத்தும் வார்த்தைகள் பக்திவிநயத்தோடு உச்சரிக்கப்படவேண்டும். இவ்வாறு ஆண்டவருடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்தவேண்டியது அவசியமாயிருக்கிறது. “அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது” – சங்கீதம் 111:9. தேவனைக்குறித்துக்காட்டும் பெயர்களை அல்லது சிறப்புப்பட்டங்களை நாம் ஒருபோதும் எந்தவகையிலும் அற்பமான முறையில் பயன்படுத்தக்கூடாது. ஜெபத்திலே, நம்மைச் சந்திக்கின்ற மகா உன்னதமானவரின் சிறப்பான அறைக்குள் நாம் பிரவேசிக்கிறோம். பரிசுத்த பயபக்தியோடு அவருக்குமுன்பாக நாம் வரவேண்டும். அவரது பிரசன்னத்திலே தூதர்கள் தங்கள் முகங்களை மூடிக்கொள்ளுகிறார்கள். கேருபீன்களும்

பரிசுத்தமான பிரகாசமான சேராபீன்களும் அவரது சிங்காசனத்தைப் பெருமிதமான பயபக்தியோடு நெருங்குகிறார்கள். எல்லைக்குட்பட்ட பாவ ஜீவிகளாகிய நாம், நம்மைப் படைத்த ஆண்டவருக்குமுன்பாக வரும்போது, எவ்வித பயபக்தியான தன்மையோடு இருக்கவேண்டும்! (17)

ஆனால் அவருடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவது என்பதின் பொருள் இதைவிட அதிகமான மேலானதாகும். கிறிஸ்துவின் நாட்களில் வாழ்ந்த யூதர்களைப்போல தேவனுக்கு வெளிப்படையான முறையில் மாபெரும் பயபக்தியை நாம் வெளிப்படுத்தி, அதேநேரம் அவரது நாமத்தைத் தொடர்ந்து புனிதங்கெடச் செய்யலாம். " கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்.... அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்" – யாத். 34:5–7. "எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர்" (எரேமியா 33:16) என்னும் பெயரால் கிறிஸ்துவின் சபை அழைக்கப்படும் என்று எழுதப்பட்டுள்ளது. இந்த நாமம், கிறிஸ்துவின் ஒவ்வொரு பின்னடியாருக்கும் இடப்பட்டிருக்கிறது. இது தேவனுடைய பிள்ளையின் சுதந்திரமாகும். குடும்பத்தின் அங்கத்தினர்கள் தகப்பனின் பெயரைக்கொண்டு அழைக்கப்படுகிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி இஸ்ரவேலர் பயங்ரகமான வேதனைகளையும் கடுந்துன்பங்களையும் அனுபவித்துக்கொண்டிருந்த காலத்தில்: "உம்முடைய நாமம் எங்களுக்குத் தரிக்கப்பட்டுமிருக்கிறதே" (எரேமியா 14:9) என்று ஜெபித்தார். (18)

இந்த நாமம், பரலோகத்தின் தூதர்களாலும் விழுந்துபோகாத உலகிலுள்ள குடிமக்களாலும் பரிசுத்தமாக்கப்படுகிறது. "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்று நீங்கள் ஜெபிக்கும்போது, அந்த நாமம், இந்த உலகத்திலும் உங்களிலும் பரிசுத்தப்படுவதாக என்று நீங்கள் வேண்டுகிறீர்கள். தேவன் மனிதர்களுக்கும் தூதர்களுக்கும் முன்பாக உங்களை தமது பிள்ளைகளென்று ஒப்புக்கொண்டிருக்கிறார். உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்திற்கு அவமதிப்பு ஏற்படாதபடிக்கு ஜெபியுங்கள். (யாக்கோபு 2:7). தேவன் உங்களைத் தமது பிரதிநிதிகளாக இந்த உலகத்திற்குள் அனுப்புகிறார். உங்கள் வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் நீங்கள் தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்திக்காட்டவேண்டும். அந்த விண்ணப்பம் அவரது பண்பையுடையவர்களாக இருக்கவேண்டுமென்று உங்களுக்கு அழைப்புவிடுகிறது. (19)

வாழ்க்கையிலும் குணத்திலும் தேவனுடைய அதேவிதமான வாழ்க்கையையும் குணத்தையும் காட்டாவிட்டால், நீங்கள் அவருடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்தமுடியாது. நீங்கள் அவரை உலகிற்கு

வெளிப்படுத்தமுடியாது. கிருபையையும் கிறிஸ்துவின் நீதியையும் ஏற்றுக்கொள்வதின்மூலமாகமட்டுமே இந்தக் காரியத்தை செய்யமுடியும். (20)

### ***“உம்முடைய ராஜ்யம் வருவதாக” – மத்தேயு 6:10.*** (21)

தேவன் நம்முடைய தகப்பன்; தமது பிள்ளைகளைப்போன்று அவர் நம்மை நேசிக்கிறார்; பராமரிக்கிறார். மேலும் அவர் இந்த அண்டசராசரத்தின் இராஜாவாகவும் இராஜாதிராஜாவாகவும் இருக்கிறார். அவரது இராஜ்யத்தின் முக்கிய காரியங்களே நமக்கு ஆர்வமூட்டும் காரியங்களாகும். அந்த இராஜ்யத்தைக் கட்டி எழுப்புவதற்காக நாம் உழைக்கவேண்டும். (22)

கிறிஸ்துவின் சீடர்கள் அவரது மகிமையின் இராஜ்யத்தின் உடன்வருகையை எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த ஜெபத்தை அவர்களுக்குக் கொடுத்ததின்மூலமாக, அந்த இராஜ்யம், அப்பொழுது நிர்மாணிக்கப்படப்போவதில்லை என்று அவர்களுக்கு இயேசு கற்றுக்கொடுத்தார். அந்த இராஜ்யத்தின் வருகை, எதிர்காலத்தில் நடைபெறும் ஒரு சம்பவம் என்ற எண்ணத்தில் அவர்கள் ஜெபிக்கவேண்டும். எனினும் இந்த விண்ணப்பம் அவர்களுக்கு ஒரு நிச்சயத்தைக் கொடுப்பதாகவுமிருந்தது. அவர்கள் தங்களுடைய நாட்களிலே இராஜ்யத்தின் வருகையை எதிர்நோக்கக் கூடாதென்றிருந்தபோதிலும், அதற்காக ஜெபிக்கக் கட்டளையிட்டார் என்பதானது, தேவன் குறிக்கும் காலக்கட்டத்திலே அந்த இராஜ்யம் நிச்சயமாக வரும் என்பதற்கு ஒரு ஆதாரமாக இருந்தது. (23)

ஒவ்வொரு நாளும் பாவத்தாலும் கலகத்தாலும் நிறைந்த இருதயங்கள் இயேசுவின் அன்பின் ஆளுகைக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும்போது, தேவனுடைய கிருபையின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்த மகிமையின் இராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படுவது, இந்த உலகத்திற்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரும் வரைக்கும் நடைபெறாது. “வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரிகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்” – தானியேல் 7:27. “உலகம் உண்டானது முதல்” (மத்தேயு 25:34) அவர்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். கிறிஸ்து தமது மாபெரும் வல்லமையை தம்மிடம் எடுத்து ஆளுகைசெய்வார். (24)

பரலோகக் கதவுகள் மீண்டும் உயர்த்தப்படும். பதினாயிரம் பதினாயிரமான, ஆயிரம் ஆயிரமான பரிசுத்த தூதர்களுடன் நமது மீட்பர்

இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் வருவார். யெகோவா இம்மானுவேல், “பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்” – சகரியா 14:9. “அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்” – வெளிப்படுத்தல் 21:3. (25)

ஆனால் அந்த வருகைக்கு முன்னர், “ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்” (மத்தேயு 24:14) என்று இயேசு கூறினார். அவரது கிருபையின் நற்செய்தி பூமியெங்கும் எடுத்துச்செல்லப்படும்வரை அவரது இராஜ்யம் வராது. எனவே நாம் நம்மை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து, மற்ற ஆத்துமாக்களை ஆதாயஞ்செய்யும்போது, அவரது வருகையைத் துரிதப்படுத்துகிறோம். “அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு” (அப்போஸ்தலர் 26:18), “இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்” (ஏசாயா 6:8) என்று சொல்லி, அவரது ஊழியத்திற்குத் தங்களை முற்றிலுமாக ஒப்படைப்பவர்கள் மாத்திரமே, மேற்கூறப்பட்ட காரியங்களைச் செய்யமுடியும். அவர்கள்மாத்திரமே, “உம்முடைய இராஜ்யம் வருவதாக” என்று உண்மையும் உத்தமமுமாக ஜெபிக்கமுடியும். (26)

***“உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக” – மத்தேயு 6:10.*** (27)

தேவனுடைய சித்தம் அவருடைய பரிசுத்தப் பிரமாணத்தின் கட்டளைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரமாணத்தின் கொள்கைகளே பரலோகத்தின் கொள்கைகளாகும். தேவனுடைய சித்தத்தை அறிந்து அதைச் செய்வதே தூதர்கள் தங்களது வல்லமையை ஈடுபடுத்திக்கொள்ளுகிற மாபெரும் சேவையாகும். அதைவிட மிக உயர்ந்த அறிவை முயன்று அடைவது பரலோகத் தூதர்களுக்கும் கூடாத காரியமாகும். (28)

ஆனால் பரலோகத்திலே சேவைசெய்வது சட்டத்திற்கு உடன்பட்ட உணர்வோடு செய்யப்படுகிறதில்லை. யெகோவாவின் பிரமாணத்திற்கு எதிராக சாத்தான் கலகம்பண்ணியபோது, பிரமாணம் என்று இருக்கிறது என்ற எண்ணம், அவர்கள் நினைத்திராத ஒன்றைக்குறித்து அவர்களை

விழிப்படையச்செய்ததுபோன்று இருந்தது. தூதர்கள் தங்களது ஊழியத்திலே பிணையாட்களைப்போன்று இருக்கவில்லை. மாறாக, குமாரர்களைப் போலிருந்தார்கள். அவர்களுக்கும் அவர்களைப் படைத்தவருக்குமிடையே ஒரு பூரண ஐக்கியம் நிலவியது. கீழ்ப்படிதல் அவர்களுக்கு ஒரு அடிமையின் வேலைபோன்று இருக்கவில்லை. தேவன்மீதான அன்பு அவர்களது சேவையை மகிழ்ச்சியாக மாற்றியது. ஆகவே மகிமையின் நம்பிக்கையாக கிறிஸ்து வாழுகின்ற ஒவ்வொரு ஆத்துமாவிலும் "உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" (சங்கீதம் 40:8) என்ற வார்த்தைகள் திரும்பவும் எதிரொலிக்கின்றன. (29)

இந்தப் பூமியிலே தீமையின் ஆளுகை முடிவடையவும், பாவம் என்றுமாக அழிக்கப்படவும், நீதியின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படவுந்தக்கதாக "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஏறெடுக்கப்படும் விண்ணப்பமே ஒரு ஜெபமாகும். அப்பொழுது பரலோகத்திலிருப்பதைப்போலவே பூலோகத்திலும் அவரது "தயையுள்ள சித்தம் முழுவதும்" (2 தெசெலானிக்கேயர் 1:12) நிறைவேறும். (30)

***"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" – மத்தேயு 6:11.*** (31)

இயேசு நமக்குக் கற்றுக்கொடுத்த ஜெபத்தின் முதல்பாதி அவரது நாமத்தைப்பற்றியும், இராஜ்யத்தைப்பற்றியும், தேவனுடைய சித்தத்தைப்பற்றியும், அவருடைய நாமம் மேன்மைப்படவும், அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படவும், அவருடைய சித்தம் செய்யப்படவும்வேண்டும் என்று கூறுகிறது. இவ்வாறு தேவனுடைய சேவையை உங்களது முதல் முக்கியப் பொறுப்பாக வைத்துக்கொள்ளும்போது, உங்களது சொந்தத் தேவைகள் வழங்கப்படும் என்ற நம்பிக்கையோடு அவரிடத்தில் கேட்கலாம். சுயத்தை வெறுத்து உங்களைக் கிறிஸ்துவுக்கு தத்தஞ்செய்துவிட்டீர்களானால் நீங்கள் தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினராகின்றீர்கள். பிதாவின் வீட்டிலுள்ள அனைத்தும் உங்களுடையதே. இந்த உலகத்திலும் வரப் போகின்ற உலகத்திலுமுள்ள தேவனுடைய பொக்கிஷங்கள் அனைத்தும் உங்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. தேவதூதர்களின் சேவை, அவருடைய ஆவியானவரின் ஈவு, அவரது ஊழியக்காரரின் ஊழியங்கள் ஆகிய அனைத்தும் உங்களுக்கே; உங்களுக்கு நன்மையாக இருக்கும் வரைக்கும் இந்த உலகமும் அதிலுள்ள அனைத்தும் உங்களுடையவைகளாகும். துன்மார்க்கர் உங்களிடத்தில் கொண்டுள்ள பகைகூட உங்களை

பரலோகத்திற்கு ஒழுங்குபடுத்தும் ஓர் ஆசீர்வாதமென்று நிரூபிக்கும். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; எல்லாம் உங்களுடையது" – 1 கொரி. 3:23,21. (32)

தன் சுதந்தரத்தை ஆளும் ஆளுகைக்கு உட்படாத குழந்தையைப் போல நீங்கள் இருக்கிறீர்கள். சாத்தான் தன்னுடைய தந்திரங்களினால் ஏதேனில் முதல் தம்பதிகளுக்குச் செய்ததுபோல, உங்களை ஏமாற்றி விடாதபடிக்கே தேவன் உங்களுடைய விலைமதிப்புள்ள உடைமையை உங்களிடத்தில் ஒப்படைக்கிறதில்லை. கொள்ளைக்காரனின் (சாத்தானின்) கைக்கு எட்டாதபடி அதற்கும் அப்பால் பாதுகாப்பாக கிறிஸ்து அதை வைத் திருக்கிறார். அன்றாடத் தேவைக்கு அவசியமானதை குழந்தையைப்போல ஒவ்வொரு நாளும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். எனவே ஒவ்வொரு நாளும் "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" (மத்தேயு 6:11) என்று நீங்கள் ஜெபிக்க வேண்டும். நாளையத்தினத்திற்காக போதுமானது உங்களுக்கு இல்லாவிட்டால் கலங்கவேண்டாம். அவரது வாக்குத்தத்தத்தின் நிச்சயம் உங்களுக்கு இருக்கிறது. "கர்த்தரை நம்பி நன்மைசெய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்" "நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை" – சங்கீதம் 37:3,25. (33)

கேரீத் ஆற்றங்கரையிலே காகங்களை அனுப்பி எலியாவைப் போஷித்த அதே தேவன், அவரது உத்தமமான, சுயத்தைத் தியாகஞ்செய்த பிள்ளைகளில் ஒருவரைக்கூட புறக்கணித்து கடந்துசெல்லமாட்டார். நீதியாய் நடக்கிற மனிதனைப்பற்றி: "அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்" (ஏசாயா 33:16) என்று எழுதப்பட்டுள்ளது. "அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப் போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள்" சங்கீதம் 37:19; "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" – ரோமர் 8:32. தமது விதவைத் தாயின் கவலை களையும் துன்பங்களையும் இலகுவாக்கி, நாசரேத்திலுள்ள குடும்பத்தைப் போஷிக்க உதவிசெய்த அவர், தனது பிள்ளைகளுக்கு உணவு கொடுப்பதற்காகப் பாடுபடும் ஒவ்வொரு தாய்க்கும் இரங்கி உதவிசெய்கிறார். "அவர்கள் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி" – மத்தேயு 9:36. அந்த திரள்கூட்ட மக்கள்மீது பரிவுகாட்டிய அவர், துன்பப்படும் ஏழைகள்மீது இன்றும் பரிவுகொண்டவராக

இருக்கிறார். அவரது கரம், ஆசீர்வதிப்பதற்காக அவர்களை நோக்கி நீட்டப்பட்டிருக்கிறது. அவருடைய சீடர்களுக்கு அவர் கொடுத்த அந்த ஜெபத்தில்தானே ஏழைகளை நினைத்துக்கொள்ளும்படி அவர் நமக்குப் போதிக்கிறார். (34)

“எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்” என்று நாம் ஜெபிக்கும்போது, மற்றவர்களுக்காகவும் நமக்காகவும் கேட்கிறோம். தேவன் நமக்குக் கொடுக்கிறது நமக்காக மாத்திரமல்ல என்று ஒப்புக்கொள்ளுகிறோம். ஏழைகளை போஷிப்பதற்காக நம்மீது ஒரு நம்பிக்கைவைத்து தேவன் கொடுக்கிறார். அவருடைய தயையினாலே ஏழைகளைப் பராமரிக்கிறார் (சங்கீதம் 68:10). மேலும், “அன்றியும் அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி: நீ பகல்விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும், உன் பந்து ஜனங்களையாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்கவேண்டாம்; ...நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்” – லூக்கா 14:12–14; (35)

“நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவரா யிருக்கிறார்” “சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்” – 2 கொரிந்தியர் 9:8,6. (36)

அன்றாட அப்பத்திற்காக நாம் ஜெபிக்கும் ஜெபம், நமது உடலைப் பேணிப் பாதுகாக்கும் உணவைப்பற்றிமட்டும் கூறாமல், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஆத்துமாவைப் போஷிக்கும் ஆவிக்குரிய அப்பத்தைப்பற்றியும் கூறுகிறது. “அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்” – யோவான் 6:27. அவர்: “நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்” (யோவான் 6:51) என்றார். நமது மீட்பரே ஜீவ அப்பம். அவரது அன்பை நோக்கிப்பார்ப்பதின்மூலமாக, அவ்வன்பை ஆத்துமாவிலே பெற்றுக்கொள்வதின்மூலமாக, வானத்திலிருந்திறங்கிவந்த அப்பத்தை நாம் புசிக்கிறோம். (37)

அவரது வசனத்தின்மூலமாக நாம் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்கிறோம். நாம் விளங்கிக்கொள்ளத்தக்கதாக தேவனுடைய வார்த்தையை விளக்கிக் காட்டவும், அதிலுள்ள வேதசத்தியங்கள் நமது இருதயங்களை வந்தடையவும் தக்கதாக பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டிருக்கிறார். (38)

ஒவ்வொரு நாளும் அவரது வசனத்தை வாசிக்கும்போது, நாம் அந்த நாளின் தேவைக்கேற்றபடி நமது ஆத்துமாவை பலப்படுத்தத்தக்கதான சத்தியத்தை தேவன் அவரது ஆவியானவரை அனுப்பி, நமக்கு விளக்கிக் காட்டுவார். நமக்குத் தேவையான ஆசீர்வாதங்களையும் ஒவ்வொரு நாளும் நாம் கேட்கவேண்டுமென்று நமக்குப் போதித்திருக்கிறார். ஏனெனில் நமது நன்மைக்காக நிறைவேற்றப்படத்தக்கதான ஒரு நோக்கம் தேவனுக்குண்டு. அவரோடு நாம் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டுமென்று நாடுவதினாலே அவர் நம்மீதுகொண்ட தொடர்ச்சியான அக்கறையின்மீது நாம் முற்றிலும் சார்ந்திருக்கவேண்டுமென்பதை உணரவேண்டுமென்று அவர் விழைகின்றார். கிறிஸ்துவோடுகொண்ட இந்தத் தொடர்பினாலே ஜெபத்தின்மூலமாகவும் அவரது வார்த்தைகளில் காணப்படுகின்ற மாபெரும் விலையேறப்பெற்ற சத்தியங்களைப் படிப்பதின் மூலமாகவும் பசியுள்ள ஆத்துமாக்கள் போஷிக்கப்படுவதைப்போன்று நாமும் போஷிக்கப்படுவோம். தாகமாயிருப்ப வர்களைப்போன்று ஜீவஊற்றிலே அருந்தி நாம் புத்துணர்ச்சியடைவோம். (39)

***“எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத் தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே” – லூக்கா 11:4.*** (40)

மற்றவர்களை மன்னித்தால்தான் நாம் தேவனிடமிருந்து மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று இயேசு போதிக்கிறார். தேவனுடைய அன்பே நம்மை அவரிடத்தில் இழுத்துக்கொள்ளுகிறது. அந்த அன்பு நமது சகோதருக்கான அன்பை நம்மிடத்தில் உருவாக்காமல், நம்முடைய இருதயங்களைத் தொடமுடியாது. (41)

“கர்த்தருடைய ஜெபத்தைக் கூறிமுடித்தபின்னர் இயேசு: “மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்” (மத்தேயு 6:14,15) என்று மேலும் கூறினார். மன்னிக்காத தன்மையுடைய நபர், தேவனிடத்திலிருந்து எந்த ஒரு வாய்க்காலின்மூலமாக மாத்திரமே இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளமுடியுமோ, அந்த வாய்க்காலின்

தொடர்பையே தடுத்துப்போடுகிறார். நமக்குத் துன்பமிழைத்தவர்கள் அந்தத் தவறுக்காக மன்னிப்புக் கேட்கும்வரை அவர்களுக்கு மன்னிக்காமல் நிறுத்திவைப்பதே நாம் செய்யும் சரியான காரியமென்று நினைக்கக்கூடாது. பாவஅறிக்கையின்மூலமாகவும் மனந்திரும்புதலின் மூலமாகவும் அவர்களது இருதயங்களைத் தாழ்த்தவேண்டியது சந்தேகமின்றி அவர்கள் செய்யவேண்டிய காரியமே. ஆனால் இவ்வாறு நமக்கு எதிராக மீறுதல் செய்தவர்கள், அறிக்கைசெய்தாலும் செய்யாவிட்டாலும் நாம் அவர்களிடத்தில் பரிதாபங்கொள்ளவேண்டும். எந்தஅளவிற்கு புண்படும்வண்ணம் நமது மனதை அவர்கள் காயப்படுத்தியிருந்தாலும் நமது மனக்குறைவுகளை நெஞ்சிலே வைத்து, நமக்கு இழைக்கப்பட்ட தீங்குகளுக்காக நமக்கு நாமே பச்சாதாபங்கொள்ளக்கூடாது. ஆனால் தேவனுக்கெதிராக நாம் செய்த குற்றங்கள் மன்னிக்கப்படவேண்டுமென்று நாம் நம்பிக்கொண்டிருக்கிறபடியினால், நாம் நமக்குத் தீங்கு செய்த அனைவரையும் மன்னிக்கவேண்டும். (42)

பெரும்பாலும் அநேகர் கருதுவதைவிட, மன்னிப்பு என்ற வார்த்தைக்கு விரிவான பொருளுண்டு. "மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார்" என்று தேவன் வாக்குத்தத்தம் கொடுக்கிறபோது, நாம் விளங்கிக்கொள்ளும் அனைத்தையும்விட, அந்த வாக்குத்தத்தத்தின் பொருள் மிக அதிகம் என்று அவர் கூறுகிறதுபோலத் தெரிகிறது. "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" (ஏசாயா 55:7–9) என்று தேவன் கூறுகிறார். (43)

தேவன் கொடுக்கும் மன்னிப்பு வெறுமனே ஒரு சட்டப்பூர்வமான செயல்மூலம் நம்மைக் கண்டனத்திநின்று விடுலைசெய்யும் காரியமல்ல. அது பாவத்திற்காகக் கொடுக்கப்படும் மன்னிப்புமாத்திரமல்ல, பாவத்தினின்று திருத்தி பழையநிலைக்குக் கொண்டுவரும் காரியமுமாகும். அது இருதயத்திலே மாற்றத்தை ஏற்படுத்துகின்ற வழிந்தோடும் மீட்பின் அன்பாகும். "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்" (சங்கீதம் 51:10) என்று தாவீது ஜெபித்தபோது, மன்னிப்பைப்பற்றின சரியான கருத்தைக் கொண்டிருந்தான். மீண்டும் அவன்: "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்" (சங்கீதம் 103:12) என்றான். (44)

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

கிறிஸ்துவிலே தேவன் நமது பாவங்களுக்காக தம்மைக் கொடுத்தார். தம்முடைய அன்பை வெளிப்படுத்தி, நம்மை அவரிடம் இழுத்துக்கொள்வதற்காக அநீதி உள்ளவர்களுக்காக நீதிபரராகிய அவர் சிலுவையில் கொடூர மரணத்தை அனுபவித்தார். பாவப்பாரத்தை நமக்காகச் சுமந்தார். மேலும் அவர்: "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபேசியர் 4:32) என்று கூறுகிறார். தெய்வீக ஜீவனாகிய கிறிஸ்து உங்களில் வாசஞ்செய்யட்டும். உங்கள்மூலமாக நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கையைத் தூண்டி, பாவத்தால் வாதிக்கப்பட்டவர்களுக்கு பரலோகத்தில் உதித்த அந்த அன்பை கொண்டுவரட்டும். அவரிடமிருந்து இரக்கத்தைப் பெற்று, மற்றவர்களுக்கு அவரது கிருபையை வெளிப்படுத்தும்படி நம்மை ஒப்புக்கொடுக்கிறோம் என்பதே நாம் தேவனிடத்தில் வரும்போது நுழைவாயிலில் நம்மை சந்திக்கும் நிபந்தனையாக இருக்கிறது. (45)

தேவனுடைய மன்னிக்கும் அன்பை நாம்பெறவும், மற்றவர்களுக்கு அளிக்கவும் நமக்கு அவசியமான ஒரே காரியம், நம்மேல் அவருக்கிருக்கிற அன்பை அறிந்து விசுவாசிப்பதேயாகும் (1 யோவான் 4:16). அந்த அன்பை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளாதிருக்க, தன்னால் செயல்படுத்தக்கூடிய அதிகாரத்தின்மூலம் சாத்தான் ஒவ்வொரு வஞ்சக வழியிலும் வேலைசெய்து கொண்டிருக்கிறான். நமது தவறுகளும் மீறுதல்களும் மிகவும் பொறுக்கக் கூடாத அளவிற்கு மோசமானவையென்றும், நமது ஜெபங்களின்மீது ஆண்டவருக்கு எந்த நன்மதிப்பும் கிடையாதென்றும், எனவே அவர் நம்மை இரட்சிக்கவும் ஆசீர்வதிக்கவுமாட்டாரென்றும் எண்ணும்படி நம்மை வழிநடத்துவான். நம்மிலே நமது பலவீனத்தைத்தவிர வேறு எதையும் காணமுடியாது. தேவனிடத்தில் நமக்காகப் பரிந்துரை செய்யத்தக்கதான காரியம் நம்மில் எதுவுமே இல்லை. இதில் எந்தப் பயனுமில்லையென்றும், நமது குணக்கேடுகளைச் சரிப்படுத்தமுடியாதென்றும் சாத்தான் நம்மிடம் கூறுகிறான். நாம் தேவனிடத்திற்கு வர முயற்சிசெய்யும்போது: ஜெபிப்பதால் உனக்கு எந்தப்பயனும் இல்லை; அந்தத் தீயக்காரியத்தை நீ செய்யவில்லையா? தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, உன் சொந்த மனச்சாட்சியை நீ மீறவில்லையா என்று சத்துரு நமது காதோடு இரகசியமாகப் பேசுவான். ஆனால் நாம் அவனை நோக்கி: "அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகலபாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1 யோவான் 1:7) என்று கூறலாம். பாவஞ்செய்துவிட்டோம், நம்மால் ஜெபிக்க முடியாது என்று நாம் உணரும் வேளைதான் நாம்

ஜெபிக்க வேண்டிய வேளை என்பதை அறிந்துகொள்ளவேண்டும். பாவத்தை நினைத்து வெட்கப்பட்டு, மிகவும் ஆழமான, தாழ்ந்த நிலையில் இருப்பதாக உணரலாம். ஆனால் நாம் கண்டிப்பாக ஜெபிக்கவேண்டும். விசுவாசிக்க வேண்டும். "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதானபாவி நான்" – 1 தீமோத்தேயு 1:15. மன்னிப்பு, தேவனோடு ஒப்புரவாகுதல் ஆகியவை நமது கிரியைகளுக்கான ஒரு வெகுமதியாக நம்மிடம் வந்தடைகிறதில்லை. இந்தக் காரியம் பாவமுள்ள மனிதர்களின் நற்பண்புகளால் வழங்கப்படுகிறதில்லை. அது நமக்காகக் கொடுக்கப்படும் கொடையாகும். அந்தக் கொடைப்பொருள், கிறிஸ்துவின் கறைதிரையற்ற நீதியை அடித்தளமாகக் கொண்டது. (46)

பாவத்திற்காகச் சாக்குப்போக்கு சொல்லி, நமது பாவத்தின் கொடூரத் தன்மையைக் குறைக்க நாம் முயற்சிசெய்யக்கூடாது. பாவத்திற்கான தேவனுடைய மதிப்பீட்டை நாம் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அது நிச்சயமாக பாரமுடையதே. பாவத்தின் பயங்கரமான கொடுமையை கல்வாரி மாத்திரமே வெளிப்படுத்தமுடியும். நமது சொந்தப் பாவப்பாரத்தை நாம் சுமக்க வேண்டியதிருந்திருக்குமானால் அது நம்மை நொறுக்கிப்போட்டிருக்கும். ஆனால் நாம் தகுதியற்றவர்களாக இருந்தபோதிலுங்கூட பாவமற்ற அவர் நம்முடைய இடத்தை எடுத்துக்கொண்டார். நமது அநியாயத்தையெல்லாம் அவர் சுமந்து தீர்த்தார். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" – 1 யோவான் 1:9. அவரது சொந்தப்பிரமாணத்திற்கடுத்ததில் நீதியுள்ளவராக இருந்தபோதிலும், இயேசுவை நம்புகிற அனைவரையும் நீதிமான்களாக்குகிறவராய் இருக்கிறாரென்பது என்ன மகிமையான சத்தியம்! இருந்தபோதிலும், "தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபைசெய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார்" – மீகா 7:18. (47)

***"எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" – மத்தேயு 6:13.*** (48)

பாவத்திலே மயக்கி சிக்கவைக்கின்ற காரியமே சோதனையாகும். இது தேவனிடமிருந்து வருகிறதில்லை. சாத்தானிடமிருந்தும், நமது சொந்த இருதயங்களிலுள்ள தீமையிலிருந்தும் வருகின்றது. "தேவன் பொல்லாங்

கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல" யாக்கோபு 1:13. (49)

மனிதர்களுக்கும், தூதர்களுக்கும்முன்பாக, நமது குணங்களிலுள்ள கேடுகள் வெளிப்படவும், அதின்மூலம் அவனுக்குச் சொந்தமானவர்கள் என்று உரிமைபாராட்டி நம்மைச் சோதனைக்குள் கொண்டுசெல்ல வகைதேடுகிறான். சகரியா தீர்க்கதரிசி கொடுத்த அடையாள தீர்க்க தரிசனத்திலே சாத்தான் கர்த்தருடைய தூதனுடைய வலதுபக்கத்திலே நின்றுகொண்டிருப்பதாகக் காணப்பட்டான். அவன் அழுக்கான வஸ்திரம் தரித்திருந்த பிரதான ஆசாரியனாகிய யோசுவாவைக் குற்றப்படுத்தி, அவனுக்காகத் தூதன் செய்யவிரும்பிய பணியை எதிர்த்துக் கொண்டிருந்தான். கிறிஸ்து தம்மிடத்தில் இழுக்க வகைதேடிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவிடமும் சாத்தானின் மனப்பாங்கு எப்படியிருக்கிறது என்பதை இது காட்டுகிறது. சத்துரு நம்மைப் பாவத்திற்கு இழுத்துச்செல்கிறான். பின்பு பரலோகப் பிரபஞ்சத்தின்முன் நாம் தேவனின் அன்பைப் பெறத் தகுதியற்றவர்கள் என்று நம்மைக் குற்றப்படுத்துகிறான். "கர்த்தர் சாத்தானை நோக்கி: கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக; சாத்தானே, எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; இவன் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி அல்லவா என்றார்." யோசுவாவை நோக்கி: "பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச்செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் என்றார்" – சகரியா 3:2–4. (50)

தேவன் தமது மாபெரும் அன்பினிமித்தம் அவரது ஆவியானவரின் மாபெரும் கிருபைகளை நம்மிலே வளரச் செய்ய வழிவகைகளைத் தேடிக் கொண்டிருக்கிறார். இடையூறுகள், உபத்திரவங்கள், வறுமை ஆகியவற்றை ஒரு சாபமாக அல்ல, நமது ஜீவியத்தின் மாபெரும் ஆசீர்வாதமாக எண்ணி, அவைகளை எதிர்த்துப் போராடத்தக்கதாக அவர் நம்மை அனுமதிக்கிறார். எதிர்த்துப் போராடிய ஒவ்வொரு சோதனையும், தைரியமாகச் சகித்துக்கொண்ட ஒவ்வொரு உபத்திரவமும், நமக்கு புதிய அனுபவத்தைக் கொடுத்து, நமது குணம் கட்டப்படுகின்ற வேலையில் நம்மை முன்னேற்றுவிக்கிறது. தெய்வீக வல்லமையின்மூலமாக சோதனையை எதிர்த்துநிற்கின்ற ஆத்துமாவானது, உலகத்திற்கும் பரலோகப்பிரபஞ்சத்திற்கும் கிறிஸ்துவின் கிருபையின் செயல்திறனை வெளிப்படுத்துகிறது. (51)

உபத்திரவங்களால் அவை எவ்வளவு கசப்பானவைகளாயிருப்பினும் நாம் கலக்கமடையத் தேவையில்லை. எனினும் நமது சொந்தத் தீமையின் இச்சைகளால் இழுப்புண்டுபோகும் நிலைக்கு கொண்டுவரப்படும்படி தேவன்

அனுமதிக்காமலிருக்க நாம் ஜெபிக்கவேண்டும். கிறிஸ்து நமக்கு அருளின ஜெபத்தை ஏறெடுப்பதின்மூலமாக, நம்மைப் பாதுகாப்பான வழியில் நடத்தத்தக்கதாக தேவனிடம்கேட்டு, அவரது ஆலோசனைக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம். நாம் தெரிந்துகொண்ட எந்த வழியிலாவது நடக்கத் தீர்மானித்துக்கொண்டு, இந்த ஜெபத்தை நேர்மையான முறையில் நாம் செய்யமுடியாது. அவரது கரம் நம்மை நடத்துவதற்காக நாம் காத்திருப்போம். ஏசாயா 30:21 – ல் “வழி இதுவே, இதிலே நடவுங்கள்” என்ற வார்த்தைகளை சொல்லியவாறே அவரது சத்தத்திற்கு செவிசாய்ப்போம். (52)

சாத்தானுடைய ஆலோசனைகளை பின்பற்றுவதால் வரும் நன்மை களைக்குறித்து யோசிக்கத் தரித்துநிற்பதானது பாதுகாப்பானதல்ல. பாவம் என்றாலே, அதில் திளைக்கின்ற ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் அவமானமும் பேரழிவுந்தான். அது குருடாக்கி ஏமாற்றும் தன்மை கொண்டது. அது இனிய வார்த்தைகளால் நம்மை மயக்கிச் சிக்கவைத்துவிடும். சாத்தானின் தளத்தில் துணிகரமாக நுழைவோமானால், அவனது வல்லமையினின்று பாதுகாக்கப்படுவோம் என்று எந்த நிச்சயமும் கிடையாது. நம்மை அடைவதற்கான வழியைச் சோதனைக்காரன் கண்டுபிடிக்கக்கூடாதபடிக்கு, நம்மிடமிருக்கும் ஒவ்வொரு நுழைவாயிலையும் நாம் மூடவேண்டும். (53)

“எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்” என்ற ஜெபம், தன்னில்தானே ஒரு வாக்குத்தத்தமாக அமைந்துள்ளது. நாம் நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுப்போமானால், “உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்” (1 கொரிந்தியர் 10:13) என்ற ஒரு உறுதிவாக்கு நமக்கு இருக்கிறது. (54)

அவரது நீதியில் விசுவாசம்வைப்பதின்மூலமாக கிறிஸ்து நமது இருதயத்தில் வாசஞ்செய்வதுமாத்திரமே தீமைக்கு எதிரான ஒரே பாதுகாப்பாகும். நமது இருதயங்களில் சுயநலம் இருப்பதால் சோதனையின் வல்லமை நம்மை மேற்கொள்ளுகிறது. ஆனால் தேவனுடைய மாபெரும் அன்பை நோக்கிப்பார்க்கும்போது, தன்னலம் அதின் அருவருப்பான வெறுப்பூட்டுகின்ற தோற்றத்தில் காணப்படும். அது நமது ஆத்துமாவைவிட்டு வெளியேற்றப்பட வேண்டுமென்று நாம் விரும்புவோம். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்போது, நமது இருதயங்கள் மென்மையாக்கப்பட்டு உள்ளடங்கும்; சோதனை அதின் சக்தியை இழக்க, கிறிஸ்துவின் கிருபை குணத்தை மாற்றுகிறது. (55)

கிறிஸ்து எந்த ஆத்துமாவிற்காக மரித்தாரோ, அந்த ஆத்துமாவை ஒருபோதும் கைவிடமாட்டார். அந்த ஆத்துமா அவரைவிட்டு விலகி, சோதனைகளால் நிறைந்து காணப்படலாம். ஆனால் எந்த ஆத்துமாவிற்காக தமது சொந்த ஜீவனையே பிணையமாகக் கொடுத்தாரோ, அந்த ஆத்துமாவை ஒருபோதும் அவரால் கைவிடமுடியாது. நமது ஆவிக்குரியப் பார்வை திறக்கப்படுமானால் ஆத்துமாக்கள் அடக்குமுறையினால் பணிந்து, துக்கத்தால் பாரமடைந்து, அமுக்கிவைக்கப்பட்ட அரிக்கட்டுகளுக்கு அடியில் அழுத்தப்பட்ட வண்டியைப்போல அதைரியத்தால் மரிக்க ஆயத்தமான நிலையில் இருப்பதை நாம் காணலாம். சோதனையில் அகப்பட்டு, செங்குத்தான பாறையின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கிற இந்த நபர்களுக்கு உதவிசெய்யத் தூதர்கள் துரிதமாகப் பறந்துவருவதை நாம் காணவேண்டும். பரலோகத்திலிருந்து வரும் தூதர்கள் இந்த ஆத்துமாக்களை சுற்றிவளைத்துக்கொண்டிருக்கும் தீயதூதர்களின் சேனை பின்வாங்கிச்செல்லும்படியாக முழு ஆற்றலுடன் விரட்டியடித்து, உறுதியான அடித்தளத்தின்மீது பாதங்களைப் பதிக்கத்தக்கதாக அவர்களை வழிநடத்துவார்கள். எப்படி இந்த உலகில் இரண்டு படைகளுக்கிடையில் யுத்தம் நடக்குமோ, அதேபோன்று உண்மையாகவே இந்த இரண்டு படைகளுக்கிடையிலும் யுத்தம் நடக்கின்றது. ஆவிக்குரிய போராட்டம் எனப்படும் இத்தகைய முக்கிய காரியத்தின்மீது நித்தியவாழ்வு சார்ந்திருக்கின்றது. (56)

“கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்” (லூக்கா 22:31,32) என்று பேதுருவிடம் கூறப்பட்டதுபோன்று வார்த்தைகள் நமக்கும் கூறப்படுகின்றன. நாம் தனியாக விடப்படவில்லை. எனவே தேவனுக்கு நன்றிகூறுங்கள். “தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” – யோவான் 3:16. அப்படிப்பட்ட தேவன் மனிதனுக்கும் தமக்கும் விரோதியானவனோடு நடக்கும் போராட்டத்தில் நம்மைவிட்டு விலகமாட்டார். “சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது” – லூக்கா 10:19. (57)

ஜீவனுள்ள கிறிஸ்துவோடு தொடர்புகொண்டவர்களாக வாழுங்கள். அவர் ஒருபோதும் விட்டுவிடாத தமது கரத்தால் உறுதியாக உங்களைப்

பிடித்துக்கொள்வார். தேவன் நம்மிடத்தில் கொண்டிருக்கும் அன்பை அறிந்து விசுவாசியுங்கள். அப்பொழுது நீங்கள் பாதுகாப்போடு இருப்பீர்கள். அந்த அன்பு, சாத்தானின் அனைத்து வஞ்சகங்களுக்கும், திடீர் தாக்குதல்களுக்கும் எவ்விதத்திலும் அசைந்துகொடுக்காத ஒரு கோட்டையைப்போலிருக்கிறது. "கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்" – நீதிமொழிகள் 18:10. (58)

***"ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே" – மத்தேயு 6:13.*** (59)

கர்த்தருடைய ஜெபத்திலுள்ள முதல் வாக்கியத்தைப்போலவே கடைசி வாக்கியமும் நமது பிதாவானவர் எல்லா வல்லமைக்கும், அதிகாரத்திற்கும், இடப்பட்ட அனைத்து நாமங்களுக்கும் மேலானவர் என்று அவரைச் சுட்டிக்காட்டுகிறது. மீட்பர் அவரது சீடர்களுக்குமுன்பாக நீண்டு பரந்த விரிந்துகிடந்த ஆண்டுகளை, சீஷர்கள் எண்ணியிருந்ததைப்போன்று உலகப்பிரகாரமான கனத்திலும் வளமையிலும் திளைத்ததாக அல்ல, சாத்தானுடைய கோபத்தினாலும், மனித வெறுப்பின் புயல்களாலும் இருண்டு இருப்பதைக் கண்டார். நாட்டின் போராட்டங்களுக்கும் அழிவுகளுக்கும் மத்தியில், சீடர்களுடைய காலடிகள் ஆபத்துகளால் சூழப்பட்டு, அவர்களுடைய இருதயங்கள் பயத்தினால் அடிக்கடி ஒடுக்கப்படும். எருசலேமை ஒரு பாழடைந்த இடமாகக் காண்பார்கள். ஆலயம் முற்றிலுமாக அழிக்கப்பட்டு, அதின் தொழுகை என்றென்றைக்குமாக முடிவடைய, இஸ்ரவேலர்கள் பாலைவனத்தில் ஒதுங்கும் உடைந்த கப்பல்துண்டுகளைப்போல அனைத்து நாடுகளிலும் சிதறடிக்கப்படுவதைக் காண்பார்கள். "யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்" (மத்தேயு 24:6–8) என்று இயேசு குறிப்பிட்டார். எனினும், கிறிஸ்துவின் பின்னடியார்கள் தங்களது நம்பிக்கை அற்றுப்போய்விட்டதென்றோ, அல்லது இந்த உலகத்தை தேவன் கைவிட்டார் என்றோ பயப்படத் தேவையில்லை. வல்லமையும் மகிமையும் அவருக்கே உரியது. அவரது மாபெரும் நோக்கங்கள் மேலும் தடையின்றி நிறைவேறும். அவர்களது அன்றாடத் தேவைகளைப்பற்றிக் கூறும் அந்த ஜெபத்திலே தீமையின் அனைத்து வல்லமைக்கும் ஆளுகைக்கும் மேலாக தங்கள் தேவனாகிய ஆண்டவரை நோக்கிப்பார்க்கவேண்டுமென்று அவரது

சீடர்கள் வழிநடத்தப்பட்டார்கள். அவரது இராஜ்யமே அனைவர்மேலும் ஆளுகை செய்கின்றது. அவரே அவர்களது பிதாவும் நித்தியகால நண்பரும் ஆவார். (60)

எருசலேமின் அழிவு இந்த உலகத்தை மேற்கொள்ளப்போகும் இறுதிப் பேரழிவிற்கு ஓர் அடையாளமாகும். எருசலேம் கவிழ்க்கப்பட்டுப்போன காரியத்திலே ஓரளவு நிறைவேறுதலை அடைந்திருந்த தீர்க்கதரிசனங்கள் இந்த இறுதிநாட்களிலே இன்னும் அதிகமான, நேரடியான, பொருத்தமான நிறைவேறுதலை அடையும். இப்பொழுது மாபெரும் பக்திவிநயமான சம்பவங்களின் ஆரம்பக்கட்டம் என்னும் வாயிலிலே நாம் நின்று கொண்டிருக்கிறோம். உலகம் ஒருபோதும் கண்டிராத ஒரு நெருக்கடியான நேரம் நமக்குமுன்பாக இருக்கிறது. மேலும் ஆரம்பகாலச் சீடர்களுக்கு கொடுக்கப்பட்டதுபோன்று, தேவனுடைய இராஜ்யம் அனைத்தின்மீதும் ஆளுகை செலுத்துகிறது என்ற இனிய உறுதிவாக்கானது நமக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வரப்போகும் சம்பவங்களின் நிகழ்ச்சி நிரல் நம்மைப் படைத்தவரின் கரங்களில் இருக்கிறது. உலக நாடுகளின் முடிவு மாமேன்மை பொருந்திய நமது இராஜாவின் கையிலிருக்கிறது. மேலும் அவரது சொந்தப் பொறுப்பிலே சபையைச் சார்ந்த காரியங்களும் இருக்கின்றன. அறிவுரை கொடுக்கும் நமது தெய்வீக மேலாளர் கோரேசிடம்: “நீ என்னை அறியாதிருந்தும், நான் உனக்கு இடைக்கட்டு கட்டினேன்” (ஏசாயா 45:6) என்று கூறியதைப்போன்று, அவரது திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இருக்கின்ற ஒவ்வொரு பிரதிநிதியிடமும் கூறிக்கொண்டிருக்கிறார். (61)

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் தரிசனத்திலே கேருபீன்களின் செட்டை களுக்குக்கீழே ஒருகரம் இருப்பதைப்போன்ற தோற்றம் காணப்பட்டது. தெய்வீக வல்லமையே அவரது ஊழியக்காரருக்கு வெற்றியைக் கொடுக்கிறது என்பதைப் போதிப்பதற்காக இந்த தரிசனம் கொடுக்கப்பட்டுள்ளது. அவரது தூதுவர்களாக ஆண்டவரால் நியமிக்கப்படுகிறவர்கள், அந்த ஊழியம் தங்களைச் சார்ந்திருக்கிறதாக எண்ணக்கூடாது. ஒரு எல்லைக்குட்பட்ட மனிதர்கள் இந்தப் பொறுப்பின் பாரத்தைச் சுமப்பதற்காக விடப்படவில்லை. கண்ணுறங்காத தேவனாகிய அவர், அவரது தீர்மானங்களின் நிறைவேறுதலுக்காகத் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருப்பவராகிய அவர் தமது வேலையை தொடர்ந்து நடத்திச்செல்வார். துன்மார்க்கரின் நோக்கங்களை முறியடித்து, தமது மக்களுக்கு எதிராகப் பொல்லாங்குடன் சதித்திட்டம் தீட்டுகிறவர்களுடைய ஆலோசனைக் கூட்டங்களிலே குழப்பத்தைக் கொண்டுவருவார். கேருபீன்களுக்கு மத்தியிலும், ஜாதிகளின் போராட்டங்களுக்கும் அமளிகளுக்கும் மத்தியிலும் வீற்றிருக்கின்ற

## கர்த்தருடைய ஜெபம்!

சேனைகளின் கர்த்தரும் இராஜாவுமானவர், தமது பிள்ளைகளை தொடர்ந்து பாதுகாக்கிறார். பரலோகத்தில் ஆளுகைசெய்கின்ற அவர் நமது மீட்பராக இருக்கிறார். ஒவ்வொரு உபத்திரவத்தையும் அவர் மதிப்பிடுகிறார். ஒவ்வொரு ஆத்துமாவையும் கண்டிப்பாகப் பரிசோதிக்க வேண்டிய சூளையின் நெருப்பை உன்னிப்பாகக் கவனிக்கிறார். இராஜாக்களின் அரண்கள் நிர்மூலமாகும்போது, அவரது உக்கிரத்தின் அம்புகள் சத்துருக்களின் இருதயங்களினூடாகச் செல்லும்போது, அவரது மக்கள் அவரது கரங்களிலே பத்திரமாக இருப்பார்கள். (62)

"கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெய மும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவை களெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர். ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்" – 1 நாளாகமம் 29:11,12. (63) ★

# 6

# நியாயத்தீர்ப்பல்ல செயல்பாடே!

***"நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" – மத்தேயு 7:1.*** (1)

தனது சொந்த கிரியைகளின்மூலம் மீட்பைச் சம்பாதிக்கச்செய்யும் முயற்சி, மனித நியமங்களையே பாவத்திற்கு எதிரான தடுப்புவேலியாக்கும்படியாக வழிநடத்துகிறது. ஏனெனில் பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தவறுவதைக் காணும்போது, கீழ்ப்படிதலைக் கட்டாயமாக்குவதற்கேதுவாக சட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் உருவாக்குவார்கள். இவை யனைத்தும் மனதை தேவனிடமிருந்து சுயத்திற்குத் திருப்புகிறது. அவரது அன்பு இருதயத்திலிருந்து மடிந்துபோக, சகமனிதர்களிடம் உள்ள அன்பும் அழிகிறது. அநேக நியமங்களோடிருக்கும் மானிடக் கண்டுபிடிப்புகளின் அமைப்பானது, அது வகுத்த தரத்திற்குக் குறைவாகக் காணப்படுகிறவர்களை குற்றப்படுத்தும்படி இதை ஆதரிப்பவர்களை வழிநடத்துகிறது. உயர் நோக்கமுடைய பரந்த மனப்பான்மையை தன்னலமான குறுகிய மனப்பான்மை யோடுகூடிய சூழ்நிலை திக்குமுக்காடச் செய்து, மனிதர்களை சுயநலமான நியாயாதிபதிகளாகவும், ஒற்றர்களாகவும் மாற்றுகிறது. (2)

பரிசேயர்கள் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். தங்களுடைய சொந்தப் பலவீனங்களைப்பற்றியதான தாழ்மையான உணர்வற்றவர்களாக, தேவன் தங்களுக்கு அளித்த மாபெரும் சிறப்புரிமைகள்குறித்த நன்றியுணர்வு இல்லாதவர்களாக, தங்களுடைய மார்க்க சம்பந்தமான ஆராதனைகளை முடித்து வெளியே வந்தார்கள். அவர்கள் ஆவிக்குரிய பெருமையோடு இருந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையின்பொருள் "நான், என் உணர்வுகள், என் அறிவு, என் வழிகள்" என்பவைகளாயிருந்தன. தங்களுடைய முயற்சியினால் அடைந்திருந்த தேர்ச்சிதான் மற்றவர்களைத் தீர்க்கும் தரமாக இருந்தது. சுயமேன்மை

என்னும் ஆடைகளை அணிந்தவர்களாக மற்றவர்களை குற்றப்படுத்தவும் கண்டிக்கவும் நியாயாசனத்தில் ஏறினார்கள். (3)

மற்றவர்களுடைய மனச்சாட்சிக்கடுத்தவைகளில் எல்லைமீறிப் புகுந்து, ஆத்துமாவிற்கும் தேவனுக்கும் இடையிலுள்ள காரியங்களில் ஒருவரையொருவர் நியாயந்தீர்த்து, இதைப்போன்றதொரு குணத்தையே அங்கிருந்த மக்களும் பெரும்பாலும் உடையவர்களாயிருந்தார்கள். இந்த குணத்தையும் பழக்கத்தையும் பற்றி: "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று இயேசு கூறினார். உங்களை ஒரு படித்தரமாக வைக்காதீர்கள். உங்களுடைய கருத்துக்களையும், கடமையைக்குறித்த உங்களுடைய கண்ணோக்கங்களையும், வேதவாக்கியங்களுக்கு நீங்கள் கொடுக்கும் விளக்கங்களையும் மற்றவர்களுக்கு அளவுகோலாக்காதீர்கள். அதை அவர்கள் எட்டாவிட்டால், உங்களுடைய இருதயத்திலே அவர்களை கண்டனஞ்செய்யாதீர்கள். மற்றவர்களுடைய நோக்கங்கள் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று யூகித்துக்கொண்டு, அவர்கள்மீது குற்றஞ்சுமத்தி தீர்ப்புக்கூறாதீர்கள். (4)

"கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிற வைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப் படுத்துவார்" – 1 கொரி. 4:5. நம்மால் இருதயங்களை வாசித்தறிய முடியாது. நாமே குற்றமுடையவர்களாக இருப்பதால், மற்றவர்கள்மீது நியாயஞ்செலுத்த நாம் தகுதியுள்ளவர்கள் அல்ல. எல்லைக்குட்பட்ட மனிதர்கள் வெளித் தோற்றத்தைவைத்து மாத்திரமே நியாயந்தீர்க்கமுடியும். செயல்களின் இரகசியமான எழுச்சிகளை அறிந்த, மென்மையோடும் பரிவோடும் தொடர்புகொள்ளுகின்ற அவருக்கு மட்டுமே, ஒவ்வொரு ஆத்துமாவின் காரியத்தையும் தீர்மானஞ்செய்யும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. (5)

"மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி. போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக்குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்" – ரோமர் 2:1. இவ்வாறு மற்றவர்களைக் கண்டனம்பண்ணி குற்றஞ்சாட்டுகிறவர்கள் தங்களைத்தாங்களே குற்றவாளிகளென்று அறிவிக்கிறார்கள். ஏனெனில் அவர்களும் அதையே செய்கிறார்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யும்போது அவர்கள் தங்கள்மீதே தீர்ப்பு வழங்கிக்கொள்ளுகிறார்கள்.

## நியாயத்தீர்ப்பல்ல, செயல்பாடே!

இந்தத் தீர்ப்பை நியாயமானதென்று தேவனும் அறிவிக்கிறார். அவர்களுக்கு எதிராக அவர்களே கொடுக்கும் தீர்ப்பை அவர் ஏற்றுக்கொள்ளுகிறார். (6)

“சேற்றில் இருக்கும் அலங்கோலமான பாதங்கள்,
முடிவின்றி மலர்களை நசுக்குதே;
கடினமான நல்லெண்ண கரங்கள்
ஒரு நண்பனுடைய இருதயத்தைக் குத்துதே.” (7)

***“நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?” – மத். 7:3.*** (8)

“நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால்” (ரோமர் 2:1) என்ற வாக்கியங்கூட, அறியாமலேயே யூகித்து, தனது சகோதரனைக் குற்றப்படுத்தி, கண்டிக்கிறவனது பாவத்தின் பரிமாணத்தைச் சரியாக விளக்கவில்லை. “நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?” என்று இயேசு கூறினார். (9)

மற்றவர்களில் காணப்படும் குறையை துரிதமாகத் தெளிவாகக் கண்டறிகிற ஒரு நபரைப்பற்றி இயேசுவின் வார்த்தைகள் விவரிக்கின்றன. ஒருவரது குணத்திலோ அல்லது வாழ்க்கையிலோ கண்டுபிடிக்கும் ஒரு தவறைச் சுட்டிக்காட்டும் முயற்சியில் எல்லைகடந்த சுறுசுறுப்போடு அவர் செயல்படுகிறார். ஆனால் இப்படிச்செய்வதினால் வளர்க்கப்படும் கிறிஸ்துவின் குணத்திற்கு மாறான செயல், சாட்டப்பட்ட குற்றத்தோடு ஒப்பிடப்படும்போது, உத்திரத்தைப்போல, துரும்பிற்கும் உத்திரத்திற்குமுள்ள விகிதத்தில் காணப்படுகிறது என்று இயேசு அறிவிக்கிறார். ஒரு நபருடைய சகித்துக்கொள்ளாத தன்மையும் அன்பற்ற குணமுமே அணுவைக்கூட உலகத்தைப்போன்று பெரிதாக்கிக் காட்டுகிறது. செய்த பாவத்திற்கு மனவேதனையடைந்து முற்றிலுமாக தங்களைத் தத்தஞ்செய்த அனுபவத்தை ஒருபோதும் அடையாதவர்கள், தங்களுடைய வாழ்க்கையிலே மீட்பருடைய அன்பின் மென்மையாக்கும் செல்வாக்கை வெளிப்படுத்துகிறதில்லை. சுவிசேஷத்தின் மென்மையான அன்பாதரவுள்ள குணத்தை அவர்கள் தவறாக எடுத்துக்காட்டி, எந்த அருமையான ஆத்துமாக்களுக்காக இயேசு மரித்தாரோ, அவர்களை வேதனைப்படுத்துகிறார்கள். நமது மீட்பர் பயன்படுத்துகின்ற அந்த உருவகத்தின்படி, மற்றவர்களைக் குற்றப்படுத்தும் ஆவியுடைய நபர், தான் குற்றப்படுத்தினதைவிடவும் பெரிய பாவத்தைக்குறித்து குற்றவாளியாக இருக்கிறார். ஏனெனில் அவர் அதேபாவத்தை தான்செய்ததோடு, தன் தவறை

மறைத்து மற்றவரைக் குற்றப்படுத்தின பாவத்தையும் செய்கிறார். (10)

குணத்திற்கான உண்மையான ஒரே படித்தரம் கிறிஸ்துவே. மற்றவர்களுக்கு தன்னை ஒரு முன்மாதிரியாக எண்ணிக்கொள்ளும் நபர், கிறிஸ்துவின் இடத்தை எடுத்துக்கொள்கிறார். பிதாவானவர் "நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக் கிறார்" – யோவான் 5:22. எனவே, மற்றவர்களுடைய நோக்கங்களை யூகித்துத் தீர்ப்புச்செய்யும் எவரும் மறுபடியும் தேவகுமாரனுடைய தனிச்சிறப்பான உரிமையைப் பறித்துக்கொள்கிறார். இவ்வாறு மற்றவர் களைக் குற்றப்படுத்தி நியாயந்தீர்க்கிறவர்கள், தங்களை அந்திக் கிறிஸ்துவின் பக்கத்தில் வைத்துக்கொள்கிறார்கள். "அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்" – 2 தெச. 2:4. (11)

மிகவும் துக்கமான விளைவுகளுக்கு கொண்டுசெல்கின்ற பாவம், அன்பில்லாத, குற்றம் கண்டுபிடிக்கிற, மன்னிக்க விரும்பாத குணமாகும். இதுவே பரிசேயத்துவத்தின் பண்பை விவரிக்கின்றது. மார்க்க சம்பந்தமான அனுபவம் அன்பற்றுப் போகும்போது, இயேசு அங்கிருப்பதில்லை. அவரது பிரசன்னத்தின் ஒளி அங்கிருப்பதில்லை. சுறுசுறுப்பான எந்தச் செயல்களும் அல்லது கிறிஸ்துவை மையமாகக்கொண்டிராத எந்த ஆர்வமும் அதிலுள்ள குறைவைச் சரிசெய்யமுடியாது. மற்றவர்களுடைய குறைகளைக் கண்டறியும் வியத்தகு நுணுக்கமான ஞானம் இருக்கலாம். ஆனால் இத்தகைய குணத்திலே திளைக்கின்ற ஒவ்வொருவருக்கும் "மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப் போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போட வகைபார்ப்பாய்" (மத்தேயு 7:5) என்று இயேசு கூறுகிறார். தவறிழைத்துக் குற்றத்திலிருப்பவனே மற்றவர்களிடத்திலிருக்கும் தவறைச் சந்தேகிப்பதில் முதல் ஆளாக இருக்கிறான். ஒரு நபர் மற்றொரு நபரைக் கண்டனஞ்செய்வதின்மூலம், தனது சொந்த இருதயத்திலுள்ள கேடுகளை மறைப்பதற்காக அல்லது அதைக்குறித்து சாக்குப்போக்குச் சொல்வதற்காக முயற்சித்துக்கொண்டிருக்கிறார். பாவத்தின்மூலமாகத்தான் தீமையைப்பற்றின அறிவை மக்கள் அறிந்துகொண்டனர். உலகின் முதல் தம்பதிகள் பாவஞ்செய்த உடனேயே ஒருவரையொருவர் குற்றப்படுத்த ஆரம்பித்தனர். கிறிஸ்துவின் கிருபையினால் அடக்கியாளப்படாதபொழுது, மனிதத்தன்மை தடையின்றி செய்கின்ற காரியம் இதுவே. (12)

## நியாயத்தீர்ப்பல்ல, செயல்பாடே!

குற்றப்படுத்துகின்ற குணத்தில் மனிதர் ஈடுபடும்போது, தனது சகோதரனிடத்தில் இருப்பதாக தான்யூகிப்பதைச் சுட்டிக்காட்டுவதோடு அவர்கள் திருப்தியடைகிறதில்லை. செய்யப்படவேண்டும் என்று தாங்கள் நினைப்பதை மென்மையான அணுகுமுறைகள் நடப்பிக்காதபோது, கட்டாயப்படுத்தும் வழிமுறையைப் பின்பற்றுகிறார்கள். தங்களுக்குச் சரியென்று தோன்றுகிறதை நடப்பிக்க, தங்களுடைய வல்லமைக்குள் எவ்வளவு தூரம் செல்லமுடியுமோ அவ்வளவு தூரம் சென்று மனிதரை கட்டாயப்படுத்துவார்கள். இதைத்தான் கிறிஸ்துவின் நாட்களில் யூதர்கள் செய்துவந்தார்கள். எப்பொழுதெல்லாம் சபை கிறிஸ்துவின் கிருபையை இழந்துபோயிருந்ததோ அப்பொழுதெல்லாம் இவ்வாறே செய்தது. அன்பின் வல்லமையை இழந்தநிலையில் தான்இருப்பதையறிந்து, சபை தனது சட்டங்களைச் செயல்படுத்தவும், சமயக்கொள்கைகளை நிலைநிறுத்தவும் அரசாங்கத்தின் பலத்தக்கரத்தை நாடியது. ஆபேலின் காலம்முதல் இன்றைய காலம் வரைக்கும் நடைபெற்ற உபத்திரவங்களுக்கான இரகசியமும் மார்க்கசம்பந்தமாக இயற்றப்பட்ட எல்லாச் சட்டங்களின் இரகசியமும் இங்குதான் இருக்கிறது. (13)

கிறிஸ்து மனிதரை விரட்டாமல், அவர்களை தம்மண்டை இழுத்துக்கொள்கிறார். அவர் பயன்படுத்துகிற ஒரே கட்டாயமான காரியம் அன்பினால் நெருக்கி ஏவுவதே. உலகியல் சார்ந்த வல்லமையை சபை நாடித்தேட ஆரம்பிக்கும்போது, தெய்வீக அன்பினால் நெருக்கப்படுகின்ற அத்தகைய கிறிஸ்துவின் வல்லமை சபையில் ஒழிந்துபோய்விட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. (14)

இந்தச் சங்கடம் சபையின் தனிப்பட்ட அங்கத்தினரிடத்தில்தான் இருக்கிறது. இங்குதான் குணமாக்கும் வேலை செயல்படுத்தப்படவேண்டும். இயேசு முதலாவது குற்றஞ்சாட்டுகிறவனை நோக்கி: மற்றவர்களை திருத்த முற்படும்முன்பாக தனது சொந்தக் கண்ணிலிருந்து உத்திரத்தை எடுத்துப்போடவேண்டுமென்றும், குற்றப்படுத்துகின்ற குணத்தை முற்றிலுமாக விட்டு, தனது சொந்தப் பாவத்தை அறிக்கைசெய்து விட்டுவிடவேண்டுமென்றும் கட்டளையிடுகிறார். ஏனெனில் "நல்ல மரமானது கெட்ட கனிகொடாது, கெட்ட மரமானது நல்ல கனிகொடாது" – லூக்கா 6:43. நீங்கள் திளைக்கும் இத்தகைய குற்றப்படுத்தும் ஆவியே கெட்டக் கனியாகும். இது, மரம் கெட்டமரம் என்பதையும் வெளிக்காட்டுகிறது. சுயநீதியின் மேல் உங்களை கட்டியமைப்பது, ஒரு பயனற்றசெயல். உங்களது தேவையெல்லாம் இருதயத்தில் ஏற்படும் மாற்றமே. மற்றவர்களை திருத்துவதற்கு தகுதியாக்கப்படுமுன், இந்த அனுபவத்தை நீங்கள் பெற்றிருக்கவேண்டும். ஏனெனில் "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" – மத்தேயு 12:34. (15)

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

யாருடைய வாழ்க்கையிலாவது ஒரு நெருக்கடி ஏற்படும்போது, நீங்கள் ஆலோசனையோ அல்லது எச்சரிப்போ கொடுக்க முற்பட்டால், உங்களுடைய வார்த்தைகளின் நன்மைக்கேதுவான செல்வாக்கு, உங்களுடைய முன்மாதிரியும் குணமும் உங்களுக்கு என்ன பெற்றுக்கொடுத்திருக்கிறதோ, அந்த மதிப்பையே கொண்டிருக்கும். நன்மைசெய்வதற்குமுன்பாக, நீங்கள் நல்லவர்களாயிருக்கவேண்டும். தேவனுடைய கிருபையினால் உங்களுடைய இருதயம் தாழ்மையடைந்து, பண்படுத்தப்பட்டு, மென்மையாக்கப்படும்வரை, மற்றவர்களை மனமாறச்செய்யக்கூடிய ஒரு செல்வாக்கை நீங்கள் செயல்படுத்தமுடியாது. இத்தகைய மாறுதல் உங்களில் ஏற்பட்டவுடன், எப்படி ரோஜாச்செடி வாசனையுள்ள மலர்களைக் கொடுக்கிறதோ, அல்லது திராட்சைக்கொடி ஊதா நிறத்தில் பழக்கொத்துகளைக் கொடுக்கிறதோ, அதைப்போன்று மற்றவர்களை ஆசீர்வதிக்கத்தக்கதாக நீங்களும் இயற்கையான வாழ்வு வாழமுடியும். (16)

“மகிமையின் நம்பிக்கை”யாகிய கிறிஸ்து உங்களிலிருப்பாரானால், மற்றவர்களுடைய பிழைகளை வெளிப்படுத்திக்காட்டும், உன்னிப்பாகக் கவனிக்கும் மனப்பாங்கோடு இருக்கமாட்டீர்கள். குற்றப்படுத்தி கண்டனம் செய்வதற்குப்பதிலாக அவர்களுக்கு உதவிசெய்து, ஆசீர்வதித்து இரட்சிக்க வேண்டுமென்பதே உங்களுடைய நோக்கமாயிருக்கும். தவறுகளி லிருப்பவர்கள்பற்றிய காரியங்களில் செயல்படும் விஷயத்தில் “நீயும் சோதிக்கப் படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு” (கலா. 6:1) என்ற காரியத்தில் கவனமாயிருப்பீர்கள். அநேகமுறை நீங்களும் தவறு செய்ததையும், ஒருமுறை விட்டபிறகு, மீண்டும் சரியான வழியை கண்டறிவது எவ்வளவு கடினமாக இருந்தது என்பதையும் நினைத்துப் பார்ப்பீர்கள். உங்களுடைய சகோதரனை அதிகமான இருட்டிற்குள் நீங்கள் தள்ள மாட்டீர்கள். மாறாக, இருதயத்தில் பரிவு நிறைந்தவர்களாக வரவிருக்கும் ஆபத்தைப்பற்றி அவரிடம் கூறுவீர்கள். (17)

மீட்பரை தனது பாவமே கல்வாரி சிலுவையின்மேல் வைத்தது என்பதை எண்ணியவனாக அதை அடிக்கடி நோக்கிப்பார்க்கும் ஒருவன், தன் பாவத்தின் அளவை மற்றவர்களுடையதோடு ஒப்பிட்டுப்பார்க்க ஒருபோதும் முயலமாட்டான். மற்றவன்மீது குற்றஞ்சாட்டுவதற்காக நியாயாசனத்தின் இருக்கைக்கு ஏறமாட்டான். கல்வாரிச் சிலுவையின் நிழலிலே நடக்கின்றவர்களிடத்தில் குற்றஞ்சாட்டும் குணமும் சுயத்தை உயர்த்துவதும் இருக்கமுடியாது. (18)

உன்னுடைய சுயமதிப்பை தியாகஞ்செய்யவும், தவறுசெய்யும்

சகோதரனைக் காப்பாற்றுவதற்காக உன்னுடைய உயிரையேகூட கொடுக்கவும் உணரும்வரை, உன்னுடைய சகோதரனுக்கு உதவிசெய்வதற்காக உன்னுடைய கண்ணிலிருக்கிற உத்திரத்தை நீ எடுத்துப்போடவில்லை. அதன்பிறகுதான், நீ அவனுடைய இருதயத்தை தொடத்தக்கதாக அவனை நெருங்கமுடியும். கடிந்துகொள்வதினாலும், இடித்துரைப்பதினாலும் தவறான நிலையிலிருக்கும் நபரை எவருமே திருத்தியதில்லை. அப்படிச் செய்ததினால் அநேகர் கிறிஸ்துவிடமிருந்து விரட்டியடிக்கப்பட்டு, குற்றத்தை உணருவதற்கு மாறாக தங்களுடைய இருதயங்களை அடைத்துக் கொள்ளும்படி நடத்தப்பட்டார்கள். மென்மையான குணமும், வெற்றி கொள்ளும் அமைதியான நடக்கையும் தவறுசெய்கிறவர்களைக் காப்பாற்றி, திரளானப் பாவங்களைமூடும். உங்களுடைய குணத்திலே இருக்கும் கிறிஸ்துவின் வெளிப்பாடு, நீங்கள் தொடர்புகொள்ளுகின்ற அனைவரையும் மாற்றும் வல்லமையைப் பெற்றிருக்கும். கிறிஸ்து உங்களில் அனு தினமும் வெளிப்படட்டும். அவர் உங்கள்மூலமாக, மென்மையான, தூண்டி இழுக்கக்கூடிய, நம்முடைய கர்த்தராகிய ஆண்டவரின் அழகிலே ஆத்துமாக்களை புதுப்பிக்கும் வல்லமையான செல்வாக்கை உடைய அவருடைய வசனத்தின் உருவாக்கும் சக்தியை வெளிப்படுத்துவார். (19)

### *“பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்” – மத். 7:6.* (20)

பாவத்தின் அடிமைத்தனத்தினின்று தப்பிக்கவிரும்பாத ஒரு வகுப்பாரைக்குறித்து இங்கு இயேசு குறிப்பிடுகின்றார். கேடான இழிவுள்ள காரியங்களில் ஈடுபட்டுத் திளைத்ததால், அவர்களுடைய இயல்புகள் மிகவும் தரங்குறைந்தது. அவர்கள் பிரிக்கமுடியாத நிலையில் தீமையைப்பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். சுவிசேஷத்தை பரியாசத்துக்கும் வாதத்துக்கு மான ஒரு பொருளாக வைத்துக்கொண்டிருப்பவர்களால் தடுக்கப்பட, கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் தங்களை அனுமதிக்கக்கூடாது. (21)

ஒரு ஆத்துமா பாவத்தில் எவ்வளவு ஆழமாக புதையுண்டிருந்தாலும், பரலோகத்தின் விலையுயர்ந்த சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள விருப்பத்தோ டிருந்தால், மீட்பர் ஒருபோதும் அதை விட்டுக் கடந்துசெல்லமாட்டார். ஆயக்காரர்களுக்கும் விபசாரிகளுக்கும் அவரது வார்த்தைகள் ஒரு புதிய வாழ்க்கைக்கான ஆரம்பமாயிருந்தன. எந்த மகதலேனா மரியாளிடமிருந்து ஏழு பிசாசுகளை இயேசு துரத்தியிருந்தாரோ, அவளே இயேசுவின் கல்லறையில் கடைசிவரை நின்றிருந்தவளும் உயிர்த்தெழுதலின் காலையில் முதலாவது வாழ்த்தை அவரிடமிருந்து பெற்றுக்கொண்டவளுமாவாள். நற்செய்திக்கு தீவிர எதிராளிகளாயிருந்தவர்களில் ஒருவரான தர்சுப்

பட்டணத்து சவுல், பவுலாக, மிகவும் பயபக்தியுள்ள கிறிஸ்துவின் ஊழியக்காரனாக மாறினார். வெறுப்பிற்கும் இகழ்ச்சியானத் தோற்றத்திற்கும் அடியில், கடுங்குற்றங்களுக்கும் இழிவான நிலையிலும்கூட, மீட்பரின் கிரீடத்தில் பிரகாசிக்கிறதற்கேதுவான அணிகலனாக கிறிஸ்துவின் கிருபை இரட்சிக்கக்கூடிய ஒரு ஆத்துமா மறைந்திருக்கலாம். (22)

***"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" – மத்தேயு 7:7.*** (23)

அவிசுவாசத்திற்கும், தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதற்கும், தவறான விளக்கங்களுக்கும் எந்தவிதமான சந்தர்ப்பமும் கொடுக்கப்படாதபடி, மூன்றுமுறை கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை ஆண்டவர் மீண்டும் கூறுகிறார். அனைத்தையும் செய்யக்கூடிய தேவனில் விசுவாசம்வைத்து, அவரை நாடித்தேடுபவர்கள் தமக்கு வேண்டுமென்று ஆண்டவர் ஏக்கத்தோடிருக்கிறார். எனவே, "ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" என்ற வார்த்தைகளையும் அவர் சேர்த்துக் கூறுகிறார். (24)

நீங்கள் அவருடைய இரக்கத்திற்காக தாகத்தோடும், அவரது ஆலோசனைக்காக விருப்பத்தோடும், அவரது அன்பிற்காக ஏக்கத்தோடும் இருக்கவேண்டுமென்று கூறுவதைத் தவிர வேறு எந்த நிபந்தனையையும் ஆண்டவர் குறிப்பிட்டுக் கூறவில்லை. "கேளுங்கள்." கேட்பது, உங்களுடைய தேவையை நீங்கள் புரிந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை வெளிப்படுத்து கிறது. நீங்கள் விசுவாசத்தோடு கேட்டால் பெற்றுக்கொள்வீர்கள். அவரது வார்த்தையை வாக்குறுதியாகக் கொடுத்திருக்கிறார். அது தவறுகிறதில்லை. நீங்கள் பாவத்திற்காக உண்மையான மனவேதனையோடு வருவீர்களானால், தேவனின் வாக்குத்தத்தம் செய்திருப்பதைக் கேட்பது துணிகரம் என்று எண்ணவேண்டியதில்லை. கிறிஸ்துவைப்போன்ற குணம் உங்களில் பூரணப்படத்தக்கதாக உங்களுக்குத் தேவையான ஆசீர்வாதத்தை நீங்கள் கேட்கும்போது, ஒத்துப்பார்க்கக்கூடிய வாக்குத்தத்தத்தின்படியே நீங்கள் கேட்கிறீர்கள் என்பதை கர்த்தர் உறுதிப்படுத்துகிறார். பாவியென்பதை நீங்கள் அறிந்து உணர்வதுவே அவரது இரக்கத்திற்கும் பரிவிற்கும் மன்றாடலுக்கும் போதுமான அடித்தளமாகும். நீங்கள் தேவனிடம் வருவதற்கான நிபந்தனை, நீங்கள் பரிசுத்தமடைவீர்கள் என்பது அல்ல, அவர் உங்களுடைய பாவங்களிலிருந்து உங்களைக் கழுவி, உங்கள் அக்கிரமங்களிலிருந்து உங்களை சுத்திகரிக்கவேண்டும் என்னும் உங்களுடைய வாஞ்சையே

ஆகும். அவரையும் அவரது மீட்பின் வல்லமையையும் அத்தியாவசிய மாக்குகிற நமது மாபெரும் தேவையும், முற்றிலும் உதவியற்ற நிலையுமே, நாம் இப்பொழுதும் எப்பொழுதும் வேண்டிக்கொள்ளலாம் என்பதற்கான வாதமாக இருக்கின்றது. (25)

"தேடுங்கள்." அவரது ஆசீர்வாதத்தை மட்டுமல்ல, அவரையே விரும்பித்தேடுங்கள். "நீர் அவரோடே பழகிச் சமாதானமாயிரும்" – யோபு 22:21. தேடுங்கள் கண்டடைவீர்கள். தேவன் உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார். அவரிடத்தில் வரவேண்டுமென்ற உங்களுடைய விருப்பமே அவரது ஆவியானவர் உங்களை இழுப்பதினால்தான். அவர் உங்களை இழுக்கும்போது, நீங்கள் உங்களை ஒப்படைத்துவிடவேண்டும். சோதிக்கப்டுகிறவன், தவறுசெய்கிறவன் மற்றும் அவிசுவாசிக்காக கிறிஸ்து மன்றாடிக்கொண்டிருக்கிறார். தம்மோடு தோழமைகொள்ளும்படி அவர்களைத் தூக்கியெடுக்க அவர் தேடுகிறார். "நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்" – 1 நாளாகமம் 28:9. (26)

"தட்டுங்கள்." சிறப்பான அழைப்பைப் பெற்றவர்களாக நாம் ஆண்டவரிடத்தில் வருகிறோம். அவரது வரவேற்பறையிலே நம்மை வரவேற்க அவர் காத்திருக்கிறார். முதன்முதலாக இயேசுவைப் பின்பற்றிய சீடர்கள் வழியிலே துரிதமாக அவரோடு உரையாடியது, அவர்களுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை. "ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள்; ... அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக்கண்டு, அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள்" – யோவான் 1:38,39. ஆகவே, தேவனோடு மிக நெருங்கிய உறவும் ஐக்கியமும் ஏற்படுத்திக்கொள்ள நாம் அனுமதிக்கப்படலாம். "உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்" – சங்கீதம் 91:1. தேவனுடைய ஆசீர்வாதத்தை விரும்புகிறவர்கள்: ஆண்டவரே, "கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" என்று நீர் சொல்லியிருக்கிறீர் என்று சொல்லி, திடமான நிச்சயத்தோடு இரக்கத்தின் வாசலில் தட்டிக் காத்திருக்கட்டும். (27)

அவரது வார்த்தையைக் கேட்பதற்காகக் கூடியிருந்த மக்களை நோக்கிப்பார்த்து, அந்தக்கூட்டம் தமது பிதாவின் இரக்கத்தையும் அன்புமிகுந்த தயவையும் மதித்துப் பாராட்டவேண்டுமென்று மெய்யான ஆவலோடு விரும்பினார். அவர்களுடைய தேவையைக்குறித்தும் அவர்களுக்கு தேவன் கொடுக்க விருப்பமாயிருப்பதைக்குறித்தும் விளக்குதவற்காக பசியோடிருக்கும் ஒரு குழந்தை தனது உலகப் பெற்றோரிடம் அப்பம்

கேட்பதுபோன்ற ஒரு பொருட்பாடத்தை அவர்கள்முன் வைத்தார். “உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?” என்று அவர் வினவினார். பெற்றோருக்கு தனது குழந்தையிடம் ஏற்படும் மென்மையான இயற்கையான பாசத்திற்கு அவர் வேண்டுகோள் விடுக்கிறார். அதன்பிறகு, அவர்களை நோக்கி: “ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?” (மத்தேயு 7:11) என்றார். பசியோடிருந்து அப்பத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிற மகனிடமிருந்து தந்தையுள்ளம் கொண்ட எந்த மனிதனும், தன் முகத்தைத் திருப்பமாட்டான். அவன் தனது குழந்தையை அற்பமாக நடத்துகிறானென்றும், அவனை ஏமாற்றவே அவனுடைய ஆவலைத் தூண்டுகிறான் என்றும் அவர்கள் நினைப் பார்களா? நல்ல ஊட்டச்சத்துள்ள ஆகாரத்தை அவனுக்கு அளிப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டு, அவனுக்கு கல்லைக் கொடுப்பானா? தேவன் அவரது குழந்தைகளுடைய வேண்டுதல்களுக்கு செவிசாய்ப்பதில்லை என்று கற்பனைசெய்வதின்மூலம் தேவனை அவமதிக்கலாமா? (28)

பொல்லாதவர்களும் மானிடர்களுமாகிய நீங்கள் “உங்கள் பிள்ளை களுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா” – லூக்கா 11:13. அவருடைய பிரதி நிதியாகிய பரிசுத்த ஆவியானவரே ஈவுகளிளெல்லாம் மாபெரும் சிறந்த ஈவாகும். “நல்ல ஈவுகள்” அனைத்தும் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. படைத்தவருங்கூட நமக்கு இதைவிட மேன்மையானதும் நன்மையானதுமான எதையும் கொடுக்கமுடியாது. நாம் ஆண்டவரை நோக்கி, நமது துன்பத்திற்காக அவர் பரிவுகொள்ளவும், அவரது பரிசுத்த ஆவியானவர்மூலமாக நம்மை வழிநடத்தவும் வேண்டுமென்று மன்றாடும்போது, நமது ஜெபத்தைவிட்டு அவர் ஒருபோதும் தமது முகத்தைத் திருப்பிக்கொள்ளமாட்டார். பசித்திருக்கும் குழந்தையிடமிருந்து பெற்றோர்கள்கூட தங்களுடைய முகத்தைத் திருப்பிக்கொள்வது சாத்தியம். ஆனால் தேவையிலிருப்போரின் அழுகுரலையும் ஏக்கத்தோடிருக்கும் இருதயத்தையும் தேவன் ஒருபோதும் தள்ளிவிடமாட்டார். எத்தகைய அதிசயமான மென்மையோடு தமது அன்பை விளக்கியுரைக்கின்றார்! தங்களுடைய இருண்ட நாட்களில் தங்களைப்பற்றி தேவன் அக்கறையற்றவராக இருக்கிறாரென்று நினைப்பவர்களுக்கு “சீயோனோ: கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார்

என்று சொல்லுகிறாள். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது" (ஏசாயா 49:14–16) என்பதே பிதாவின் இருதயத்தினின்று வருகின்ற செய்தியாகும். (29)

வாக்குறுதிசெய்யப்பட்ட யெகோவாவின் வார்த்தையை நமது உறுதிவாக்காகக்கொண்டு சமர்ப்பிக்கும்போது, தேவனுடைய வார்த்தை யிலுள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும் நமக்கு ஜெபிப்பதற்கான ஒரு பொருளை அமைத்துக் கொடுக்கிறது. நமது தேவைக்கேற்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் எதுவாயினும் இயேசுவின்மூலமாக உரிமைகொண்டாடுவது, நமக்குக் கிடைத்த சிறப்பான சலுகையாகும். அறியாப் பருவத்திலுள்ள ஒரு குழந்தையின் எளிமையோடு, நமக்கு எது தேவையோ, அதை அப்படியே ஆண்டவரிடம் சொல்லலாம். நம்முடைய உலகத் தேவைகளை அவரிடம் சொல்லி, இந்த வாழ்விற்குரிய அப்பத்திற்காகவும், ஆடைக்காகவும், ஆவிக்குரிய ஆகாரத்திற்காகவும் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்திற்காகவும் கேட்கலாம். இவை அனைத்தும் உங்களுக்குத் தேவை என்பது உங்களுடைய பரலோகப் பிதாவிற்குத் தெரியும். அவைகளைக்குறித்து நீங்கள் அவரிடம் கேட்க வேண்டுமென்று அவர் உங்களை அழைக்கிறார். இயேசுவின் நாமத்தினால் அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம். தேவன் அவருடைய நாமத்தைக் கனப்படுத்தி, தம்முடைய இரக்கத்தின் ஐசுவரியத் தின்படி உங்களுடைய எல்லாத் தேவைகளையும் வழங்குவார். (30)

ஆனால் ஒரு தகப்பனைப்போன்று எண்ணி தேவனிடத்தில் வரும்போது, அவருக்கு நீங்கள் குழந்தையென்ற உறவை ஒப்புக்கொள்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். நன்மைசெய்கின்ற அவரில் முழுமையாக நம்பிக்கைவைப்பது மட்டுமல்லாமல், அவரது அன்பு மாறாதது என்பதை அறிந்தவர்களாக, அனைத்திலும் அவருடைய சித்தத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். அவரது பணியைச் செய்வதற்கு உங்களையே நீங்கள் தத்தஞ்செய்யுங்கள். தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் முதலாவது தேடுபவர்களுக்குத்தான் "கேளுங்கள், ... பெற்றுக்கொள்வீர்கள்" (யோவா. 16:24) என்ற வாக்குத்தத்தத்தை இயேசு கொடுத்திருக்கிறார். (31)

பரலோகத்திலும் பூலோகத்திலும் அனைத்து வல்லமையையுமுடைய அவரது வரங்கள், தேவனுடைய பிள்ளைகளுக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய அரும்பெரும் வரங்கள், மீட்பரின் இரத்தம் என்ற விலையேறப்

பெற்ற தியாகத்தினால் நமக்குக் கிடைக்கின்றன. இவை இருதயத்தின் ஆழமான ஏக்கங்களைத் திருப்திசெய்கின்றன. மேலும், இந்த வரங்கள் நித்தியகாலம்வரை நீடித்து, சிறுபிள்ளைகளைப்போன்று தேவனிடத்தில் வருபவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டு அனுபவிக்கப்படும். தேவனுடைய வாக்குத்தத்தங்களை உங்களுக்குச் சொந்தமாக எடுத்துக் கொண்டு அவரிடத்தில் மன்றாடுங்கள். அப்பொழுது நீங்கள் மகிழ்ச்சியின் முழு நிறைவையும் பெறுவீர்கள். (32)

***“ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர் களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்” – மத்தேயு 7:12.*** (33)

நம்மீது தேவன்கொண்டுள்ள அன்பின் நிச்சயத்தின்மூலமாக, ஒருவரிடத்திலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதை மனித ஐக்கியத்தின் உறவுகள் அனைத்தையும் உள்ளடக்கியதான ஒரு பரந்த கொள்கைமூலம் இயேசு இணைக்கின்றார். (34)

எதைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதில் யூதர்கள் அக்கறையோடு இருந்தார்கள். தங்களுக்குக் கிடைக்கவேண்டிய அதிகாரம், மதிப்பு, சேவை போன்றவற்றை அடைந்துகொள்ளவேண்டும் என்பதே அவர்களுடைய பாரமாயிருந்தது. ஆனால் இயேசு எவ்வளவு அதிகமாக நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதைக்குறித்துக் கவலைப்படாமல், எவ்வளவு அதிகமாக கொடுக்கவேண்டுமென்பதைக்குறித்துப் போதிக்கிறார். மற்றவர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமையின் தரம், அவர்கள் நமக்குச் செய்யவேண்டிய கடமையென்று நாம் எண்ணுவதில் காணப்படுகிறது. (35)

மற்றவர்களோடு உங்களுக்கிருக்கும் தொடர்பிலே உங்களை அவர்களுடைய இடத்தில்வைத்துப் பாருங்கள். அவர்களுடைய எண்ணங்கள், அவர்களுடைய பிரச்சனைகள், ஏமாற்றங்கள், சந்தோஷங்கள், துக்கங்கள் ஆகியவைகளுக்குள் நுழைந்து பாருங்கள். அவர்களோடு உங்களை ஒன்றாகவைத்து எண்ணிப்பார்த்து, நீங்கள் அந்த இடத்தில் இருந்தால் அவர்கள் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புவீர்களோ, அதின்படி நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள். நேர்மையின் உண்மையான சட்டம் இதுவே. இது பிரமாணத்தின் மற்றொரு வெளிப்பாடு. “உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே”(மத்தேயு 22:39). இதுதான் தீர்க்கதரிசிகளுடைய போதனையின் மூலப்பொருளாகும். இது பரலோகத்தின் ஒரு கொள்கை. இது அந்தப் பரிசுத்த கூட்டுறவிற்குத்

தகுதியாக்கப்படுகிற அனைவராலும் விருத்திசெய்யப்படும். (36)

உண்மையான இணக்கமுள்ள பண்பே பொற்சட்டமென்னும் கொள்கையாகும். இயேசுவின் வாழ்க்கையிலும் அவரது குணத்திலும் அதின் உண்மையான விளக்கம் காணப்படுகிறது. நமது மீட்பரின் அன்றாட வாழ்க்கையிலே ஆ! எத்தகைய மென்மையும் அழகும் மிளிர்ந்தது. எத்தகைய இனிமை அவரது பிரசன்னத்தில் பாய்ந்தோடியது! அவரது பிள்ளைகளிலே அதே குணம் வெளிப்படும். யாரிடத்தில் கிறிஸ்து வாசஞ்செய்கின்றாரோ அவர்களை ஒரு தெய்வீகச் சூழ்நிலை சூழ்ந்திருக்கும். தூய்மையென்னும் அவர்களது வெண்வஸ்திரங்கள் ஆண்டவரின் தோட்டத்திலுள்ள சுகந்த வாசனையினால் மணம்வீசும். அவரினின்று வருகிற ஒளியை அவர்களது முகங்கள் பிரதிபலித்து, தடுமாறுகின்ற, களைத்துப்போன பாதங்களுக்கு உதவும்படி வழியை பிரகாசத்தால் நிறைக்கும். (37)

பூரணமான குணம் எதை உள்ளடக்கியது என்பதுபற்றிய தெளிவான குறிக்கோள் இல்லாத ஒருவர் கிறிஸ்துவின் மென்மையையும் பரிவையும் வெளிப்படுத்தத் தவறிவிடுகிறார். கிருபையின் செல்வாக்கு, இருதயத்தை மென்மையாக்கி, உணர்வுகளை தூய்மைப்படுத்தி சுத்திகரித்து, பரலோகத்தால் பிறக்கும் நேர்த்தியையும் நேர்மையின் உணர்வையும் கொடுப்பதற்கேயாகும். (38)

ஆனால் இந்தப் பொற்சட்டத்திற்கு இன்னும் ஆழமான ஒரு முக்கியத்துவமுண்டு. தேவனுடைய பல்வேறு பயன்களையுடைய கிருபைக்கு உக்கிராணக்காரனாக நியமிக்கப்பட்ட ஒவ்வொருவரும், மற்றவர்களுடைய இடத்தில் தான்இருந்தால், அவர்கள் தனக்கு அந்த நன்மையை அளிக்கவேண்டுமென்று எப்படி விரும்புவாரோ அதைப்போல, அறியாமையிலும் இருளிலும் இருக்கிற ஆத்துமாக்களுக்கு அந்த கிருபையின் பயன்களை அளிக்கத்தக்கதாக அழைக்கப்படுகிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல், "கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்" (ரோமர் 1:14) என்று கூறுகிறார். இப்பூமியில் இருளிலும் இழிவான நிலைமையிலுமிருக்கின்ற மிகமோசமான நபருக்குமேலாக நீங்கள் எப்படி தேவனுடைய அன்பைக்குறித்து அறிந்துகொண்டிருக்கிறீர்களோ, எப்படி அவருடைய கிருபையின் ஐசுவரியத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறீர்களோ, இந்த ஈவுகளை அந்த ஆத்துமாக்களுக்குக் கொடுக்கிறதற்கு நீங்கள் கடனாளிகளாகவும் இருக்கிறீர்கள். (39)

அதைப்போன்றுதான் வாழ்க்கையிலே பெற்றிருக்கின்ற ஆசீர்வாதங்களும் ஈவுகளும் இருக்கின்றன. சகமனிதர்களைவிட என்னென்ன ஆசீர்வதங்களையும் ஈவுகளையும் எந்த அளவிற்கு நீங்கள் அதிகமான உடைமைகளாகப் பெற்றிருக்கின்றீர்களோ, அந்த அளவிற்கேற்றபடி அது ஆதரவற்ற அனைவருக்கும் உங்களை கடன்காரர்களாக வைக்கின்றது. நமக்கு ஐசுவரியம் இருக்குமானால், அல்லது வாழ்வின் வாய்ப்பு நலங்களை நாம் அனுபவித்துவருவோமானால், வியாதிப்படுக்கையிலே துன்பப்படுகிறவர்கள், விதவைகள், அநாதைகள் ஆகியோரை பராமரிக்கத்தக்கதான மிகவும் பக்திவிநயமான கடமைப்பட்டவர்களாக நாம் இருக்கிறோம். நமது நிலையும் அவர்களுடைய நிலையும் நேர்மாறாக ஆக்கப்படுமானால், நம்மை அவர்கள் எப்படிப் பராமரிக்கவேண்டுமென்று விரும்புவோமோ, அதைப்போலவே நாமும் அவர்களைப் பராமரிக்கவேண்டும். (40)

மலைப்பிரசங்கத்தில் மற்றுமொரு இடத்திலே கற்பிக்கப்பட்டபடி, "நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்" (மத்தேயு 7:2) என்று பொற்சட்டம் சம்பந்தப்படுத்திப் போதிக்கிறது. மற்றவர்களுக்கு நாம் செய்வது நன்மையானாலும் தீமையானாலும், அதின் எதிர்விளைவு நிச்சயமாக ஆசீர்வாதமாகவோ அல்லது சாபமாகவோ நம்மீது வந்துசேரும். நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதை மறுபடியும் பெற்றுக்கொள்வோம். மற்றவர்களுக்கு நாம் வழங்குகின்ற பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் மறுபடியும் அதேவகையில் திரும்பக் கொடுக்கப்படலாம். அநேகந்தடவைகளில் நாட்டில் வழங்குகின்ற நாணயத்தின்படி நமக்கு நான்கு மடங்காக திரும்பக் கிடைக்கும். இதையுந்தவிர மேற்கொண்டு நாம் கொடுக்கின்ற நன்கொடைகளுக்குப் பிரதிபலனாக இந்த உலக வாழ்க்கையிலே திரும்பவும் பெற்றுக்கொள்ளுகிறோம். இவ்விதமாக, முழுமையாக அவரது அன்பு நம்மிலே பாய்கின்றது. அதுவே பரலோகத்தின் மகிமை, பொக்கிஷம் ஆகியவைகளின் மொத்தத் தொகுப்பாகும். செய்யப்பட்ட தீமைகளும் திரும்பவும் வந்துசேரும். கண்டிக்கவும் அதைரியப்படுத்தவும் தங்குதடையின்றி தாராளமாக ஈடுபட்ட ஒவ்வொருவரும் எந்த நிலையை மற்றவர்கள் கடந்துசெல்லச் செய்தாரோ, அதே நிலைக்கு அவரவர் தம்தம் சொந்த அனுபவங்களிலேயே கொண்டுவரப்படுவார்கள். அவரிடம் பரிவும் தயவும் அற்றுப்போனபடியினால், அவர்கள் அடைந்த வேதனையை இவரும் அடைவார். (41)

நம்மீது தேவன்கொண்ட அன்பே இவ்வாறு தீர்ப்பளித்திருக்கிறது. நமது சொந்த இருதயத்தின் கடினத்தன்மையை நாமே வெறுக்கவும், இயேசு வாசம்பண்ணத்தக்கதாக நமது இருதயத்தைத் திறக்கவும் அவர் நம்மை

நடத்துவார். இவ்வாறாக, தீமையினின்று நன்மை கொண்டுவரப்படுகிறது. சாபமாகக் காணப்பட்டது ஆசீர்வாதமாக மாறுகிறது. (42)

பொற்சட்டத்தின் தரம் எதுவோ, அதுவே கிறிஸ்தவத்தின் உண்மையான தரம். அதில் எவ்வளவு குறைவுபட்டாலும் அது ஒரு ஏமாற்றமே. இயேசு தம்மையே கொடுக்குமளவிற்கு அப்படிப்பட்டத் தகுதியை அந்த மானிடர்களுக்கு கொடுத்திருக்கிறார். அத்தகைய மானிடர்களை குறைவாக மதிக்கும்படி வழிநடத்தும் மார்க்கமும், மானிடத்தேவைகளைப்பற்றியும் அவர்களது துன்பங்களைப்பற்றியும் உரிமைகளைப்பற்றியும் அக்கறையற்றவர்களாக இருக்கும்படி நம்மை வழிநடத்தும் மார்க்கமும் ஒரு போலியான மார்க்கமாகும். ஏழைகள், துன்பப்படுபவர்கள், பாவத்தில் நிறைந்திருப்பவர்கள் ஆகியோரது வேண்டுகோள்களை நாம் புறக்கணிப்பதினால், கிறிஸ்துவை காட்டிக்கொடுப்பவர்களென்று நம்மை நாமே நிரூபித்துக்கொண்டிருக்கிறோம். மனிதர்கள் கிறிஸ்துவின் பெயரை தங்களுக்கு வைத்துக்கொண்டு, தங்களது வாழ்க்கையில் அவரது குணத்தை மறுப்பதினால் உலகத்திலே கிறிஸ்தவத்திற்கு வல்லமை குறைந்து காணப்படுகிறது. இவைகளால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது. (43)

அப்போஸ்தல சபையின் பிரகாசமான நாட்களிலே, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மகிமை அவர்கள்மீது பிரகாசித்தபோது, "ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை;" "அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை." "கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது." "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்" (அப்போஸ்தலர் 4:32,35,33; 2:46,47) என்று எழுதப்பட்டுள்ளது. (44)

யாருக்கு நம்முடைய பரிவான வார்த்தைகளும் உதவியும் தேவைப்படுகின்றதோ, அவர்களுக்குச் செய்கின்ற இரக்கத்தின் ஊழியங்களில் வெளிப்படுகின்ற சத்தியத்தைவிட மிகுந்த வல்லமையுடைய ஒரு சத்தியமும் பரலோகத்திலும் பூலோகத்திலும் தேடிப்பார்த்தாலும் வெளிப்படுத்தப்படவில்லை. இயேசுவிலிருப்பதைப்போன்ற சத்தியம் இதுவே. கிறிஸ்துவின்பெயரை தங்களுக்குத் தரித்துக்கொண்டவர்கள் இந்தப்

**ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!**

பொற்சட்டத்தின் கொள்கையின்படி நடப்பார்களானால் அப்போஸ்தலர்கள் காலத்தில் காணப்பட்ட வல்லமை இவர்களது சுவிசேஷ வேலையிலும் காணப்படும். (45)

***"ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" – மத்தேயு 7:14.*** (46)

கிறிஸ்து பூமியிலே மனிதனாக அவதரித்து வாழ்ந்த காலத்தில் பாலஸ்தீன நாட்டு மக்கள் மதில்சூழ்ந்த பட்டணங்களில் வாழ்ந்தார்கள். அவைகள் பெரும்பாலும் குன்றுகளிலோ அல்லது மலைகள்மீதோ கட்டப்பட்டிருந்தன. பட்டணத்தின் வாசல்கள் மாலை மயங்கும்போது அடைக்கப்பட்டன. அந்த வாசலுக்கு நேராக கொண்டுசெல்லும் பாதைகள் பாறைகளாகவும் செங்குத்தான நிலையிலுமிருந்தன. நாளின் முடிவிலே வீட்டைநோக்கிப் பயணஞ்செய்துகொண்டிருக்கும் பயணி, இருள் கவிழும்முன்பாக அந்த வாசலையடைவதற்காக ஆர்வத்தோடு துரிதமாக சிரமப்பட்டு ஏறி வழியிலே முன்னேறவேண்டியதிருக்கும். சோம்பித்திரிபவர்கள் வெளியே விடப்படுவார்கள். (47)

இளைப்பாறுதலுக்காக வீட்டைநோக்கிச் செல்லும் பாதை மேல் நோக்கினதாகவும் நெருக்கமானதாகவும் இருந்து, கிறிஸ்தவன் செல்லும் பாதை இப்படித்தான் இருக்குமென்று ஆழமாகப் பதியத்தக்கதான ஒரு உருவகத்தை இயேசுவிற்கு அமைத்துக் கொடுத்தது. உங்களுக்கு முன்பாக நான் அமைத்திருக்கும் பாதை நெருக்கமானது. வாசல் நுழைவதற்கு கடினமானது என்று அவர் கூறினார். ஏனெனில் அந்தப் பொற்சட்டம், எல்லாப் பெருமையையும் சுயத்தை நாடுகின்ற குணத்தையும் வெளியே தள்ளிவிடுகிறது. நிச்சயமாகவே ஒரு அகலமானப் பாதையுண்டு, ஆனால் அழிவே அதின் முடிவாகும். ஆவிக்குரிய வாழ்வின் பாதையில் நாம் ஏறிச் செல்வோமானால் இடைவிடாமல் ஏறவேண்டும். ஏனெனில் அது மேல்நோக்கிச்செல்லும் ஒரு பாதையாகும். நீங்கள் வெகு சிலரோடுதான் செல்லவேண்டும். ஏனெனில் திரளானவர்கள் கீழ்நோக்கிச் செல்லும் பாதையைத் தெரிந்தெடுப்பார்கள். (48)

மரணத்தைநோக்கிச் செல்லும் பாதையிலே மானிட இனம் முழுவதுமே அவர்களது உலகப்பற்றுகள் அனைத்தோடும், அவர்களுடைய அனைத்து தன்னலங்களோடும், பெருமைகளோடும் நாணயமற்ற தன்மையோடும், ஒழுக்கக்கேடான நிலையோடும் செல்லலாம். ஒவ்வொரு மனிதனுடைய சொந்தக் கருத்துகளுக்கும் கொள்கைகளுக்கும் அங்கு இடமுண்டு. தனது

விருப்பத்தின்படியே காரியங்களைச் செய்ய இடமுண்டு. அவனது சுயநேரம் எதை அழுத்திக் கூறுகிறதோ, அது எதுவானாலும் அவனால் செய்யமுடியும். அழிவிற்கு கொண்டுசெல்லும் பாதையிலே போகவேண்டுமானால் அதைத் தேடிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் வாசல் விரிவாக வும், வழி விசாலமானதாகவுமிருக்கிறது. பாதங்களும் அவைகளுடைய இயல்பின்படி மரணத்தில் முடிகின்ற அந்தப் பாதைக்குத் திரும்புகின்றன. (49)

ஆனால் ஜீவனுக்குப் போகிற வழி நெருக்கமும் வாசல் இடுக்கமுமானது. சிக்கவைக்கின்ற பாவம் எதையாவது பற்றிக்கொண்டிருப்பீர்களானால், வழி பிரவேசிப்பதற்கு மிகவும் நெருக்கமாயிருப்பதைக் காண்பீர்கள். நீங்கள் தேவனுடைய வழியிலே நடக்கவேண்டுமானால் உங்களுடைய சொந்தவழிகள், சுயசித்தம், தீமையான பழக்கங்கள், செயல்முறைகள் ஆகிய அனைத்தையும் முற்றிலுமாக விட்டுவிலகவேண்டும். கிறிஸ்துவிற்குச் சேவைசெய்கின்ற நபர் உலகத்தாரின் தரத்திற்கு ஏற்றபடி இணைந்து வாழமுடியாது. பரலோகத்தின் பாதை, அந்தஸ்திலும் ஐசுவரியத்திலும் ஆடம்பரமாக வலம்வர நினைப்பவர்களுக்கும் சுயம்சார்ந்த பேராவல்களின்படி நடப்பவர்களுக்கும் மிகவும் நெருக்கமானது. தொல்லையற்ற நிலையை நேசிப்பவர்கள் ஏறுவதற்கு, வழியானது மிகவும் கரடுமுரடாகவும் செங்குத்தாகவும் இருக்கிறது. பாவிகளுக்கு ஒவ்வாத கடும் உழைப்பு, பொறுமை, தற்தியாகம், அவதூறு, ஏழ்மை ஆகியவை அவருக்கு எதிராக நின்றன. இவைகளே கிறிஸ்துவின் பங்காக இருந்தன. தேவனுடைய அந்தப் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க எப்பொழுதாவது எண்ணுவோமானால், இதுவே நிச்சயமாக நமது பங்காகவும் இருக்கவேண்டும். (50)

எனினும் மேல்நோக்கிச் செல்லும் பாதை கடினமானதென்றும், கீழ்நோக்கிச் செல்லும் பாதை இலகுவானதென்றும் முடிவிற்கு வந்துவிடாதீர்கள். மரணத்திற்கு அழைத்துச்செல்லும் பாதைநெடுகிலும் வேதனைகளும் தண்டனைகளுமுண்டு. துக்கங்களும் ஏமாற்றங்களுமுண்டு. தொடர்ந்து செல்லாதே என்று கூறும் எச்சரிப்புகளுமுண்டு. கவனமற்றவர்களும் முரண்டுபிடிப்பவர்களும் தங்களை அழித்துக்கொள்ளாதபடிக்கு, தேவனு டைய அன்பு அதைக் கடினமாக்கியிருக்கிறது. சாத்தானின் வழி கவர்ச்சியாகத் தோற்றமளிக்கும்படிச் செய்யப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அவையனைத்துமே ஒரு முழுமையான வஞ்சகமாகும். தீமையின் வழியிலே கசப்பான மனச்சாட்சியின் உறுத்துதல்களும் உள்ளிருந்து அரிக்கும் கவலைகளும் உண்டு, பெருமையையும் உலகியல்சார்ந்த குறிக்கோள்களையும் பின்பற்றுவது இனிமையான அனுபவமென்று நாம் நினைக்கலாம். ஆனால் வேதனையும் துக்கமுமே அதின் முடிவு.

தன்னலம் சார்ந்த திட்டங்கள், மனநிறைவு செய்கின்ற வாக்குறுதிகளையும் மகிழ்ச்சியாயிருக்கலாம் என்ற நம்பிக்கையையும் தெரியக்காட்டி, நம்முன் வைக்கலாம். ஆனால் நமது மகிழ்ச்சி நச்சுத்தன்மையால் கெடுக்கப் படுவதையும், நமது வாழ்க்கை சுயத்தையே மையமாகக்கொண்ட நம்பிக்கைகளால் மனக்கசப்படைவதையும் நாம் காணலாம். கீழ்நோக்கிச் செல்லும் பாதையிலே, வாசல் மலர்களோடு கவர்ச்சியாகக் காணப்படலாம். ஆனால் அதில் முட்கள் உண்டு. அந்தப் பாதையின் நுழைவாயிலிலே பிரகாசிக்கின்ற நம்பிக்கையின் ஒளி நம்பிக்கையிழப்பு என்ற இருளிலே மங்கிப்போகலாம். இந்தப் பாதையில் தொடர்ந்துசெல்லும் நபர் முடிவில்லாத இரவின் நிழல்களுக்குள்ளே இறங்குகிறார். (51)

"துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது;" ஆனால் ஞானத்தின் "வழிகள் இனிதான வழிகள்; அதின் பாதைகளெல்லாம் சமாதானம்" –நீதி. 13:15; 3:17. கிறிஸ்துவிற்கு கீழ்ப்படியும் ஒவ்வொரு செயலும், அவருக்காக சுயத்தை வெறுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையும், நல்லமுறையில் சகித்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு துன்பமும், சோதனையை மேற்கொண்டு பெற்ற ஒவ்வொரு வெற்றியும், இறுதி வெற்றியின் மகிமையை நோக்கிய வரிசையில் செல்வதற்காக எடுத்துவைக்கப்படும் ஓர் அடியாகும். கிறிஸ்துவை நமது வழிகாட்டியாக நாம் ஏற்றுக்கொள்வோமானால், அவர் நம்மைப் பாதுகாப்பாக வழிநடத்துவார். மிக மோசமான பாவிகூட அவனது வழியைத் தவறவிட அவசியமில்லை. அவரைத் தேடி நடுக்கத்தோடு அலையும் ஒருவர்கூட தூய்மையான பரிசுத்தமான ஒளியிலே நடந்துகொண்டிருக்கும் போது வழிதவறமாட்டார். அந்த வழி பாவத்தைப் பொறுத்துக்கொள்ளாத அளவிற்கு மிகவும் பரிசுத்தமாயும் மிகவும் நெருக்கமாகவும் இருந்தாலுங்கூட, நுழையும் உரிமை அனைவருக்காகவும் பாதுகாப்பான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. தேவன் எனக்காக எந்த அக்கறையும் எடுக்கவில்லையென்று சந்தேகப்பட்டு நடுங்கிக்கொண்டிருக்கும் எந்த ஒரு ஆத்துமாவும் அவ்வாறு சொல்லவேண்டிய அவசியமில்லை. (52)

பாதை கரடுமுரடாக இருக்கலாம். செங்குத்தான பகுதியில் ஏறவேண்டியதிருக்கலாம். வலதுபக்கத்திலும் இடதுபக்கத்திலும் இடறு குழிகள் இருக்கலாம். நமது பயணத்திலே நாம் கடும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டியதிருக்கலாம். களைத்துப்போய் இருக்கும்போது, இளைப்பாறுதலுக்காக ஏங்கும்போது தொடர்ந்து கடுமையாக முயற்சிசெய்யவேண்டியதிருக்கலாம். அதைரியப்படும்போது மேலும் நம்பிக்கையோடிருக்கவேண்டும். ஆனால் கிறிஸ்துவை நமது வழிகாட்டியாக அழைத்துச் செல்வோமானால் நாம் விரும்பிய இளைப்பாறுதலின் இடத்தை

இறுதியிலே சென்றடையத் தவறமாட்டோம். நமக்கு முன்பாக கிறிஸ்துதாமே அந்தக் கரடுமுரடான வழியில் நடந்து, அதை நமது பாதங்களுக்கு இலகுவானதாக மாற்றியிருக்கிறார். (53)

நித்தியவாழ்விற்கு நடத்திச்செல்லும் அந்த செங்குத்தானப் பாதையின் நெடுகிலும், களைப்படைந்தோருக்கு புத்துணர்ச்சியூட்டத்தக்கதான மகிழ்ச்சியின் ஊற்றுகள் உண்டு. ஞானத்தின் வழியில் நடக்கிறவர்கள் உபத்திரவத்தில் இருந்தாலும் அளவற்ற மகிழ்ச்சியோடிருப்பார்கள். ஏனெனில் அவர்களுடைய ஆத்துமாவால் விரும்பப்படுகிறவர், அவர்களுக்கு அருகாமையிலே கண்ணுக்கு மறைவாக அவர்களுடன் நடக்கிறார். மேல்நோக்கிச் செல்வதற்காக அவர்கள் ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும்போதும், அவரது கரம் அவர்களைத் தொடுவதை மிகத் தெளிவாக எளிதில் புரிந்துகொள்வார்கள். அவர்கள் பாதையிலே அவர்களால் எடுத்துவைக்கப்படும் ஒவ்வொரு அடியிலும் காணப்படாதவரின் மகிமையின் ஒளிக்கதிர்கள் பிரகாசிக்கின்றன. என்றுமே உச்சதொனியில் பாடப்படுகின்ற அவர்களது துதியின் கீதங்கள் ஏறிச்சென்று சிங்காசனத்திற்குமுன்பாக இருக்கின்ற தூதர்களின் பாடல்களோடு இணைந்துகொள்ளுகிறது. "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்" – நீதிமொழிகள் 4:18. (54)

***"இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்" – லூக்கா 13:24.*** (55)

சூரியன் மறையும் நேரத்தில், பட்டணத்து வாசலைநோக்கி பிந்திப்போனதால் விரைந்துகொண்டிருக்கும் பயணி, வழியிலே எந்தவிதமான கவர்ச்சிகள் இருந்தாலும் அதைப் பார்க்கத்தக்கதாக அதின்பக்கமாக திரும்பிப் பார்க்கமுடியாது. வாசலின் வழியாக பிரவேசித்துவிடவேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு அவனுடைய முழு உள்ளமும் உறுதிபூண்டிருக்கும். கிறிஸ்தவ வாழ்க்கையிலே இதேபோன்ற முனைப்பான நோக்கம் அவசியப்படுகிறது என்று இயேசு கூறினார். எனது இராஜ்யத்தின் உண்மையான மகிமையாக இருக்கும் அந்த குணத்தின் மகிமையைக்குறித்து வெளிப்படையாக நான் உங்களுக்கு விவரித்திருக்கிறேன். பூலோக ஆட்சியுரிமைபற்றிய எந்த வாக்குறுதியையும் அது உங்களுக்கு கொடுக்கிறதில்லை. எனினும் ஒப்புயர்வற்ற விதத்தில் நீங்கள் முயற்சிசெய்வதற்கும் விரும்புவதற்கும் அது தகுதிபெற்றதாயிருக்கிறது. இந்த உலகத்தின் மாபெரும் இராஜ்யத்தின் அரசாட்சியைப் பெற்றுக்கொள்வதற்காகப் போரிடும்படி நான் உங்களை அழைக்கவில்லை. எனவே செய்யப்படவேண்டிய யுத்தங்களோ, பெறப்படவேண்டிய வெற்றிகளோ அதனால் இல்லையென

முடிவுசெய்துவிடாதீர்கள். “என்னுடைய ஆவிக்குரிய இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்காக பிரயாசப்பட்டு கடும்முயற்சி செய்யவேண்டுமென்று நான் உங்களை அழைக்கிறேன்.” (56)

கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு யுத்தம், ஒரு அணிவகுப்பு. ஆனால் பெறப்படவேண்டிய வெற்றியை மானிட சக்தியினால் பெற்றுக்கொள்ள முடியாது. இருதயத்தின் ஆட்சிக்களமே போராட்டக்களமாகும். நாம் செய்யவேண்டிய யுத்தம், மனிதனால் என்றும் போராடப்பட்ட அந்த மாபெரும் யுத்தம், தேவனுடைய சித்தத்திற்கு சுயத்தைச் சரணடையச் செய்வதேயாகும். அன்பின் இறையாண்மைக்கு இருதயத்தை ஒப்புக்கொடுப்ப தாகும். இரத்தத்தினாலும் மாமிசசித்தத்தினாலும் பிறந்த பழைய சுபாவத்தால், தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது. தலைமுறை தலைமுறையாக தொடர்ந்துவரும் மனப்பாங்குகளும் முந்தைய பழக்கங்களும் கைவிடப்படவேண்டும். (57)

ஆவிக்குரிய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கத் தீர்மானிக்கின்ற ஒரு நபர் அனைத்து வல்லமைகளும், மேன்படுத்தப்படக்கூடாத தன்மையினின்று உருவாகும் இச்சைகளும், இருளின் இராஜ்யத்தின் சக்திகளால் துணிவுடன் ஆதரிக்கப்பட்டு, தனக்கு எதிராக அணிவகுத்து நிற்பதைக் காண்பார். தன்னலம், பெருமை ஆகிய இவைகளைப் பாவமுள்ளவைகளென்று காட்டுவது எதுவானாலும் விட்டுக்கொடுக்காமல், அதற்கு எதிராக இவைகள் துணிந்துநிற்கும். ஆதிக்கஞ்செலுத்தவேண்டுமென்று பிரயாசப்படுகின்ற தீய விருப்பங்களையும் பழக்கங்களையும் நமக்காக நாமே வெற்றிகொள்ள முடியாது. நம்மை தனது அடிமைத்தனத்தில் வைத்திருக்கின்ற அந்த மாபெரும் எதிராளியை நாம் மேற்கொள்ளமுடியாது. தேவன் மாத்திரமே நமக்கு வெற்றியைக் கொடுக்கமுடியும். நம்மீதும் நமது சொந்தசித்தத்தின்மீதும் நமது வழிகளின்மீதும் நாம் ஆதிக்கங்கொண்டிருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். நமது சம்மதமும் ஒத்துழைப்பும் இல்லாமல் நம்மிலே அவர் கிரியை செய்யமுடியாது. மனிதனுக்கு கொடுக்கப்பட்டுள்ள வலிமையான இயல்புகள், சக்திகளின்மூலமாகவும் தெய்வீக ஆவியானவர் கிரியை செய்கிறார். தேவனோடு ஒத்துழைக்க நமது சக்திகள் அவசியம். (58)

ஜெபம் அதிகமான அக்கறையோடு ஏறெடுக்கப்படாமலும், எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் சுயத்தைத் தாழ்த்தாமலும் இருக்கும்போது, வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியாது. நமது சித்தம் தெய்வீகப் பிரதிநிதிகளோடு இணைந்து செல்லத்தக்கதாக கட்டாயப்படுத்தப்படாமல், நமது விருப்பத்தின்படியே ஒப்புக்கொடுக்கப்படவேண்டும். தேவனுடைய ஆவியான

வரின் செல்வாக்கை நூறுமடங்கு உச்சகட்ட ஊக்கத்தோடு உங்கள்மீது திணிப்பது சாத்தியமானாலுங்கூட அது உங்களை ஒரு கிறஸ்தவனாக மாற்றாது. சாத்தானின் கோட்டையும் தகர்க்கப்படமுடியாது. நமது சித்தம் தேவனுடைய சித்தத்திற்கு அருகில் வைக்கப்படவேண்டும். நீங்களாகவே உங்களுடைய நோக்கங்களையும் ஆசைகளையும் மனப்பாங்குகளையும் தேவனுடைய சித்தத்திற்கு சரணடையச்செய்ய உங்களால் முடியாது. "முழு மனதோடும் சம்மதிப்பதற்கு நீங்கள் விரும்புவீர்களானால்" தேவன் அந்தக் கிரியையை உங்களுக்காக நிறைவேற்றுவார். "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" – 2 கொரிந்தியர் 10:5. அதன்பின்னர் நீங்கள் "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" – பிலிப்பியர் 2:12,13. (59)

ஆனால் கிறிஸ்துவின் அழகினாலும் பரலோகத்தின் மகிமையினாலும் அநெகர் கவர்ந்திழுக்கப்படுகிறார்கள். எனினும் எத்தகைய நிபந்தனைகளினால் மாத்திரமே இந்தக் காரியங்கள் அவர்களுக்குச் சொந்தமாகமுடியும் என்பதை அறியும்போது, பின்வாங்கிவிடுகிறார்கள். விசாலமான பாதைகளிலே நடக்கின்ற அநேகர் தாங்கள் நடக்கின்ற பாதையிலே முழுவதுமாக திருப்தியடையாமல் இருக்கிறார்கள். பாவத்தின் அடிமைத்தனத்தினின்று அதைத் தகர்த்துக்கொண்டு வெளியேவர அநேகர் ஏங்குகிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்தப் பலத்திலே, தங்கள் பாவச்செயல்களை எதிர்த்துத் துணிவுடன் நிற்க நாடுகிறார்கள். நெருக்கமான வழியையும் ஒடுக்கமான வாசலையும் நோக்கிப்பார்க்கிறார்கள். எனினும் தன்னலமான சந்தோஷங்களும் உலகத்தின்மீதுகொண்ட பாசமும் பெருமையும் பரிசுத்தமற்ற குறிக்கோள்களும் அவர்களுக்கும் மீட்பருக்குமிடையே ஒரு தடையை வைக்கிறது. அவர்கள் தங்களுடைய சுயசித்தத்தை துறக்கவேண்டுமானால் அவர்களால் தெரிந்துகொள்ளப்பட்ட விருப்பமுள்ள பொருட்கள், பொழுது போக்கிற்கான நாட்டங்கள் ஆகியவை தியாகஞ்செய்யப்படவேண்டும். இதில், தயங்கி, தடுமாறி பின்வாங்கிவிடுகிறார்கள். "அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும்" – லூக்கா 13:24. அவர்கள் நல்ல காரியத்தை விரும்புகிறார்கள். அதைப் பெற்றுக்கொள்ள கொஞ்சம் முயற்சியெடுக்கிறார்கள். ஆனால் அதைத் தெரிந்துகொள்கிறதில்லை. அனைத்தையும் தியாகஞ்செய்து அதை அடையவேண்டுமென்ற ஒரு நிலையான நோக்கம் அவர்களிடத்தில் இல்லை. (60)

நாம் வெற்றிகொள்வோமானால் நமது சித்தத்தை தேவனுடைய சித்தத்தோடு ஐக்கியப்படுத்தி, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணிநேரமும் அவருடன் இணைந்து உழைக்கவேண்டுமென்பதே நமக்கிருக்கும் ஒரே நம்பிக்கையாகும். சுயத்தை விடாமல் நம்மிடம் வைத்துக்கொண்டே தேவனுடைய இராஜ்யத்திலும் பிரவேசிக்கமுடியாது. நாம் எப்பொழுதாவது பரிசுத்தத்தை அடைவோமானால் அது, சுயத்தை அடியோடு துறந்து கிறிஸ்துவின் சிந்தையை வரவேற்பதின்மூலமாகவே நடைபெறும். பெருமையும் சுயதிருப்தியும் சிலுவையிலறையப்படவேண்டும். நம்மிடமிருந்து கேட்கப்படும் கிரயத்தைச் செலுத்த நாம் விருப்பத்தோடிருக்கிறோமா? நமது சித்தம் தேவனுடைய சித்தத்தோடு பூணை இசைவிற்குள் கொண்டுவரப்படுவதற்கு நாம் விருப்பத்தோடிருக்கிறோமா? அத்தகைய விருப்பத்தை நாம் காட்டும்வரை நம்மில் குணமாறுதலை ஏற்படுத்தக்கூடிய தேவக்கிருபை நம்மிலே வெளிப்படமுடியாது. (61)

நாம் செய்யவேண்டிய போராட்டம் "விசுவாசத்தின் நல்ல போராட்டமே." "அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" (கொலோ. 1:29) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். (62)

யாக்கோபு தனது வாழ்வின் மாபெரும் நெருக்கடியான நேரத்திலே ஜெபிக்கத் திரும்பினான். தனது குணத்தில் மாறுதல் ஏற்படவேண்டுமென்கிற அனைத்தையும் மேற்கொள்ளும் நோக்கத்தால் நிறைந்திருந்தான். அவன் தேவனோடு மன்றாடிக்கொண்டிருக்கையில் எதிராளி என்று எண்ணப்படும் ஒருவர் அவன்மீது தமது கரத்தை வைத்தார். இரவு முழுவதும் தனது ஜீவனுக்காக யாக்கோபு மன்றாடினான். உயிருக்கே ஆபத்து நேரும் நிலையிலும் அவனது ஆத்துமாவின் நோக்கம் மாறவில்லை.அவன் ஏறக்குறைய பலமிழந்தபோது, தூதனானவர் தனது தெய்வீக வல்லமையை செயலில் காட்டினார். அந்த அவரது தொடுதலிலே, இதுவரை யாரோடு போராடிக்கொண்டிருந்தானோ, அந்த நபரை யாக்கோபு அறிந்துகொண்டான். புண்பட்டவனாய், உதவியற்ற நிலையில் மீட்பரின் மார்பில் விழுந்து ஒரு ஆசீர்வாதத்திற்காக மன்றாடினான். அவர் அவரைவிட்டுத் திரும்பவோ அல்லது தனது மன்றாட்டை நிறுத்தவோ இல்லை. கிறிஸ்து இந்த உதவியற்ற , மனந்திரும்பிய ஆத்துமாவிற்கு, "அவன் என் பெலனைப் பற்றிக்கொண்டு என்னோடே ஒப்புரவாகட்டும்; அவன் என்னோடே ஒப்புரவாவான்" (ஏசாயா 27:5) என்ற வாக்குத்தத்தத்தின்படி பதில் கொடுத்தார். தீர்மானமுள்ள ஆவியோடு யாக்கோபு: "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்" (ஆதியாகமம் 32:26) என்று மன்றாடினான். இந்த விடாப்பிடியான ஆவி,

முற்பிதாவோடு போராடியவர் நடப்பித்த அகத்தூண்டுதலினால் நிகழ்ந்தது. அவனுக்கு வெற்றிகொடுத்தவர் அவரே. "தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே" (ஆதியாகமம் 32:28) என்று கூறி, யாக்கோபு என்ற அவனது பெயரை இஸ்ரவேலாக மாற்றினார். அதற்காக யாக்கோபு தனது சொந்தப் பலத்தில் வீணாகப் போராடினான். ஆனால் பின்னர் சுயத்தை சரணடையச்செய்து, திடமான விசுவாசத்தின்மூலமாக வெற்றிபெற்றான். "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" – 1 யோவான் 5:4. (63)

### *"கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" – மத். 7:15.* (64)

போலியான போதகர்கள் எழும்பி, உங்களை நெருக்கமான பாதையிலிருந்தும் இடுக்கமான வாசலிலிருந்தும் வெளியே இழுப்பார்கள். அவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஆட்டுத்தோலால் தங்களை முழுவதுமாக மறைத்துக்கொண்டிருந்தாலும் உள்ளத்திலே அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். இந்தப் போலியானப் போதகர்களை உண்மையான போதகர்களினின்று எப்படி வேறுபடுத்திக்காட்டுவது என்பதைக்குறித்த ஒரு பரீட்சையை இயேசு கொடுக்கிறார். "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டு களில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?" (மத். 7:16) என்றார். (65)

இத்தகைய கள்ளப்போதகர்களை அவர்களுடைய அழகான சொற் பொழிவுகளின்மூலமாகவோ அல்லது உயர்ந்த உத்தியோகங்கள் மூலமாகவோ நாம் நிரூபிக்கவேண்டுமென்று நமக்குக் கட்டளையிடப்படவில்லை. அவர்கள் தேவனுடைய வார்த்தையின்மூலமாக நியாயந்தீர்க்கப்படவேண்டும். "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை"–ஏசாயா 8:20; "என் மகனே, அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச்செய்யும் போதகங்களை நீ கேளாதே" – நீதிமொழிகள் 19:27. எத்தகையத் தூதுகளை இந்தப் போதகர்கள் கொண்டுவருகிறார்கள்? இந்தப் போதகம் தேவனை பயத்தோடும் பக்தியோடும் சேவிக்க வழிநடத்துகிறதா? அவரது கற்பனைகளுக்கு உத்தமமாக வாழ்ந்து, அவருக்கான உங்களது அன்பை வெளிப்படுத்திக்காட்ட வழிநடத்துகிறதா? மனிதர்கள் சன்மார்க்கப் பிரமாணத்தின் முக்கியத்துவத்தை உணராவிட்டால், தேவனுடைய கட்டளைகளை அற்பமாக எண்ணுவார்களானால், அவரது கட்டளைகளில் மிகச்சிறிய ஒன்றையும் மீறுவார்களானால், அவ்வாறே மக்களுக்கும் போதிப்பார்களானால், பரலோகத்தின் பார்வையில் எந்த மதிப்பையும்

பெற்றிருக்கமாட்டார்கள். அவர்கள் கோருகின்ற உரிமைகளெல்லாம் அடித்தளமற்றவை என்பதை நாம் அறியலாம். தேவனுக்கு எதிராளியான இருளின் பிரபுவால் தோற்றுவிக்கப்பட்ட அதே வேலையைத்தான் அவர்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். (66)

கிறிஸ்துவின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு, அவருடைய அடையாளச் சின்னத்தை அணிந்துகொண்டிருக்கும் அனைவருமே அவருடையவர்களல்ல. என்னுடைய நாமத்திலே போதனை செய்த அநேகர் இறுதியிலே குறைவாகக் காணப்படுவார்கள். “அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே!உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்” (மத்தேயு 7:22,23) என்றார். (67)

தாங்கள் தவறான நிலையில் இருக்கும்போது, சரியாகத்தான் இருக்கிறோம் என்று விசுவாசிக்கிற நபர்களும் இருக்கிறார்கள். கிறிஸ்துவை தங்கள் சொந்த ஆண்டவராக உரிமைகோரிக்கொண்டு, அவருடைய நாமத்திலே மாபெரும் வேலையைச் செய்துகொண்டிருக்கும் அவர்கள் அநீதியின் ஊழியக்காரர்களாயிருக்கிறார்கள். “அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள், அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது.” கடவுளுடைய வசனத்தை அறிவிக்கிறவன் அவர்களுக்கு “இனிய குரலும் கீதவாத்தியம் வாசிப்பதில் சாமர்த்தியமு முடையவன் பாடும் இன்பமான பாட்டுக்குச் சமானமாயிருக்கிறான்; ஏனெனில் அவர்கள் உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள்; ஆனாலும் அவைகளின்படி செய்யாமற்போகிறார்கள்” (எசேக்கியேல் 33:31,32). (68)

சீடத்துவமென்றப் பெயரை வெறுமனே சொல்லிக்கொண்டிருப்பதில் எந்த பயனுமில்லை. கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசமே ஆத்துமாவை இரட்சிக்கிறது என்பது, அநேகரால் குறித்துக்காட்டப்படுவதுபோன்று அல்ல, “விசுவாசி, விசுவாசி; நீ பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டிய அவசியமில்லை” என்று கூறுகிறார்கள். ஆனால் ஒரு விசுவாசம், கீழ்ப்படிதலுக்கு வழிநடத்தாவிட்டால், ஆராயாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு செய்தியாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய யோவான்: “அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை”

(1 யோவான் 2:4) என்று கூறுகிறான். விசேஷமான வழிநடத்துதல்களோ அல்லது அற்புதமான வெளிப்பாடுகளோ, தாங்கள் பரிந்துரைக்கும் வேலைக்கோ அல்லது தங்கள் கருத்துகளுக்கோ ஆதாரங்களாக இருக்கும் என்ற எண்ணத்தை எவரும் மனதில் வளர்த்துக்கொள்ளவேண்டாம். (69)

தேவனுடைய வார்த்தையைக்குறித்து ஆழ்ந்த யோசனையற்ற விதத்தில் பேசி, தெய்வீகத்தரத்திற்கும்மேலாக தங்களது எண்ணப் பதிவுகள், உணர்வுகள், செயலாட்சித்திறன்கள் ஆகியவற்றை நிலைநிறுத்து வார்களானால் அவர்களிடத்தில் வெளிச்சமில்லையென்று நாம் அறிந்து கொள்ளலாம். (70)

சீடத்துவத்திற்கான பரீட்சை கீழ்ப்படிதலே. கட்டளைகளைக் கைக்கொள்ளுவதே நாம் நேசிக்கிறோம் என்று கூறுவதின் உண்மையான நிலையை நிரூபிக்கிறது. நாம் ஏற்றுக்கொள்ளும் கொள்கை, இருதயத் திலுள்ள பாவத்தை அழித்து, கேடுகளினின்று ஆத்துமாவைச் சுத்திகரித்து, பரிசுத்தத்திற்கான கனிகளைக் கொடுக்கும்போது, அதுவே தேவனுடைய சத்தியம் என்பதை நாம் அறியலாம். அன்பின் செயல்கள், இரக்கம், இருதயத்தில் மென்மை, பரிவு ஆகியவைகள் நமது வாழ்க்கையில் வெளிப்படும்போது, காரியங்களை சரியாகச் செய்வதினால் ஏற்படும் மகிழ்ச்சி நமது இருதயங்களிலிருக்கும்போது, சுயத்தை அல்ல, கிறிஸ்துவை நாம் உயர்த்திக்காட்டும்போது, நமது விசுவாசம் சரியான ஒழுங்கின்படி அமைந்திருக்கிறது என்பதை நாம் அறியலாம். "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்" – 1 யோவான் 2:3. (71)

***"அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது" – மத்தேயு 7:25.*** (72)

கிறிஸ்துவின் வார்த்தைகளினால் மக்கள் உள்ளார்ந்த முறையில் வெகுவாக அசைக்கப்பட்டார்கள். சத்திய கொள்கைகளின் தெய்வீக அழகு அவர்களைக் கவர்ந்திழுத்தது. கிறிஸ்துவானவர் கொடுத்த பயபக்தியைத் தோற்றுவிக்கத்தக்கதாக அந்த எச்சரிப்புகள் இருதயத்தை உய்த்து ஆராயும் தேவனிடமிருந்து வந்த குரல்போன்று அவர்களுக்கு வந்தது. அவர்களுடைய பழைய எண்ணங்களுக்கும் சொந்தக் கருத்துகளுக்கும் வேராகிய அடித்தளத்தையே அவரது வார்த்தைகள் ஓங்கித்தாக்கியது. அவரது போதனைக்குக் கீழ்ப்படியவேண்டுமானால் அவர்களுடைய சிந்தனை செயல் ஆகிய அனைத்திலும் மாறுதல் ஏற்படவேண்டியது அவசியமாயிருக்கும்.

அவர்களுடைய மார்க்க சம்பந்தமான போதகர்களுக்கும் அவர்களுக்கும் இது கடும் மோதலைக் கொண்டுவரும். அவர்களுடைய போதகர்கள் தலைமுறைகளாக பேணிக்காத்து வளர்த்த அமைப்புமுறையை இது கவிழ்த்துப்போடும். ஆகையால் மக்களின் இருதயங்கள் உள்ளுணர்விலே அவரது வாாத்தைகளுக்கு இணங்கியபோதிலும் வெகுசிலரே அவ் வார்த்தைகளைத் தங்களது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தார்கள். (73)

இயேசு தமது மலைப்பிரசங்கத்தை முடிக்கும்போது, ஒரு பொருட்பாடத்தை அவர்களுக்குக் கொடுத்தார். அவர் கொடுத்தப் பாடமானது ஆச்சரியமூட்டும் தெளிவோடு அவர் பேசிய வார்த்தைகளை செயலில் காட்டுவதின் முக்கியத்துவத்தை அவர்கள்முன்பாக வைத்தது. மீட்பரைச்சுற்றிலும் கூடியிருந்த அந்த திரளான மக்களிலே அநேகர் தங்களுடைய வாழ்க்கை முழுவதையும் அந்தக் கலிலேயாக் கடலைச் சுற்றியுள்ள பகுதிகளிலே நடத்தியவர்களாக இருந்தனர். கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்தவர்களாக அந்த மலைப்பக்கத்திலே அமர்ந்திருக்கும்பொழுது, மலையிலிருந்து வரும் சிற்றாறுகள் கடலையடைவதற்குமுன் கடந்துவந்த பள்ளத்தாக்குகளையும் குறுகிய மலைஇடுக்குகளையும் அவர்களால் காணமுடிந்தது. கோடைக்காலத்தில் இந்த ஆறுகள் முற்றிலும் வற்றி, மறைந்து, ஒரு காய்ந்த, தூசிபடிந்த கால்வாயாகக் காணப்படும். ஆனால் குளிர்காலப் புயல்கள் குன்றுகளின்மீது மோதும்போது, ஆறுகளாகப் பெருக்கெடுத்து, கடும்சீற்றத்துடன் பொங்கியெழுந்து பிரவாகிக்கும் நீரோடைகளாக மாறி, சில சமயங்களில் அந்தப் பள்ளத்தாக்கு முழுவதையுமே நிரப்பி, தடுக்கமுடியாத வெள்ளத்தினால் அனைத்தையும் அடித்துக்கொண்டுபோய்விடும். பெரும்பாலும் அச்சமயத்தில் புல் நிறைந்த அந்தச் சமவெளியிலே குடியானவர்களால் கட்டப்பட்டிருந்த குடிசைகள் அபாய மட்டத்திற்கு அப்பால் இருப்பதுபோல தோற்றமளித்தாலும், அவை அனைத்தையுமே வெள்ளம் அடித்துக்கொண்டுபோய்விடும். ஆனால் உயரமான குன்றின் பகுதிகளிலே கற்பாறையின்மீது வீடுகள் கட்டப்பட்டிருந்தன. அந்த நாட்டின் சில பகுதிகளிலே குடியிருப்புகள் முழுவதுமே கற்களால் கட்டப்பட்டிருந்தன. அவைகளில் அநேக வீடுகள் ஓராயிரம் ஆண்டு புயல் களுக்கும் ஈடுகொடுத்து நின்றன. அந்த வீடுகள் கஷ்டத்தோடும் கடும் முயற்சியோடும் கட்டப்பட்டவை. அந்த வீடுகளுக்குச் செல்லும் வழி அவ்வளவு சுலபமானது அல்ல. புல் நிறைந்த சமவெளிப்பகுதிகளைவிட அந்த வீடுகள் கட்டப்பட்டிருந்த இடங்கள் கவர்ச்சியாகத் தோன்றவில்லை. ஆனால் அவைகள் கற்பாறையின்மீது கட்டப்பட்டிருந்தன. காற்றும் வெள்ளமும்

புயலும் அவைகளின்மீது விருதாவாகவே மோதின. (74)

எவன் நான் உங்களுக்குச் சொல்லிய வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு, அவைகளை தனது குணத்திற்கும் வாழ்க்கைக்கும் அடித்தளமாக அமைக்கின்றானோ, அவனே கற்பாறையின்மீது வீடு கட்டியவனைப்போன்றவன் என்று இயேசு கூறினார். “நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்” (ஏசாயா 40:8) என்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஏசாயா தீர்க்கதரிசி எழுதியிருந்தார். மலைப்பிரசங்கம் கொடுக்கப்பட்டு, வெகுகாலத்திற்குப்பின் பேதுரு: “உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே” (1 பேதுரு 1:25) என்று ஏசாயாவின் வார்த்தைகளை கூறினார். நமது உலகம் அறிந்திருக்கிறபடி திடமாக நிற்கின்ற ஒரே ஒரு பொருள், தேவனுடைய வார்த்தைமட்டுமே. அதுவே உறுதியான அடித்தளம். “என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை” – மத்தேயு 24:35. (75)

தேவனுடைய இயல்பாகிய குணமே அந்தப் பிரமாணத்தின் மாபெரும் கொள்கைகளாகும். கிறிஸ்து கூறிய மலைப்பிரசங்கத்தின் வார்த்தைகளிலே தேவனுடைய குணமாகிய மாபெரும் பிரமாணத்தின் கொள்கைகள் உள்ளடங்கியிருக்கின்றன. அவருடைய வார்த்தைகளின்மீது கட்டுகிறவர் யாராயிருந்தாலும், யுகங்களின் கன்மலையாகிய கிறிஸ்துவின்மீது கட்டிக் கொண்டிருக்கிறார். அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளும்போது, கிறிஸ்துவையே ஏற்றுக்கொள்கிறோம். இவ்வாறு அவருடைய வார்த்தை களை ஏற்றுக்கொள்கிறவர்கள்மாத்திரமே அவர்மீது கட்டுகிறார்கள். “போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது” (1 கொரி. 3:11); “நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” – அப். 4:12. தேவனுடைய வெளிப்பாடான வார்த்தையாகிய கிறிஸ்துவின்மீதுதான், அவரது குணம், பிரமாணம், அன்பு, ஜீவன், ஆகியவைகளின் வெளிப்பாடாகிய இயேசுவின்மீதுதான், அந்த ஒரே அஸ்திபாரத்தின்மீதுதான் நிலைத்திருக்கிற ஒரு குணத்தை கட்டமுடியும். (76)

கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிவதினால் நாம் அவர்மீது கட்டுகிறோம். வெறுமனே நீதியை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒரு நபர் நீதிமானல்ல. நீதியைச் செய்யும் நபரே நீதிமான் ஆவார். பரிசுத்தம் என்றால் அது ஆனந்தப்பரவசம் அல்ல. அது தேவனுக்கு அனைத்தையும் ஒப்படைப்பதின் விளைவாகும். அது நமது பரலோகப்பிதாவின் சித்தத்தைச் செய்வதாகும். வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நாட்டின் எல்லையோரங்களில் இஸ்ரவேல்

புத்திரர் பாளையமிறங்கினபோது, கானானைப்பற்றிய அறிவை பெற்றிருப்பதோ அல்லது அதன் பாடல்களைப் பாடுவதோ போதாது. அதுமாத்திரமே அந்த நல்ல நாட்டின் ஒலிவத்தோப்புகளையும் திராட்சைத்தோட்டங்களையும் உடைமைகளாகப் பெற்றுக்கொள்ளும் நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்திருக்காது. அங்கு சென்று குடியிருப்பதின்மூலமாகவும், சூழ்நிலை களுக்கு இசைந்துபோவதினாலும், தேவன்மேல் ஜீவனுள்ள விசுவாசம் வைப்பதினாலும், அவருடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய வாக்குத்தத்தங்களை தங்களுடையதாக மாற்றிக்கொள்வதின்மூலமாகவும் மாத்திரமே உண்மையிலேயே அந்த நாட்டைத் தங்களுக்குச் சொந்தமானதாக ஆக்கிக்கொள்ளமுடியும். (77)

கிறிஸ்துவின் வார்த்தைகளின்படிச் செய்வதில்தான் மார்க்கம் அடங்கி யிருக்கிறது. தேவனுடைய ஆதரவை சம்பாதித்துக்கொள்ள அச்செயலில் ஈடுபடக்கூடாது. ஏனெனில் தகுதியற்றவர்களாகிய நாம் அனைவருமே அவரது அன்பின் ஈவைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். வெளிப்படையாக வெறுமனே அறிவிப்பதில் மனிதனின் மீட்பு இல்லை. கிறிஸ்து மனிதனின் மீட்பை வெறும் அறிக்கையின் மீதல்லாமல் நீதியின் கிரியைகளிலே வெளிப்பட்ட அந்த விசுவாசத்தின்மீது வைக்கிறார். வெறும் சொல்லல்ல செயல்படுவதே கிறிஸ்துவின் பின்னடியார்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது. வெறுமனே சொல்லிக்கொண்டிருப்பதிலல்ல, செயலின் மூலமாகத்தான் குணம் கட்டப்படுகிறது. "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" – ரோமர் 8:14. இருதயங்கள் ஆவியினால் தொடப்படுகிறவர்களோ அல்லது எப்பொழுதாவது ஆவியின் வல்லமைக்கு ஒப்புக்கொடுக்கிறவர்களோ அல்ல, மாறாக ஆவியினால் தொடர்ந்து வழிநடத்தப்படுகிறவர்களே தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். (78)

கிறிஸ்துவின் பின்னடியாராக மாறுவதற்கு நீங்கள் விரும்புகிறீர்களா? எனினும் எப்படி ஆரம்பிப்பதென்று தெரியாமல் இருக்கிறீர்களா? நீங்கள் இருளில் இருக்கிறீர்களா? எப்படி வெளிச்சத்தைக் கண்டறிவது என்பது உங்களுக்குத் தெரியவில்லையா? இப்பொழுது உங்களுக்கு இருக்கிற வெளிச்சத்தைப் பின்பற்றுங்கள். தேவனுடைய வார்த்தையைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியுமோ, அதற்குக் கீழ்ப்படிய உங்கள் இருதயத்தை நிலைப்படுத்துங்கள். அவரது வார்த்தையிலே அவரது வல்லமையும் அவரது ஜீவனுங்கூட தங்கியிருக்கிறது. அந்த வார்த்தையை விசுவாசத்தால் நீங்கள் ஏற்றுக்கொள்ளும்போது, அதற்கு கீழ்ப்படியத்தக்கதான வல்லமையை அது கொடுக்கிறது. உங்களிடத்தில் இருக்கிற வெளிச்சம் உங்களை வந்தடையும்.

நீங்கள் தேவனுடைய வார்த்தையின்மீது கட்டிக்கொண்டிருக்கிறீர்கள். கிறிஸ்துவின் குணத்தைப்போன்ற குணத்தின்படி உங்களுடைய குணம் கட்டப்படும். (79)

உண்மையான அடித்தளமாகிய கிறிஸ்து ஒரு ஜீவனுள்ள கல்லா யிருக்கிறார். அவரிலே கட்டப்பட்டிருக்கிற அனைவருக்கும் அவருடைய ஜீவன் வழங்கப்படுகிறது. "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகை யாகவும்" – 1 பேதுரு 2:5; "அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது" – எபே. 2:21. அந்தக் கற்கள் அஸ்திபாரத்தோடு ஒன்றாக இணைந்துவிட்டன. ஏனெனில் பொதுவான வாழ்க்கை எல்லாவற்றையும் சார்ந்திருக்கிறது. (80)

"எது தேவனுடைய ஜீவனில் பங்குகொள்கிறதோ
அது சகலத்தினூடும் அவரோடு தொடர்ந்து ஜீவித்திருக்கும்." (81)

ஆனால் தேவனுடைய வார்த்தையின்மீது கட்டப்படாமல், மற்ற அடித்தளத்தின்மீது கட்டப்படுகின்ற அனைத்து கட்டடங்களும் விழுந்துபோகும். கிறிஸ்துவின் நாட்களில் வாழ்ந்த யூதர்களைப்போல மானிட எண்ணங்கள், சொந்தக் கருத்துகள், மனிதனின் கண்டுபிடிப்புகளாகிய அமைப்புகளும் சடங்காச்சாரங்களும் அல்லது கிறிஸ்துவின் கிருபைக்கு அப்பால் தனித்து சுதந்தரமான அந்த நபர் செய்யக்கூடிய வேலை ஆகிய இவைகளை அடித்தளமாக வைத்து தனது குணத்தைக் கட்டுகிறவன், இடம்பெயரும் மணலின்மீது கட்டியெழுப்புகிறவனாக இருக்கிறான். சோதனைகள் கொடிய புயல்களாக உருவாகி மோதும்போது, இந்த மணல் அஸ்திபாரத்தை அடித்துக்கொண்டுபோய்விடுகிறது. அவனுடைய வீடு, காலமென்னும் கரை யோரங்களில் கிடக்கும் ஒரு சிதைவாக விடப்படுகிறது. (82)

"ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: ... நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டு போகும்" – ஏசாயா 28:16,17. (83)

ஆனால் இன்று இரக்கம் பாவியோடு மன்றாடிக்கொண்டிருக்கிறது. "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்க னுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும்" – எசே. 33:11.

## ஆசீர்வாதத்தின் மலையினின்று அருமையான சிந்தனைகள்!

இன்று மனந்திரும்பாத நபரிடத்தில் பேசுகின்ற அந்தக் குரலானது, தான் நேசித்தப் பட்டணத்தைப் பார்த்து இருதயத்தில் கடுந்துயரம் நிறைந்தவராக: "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன்சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்" (லூக்கா 13:34,35) என்று அங்கலாய்த்த இயேசுவின் குரலாகும். எருசலேம் பட்டணம், அவரது கிருபையை இகழ்ந்து தள்ளிப்போட்ட உலகத்திற்கு ஒரு அடையாளமா யிருப்பதை இயேசு கண்டார். ஆ! பிடிவாதமான இருதயமே! உனக்காகத்தான் கண்ணீர்வடித்துக்கொண்டிருந்தார். இயேசுவின் கண்ணீர் துளிகள் அந்த மலையின்மீது விழும்போது மனந்திரும்பியிருந்தால்கூட எருசலேம் பட்டணம் அதின் அழிவிற்குத் தப்பியிருக்கும். பரலோகத்தின் ஈவு அவள் ஏற்றுக்கொள்வதற்காக இன்னும் சிறிது காலம் காத்திருந்தது. ஆகவே ஆ! இருதயமே, கிறிஸ்து இன்னும் அவரது அன்பின்மொழியிலே உன்னோடு பேசிக்கொண்டிருக்கிறார். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" – வெளி. 3:20; "இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணியநாள்" – 2 கொரி. 6:2. (84)

சுயத்தின்மீது நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிற நீங்கள் மணலின்மீது கட்டிக்கொண்டிருக்கிறீர்கள். எனினும் வரப்போகின்ற அழிவிலிருந்து தப்புவதற்கு இன்னும் பிந்திவிடவில்லை. புயல் உருவாகி மோதி அடிக்கும் முன்னரே, உறுதியான அடித்தளத்தை நோக்கி ஓடிப்போ. "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்" – ஏசாயா 28:16; "பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை" – ஏசாயா 45:22; "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்" – ஏசாயா 41:10; "நீங்கள் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் வெட்கப்படாமலும் கலங்காமலும் இருப்பீர்கள்" – ஏசாயா 45:17. (85) ★